

கதிர்

பின்ற கதிரவன்

விஜய்குமார் ஜெயராஜ்

கதிர் என்ற கதிரவன்
எழுத்து: விஜய்குமார் ஜெயராஜ்

*********** *********** ***********

KATHIR ENDRA KATHIRAVAN
Author: Vijaykumar Jayaraj

*********** *********** ***********



அன்பான வாசகர்களுக்கு வணக்கம்,

எனது முதல் நாவலான கடவுச்சொல்லுக்குப் பிறகு எனது இந்த இரண்டாவது நாவல் மூலம் உங்களைச் சந்திப்பதில் பெருமகிழ்ச்சி. கடவுச்சொல் நாவலுக்கு நீங்கள் தந்த வரவேற்பும், பாராட்டுகளும் எனது அடுத்த நாவலை எழுத என்னை உற்சாகப்படுத்தியது. இந்த நாவலையும் நீங்கள் நிச்சயம் விரும்புவீர்கள் என்று நம்புகிறேன். தொடர்ந்து தமிழால் இணைந்திருப்போம், நீங்களும் உங்கள் குடும்பமும் சகல நலமும், வளமும் பெற்று வாழ எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.

இந்த நாவலை எழுத எனக்கு ஊக்கமும் உற்சாகமும் அளித்த நண்பர்கள் உறவினர்கள் எல்லோருக்கும் நன்றி. அழகாக நாவலின் முதற்பக்க சித்திரத்தை வரைந்து தந்த ஓவியர் சாமுவேல் அவர்களுக்கும், எழுத்துருவை அமைத்துத் தந்த சுதர்சன்பாபு அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள். எல்லாவற்றுக்கும் மேலாக இந்த நாவலை எழுத எனக்கு கிருபை செய்த என் அன்பின் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவுக்கு ஆயிரம் கோடி நன்றிகள்!

முக்கிய குறிப்பு:

இந்தக் கதையில் வரும் பாத்திரங்கள், பெயர்கள் மற்றும் சம்பவங்கள் அனைத்தும் கற்பனையே! யாரையும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ குறிப்பிடுவன அல்ல.

ஆசிரியர் தொடர்புக்கு:
vijaykumar.jeyaraj@gmail.com

அத்தியாயம்: 1 - பௌர்ணமி இரவில்…பாகம்-1

நாள்: 16
10/01/2020 வெள்ளிக்கிழமை
மாலை 7:30 மணி

சன்ஷைன் மார்கெட் சிட்டி, வேளச்சேரி, சென்னை….

சென்னையின் பெருமைமிக்க அடையாளங்களில் ஒன்றான சன்ஷைன் சிட்டி மால் அன்று வழக்கமான பரபரப்புடன் இயங்கிக் கொண்டிருந்தது. வேளச்சேரி மக்கள் ஒரு இதமான தூறலையும் தென்றலையும் வெளியே அனுபவித்துக் கொண்டிருந்தனர். சன்ஷைன் சிட்டி மாலின் பிரம்மாண்டமும், ஆடம்பரமும், சில்லென்ற ஏசி காற்றும் உள்ளே உலவிக் கொண்டிருந்த மனித மனங்களை வருடி ஒருவித இனிமையான உணர்வை ஏற்படுத்தி கொண்டிருந்தது. ஆனால் இன்னும் சற்று நேரத்தில் அங்கு அரங்கேறப்போகும் ஒரு விநோத பயங்கரத்தை அவர்கள் உணர்ந்திருக்கவில்லை…

அந்த இனிமையையும், அமைதியையும் குலைக்கும் வகையில் சரியாக 7:45 மணியளவில் ஒரு போலீஸ் குழு மாலுக்குள் நுழைந்தது. அவர்கள் உள்ளே நுழைந்ததும் மாலின் அனைத்து வாயில்களும் சடசடவென பூட்டப்பட்டன. குழுவிலிருந்தவர்கள் இரண்டு இரண்டு பேராக பிரிந்து சென்று பரபரப்புடன் யாரையோ அல்லது எதையோ தேட ஆரம்பித்தார்கள். ஏதோ ஒரு அசம்பாவிதம் நடக்கவிருப்பதாக உள்ளேயிருந்த பொதுமக்கள் உணர, அத்தனை பேரும் மாலின் நான்கு தளங்களிலும் உள்ள பால்கனிகளில் சூழ நின்று பதட்டத்துடன் நடப்பதை வேடிக்கை பார்க்கத் தொடங்கினார்கள். வேறுசிலர் பயத்தில் அங்கிருந்து வெளியேற வழியேதும் இருக்கிறதா என்று அலைமோதிக் கொண்டிருந்தார்கள். பல adventure விரும்பிகள் தங்கள் மொபைல் போன்களை எடுத்து, கேமரா ஆப்பை ஆன் செய்து தயாராக வைத்துக் கொண்டனர்.

ஒரு பதினைந்து நிமிட அமைதி நிலவியது…

திடீரென்று, மற்ற தளங்களில் இருந்த போலீசார் அனைவரும் ஏதோ சிக்னல் கிடைத்தவுடன், இடுப்பின் உறையில் இருந்த பிஸ்டலை உருவியபடி இரண்டாம் தளத்தை நோக்கி திடுதிடுவென ஓட, பார்த்துக் கொண்டிருந்த அத்தனை பேரையும் ஒருவித நடுக்கம் பற்றிப்பிடித்தது… பல நூறு கேமராக்கள் உயிர்பெற்று நிகழ்வுகளைப் பதிவு செய்யத் தொடங்கின…அத்தனை பேரின் கவனமும் இரண்டாம் தளத்தின் ஒரு மூலையை நோக்கிக் குவிந்திருந்தது.

சிறிது நேரத்தில் இரண்டாம் தளத்தின் அந்த மூலையிலிருந்து கறுப்பு ஜீன்ஸ், கறுப்பு சட்டை மற்றும் கறுப்பு தொப்பி அணிந்த ஒல்லியான, உயரமான ஒருவனை அவர்கள் கைது செய்து அழைத்து வந்துகொண்டிருந்தனர். அவனது வலது கையில் விலங்கு மாட்டப்பட்டிருந்தது. விலங்கின் இன்னொரு முனை வளசரவாக்கம் ஆர்-9 ஸ்டேஷன் இன்ஸ்பெக்டர் அன்பழகன் கையில் பூட்டப்பட்டிருந்தது. இருவரையும் போலீசார் சூழ்ந்திருந்தார்கள். குற்றவாளியின் இடதுபுறத்தில் யூனிஃபார்மில் இல்லாத டி-ஷர்ட் இளைஞன் ஒருவன் இருந்தான். அவனும் அந்த போலீஸ் குழுவோடு வந்தவன்தான்.

குற்றவாளியை இரண்டாம் தளத்திலிருந்து முதல் தளத்துக்கு எஸ்கலேட்டரில் அழைத்துக் கொண்டு வந்தார்கள். குற்றவாளி இன்ஸ்பெக்டரிடம் ஏதோ கோபமாக கத்திக்கொண்டே வந்தான். இன்ஸ்பெக்டர் அதைக் காதில் வாங்காமல் பொறுமையாக நடந்து வந்து கொண்டிருந்தார்.

அடுத்து முதல் தளத்திலிருந்து தரைத்தளத்துக்கு எஸ்கலேட்டரில் இறங்கினார்கள். இப்போதும் குற்றவாளி அதே ஆவேசத்தோடு ஏதோ கத்திக்கொண்டிருந்தான். இன்ஸ்பெக்டர் எதிர்வினையின்றி தலையைக் கவிழ்ந்தபடி வந்துகொண்டிருந்தார்.

எஸ்கலேட்டர் தரையைத் தொடுமிடத்தில்..

இன்ன்ஸ்பெக்டர் அன்பழகனின் கைகளில் பூட்டப்பட்டிருந்த விலங்கின் மறுமுனை, அதாவது குற்றவாளியின் கைகளைப் பூட்டியிருந்த முனை இன்ஸ்பெக்டரின் முழங்காலுக்குக் கீழே மோதியது. என்ன நடக்கிறது என்று அவர் நிதானிப்பதற்குள், நான்கு தளங்களிலிருந்தும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த மக்கள் கூட்டம் அதிர்ச்சியில் ஒருசேர அலறியது….

அவன் இல்லை…

இன்ஸ்பெக்டர் கையில் விலங்கு மட்டும் தொங்கிக் கொண்டிருக்கிறது. கேமராவில் படமெடுத்துக் கொண்டிருந்த பலரும் நடுங்கிய கைகளில் கேமராவை இறுகப் பிடித்துக் கொண்டு பதட்டத்துடன் தாங்கள் படமெடுத்த காட்சியை ரீவைண்ட் செய்து பார்க்கிறார்கள். ஆம், முந்தைய ஃப்ரேம் வரை அவன் இருக்கிறான், அடுத்த ஃபிரேமில் இல்லை…

அந்த இடத்தையே ஏதோ ஒரு இருள் சூழ்ந்தது போல இருந்தது. அந்த வினாடி அங்கிருந்த அனைவரும் தங்கள் மனங்களை ஏதோ ஒரு கசப்பான பாரம் அழுத்துவதாக உணர்ந்தனர். முதுகும் இடுப்பும் சேரும் மூலாதாரப் பகுதியில் கைவைத்து வலி தாங்க முடியாமல் பலரும் கீழே அமர்ந்துகொண்டனர். வேறு சிலர் வாந்தி எடுத்தனர். அழகும், வெளிச்சமும் நிறைந்த அந்த இடம் முழுவதும் சில நொடிகள் ஒரு காரிருள் கவ்விக்கொண்டதைப் போல மாறியது.

இன்ஸ்பெக்டர் அன்பழகன் பைத்தியம் பிடித்தது போல கத்துகிறார், “கதிர், என்ன நடக்குது இங்க.. எங்க அவன்?”

டி-ஷர்ட் இளைஞன் இன்னும் அதிர்ச்சியிலிருந்து மீளாதவனாய், “தெரியல சார்..தெரியல…ஒண்ணுமே புரியல”

மாலுக்குள் அதிர்ச்சியும், அலறல்களும் இன்னும் அடங்கவில்லை. பொது மக்களுள் பலர் மாலை விட்டு வெளியே ஓடும் நோக்கத்துடன் தரைத்தளத்தை நோக்கி ஓடிவரத் துவங்குகிறார்கள். என்ன நடந்தது என்பது பலருக்குப் புரியவில்லை, அவர்களுக்கு விளக்கிச் சொல்லும் நிலையிலும் யாரும் இல்லை.

இன்ஸ்பெக்டர் தன்னிலை இழந்தவராக கைகளை அங்குமிங்கும் வீசியபடி கத்துகிறார், அவரது குரல் தனது கம்பீரத்தை இழந்திருந்தது, தழுதழுத்த குரலில் “டேய்..XXX, XXXX பயலே! எங்கடா போன?” அவர் கைகளை வீசியதில் விலங்கின் மறுமுனை அருகேருந்தவர்கள் மீதும் பொருட்களின் மீதும் மோதியடித்தது…

எங்கும் அலறல், பதட்டம், குழப்பம்…

திடீரென்று…

முந்தய அதிர்ச்சியிலிருந்து மீள்வதற்குள்…

அங்கிருந்த அத்தனை பேரின் இரத்தத்தையும் உறைய வைக்கும் அந்த பயங்கரச் சம்பவம் அரங்கேறியது…அது அத்தனை கேமராக்களிலும் பதிவாகியது…

அத்தியாயம்: 2 - சூரியனைக் கவ்விய சர்ப்பம்

நாள்: 1
26/12/2019 வியாழன்
காலை 11:00 மணி

15 நாட்களுக்கு முன்பு…

சென்னை…

அன்று முழு சூரியகிரகணம், கதிர் தனது அம்மாவின் கட்டளைக்கு இணங்க வீட்டை விட்டு வெளியே போகாமல் டிவி பார்த்துக் கொண்டிருந்தான். அவன் தன் பெற்றொருக்கு ஒரே மகன். வயது 27, லண்டனில் கிரிமினல் சைக்காலஜி முடித்து, அங்கேயே ஒரு பெரிய துப்பறியும் நிறுவனத்தில் வேலை செய்துவிட்டு இந்தியாவுக்கு வந்திருந்தான். அவனுக்கு கால்கட்டு போடும் நோக்கத்துடன் பல்வேறு பொய்களைச் சொல்லி அவனை பெற்றோர் இந்தியாவுக்கு வரவழைத்திருந்தார்கள்.

சிவந்த நிறம், ஆறடி உயரம், கட்டான உடல்வாகு, லேசாக ட்ரிம் செய்யப்பட்ட மீசை தாடி, உதட்டில் எப்போதும் ஒரு மெல்லிய புன்னகை…இதுதான் கதிர். துப்பறிவதில் நிபுணன் என்றாலும் பார்ப்பதற்கு என்னமோ ஒரு ஐடி இஞ்சினியர் போல, பக்கத்து வீட்டுப் பையன் போலத்தான் இருப்பான். எல்லோரிடமும் சகஜமாகப் பழகுவான், பார்க்கும் யாருக்கும் உடனே பிடித்துப்போகும்.

கதிர் சென்னைக்கு வந்து ஆறு மாதங்களாயிற்று. அவனுக்கு தற்போது திருமணம் செய்துகொள்ளும் விருப்பமில்லை. அதனால் பெற்றோர்கள் பார்க்கும் பெண்களையெல்லாம் ஏதேதோ காரணங்கள் சொல்லி தட்டிக் கழித்துக் கொண்டிருந்தான். பிரிட்டிஷ்காரி எவளிடமாவது காதலில் சிக்கிக்கொண்டானா என்ற குழப்பத்தில் பெற்றோர்கள் இருந்தனர்.

கதிர் பொழுதுபோகாமல் சேனல் விட்டு சேனல் தாவிக்கொண்டிருந்தான்.

அன்று எல்லா செய்திச் சேனல்களும் கிரகணப் புராணம் பாடிக்கொண்டிருந்தன. ஒரு சேனலில் பொதுமக்களும், மாணவர்களும் சோலார் ஃபில்டர் கண்ணாடி அணிந்து வானத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டிருக்கும் காட்சி Live-இல் ஓடிக் கொண்டிருந்தது. பின்னனியில் வர்ணணையாளர் தன் வாய்க்கருகில் இருக்கும் மைக்கைக் கூட நம்பாமல் அரங்கத்துக்கு வெளியே இருப்பவர்களுக்கும் கேட்கும் வகையில் உற்சாகமாகக் கத்திக் கொண்டிருந்தார்…

"இப்பொழுது நாம் கோவை குனியமுத்தூரில் இருந்து வளைய சூரிய கிரகணக் காட்சிகளை நேரடியாக ஒளிபரப்பிக் கொண்டிருக்கிறோம். கோவையில் மட்டுமல்லாமல் தமிழ்நாட்டில் நீலகிரி, திருப்பூர், திண்டுக்கல், திருச்சி, புதுக்கோட்டை, சிவகங்கை, கரூர், ஈரோடு மாவட்டங்களில் இந்த சூரியகிரகணம் முழுமையாகத் தெரியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுபோல இன்னொரு வளைய சூரியகிரகணத்தைப் பார்க்க வேண்டுமானால் நாம் இன்னும் 21 ஆண்டுகள் காத்திருக்க வேண்டும்"

க்ளிக்..அடுத்த சேனல்..

கறுப்புச் சட்டை அணிந்த பகுத்தறிவு இயக்கத்தைச் சேர்ந்த ஒருவர் டிவி விவாதமேடையில் பேசிக்கொண்டிருந்தார். அவரோடு விவாதம் செய்ய வந்த ஜோதிட ஆர்வலர் ஒருவர் அவர் பேசுவதை எரிச்சலோடு கேட்டுக்கொண்டிருந்தார். பொறுமையிழந்தவராக இடையிடையே தன்னைப் பேச அனுமதிக்கும்படி கைகளை உயர்த்தி நெறியாளரை நச்சரித்துக் கொண்டிருந்தார்.

பகுத்தறிவுவாதி, "சூரியகிரகணம் சார்ந்த மூடநம்பிக்கைகள் ஏற்கனவே நம்ம நாட்டுல நிறைய இருக்கு, அதுவும் இந்த சூரிய கிரகணம் இந்த so called evil 26th அன்னிக்கு வேற வருதா, கேட்கவே

வேணாம்..2004 சுனாமி வந்த அதே நாள் வேற.. இது சம்பந்தமா சமூக வலைதளங்கள்ல பலபேரு தேவையில்லாத பீதிய கௌப்பி விட்டுக்கிட்டு இருக்காங்க, அதையெல்லாம் நம்பாதீங்க... அறிவியல் சார்ந்து, அதிகாரபூர்வமா என்ன சொல்றாங்களோ அதை மட்டும் கேட்டு பாதுகாப்பா இருந்துக்கங்க, மற்றபடி வாட்ஸ்ஆப்ல வர்ற கண்ட நான்சென்ஸையும் நம்பாதீங்க…”

க்ளிக்..அடுத்த சேனல்..

தாம்பாளத் தட்டில் ஒரு உலக்கை செங்குத்தாக நின்று கொண்டிருந்தது, கிராமவாசிகள் சுற்றி நின்று கொண்டிருந்தார்கள். அவர்கள் நடுவே ஜீன்ஸ், முழுக்கை ஷர்ட் மற்றும் கூலிங்கிளாஸ் சகிதமாக கையில் மைக்குடன் ஒரு இளம் பெண் ஆங்கர் பேசிக்கொண்டிருந்தாள்.

"சூரியகிரகணத்தின்போது உலக்கை ஒரு தாம்பாளத் தட்டின்மீது செங்குத்தாக நிற்கும் காட்சியை நாம் இப்போது சேலம் அருகேயுள்ள கன்னங்குறிச்சி கிராமத்திலிருந்து பார்த்துக் கொண்டிருக்கிறோம். கிரகணம் விட்ட பிறகு உலக்கை தானாக கீழே விழுமென்று சொல்லுகிறார்கள். மணி இப்ப 11:18 ஆச்சு, விழுமான்னு பார்ப்போம்..

டிவி திரையில், டிஜிட்டல் கடிகாரத்தில் வினாடிகள் குறைய ஆரம்பித்தது..

கிரகணம் விட்ட சில வினாடிகளில் உலக்கை தானாக கீழே சாய, சுற்றியுள்ள மக்கள் ஆரவாரமாக குரல் எழுப்பினார்கள். அந்தப் பெண் உற்சாகத்தில் துள்ளிக் குதித்தாள். “இந்தா இந்தா விழுந்திருச்சு பாருங்க…வாவ்! ஆச்சரியமா இருக்கு...இது எப்படி சாத்தியம்..???”

அந்தப் பெண்ணின் செயற்கையான உற்சாகத்தை தொடர்ந்து பார்க்கமுடியாத கதிர் டிவியை ஆஃப் செய்து விட்டு, சோம்பல் முறித்தபடி “… ம்மா, கிரகணம் விட்ருச்சு. இப்பவாவது வெளில போலாமா?”

அடுப்படியிலிருந்து அம்மா கத்தினார், “ஏண்டா இன்னிக்கு ஒருநாள் ஒன்னால அடங்கி, ஒடுங்கி வீட்ல இருக்க முடியாதா? அப்படி என்னதான் வெளில வேல இருக்கு ஒனக்கு? இன்னிக்கு சாயங்காலம் வரைக்கு வீட்ட விட்டு எங்கயும் வெளிய போகக்கூடாது, போனேனா ராத்திரி சாப்பாடு கிடையாது சொல்லிட்டேன்”...

சில வினாடிகள் கழித்து அம்மா எதையோ யோசித்தவராய் மீண்டும் கத்தத் துவங்க, அதற்குள் குக்கர் அதைவிட சத்தமாக விசிலடித்து அம்மாவை ஆஃப் செய்தது.

அத்தியாயம்: 3 - தற்கொலை செய்யப்பட்டவள்?! (Case-1)

நாள்: 1
26/12/2019 வியாழன்
காலை 11:45 மணி

சென்னை வடபழனி ஆர்-8 காவல் நிலையம்…

இன்ஸ்பெக்டர் ப்ரியா தீவிர அலுவலில் மூழ்கியிருந்தாள். வயது 26 இருக்கும். போலீஸ் பயிற்சிகள் முடித்து வடபழனி ஆர்-8 காவல் நிலையத்தில் இன்ஸ்பெக்டராகப் பணியமர்த்தப் பட்டிருந்தாள். இன்னும் திருமணமாகவில்லை, மிகவும் பணக்கார குடும்பப் பின்னனி கொண்டவள், கண்களைக் கொள்ளை கொள்ளும் அழகு, ரொம்பவே மார்டன், ஈகோ கூடவே பிறந்தது, கொஞ்சம் முன்கோபக்காரி.

பணியில் லயித்திருந்த அவள் கவனத்தை கலைக்கும் வகையில் மேஜையில் இருந்த டெலிபோன் அலறியது..

இன்ஸ்பெக்டர் ப்ரியா ஹியர்…

எதிர்முனையில் பேசிய நபர் கண்ட்ரோல் ரூமிலிருந்து பேசினார், அவர் பேசியதை சலனமின்றி கேட்ட ப்ரியா, "ஷ்யுர்..நான் பார்க்குறேன்" . இணைப்பைத் துண்டித்துவிட்டு தனது சப்-இன்ஸ்பெக்டரை அழைத்தாள்…

கோப்பெருந்தேவீ…

……..

புயலாகப் பறந்த போலீஸ் இன்னோவா அடுத்த 15 நிமிடங்களில் குமரன் காலணி மூன்றாவது குறுக்குத் தெருவில் போய் நின்றது. ப்ரியாவுடன், எஸ்.ஐ கோப்பெருந்தேவி, டிரைவர் நாகப்பா, மேலும் இரு ஆண் காவலர்கள் இருந்தனர். சின்னச்சின்ன வீடுகள் ஒரே மாதிரி வரிசையாக இருந்தது. 40 வருடங்களுக்கு முன் கட்டப்பட்ட கட்டிடம் என்பது அதன் அமைப்பில் தெரிந்தது. அந்த வரிசையின் கடைசி வீட்டின் முன் அப்பகுதி மக்கள் மொத்தமாகக் கூடியிருந்தார்கள். அனைவர் முகத்திலும் சோகரேகை படர்ந்திருந்தது.

போலீஸ் வாகனம் வந்து நிற்பதைப் பார்த்ததும் அங்கிருந்த அனைவருக்கும் ஒருவித பரபரப்பு தொற்றிக்கொண்டது. காரிலிருந்து ப்ரியாவும், கோப்பெருந்தேவியும் இறங்க, உடன் வந்த இரு காவலர்களும் அவர்களுக்கு முன்னாக இறங்கி ஓடிப்போய் கூடியிருந்த கூட்டத்தை விலக்கினார்கள்.

ப்ரியாவும், கோப்பெருந்தேவியும் இலேசாக சாத்தப்பட்டிருந்த வாசல் கதவைத் திறந்து, இருட்டடைந்த அந்த வீட்டுக்குள் நுழைந்தார்கள். ஏற்கனவே கையுறை மாட்டியிருந்த ஒரு கான்ஸ்டெபிள் ஸ்விட்சைப் போட்டார், ஒரு எல்.இ.டி பல்ப் பளிச்சென விழித்துக் கொண்டது. ஒரு ஹால், ஒரு படுக்கையறை, ஒரு மிகச்சிறிய சமையல்கட்டு, இவ்வளவுதான் அந்த வீடு. சிறிய வீடானாலும் சுத்தமாக இருந்தது. பொருட்கள் ஒழுங்காக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. ப்ரியா அனைத்தையும் சில வினாடிகளில் கண்களால் மேய்ந்துவிட்டு படுக்கையறைக்குள் எட்டிப்பார்த்தாள்…அதற்குள் அந்த அறைக்குள்ளும் அந்தக் காவலர் ஓடிப்போய் ஸ்விட்ச்சைப் போட..

ஒரு 45 வயது மதிக்கத்தக்க பெண் அந்த அறையில் தூக்கில் தொங்கிக் கொண்டிருந்தாள். கறுப்பு நிற ப்ளவ்ஸ், ஆரஞ்சும் கறுப்பும் கலந்த ஆர்ட் சில்க் சேலை கட்டியிருந்தாள். அவள் கழுத்தைச் சுற்றியிருந்த புதிய தடிமனான பச்சை நிற நைலான் கயிறு மறுமுனையில் சீலிங்கில் இருக்கும் கொக்கியுடன் இணைக்கப்பட்டு, நான்கைந்து முடிச்சுகள் உறுதியாகப் போட்டு கட்டப்பட்டிருந்தது.

தூக்கில் தொங்கிக் கொண்டிருக்கும் பெண்ணின் பெயர் பவானி. அவள் பெயரையும், தோராயமான வயதையும் ப்ரியாவிடம் கண்ட்ரோல் ரூமிலிருந்து பேசிய நபர் ஏற்கனவே சொல்லியிருந்தார். பவானியின் இடது கன்னத்தில் கிட்டத்தட்ட முக்கால் கன்னத்தை மறைக்கும் வகையில் கேரம் போர்டு ஸ்டிரைக்கர் அளவுக்கு கறுப்பு மையினால் வரையப்பட்டிருந்த அந்த மிகப்பெரிய பொட்டு அனைவர் கவனத்தையும் ஈர்த்தது.

கோப்பெருந்தேவி, “என்ன மேம் இது கன்னத்துல?...”

ப்ரியா, குழப்பதுடன், “ ஸோ ஸ்ட்ரேஞ்!”…

பவானியின் இடுப்பில் ஒரு வெள்ளைத் தாள் நீள்வாக்கில் இரண்டாக மடிக்கப்பட்டு சொருகியிருந்தது. அது சூசைட் நோட் என்று புரிந்துகொண்ட கோப்பெருந்தேவி, அதை பவானியின் இடுப்பிலிருந்து உருவி ப்ரியாவின் கைகளில் கொடுத்தாள். ப்ரியா அதைப் பிரித்துப் பார்த்து அது தெலுங்கில் இருக்கவும் அதை மறுபடியும் மடித்து கையில் வைத்துக்கொண்டு வீட்டுக்கு வெளியே வந்து யாரையோ தேடினாள்.

வெளியே போலீஸ் வாகனத்தின் பான்னெட்டைத் திறந்து எஞ்சினை ஆராய்ந்து கொண்டிருந்த டிரைவர் நாகப்பாவை அவள் அழைத்ததும், உடனே பான்னெட்டை மூடிவிட்டு, ஓடிவந்து ப்ரியாவின் முன்பு வந்து பவ்யமாக நின்றான் நாகப்பா. ப்ரியா அவன் கைகளில் அந்த பேப்பரைக் கொடுக்க, நாகப்பா கிரீஸ் படிந்திருந்த தனது கைகளை வேகவேகமாக கர்ச்சிப்பால் துடைத்துவிட்டு, அவள் கைகளிலிருந்து அந்தப் பேப்பரை தன் விரல்களின் நுனியால் வெகு ஜாக்கிரதையாக வாங்கிக் கொண்டான். ப்ரியா அங்கிருந்த கூட்டத்தினரை நோக்கி…

“யாரு மொதல்ல பார்த்து போலீசுக்கு இன்ஃபார்ம் பண்ணது?”

"நாந்தாங்கம்மா.." ஒரு 60 வயது மதிக்கத்தக்க பெண் முன்னே வந்தார்.

"நான் இங்கிருந்து அஞ்சு வீடு தள்ளி மளிகைக் கடை வச்சிருக்கேம்மா. என் பேரு பங்காரம்மா. பவானி என் ப்ரண்டுதான். பாக்கெட் பால் வேணும்னு கேட்டிருந்தா.. அவ கேட்டப்ப பால் இல்ல, பால்காரன் வந்து பால் போட்டவுடனே ரெண்டு பாக்கெட் எடுத்துட்டு வந்தேன். வூடு சும்மாதான் பூட்டிருந்துச்சு, வழக்கம்போல தள்ளிட்டு உள்ள போனேன்..." அதற்கு மேல் பேசமுடியாதபடி புடவை முந்தானையால் வாயைப் பொத்தியபடி அழத்தொடங்க..

ப்ரியா நாகப்பாவைப் பார்த்தாள், அந்த சூசைட் நோட்டைப் படித்த அவன் முகம் வெளிறியிருந்தது. அந்த சூசைட் நோட்டில் ஏதோ வில்லங்கம் இருப்பதை ப்ரியா உணர்ந்து கொண்டாள்.

“சரிசரி அழாத…” என்றபடி ப்ரியா வீட்டுக்குள் இருந்த கையுறை மாட்டிய கான்ஸ்டெபிளை அழைத்து, “"கனகராஜ், ஃபரன்சிக் எக்ஸ்பர்ட்ஸ்க்கு எல்லாம் இன்ஃபார்ம் பண்ணியாச்சா? மொதல்ல இந்தக் கூட்டத்தையெல்லாம் க்ளியர் பண்ணுங்க”

அழுது, புடவைத் தலைப்பில் மூக்கு சிந்திக்கொண்டிருந்த பங்காரம்மாவைப் பார்த்து, “பவானி என்ன பண்றா? அவ ஃபேலியெல்லாம் எங்க?”

பங்காரம்மா, “அவ சினிமா துணை நடிகைம்மா, புள்ளைங்க இல்ல, புருஷன் மட்டும்தான். அவரும் இப்ப கல்கத்தால வேலை செய்றாரு”

இதற்கிடையே நாகப்பா ஏதோ மிக முக்கியமான விஷயத்தை தன்னிடம் சொல்ல முயற்சிப்பதை உணர்ந்த ப்ரியா பங்காரம்மாவிடம், “சரி நீ மட்டும் இங்கேயே இரு, வீட்டுக்குப் போயிராத”

நாகப்பாவை அழைத்துக் கொண்டு ப்ரியா மறுபடியும் வீட்டுக்குள் போகிறாள். உள்ளே இருந்த கோப்பெருந்தேவி ஆர்வமாக அவர்களுடன் வந்து சேர்ந்து கொண்டாள்.

“என்ன நாகப்பா, அதுல என்ன இருக்கு? எனிதிங் ராங்?”

நாகப்பா பதட்டத்துடன் குரலை ரொம்பவே தாழ்த்தி, "மேடம் இதுல எழுதியிருக்கிறத அப்படியே தமிழ்ல சொல்றேன், “இது திட்டமிட்ட படுகொலை, கொலையாளிகளைத் தப்பவிடாதீர்கள், என் சாவுக்கு நீதி கிடைக்க உதவி செய்யுங்கள்” அப்டீன்னு எழுதிருக்கு மேடம்.

ப்ரியா, கோப்பெருந்தேவி இருவரும் அதிர்ச்சியாக, “வ்வ்வாட்???”

அந்த நேரத்தில் கதவைத் தட்டிக்கொண்டு உள்ளே நுழைந்த ஃபரன்சிக் எக்ஸ்பர்ட் ஒருவர் சில உதவியாளர்களோடு வந்து பவானியின் உடலை கீழே இறக்கினார்.

ப்ரியா, “இது அவளோட கையெழுத்தான்னு செக் பண்ணணுமே?” சுற்றும் முற்றும் பார்த்து, அந்த அறையின் அலமாரியில் அடுக்கியிருந்த புத்தகங்களின் நடுவே இருந்த ஒரு நோட்டை உருவி, திறந்து சில பக்கங்களை வேகமாகப் புரட்டிப் பார்த்து அதை நாகப்பாவிடம் கொடுத்து, “இது ரெண்டும் ஒரே கையெழுத்தான்னு செக் பண்ணிப்பாரு”

நாகப்பா சில நிமிடங்கள் இரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்து, “ஆமா மேடம் ரெண்டும் ஒரே கையெழுத்துதான்”

ப்ரியா, “ஆர் யூ ஷ்யூர்”

நாகப்பா, “ஆமா மேடம் நிச்சயமா”

அவை இரண்டும் ஒரே கையெழுத்துதான் என்று நாகப்பா உறுதியாகச் சொன்னதும் ப்ரியாவுக்கும், கோப்பெருந்தேவிக்கும் தலை சுற்றியது..”அதெப்படி தூக்கில் தொங்கிக் கொண்டிருப்பவள் தன் கையாலேயே இதைக் கொலை என்று எழுதியிருக்க முடியும்? அப்படியெனில் கொலையாளி யார்? அவன் எப்படி இந்த கடிதத்தை அனுமதித்திருப்பான்? ஒருவேளை கொன்றவன் சைக்கோவாக இருப்பானோ? அல்லது இவள் பைத்தியமாயிருப்பாளோ?...

பல்வேறு கேள்விகள் மனதில் அலைமோத சட்டென்று உணர்வுக்கு வந்தவளாய் கோப்பெருந்தேவி நாகப்பாவிடம், “அந்த நோட்டுல என்ன எழுதிருக்கு?”

நாகப்பா. “இது ஏதோ சாமி மந்திரம் மாதிரி இருக்கு மேடம்”.

ப்ரியா வெளியே எட்டிப்பார்த்து, “ஏ..பங்காரம்மா, இங்கே வா”

பங்காரம்மா பீதியடைந்த முகத்துடன் உள்ளே வந்தார்.

ப்ரியா, “நீ தெலுங்குதானே”

பங்காரம்மா, “ஆமங்மா”

"இந்த பவானியோட கையெழுத்து ஒனக்குத் தெரியுமா?"

"நல்லா தெரியுங்மா, என் கடைலதானே சிட்டை எழுதிக் கொடுத்து ஜாமான் வாங்கிட்டுப் போவா..கையெழுத்து நல்லா முத்து முத்தா அழகா இருக்கும்.”

ப்ரியா அலமாரியிலிருந்து எடுத்த அந்த நோட்டை பங்காரம்மாவின் கையில் கொடுத்து, "இது அவ கையெழுத்துதானா பாத்து சொல்லு”

பங்காரம்மா அந்த நோட்டைப் பார்த்த மாத்திரத்தில், "ஆமங்மா அவ கையெழுத்துதான்…"

ப்ரியா, “இதுல என்ன எழுதிருக்கு”

பங்காரம்மா சில நிமிடங்கள் நோட்டை மேய்ந்துவிட்டு, “இது மஹா ம்ருத்துஞ்ஜய மந்திரம்மா” சொல்லும்போதே அவள் முகம் கொஞ்சம் சீரியஸாக மாறுகிறது. “ஜோசியர் ஒருத்தர் தன்னோட உயிருக்குக் கண்டம் இருக்குன்னு சொன்னதா போன மாசம் பவானி எங்கிட்ட சொன்னாம்மா, பாவம் அவர் சொன்னதைக் கேட்டு பரிகாரத்துக்காக எழுதிருப்பா போல. தேவுடா! அந்த ஜோசியர் சொன்ன மாதிரியே நடந்திருச்சே”

ப்ரியா, “சரி, நீ கௌம்பு..”

ப்ரியா பலவாறு யோசித்தபடி வீட்டுக்குள் வந்தாள், உள்ளே ஃபரன்சிக் ஆட்கள் தங்கள் வேலையை செய்து கொண்டிருந்தனர். அவர்கள் செய்வதை அருகே நின்று கோப்பெருந்தேவி பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் கைகளில் ஒரு நோட்டும் பேனாவும் வைத்து ஏதோ குறிப்பெடுத்துக் கொண்டிருந்தாள்.

ப்ரியா வந்ததைப் பார்த்ததும் கோப்பெருந்தேவி அவளிடம் போய், “என்ன மேம் மிஸ்ட்ரியா இருக்கு… இந்த லெட்டர்ல இருக்கிற மாதிரி கொலையா இருந்தா இவ எப்படி தூக்குல தொங்க முடியும்?”

ப்ரியா, “ஏன்”

கோப்பெருந்தேவி, “இல்ல... கொலை பண்றவன் கொலையை தற்கொலையாக் காட்டி கேஸை திசை திருப்பத்தான் கொலை பண்ணிட்டு, பொணத்தை தூக்குல தொங்கவிடுவான். அப்படித்தான் நாம நிறையப் பாத்திருக்கோம். ஒருவேளை அப்படியிருந்தா இது தற்கொலைன்னுதானே சூசைட் நோட் இருக்கணும்... இது கொலைன்னு இருக்கே எப்படி சாத்தியம்?..அதுவும் செத்துப்போனவளோட சொந்தக் கையெழுத்தில…கண்ண கட்டுது மேம்..”

ப்ரியா, “ஏன்..இவளே சூசைட் பண்ணிக்கிட்டு யாரையாவது மாட்டி விடுறதுக்காக இப்படி எழுதி வச்சிருக்கலாம்ல? அப்படி இருக்கத்தான் சான்ஸஸ் நிறைய இருக்கு. ஆனா அந்தக் கன்னத்துல ஏன் கறுப்பா அவ்வளோ பெரிய பொட்டு! ரொம்ப அன்யூஷுவலா இருக்கு..அதுதான் என்னன்னு புரியல, யாரும் திருஷ்ட்டிக்குக்க்கூட இவ்ளோ பெருசா வைக்க மாட்டாங்களே!”

ப்ரியா இதை சொல்லிக்கொண்டிருக்கும்போது ஃபரன்ஸிக் ஆட்கள் கிட்டத்தட்ட தங்கள் வேலையை முடித்து விட்டிருந்தார்கள். பவானியின் உடல் போஸ்ட் மார்டத்துக்கு எடுத்துச் செல்ல ஆயத்தமாக இருந்தது. ஓராயிரம் மர்மங்களைச் சுமந்த அந்தக் கன்னத்துக் கறுப்பு பொட்டுடன் பவானியின் உயிரற்ற முகம் இப்போது ப்ரியாவை நோக்கித் திரும்பியிருந்தது, பவானி தன்னிடம் ஏதோ சொல்லவருவது போல ப்ரியா உணர்ந்தாள், அவள் முதுகுத்தண்டு இலேசாகச் சில்லிட்டது.

அத்தியாயம்: 4 - மொழிக்குள் புதைந்த மர்மம் (Case-2)

நாள்: 1
26/12/2019 வியாழன்
காலை 11:55 மணி

இன்ஸ்பெக்டர் ப்ரியாவுக்கு போன் வந்த அதே நேரத்தில்…

சென்னை சாலிகிராமம் ஆர்-5 காவல் நிலையம்…

இன்ஸ்பெக்டர் எழிலரசி தனது குழுவுடன் மீட்டிங்கில் இருந்தாள். வழக்கமாக சீரியஸாகப் போகும் மீட்டிங், இன்று கான்ஸ்டெபிள் மகேஸ்வரியின் பிறந்த நாளாதலால் கேக், கூல்டிரிங்க்ஸ் சகிதம் கொஞ்சம் ஜாலியாகப் போய்க்கொண்டிருந்தது. மகேஸ்வரி மூன்று தலைமுறையாக போலீஸ் குடும்பம். கிராமத்துப் பெண்களுக்கே உரிய வெள்ளேந்தியான குணமும், குண்டான உடலமைப்பு உள்ளவளாதலால் குழுவினரின் அன்பான கிண்டலுக்கும் அவ்வப்போது ஆளாவாள். ஆனால் தன் சகாக்கள் தன்னை ஓட்டுவதை ஜாலியாக எடுத்துக் கொண்டு அவளும் அவர்களோடு சிரித்து மகிழ்வதால் அவள் அனைவருக்கும் பிடித்தமானவளும்கூட.

இன்ஸ்பெக்டர் எழிலரசி எளிமையான குடும்பப் பின்னணியிலிருந்து வந்தவள். தொடக்கத்திலிருந்தே தமிழ் மீடியத்தில் கற்று வந்தவளாதலால் தமிழ் அவள் நாவில் தாண்டவமாடும். வயது 27 இருக்கும். இன்னும் திருமணமாகவில்லை. மாநிறம், குடும்பப்பாங்கான முகம். யூனிஃபார்மைக் கழற்றிவிட்டால் அவளை யாரும் போலீஸ் என்றே நம்பமாட்டார்கள். தோற்றத்தில் அத்தனை சாந்தமானவள், ஆனால் வேலையென்று வந்துவிட்டால் புலிதான்! எழிலுக்கு டிபார்ட்மெண்டில் எப்போதும் ஒரு நல்ல பேர் உண்டு.

மீட்டிங்கில் எழிலரசி பேசிக்கொண்டிருக்கும்போது சப்-இன்ஸ்பெக்டரின் மேஜையிலிருந்த போன் திரும்பத் திரும்ப சிணுங்கிக் கொண்டே இருந்தது. சப்-இன்ஸ்பெக்டர் சமீபத்தில் வேறு ஊருக்கு மாற்றப்பட்டு, அந்த இடத்துக்கு இன்னும் ஆள் நியமனம் செய்யப்படாமல் இருந்தது. போன் அடித்துக் கொண்டே இருந்ததால் எழிலரசி உட்பட அனைவரும் சற்று எரிச்சலடையவே, மகேஸ்வரி ஓடிப்போய் போனை எடுத்து காதில் வைத்தாள். மீட்டிங் நடந்து கொண்டிருந்ததால் சத்தத்தைக் குறைத்துப் பேசினாள்…எழில் மீட்டிங்கில் தனது பேச்சைத் தொடர ஆரம்பித்தாள்..

இரு நிமிடங்கள் கழித்து போனை கட் செய்துவிட்டு, மகேஸ்வரி எழிலிடம் ஓடிவந்து ஏதோ சொல்ல.. உடனடியாக மீட்டிங் நிறுத்தப்பட்டது..ஸ்டேஷன் பரபரப்பானது. எழில் தலைமையில் ஒரு குழு வேகமாகக் கிளம்பி ஸ்டேஷனை விட்டு வெளியேறியது…

……

அந்த பெண்கள் விடுதியின் வாசலில் 'மதி லேடீஸ் ஹாஸ்டல்" என்ற போர்டு தொங்கிக்கொண்டிருந்தது. ஃப்ளக்ஸ் போர்டில் நடிகை சிநேகா சிரித்துக் கொண்டிருந்தார். எழிலரசி தலைமையிலான குழு ஹாஸ்டலுக்குள் நுழைந்தபோது மணி சரியாக 12:20 இருக்கும். அது வேலை நாளாதலால் ஹாஸ்டலின் தரைத்தளத்தில் பல அறைகள் பூட்டப்பட்டிருந்தன. ஹாஸ்டலின் உரிமையாளரான ஒரு 50 வயதுப் பெண்மணி பதட்டமான முகத்தோடு வந்து எழிலை வரவேற்றார். அவருடன் ஹாஸ்டலில் தங்கியிருக்கும் ஏழெட்டு பெண்களும் இருந்தனர். அத்தனைபேர் முகத்திலும் பயம் அப்பியிருந்தது. சிலருக்கு அழுது கண்கள் வீங்கியிருந்தது.

வணக்கம் மேடம், என் பேரு வளர்மதி மேடம், நான்தான் இந்த ஹாஸ்டல் ஓனர். நான்தான் போன் பண்ணேன் மேடம். வாங்க மேடம் காட்டுறேன்.. ஒவ்வொரு வார்த்தைக்கும் ஒரு மேடம் போட்டபடியே வளர்மதி பவ்யமாக போலீசாரை முதல் தளத்துக்கு அழைத்துச் சென்றார். அவர்களுக்குப் பின்னால் ஹாஸ்டல் பெண்களும் அணிவகுத்தார்கள்.

முதல் தளமும் கிட்டத்தட்ட காலியாகத்தான் இருந்தது, வேலைக்குப் போன பெண்கள் தவிர அங்கு இருந்தவர்கள் அனைவரும் அவரவர் அறையில் இருக்க பயந்துகொண்டு, ஒட்டுமொத்தமாக வளர்மதியைச் சூழ்ந்து கொண்டிருந்தனர்.

வளர்மதி முதல் தளத்தின் மூலையில் இருந்த 19-ஆம் எண் அறையை எழிலிடம் காட்டினார், "ரூம் உள்ள பூட்டிருந்துச்சு மேடம், நாங்கதான் கதவை உடைச்சு திறந்தோம்…".

அங்கே ஊதா நிற ஜீன்ஸ், சாம்பல் நிற டி-ஷர்ட் அணிந்த இளம் பெண் ஒருத்தி தூக்கில் தொங்கிக் கொண்டிருந்தாள். வெண்ணிற சுடிதார் ஷாலை மின்விசிறியில் கட்டி மறுமுனையை கழுத்தில் மாட்டியிருக்கிறாள். எழிலுடன் வந்த போலீஸ் மற்றும் ஃபரன்சிக் குழுவினர் பிணத்தை இறக்கி ஆராய ஆரம்பித்தனர்.

எழில் தன் தலையிலிருந்த தொப்பியைக் கழற்றியபடி "பொண்ணு பேர் என்ன? எங்க ஒர்க் பண்றா?" என்று கேட்க…

"இவ பேரு ரோஷிணி மேம், Red Vulture Technologies-ல Programmer-ஆ ஒர்க் பண்றா" வளர்மதியை முந்திக்கொண்டு ஒரு இளம் பெண் பதிலளித்தாள்.

எழில், "நீ யாரு?"

"நான் அவளோட ரூம் மேட் மேம் and colleague also.. என் பேரு ரூபா" அதிகமாக அழுதிருந்ததால் அவள் கண்கள் சிவந்து, முகம் வீங்கியிருந்தது..

"சரி, ரோஷிணிக்கு சொந்த ஊர் எது?"

ரூபா பதில் சொல்வதற்குள், கான்ஸ்டெபிள் மகேஸ்வரி ரோஷிணி அணிந்திருந்த ஜீன்ஸ் பாக்கெட்டுக்குள் மடித்து வைக்கப்பட்டிருந்த ஒரு காகிதத்தை கையில் எடுத்து எழிலிடம் காட்டியபடி…

''மேடோம்!.. ஒரு நிமிஷம், இந்த லெட்ரு இவ பேண்ட் பாக்கெட்ல இருந்துச்சு மேடோம்''

எழில், ''கொண்டு வா இங்க…''

சற்றுமுன் படியேறியதால் ஏற்கனவே மூச்சுவாங்கிக்கொண்டிருந்த மகேஸ்வரி, இளைக்க இளைக்க ஓடிவந்து அதை எழிலிடம் கொடுத்தாள். அதை வாங்கிப் பிரித்து படித்தபடியே எழில் ரூபாவை நோக்கி, ''ம்ம்ம்..மேல சொல்லு''

''ரோஷிணிக்கு கர்நாடகால குல்பர்க்கா சொந்த ஊரு மேம்..B.Tech Computer Science, IIT Dharwad-ல முடிச்சவ…''

ரூபா பேசிக்கொண்டிருக்கும்போதே எழில் குழப்பத்துடன் அவளை இடமறித்து, ''இரு இரு என்ன சொன்ன? சொந்த ஊரு குல்பர்க்காவா? அப்ப இவ தமிழ்ப் பொண்ணு இல்லையா?''

ரூபா, ''இல்ல மேம், இவ கன்னடிகா…''

எழில், ''அப்ப சூசைட் நோட் தமிழ்ல இருக்கு!''

ரூபா அதிர்ச்சியுடன், '' சான்ஸே இல்ல மேம், இவளுக்கு ஒரு வார்த்தைகூட தமிழ்ல எழுதப் படிக்கத் தெரியாது. இவ சென்னைக்கு வந்தே ஆறு மாசந்தானே ஆகுது. இவளுக்கு தமிழ் எழுதப் படிக்கத் தெரியாதுன்னு எனக்கு நல்லாத் தெரியும் மேம்.''

எழில் அந்தக் காகிதத்தை ரூபாவிடம் நீட்டி, ‘‘அப்ப இந்த சிக்னேச்சர் யாரோடது?’’

ரூபா அதை வாங்கிப் பார்த்து, ‘‘மேம், இது இவளோட சைன்தான். ஆனா சைன் மட்டும்தான் இவளோடது, அது இங்லீஷ்லதானே இருக்கு.,, ஆனா இந்தத் தமிழ் அவ எழுதிருக்க சான்ஸே இல்ல மேம்.. இதுல என்ன எழுதிருக்கு மேம்?

எழில், ‘‘ஏன் நீ தமிழச்சிதானே, உனக்கும் படிக்கத் தெரியாதா?’’

ரூபா அவமானம் மற்றும் தயக்கத்துடன், ‘‘இ..இல்ல மேம், இங்கிலீஷ் மீடியம்’’

எழில் அவளை முறைத்தபடி அந்த லெட்டரை அவள் கையிலிருந்து வெடுக்கென பிடுங்கி, ‘‘இது என்னுடைய தவறுக்கு நானே எனக்குக் கொடுத்துக் கொள்ளும் தண்டனை, இது நான் யாருடைய தூண்டுதலுமின்றி சொந்தமாக எடுத்த முடிவு..என் சாவுக்கு என்னைத் தவிர வேறு யாரும் காரணமல்ல…’’ என்று வாசித்துவிட்டு ரூபாவின் முகத்தைப் பார்க்க…

அவள் ஒன்றும் புரியாமல் விழித்தாள்…

அந்தநேரத்தில் ஹாஸ்டல் ஓனர் வளர்மதி குறுக்கிட்டு, ‘‘மேடம் எனக்கு நிச்சயமாத் தெரியும், இந்தப் பொண்ணுக்கு தமிழ் தெரியாது, ஏதோ ஒண்ணு ரெண்டு வார்த்தைகள் பழகிட்டு பேசுவா. ஆனா இவ்வளோ சுத்த தமிழ்ல அவ இந்த லெட்டரை எழுதியிருக்க வாய்ப்பே இல்ல’’

அதற்குள் வெளியே சைரன் சத்தம் கேட்க, ரோஷிணியின் உடல் காவல் துறையினரால் போஸ்ட் மார்டத்துக்கு எடுத்துச் செல்லப்படுகிறது.

எழில் நெற்றியைச் சொறிந்து கொண்டே தனக்குள், ‘‘ ஒரு பொண்ணு ரூமுக்குள்ள போயி உள்ள தாழ் போட்டுட்டு தூக்குல தொங்கிருக்கா.. ஆனா அவகிட்ட இருக்க சூசைட் நோட் அவ எழுதினது இல்ல, யாரோ எழுதிக் கொடுத்ததில அவ கையெழுத்து மட்டும் போட்டிருக்கா.. அந்த சூசைட் நோட்டுலயாவது ஏதாவது க்ளூ இருக்குமான்னு பார்த்தா அப்படி எதுவுமில்ல, வாழ்க்கைய வெறுத்துப் போய் சாகணும்னு நினைக்கிற எல்லோரும் வழக்கமா எழுதுற வார்த்தைகள்தான்... ஆனா அவ ஏன் அதை தன்னோட தாய்மொழி கன்னடத்துலயோ அல்லது எல்லோருக்கும் தெரிஞ்ச இங்கிலீஷ்லயோ எழுதல.. தமிழ்ல்ல சூசைட் நோட் எழுதிவைக்க காரணம் என்ன? இதுமூலமா இவ யாருக்கு, என்ன சொல்ல வர்றா? இந்த லெட்டரை இவளுக்கு தமிழ்ல எழுதித் தந்தது யாரு? என்ன நோக்கமா இருக்கும்?...

அத்தியாயம்: 5- கண்கொள்ளாக் கோரம்! (Case-3)

நாள்: 1
26/12/2019 வியாழன்
காலை 12:06 மணி

சென்னை வளசரவாக்கம் ஆர்-9 காவல் நிலையம்…

இன்ஸ்பெக்டர்கள் ப்ரியாவுக்கும், எழிலுக்கும் போன்வந்த (கிட்டத்தட்ட) அதே நேரத்தில்…

“அலோஓ…”

“ஆமா இது ஆர்-9 ஸ்டேஷன்தான், நீ ஆர்னு சொல்லு…”

வாயில் கிளாஸை வைத்து ஏலக்காய் டீயை ரசித்து உறிஞ்சியபடி இன்ஸ்பெக்டர் அன்பழகன் மறுமுனையில் பேசிய நபரின் பதட்டத்தையும், பிரச்சனையின் தீவிரத்தையும் உணராமல் சவடாலாகப் பேசிக்கொண்டிருந்தார். இந்த ஒரு போன் கால் அவரது பலநாள் தூக்கத்தைக் காவு வாங்கப்போகிறது என்பது அவருக்கு அப்போது தெரியாது.

“ ஏலே அட்ரச ஒழுங்காச் சொல்லுல... ஆழ்வார் திருநகர்ல எந்த ஏரியா?

..சரி சரி, இரு வாரேன்...

போனை துண்டித்துவிட்டு, தலையில் தொப்பியை மாட்டிக்கொண்டு, கிளாசில் கால் பகுதி மிச்சமிருந்த ஏலக்காய் டீயை ஒரே சிப்பில் உர்ர்ரென சத்தமாக உறிஞ்சிக் குடித்து, டீ கிளாசை டேபிளில் வைத்துவிட்டு, புலம்பியபடியே கிளம்பினார்.

“ச்சே!..கெரகணத்துக்குப் பொறந்த கெரகணம் புடிச்சவிங்க…ஏற்கனவே கண்ணு நொள்ளையாக் கெடக்கு இன்னிக்கு லீவு போட்டுட்டு பேசாம வீட்டுல இருய்யான்னு பொண்டாட்டி சொன்னா… கேக்காம வந்து தொலச்சிட்டேன்.. (தனது குழுவினரைப் பார்த்து) ஏலே யாருக்கிட்டயாவது இந்தக் கூலிங்கிளாஸ் இருக்காலே?”

இன்ஸ்பெக்டர் அன்பழகன் 52 வயதைத் தாண்டிய குடும்பஸ்தன். கடினமாய் பேசினாலும் அடிப்படையில் நல்ல மனிதர், கறுப்பு நிறம், தொப்பை சகிதம் தடிமனான உடல், முறுக்காத ஆனால் பெரிய மீசை, தலைக்கும் மீசைக்கும் கருகருவென்று டை அடித்திருந்தார். சாதாரண கான்ஸ்டெபிளாக வேலைக்கு சேர்ந்து கஷ்டப்பட்டு, படிப்படியாக உயர்ந்து, இரு ஆண்டுகளுக்கு முன்புதான் இன்ஸ்பெக்டராக பதவி உயர்வு பெற்று வந்திருக்கிறார். நல்ல அனுபவம், ஆனால் அவ்வப்போது உடம்புதான் ஒத்துழைக்காது, சுகர், ப்ரஷர் என்று ஏகப்பட்ட பிரச்சனைகள். ஒரு மகனும் ஒரு மகளும் இருக்கிறார்கள், மகளுக்கு சமீபத்தில்தான் திருமணம் நடத்தி முடித்தார், மகன் பிளஸ் டூ படித்துக் கொண்டிருக்கின்றான். இனி மேற்கொண்டு ப்ரமோஷன் எதுவும் கிடைக்காவிட்டால்கூட பரவாயில்லை. இன்ஸ்பெக்டராகவே நல்லபடியாக ஓய்வு பெற்றால் போதும் என்ற முடிவுக்கு வந்துவிட்டிருந்தார்.

…….

ஆழ்வார் திருநகருக்கு புறம்பே, வீடுகள் சற்று தள்ளித்தள்ளி இருந்த ஒரு அமைதியான ஏரியாவுக்குள் போலீஸ் வாகனம் பயணித்தது. இரு வீடுகளுக்கு இடையே இருந்த இடைவெளியை முட்புதர்கள் நிரப்பியிருந்தன. சில ஆண்டுகளாக கவனிக்கப்படாத ரோடு சிதிலமடைந்து கிடந்தது. சற்று தூரத்திலிருந்த ஒரு வீட்டிற்கு வெளியே ஆண்களும் பெண்களுமாக சில நபர்கள் மட்டும் நின்று

கொண்டிருந்தனர். போலீஸ் வாகனத்தைக் கண்டதும் அந்தக் கூட்டத்திலிருந்த ஒரு நபர் ஓடி வந்து சைகை காட்டினார். அவர் நின்றுகொண்டிருந்த இடத்தை நோக்கி வாகனம் முன்னேறிச் சென்றது.

…….

அன்பழகன், ‘‘நீங்கதான் போன் பண்ணீகளா?’’

‘‘ஆமாங்க சார்’’ பணிவாக பதிலளித்தார் அந்த நபர். அந்தக் குடும்ப தலைவருக்கு சுமார் 48 வயதிருக்கும். அவருடன் அவருடைய மனைவியும் இரு மகள்களும் இருந்தார்கள். கேரளாவைச் சேர்ந்தவர்கள் ஆனால் பல ஆண்டுகளுக்கு முன்னரே சென்னையில் செட்டில் ஆகிவிட்டதால் அனைவரும் அச்சர சுத்தமாக தமிழ் பேசினார்கள்..

‘‘கொஞ்சம் உள்ள வந்து பாருங்க சார்’’ துக்கம் கலந்த தொனியில் அந்த நபர் அன்பழகனையும் அவர் குழுவையும் வீட்டுக்குள் அழைத்தார், சுற்றியிருந்த அனைவரும் வழிவிட்டு ஒதுங்கி நின்றனர். அத்தனை பேரின் முகங்களும் இருளடித்தது போல இருந்தது.

வீட்டிற்குள் நுழைந்து, ஹாலில் அவர்கள் கண்ட காட்சி அவர்களை நிலைகுலைய வைத்தது…

ஒரு 45-50 வயது மதிக்கத்தக்க பெண் திறந்த மார்புடன் அரை நிர்வாணமாக தூக்கில் தொங்கிக் கொண்டிருந்தாள். வெறும் உள்பாவாடை மட்டும் அணிந்திருந்தாள், கட்டியிருந்த சேலையை சீலிங்கில் இருந்த கொக்கியில் கட்டி மறுமுனையை கழுத்தில் இறுக்கியிருந்தாள். தூக்கு மாட்டுவதற்கு அங்கிருந்த ஒரு உயரமான ஸ்டூலைப் பயன்படுத்தியிருந்தாள். கழுத்தில் தாலியோ அல்லது வேறு எந்த நகைகளோ இல்லை, இரவிக்கை கழற்றப்பட்டு கீழே கிடந்தது, சில மாதங்களுக்கு முன்னர் மொட்டையடித்து, பாப் வைத்ததுபோல வளர்ந்த, எண்ணை வைக்காத வறண்ட சிக்குப்பிடித்த சுருட்டை முடி, நல்ல நிறம், சற்று பருமனான உடல். குத்திட்டு நின்ற கண்களும் திறந்த வாயுமாக முகத்தோற்றம் கொடூரமாக இருந்தது,

இந்தக் கோரக் காட்சியைக் கண்ட அனைவரும் அதற்குமேல் ஒரு நொடி கூட அங்கு நிற்கமுடியாமல், ஹாலை விட்டு சட்டெனெ வெளியேறினார்கள், அன்பழகன் ஒருவித பயங்கர உணர்விலிருந்து இன்னும் மீளாதவராக, "சொல்லுங்க, என்ன நடந்துச்சி?"

"என் பேரு பெஜின் ஜோசப் சார், நான் இங்க ஒரு ப்ரைவேட் ஹாஸ்பிட்டல்ல அக்கவுண்ட்டண்டா ஒர்க் பண்றேன். போன திங்க கிழமை எங்க சொந்த ஊரு எர்ணாகுளத்தில ஒரு ஃபேமிலி ஃபங்க்ஷனுக்காக குடும்பத்துல எல்லோரும் போயிட்டோம்.

இன்னிக்குக் காலைல 11:30 மணிக்குத்தான் இங்க வீட்டுக்கு வந்து சேர்ந்தோம். வந்து பார்த்தா வீட்டுக் கதவு திறந்திருக்கு. பயந்து போய் இவங்க எல்லாம் வெளிய நின்னுட்டாங்க..நான் மட்டும்தான் மெதுவா உள்ள போனேன், போய் பார்த்தா.." அதற்கு மேல் பேசமுடியாதபடி அவரது தொண்டை கம்முகிறது…

அன்பழகன் ஆறுதலாய் அவர் தோளில் கைவைத்து, ‘‘சரி சரி, செத்தது யாரு?’’

பெஜின் ஜோசப், ‘‘யாருனே தெரியல சார்’’.

அன்பழகன் உள்ளிட்ட அத்தனை போலீசாருக்கும் தூக்கிவாரிப் போட்டது, அன்பழகன் தன்னை மறந்து கத்தினார். ‘‘அலோ, என்னங்க சொல்றீங்க, உங்க வீட்டு ஹால்ல ஒரு பொணம் கெடந்து தொங்குது அதை யாருன்னே தெரியலன்னு சொல்றீங்க?’’

பெஜின் ஜோசப்புக்கு அதுவரை அடக்கி வைத்திருந்த அழுகை வெடித்து கிளம்பியது, உணர்ச்சிவசப்பட்டவராய் சத்தமாக, ‘‘சத்தியமா இது யாருன்னே எங்களுக்குத் தெரியல சார்’’ அவர் அழுததைப் பார்த்து ஏற்கனவே அழுது சோர்ந்திருந்த அவரது மனைவியும் மகள்களும் மீண்டும் அழத் தொடங்கிவிட்டனர்.

அன்பழகனுக்கு சப்தநாடியும் நின்றுவிட்டது போல இருந்தது, சற்று ஆசுவாசப் படுத்திக்கொண்டு, ‘‘சரி, அப்ப கதவ உடச்சு இது உள்ள வந்துச்சா?’’

பெஜின், ‘‘இல்ல சார், சாவி போட்டுத் திறந்துதான் உள்ள வந்திருக்கு, தாழ்ப்பாள்லாம் எதுவும் உடைக்கல’’

‘‘அப்ப நீங்க ஊருக்குப் போகும்போது சாவிய யாருகிட்டையாவது கொடுத்துட்டுப் போனீங்களா?’’

‘‘இல்ல சார், சாவியை நாங்க யாருகிட்டயுமே கொடுக்கல’’

‘‘பொருள் ஏதாவது திருடு போயிருக்கா?’

‘‘இல்ல சார், எல்லாப் பொருளும் வச்ச இடத்துல வச்ச மாதிரியேதான் இருக்கு.’’

‘‘இது உங்க சொந்த வீடுதானே?’’

‘‘ஆமாங்க சார்’’

அன்பழகன் தொப்பியைக் கழற்றி தலையைச் சொறிகிறார். சுற்றி இருப்பவர்களைப் பார்த்து, ‘‘ஏங்க நீங்க எல்லோரும் இந்த ஏரியாதானே, இந்தப் பொம்பளைய யாராவது இதுக்கு முன்னாடி இந்த ஏரியால பார்த்திருக்கீகளா?’’

எல்லோரும் ஏகமாக இல்லையென தலையாட்டுகிறார்கள்.

இதுவரை எத்தனையோ கேஸ்களை அநாயாசமாக ஊதித் தள்ளிய அனுபவமுள்ள அன்பழகன் முதன்முறையாக, தனது மூளைக்குள்ளிருந்த அத்தனை சுவிட்சுகளும் மொத்தமாக ஆஃப் செய்து வைக்கப்பட்டதுபோல உணர்ந்தார்.

அத்தியாயம்: 6- கதிருடன் இணைந்த கரங்கள்

நாள்: 1
26/12/2019 வியாழன்
மதியம் 2:00 மணி

சென்னை கமிஷனர் அலுவலகம்...

அன்றைய தினமே மதியம்...

'வே.மார்த்தாண்ட பூபதி I.P.S' என்ற பெயர்ப்பலகை கமிஷனரின் டேபிளை அலங்கரித்தது. வழுக்கைத் தலை, பெரிய முறுக்கு மீசையுடன் கம்பீரமாக கமிஷனர் அமர்ந்திருந்தார். அவருக்கு முன் போடப்பட்டிருந்த மூன்று இருக்கைகளில் ப்ரியா, எழில் மற்றும் அன்பழகன் மூவரும் மரியாதை கலந்த பயத்துடன் அமர்ந்திருந்தனர்...

மீசையைத் தடவியபடி கமிஷனர் மார்த்தாண்ட பூபதி பேச ஆரம்பித்தார்...

So.. நான் ஏன் உங்களை உடனே வரச்சொன்னேன்னு உங்களுக்கே தெரிஞ்சிருக்கும். சிட்டிக்குள்ள தினமும் சூசைட், மர்டரெல்லாம் நடந்துக்கிட்டுதான் இருக்கு. But in my view these three cases are strange, very very strange. அதுவும் ஒரே நாள்ல, கிட்டத்தட்ட ஒரே நேரத்துல... அதனாலதான் நானே ஸ்பெஷல் இண்டரெஸ்ட் எடுத்துக்கிட்டேன். Because i love mystries...

இந்த மூணு கேஸ்லயும், நீங்க மூணு பேரும் எனக்கே டைரக்ட்டா ரிப்போர்ட் பண்றீங்க. ஓகே?

மூவரும் பணிவாகத் தலையாட்டினார்கள்.

உங்களுக்கு உதவியா ஒரு ப்ரைவேட் டிடெக்ட்டிவ இந்த கேஸ்ல நான் include பண்றேன். லண்டன்ல கிரிமினல் சைக்காலஜி படிச்சவன். வெரி ஸ்மார்ட், இந்த மாதிரி கேஸெல்லாம் ஈசியா ஹேண்ட்ல் பண்ணுவான்... இன் ஃபேக்ட் என்னோட சொந்த அக்கா பையன்தான். அவனையும் வரச் சொல்லிருக்கேன், அவன் வந்தவுடனே அவனை மீட் பண்ணிட்டு கௌம்புங்க..

அவர் சொல்லிக் கொண்டிருக்கும்போதே கதவைத் தட்டிவிட்டு உள்ளே நுழைந்தான் கதிர். ஒரு கருநீல முழுக்கை டெனிம் ஷர்ட்டும், நீலநிறத்தில் ஜீன்சும் அணிந்திருந்தான். சட்டையை முழங்கை வரை மடக்கிவிட்டிருந்தான்.

"வா கதிர்..." கமிஷனர் மூவருக்கும் கதிரை அறிமுகம் செய்து வைத்தார். ஒருவருக்கொருவர் கைகுலுக்கிக் கொண்டார்கள்.

"நீங்க மூணுபேரும் இப்பவே கான்ஃபரன்ஸ் ரூம்ல உட்காந்து கதிருக்கு உங்க மூணு பேரோட கேஸையும் explain பண்ணிருங்க.

கதிர் பக்கமாகத் திரும்பி..."Listen கதிர், இந்த மூணு கேஸ்லயும் prominent-அ இருக்க ஒரே விஷயம் inscrutable mystery... அந்த மிஸ்ட்ரி என்னன்னு இவங்களே உனக்கு explain பண்ணுவாங்க. உனக்கு இது ரொம்ப சேலஞ்சா இருக்கப் போகுது...எவ்வளோ சீக்கிரம் நீ இந்த knots-ஐ எல்லாம் ஓப்பன் பண்றன்னு பார்க்குறேன்..

So team...work with Kathir, make use of his knowledge..அப்பப்போ எனக்கு அப்டேட் குடுங்க, என்ன ஹெல்ப்னாலும் தயங்காம கேளுங்க.....go ahead...All the best!"

அனைவரும் கமிஷனரிடம் விடை பெற்றுக்கொண்டு அவர் அறையை விட்டு வெளியேறினார்கள். அறைக்கு வெளியே கோப்பெருந்தேவியும், மகேஸ்வரியும், பிரதாப்பும் காத்துக் கொண்டிருந்தார்கள். பிரதாப் அன்பழகனுக்குக் கீழே எஸ்ஐ ஆகப் பணிபுரிபவன். ராஜஸ்தானைப் பூர்வீகமாகக் கொண்டவன். கொள்ளுத் தாத்தா காலத்திலேயே சென்னை சௌகார்பேட்டையில் செட்டில் ஆனவர்கள். ரொம்ப சின்சியர், அன்பழகனுக்கு பல விதங்களில் உதவியாக இருப்பவன். இவர்கள் மூவரும் தங்கள் தங்கள் அதிகாரிகளால் கதிருக்கு அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டார்கள்.

சில நிமிடங்களில் அனைவரும் கான்ஃபரன்ஸ் ரூமில் கூடினார்கள், இந்த மீட்டிங்கில் கோப்பெருந்தேவியும், மகேஸ்வரியும், பிரதாப்பும்கூட கலந்து கொண்டார்கள். அனைவருக்கும் சூடாக சமோசாவும், டீயும் பரிமாறப்பட்டது. கோப்பெருந்தேவி மட்டும் விரதம் என்று எதையும் தொட மறுத்துவிட்டாள். ப்ரியாவும், எழிலும், அன்பழகனும் தங்கள் தங்கள் கேஸ்களை கதிரிடம் விளக்க அவைகளை அவன் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்தான். இடையிடையே கேள்விகள் கேட்டான்.

ஏனோ ப்ரியாவிடம் வேண்டுமென்றே அதிகமாக, சிக்கலான கேள்வி கேட்டான். அவன் ஒவ்வொருமுறை கேள்வி கேட்கும் போதும் ப்ரியாவுக்குள் ஈகோ பூதம் எழும்பி அடங்குவதையும், அவள் அதை வெளிக்காட்டிக்கொள்ளாமல் பதில் சொல்வதையும் கதிர் உள்ளூர ரசித்துக் கொண்டான். தனது வேலையை இன்னொரு நபருடன் பகிர்ந்துகொள்வதை அவள் விரும்பவில்லை என்பது அவனுக்குப் புரிந்தது.

ஆனால் தான் அழகாக இருப்பதால்தான் வேண்டுமென்றே கதிர் தன்னிடம் சீன் போடுவதாக ப்ரியா நினைத்தாள். அதுதான் அவளுடைய எரிச்சலுக்கு முக்கியக் காரணம். எழில் கதிரை ‘சார்’ என்றும், அன்பழகன் அவனை ‘தம்பி’ என்றும் மரியாதையாக அழைத்தனர். ஆனால் ப்ரியா மட்டும் அவனை பெயர் சொல்லி அழைத்தாள். “நீ கமிஷனர் மருமகனா இருந்தா என்ன? எவனாயிருந்தா எனக்கென்ன” என்ற எண்ணம். கதிர் அதையும் ரசித்தான். ஒருவழியாக மீட்டிங் முடிந்தது.

ப்ரியா, “ஓகே கதிர், நான் ஒரு கேஸ் விஷயமா இன்னொரு இடத்துக்குப் போக வேண்டியிருக்கு, I will catch you later.”

கதிர், “ஷ்யூர் ப்ரியா, அப்ப இன்னிக்கு ஏழு மணிக்கு ஃபோரம் மால்ல இருக்க கே.எஃப்.சில மீட் பண்ணலாம்”

ப்ரியாவுக்கு ‘பக்’கென்றிருந்தது, ஒன்றும் புரியாமல் விழித்தாள்..

கதிர், “சாரி, ஐ மீன்… நாம நாலு பேரும்தான்.. கேஸ் விஷயமா டிஸ்கஸ் பண்ண”

அவனது குதர்க்கத்தைப் புரிந்து கொண்ட ப்ரியா அதை ரசிக்காமல், எரிச்சலுடன், “ஓ..ஓகே” என்றபடி அவனிடமும் மற்றவர்களிடமும் விடைபெற்றுக் கிளம்பினாள்.

ப்ரியா சென்றவுடன் அன்பழகன் கதிரை நோக்கி, “தம்பி, நீங்க லண்டன்ல ஏதோ படிச்சிருக்கீங்கன்னு ஐயா சொன்னாகளே, என்ன படிச்சீங்க?”

கதிர், “அங்கே கிரீன்விச் யுனிவர்சிட்டில Masters in Criminal Psychology முடிச்சேன் சார், அதுக்கப்புறம் லண்டன்லயே பெரிய ப்ரைவேட் டிடெக்டிவ் ஒருத்தர்கிட்ட ரெண்டு வருஷம் அஸிஸ்டண்ட்டா ஒர்க் பண்ணேன்…”

அன்பழகன், “ எவ்வளோ செலவாகும் தம்பி, அது படிக்கிறதுக்கு? இந்தியாவுல அந்தப் படிப்பு இருக்கா?”

கதிர், “ஏன் சார் உங்க பையனுக்காகக் கேட்குறீங்களா?”

அன்பழகன், "ஆம தம்பி, நான்லாம் அடிமட்டத்துல இருந்து கஷ்டப்பட்டு வந்தவன், கான்ஸ்டெபிளா வேலைக்கு சேர்ந்து ஏட்டாகுறதுக்குள்ளயே முழி பிதுங்கிருச்சு. அதுக்கப்புறம் உருண்டு பொரண்டு ரெண்டு வருஷத்துக்கு முன்னாடிதான் இன்ஸ்பெக்டர் ஆகிருக்கேன். இப்ப வேற ஒரு கேஸ்ல டிசிபி என்னையப் போட்டு கொடஞ்சு எடுத்துக்கிட்டு இருக்காரு. மனுஷன் வண்ட வண்டையா கேக்குறாரு... மொதோ வேலையா அத முடிச்சுட்டு, இந்த கேஸ்ல என்கொயரியையே நான் இன்னும் ரெண்டு நாள் கழிச்சுத்தான் ஆரம்பிக்கணும். இது அதவிடப் பெரிய ஆபீசரு...மனசு கிடந்து திக்கு திக்குன்னு அடிச்சுக்கிருது. என் பையனாவது நான் பட்ட கஷ்டங்களையெல்லாம் படாம சுதந்திரமா வேலை செய்யட்டுமேன்னுதான்…அவனுக்கு இதிலேயெல்லாம் ஆர்வம் அதிகம்"

கதிர் புன்முறுவலுடன், “புரியுது சார், நான் அவனை guide பண்றேன், கவலைப்படாதீங்க”

தன் பேண்ட் பாக்கெட்டில் கைவிட்டுக்கொண்டு நின்றபடி அதுவரை அவர்களது உரையாடலைக் அமைதியாய் கவனித்துக் கொண்டிருந்த எழிலை நோக்கி கதிர், “எழில்… what is your plan?”.

எழில், “நான் அந்த ஹாஸ்டலுக்குத்தான் சார் இப்ப பழையபடி என்கொயரிக்குக் கிளம்பிட்டு இருக்கேன், நீங்களும் வர்றீங்களா?”

கதிர், “ஷ்யூர், ஸ்டார்ட் பண்ணலாமா?”

அத்தியாயம்: 7- யாருடா அந்தப் பொண்ணு? - பாகம் 1

நாள்: 1
26/12/2019 வியாழன்
இரவு 11:00 மணி

கதிர் அன்று மதியம் கமிஷனர் அலுவலகத்தில் மீட்டிங்கை முடித்துவிட்டு, அதன் பிறகு எழிலுடன் மதி லேடீஸ் ஹாஸ்டலுக்குப் போய் அங்கு விசாரணையை முடித்துவிட்டு, திட்டமிட்டபடி அன்று மாலை 7:00 மணிக்கு ப்ரியா, எழில் மற்றும் அன்பழகனுடன் போரம் மால் கே.எஃப்.சியில் ஏற்பாடு செய்திருந்த மீட்டிங் எல்லாம் முடிந்த பின்னர் அன்று இரவில்…

கதிரின் வீடு…

கதிர் ஹாலில் டீ-ஷர்ட், ஷாட்ஸ் அணிந்து சோபாவில் படுத்துக்கொண்டு ஒரு இந்திப்பாடலை முணுமுணுத்தபடி ஐபேடில் எதையோ ஆர்வமாகப் பார்த்துக்கொண்டிருந்தான். அம்மா அவனுக்காக ஒரு கண்ணாடி கிளாசில் பால் எடுத்துக்கொண்டு வந்தார்.

கதிர், “ம்மா.. சொன்ன மாதிரியே நைட் என்னை பட்டினி போட்டுட்டீல, கிரகணமா இருந்தாலும் பரவால்ல உன் தம்பி கூப்புடுறாருன்னுதானே போனேன்…”

அம்மா, “ஏண்டா நீ வருவேன்னு நான் தோச சுட்டு வச்சுக்கிட்டு நைட்டு பத்து மணிவரைக்கும் காத்துட்டு உட்காந்திருக்கேன், நீ பகுமானமா கே.எஃப்.சில தின்னுட்டு வந்துருக்க..முன்கூட்டியே ஒரு போன் பண்ணி சொல்லக்கூடாது? உன்னையெல்லாம் நெஜமாவே பட்டினி போடணும்…”

கதிர் அம்மாவின் பொய்கோபத்தை ரசித்தபடி ஐபேடை சோஃபாவில் வைத்துவிட்டு பாலை வாங்க, அம்மா எதார்த்தமாக அவன் ஐபேடைப் பார்க்க, அதில் ஒரு அழகான பெண்ணின் புகைப்படம் அவரைப் பார்த்து சிரித்தது..

“டேய் யார்றா இந்தப் பொண்ணு???”

கதிருக்கு ‘பக்’கென்றிருந்தது, ஐய்யய்யோ! அம்மா பக்கத்துல வந்தவுடனே ஹோம் பட்டனை அமுக்கினோமே, அப்ப அது ஒர்க் ஆகலையா? சில நாட்களாக மக்கர் பண்ணிக்கொண்டிருந்த அந்த ஐபேடின் ஹோம் பட்டன் தனக்கு எதிராக சதி செய்துவிட்டதை உணர்ந்தான்.

அதற்குள் அம்மா ஐபேடைக் கையில் எடுத்து அவளது மற்ற புகைப்படங்களையும் ஒவ்வொன்றாகப் பார்க்க ஆரம்பித்துவிட்டார். அம்மாவின் கையிலிருந்து கதிர் ஐபேடைப் பிடுங்க முயற்சித்ததில் அவன் இன்னொரு கையில் கிளாஸ் நிறைய இருந்த பால் அலம்பி அவன் கையிலும் கீழே கார்ப்பெட்டிலும் சிந்தியது…

அம்மா நிஜமாகவே டென்ஷனாகி, அவன் தலையில் நறுக்கென்று ஒரு கொட்டு வைத்து, “இப்ப எதுக்கு இப்படிப் புடுங்குற. ஏன் நான் பார்க்கக்கூடாதா? இவ யாரு அத மொதல்ல சொல்லு...”

கதிர் இந்தமுறை ஜாக்கிரதையாக ஹோம் பட்டனை பலமாக அழுத்தி, ஸ்கிரீன் அணைந்தப்பிறகு, "மாமா இன்னிக்கு ஒரு கேஸ் விஷயமா கூப்பிட்டிருந்தாருல்ல.. அங்க அவர் ஆஃபீஸ்ல வச்சுத்தான் இவளை பார்த்தேன். இவளைப்பத்தி இன்னும் further-ஆ தெரிஞ்சுக்கலாம்னு இப்பத்தான் அவ facebook profile-ல கண்டுபிடிச்சுப் பார்த்துக்கிட்டு இருந்தேன். அதுக்குள்ள நீ வந்துட்ட, நீ பாட்டுக்கு ஆர்வக்கோளாறுல எதையாச்சும் ஒரு பட்டனை அமுக்கி வச்சிருந்தீன்னா என் ஐடில இருந்து நான் அவ ஃபோட்டோவைப் பார்த்தது அவளுக்குத் தெரிஞ்சுரும், அதுனாலதான் பிடுங்கினேன்”.

அம்மா வெளியே காட்டிக்கொள்ளாவிட்டாலும், தான் கடந்த ஆறுமாதமாக சாமி கும்பிட்டதற்கான பலன் கிடைக்க ஆரம்பித்திருப்பதை எண்ணி உள்ளூர மகிழ்ந்து கொண்டார். ஆனாலும் அந்தப் பெண் யாரோ என்னவோ என்று அவர் மனதுக்குள் ஆயிரம் கேள்விகள் எழுந்து அடங்கின.

CASE -1
< ப்ரியா - கதிர் - பவானி >

அத்தியாயம்: 8- முதல் நகர்வு…

நாள்: 1
26/12/2019 வியாழன்
மதியம் 01:00 மணி

(சம்பவம் நடந்தன்று, பவானி வீட்டில் ஆய்வு முடித்துவிட்டு, ப்ரியா கமிஷனரின் அவசர அழைப்பி பேரில் அவரைச் சந்திக்க அவரது அலுவலகம் செல்வதற்கு ஒரு மணி நேரத்துக்கு முன்னர்…)

பவானியின் வீட்டுக்கு சென்று வந்த பின்னர் ஸ்டேஷனில் அனைவரது நினைவும், பேச்சும் அதுவாக மட்டுமே இருந்தது. இந்தக் கேசில் ப்ரியாவின் முதல் மூவ் என்னவாக இருக்கும் என்பதை அறிய சக காவலர்கள் அனைவரும் ஆர்வமாயிருந்தார்கள். அவளது திறமைமேல் அவர்களுக்கு அசாத்திய நம்பிக்கை இருந்தது.

ப்ரியா Swiggy-யில் ஆர்டர் செய்திருந்த பிட்சாவை அரைகுறையாக, அவசரமாகத் தின்று விட்டு, மிச்சத்தை குப்பைத் தொட்டியில் வீசிவிட்டு டிஷ்யூ பேப்பரில் வாயைத் துடைத்தபடியே…

"கோப்பெருந்தேவீ.."

கோப்பெருந்தேவி அடுத்த நொடியில் ஆஜரானாள், "யெஸ் மேம்"

"நாகப்பா எங்க?"

நாகப்பா, " தோ இருக்கேங்க மேடம்" பக்கத்து அறையிலிருந்து ஓடி வந்தான்.

ப்ரியா கோப்பெருந்தேவியிடம், "அந்த பவானி ஹஸ்பண்ட காண்டாக்ட் பண்ணியா? அந்தாள் பேரு என்ன?"

கோப்பெருந்தேவி, "அந்த ஆள் பேரு பசவராஜ் மேம்.. அந்த ஏரியால இருந்தவங்க காலைலயே அவனுக்கு inform பண்ணிட்டாங்க. நானும் அவனுக்கு கால் பண்ணேன். இன்னிக்கு மதியம் 2:50-க்கு கொல்கொத்தா ஹவுரா ஸ்டேஷன்ல இருந்து கோரமண்டல் எக்ஸ்பிரஸ் புடிச்சு வந்திடறேன்னு சொன்னான் மேம். நாளைக்கு evening 5'o clock சென்னை ரீச் ஆகிடுவானாம்."

ப்ரியா, "நாகப்பா, every two hours அவனை காண்டாக்ட் பண்ணு, ஒவ்வொரு தடவை அவனுக்கு போன் பண்ணும்போதும் ட்ரைன் எந்த இடத்துல இருக்குன்னு அவன்கிட்ட கேளு, கேட்டுட்டு அவன் சரியாத்தான் சொல்றானான்னு இரயில்வே வெப்சைட்டுக்குப் போயி train live status check பண்ணு. இனிஷியலா நாம அவனையும் ஒரு suspect-டாதான் treat பண்ணனும். அவனை முதல்ல விசாரிச்சாத்தான் இந்த கேஸை நாம சரியான direction-ல கொண்டு போக முடியும்..So be very serious. நானும் கோப்பெருந்தேவியும் இப்ப கமிஷனர் ஆஃபீஸ் கிளம்புறோம். நான் மீட்டிங்ல இருப்பேன், எதுவானாலும் இவளுக்கு உடனே கால் பண்ணி இன்ஃபார்ம் பண்ணு."

நாகப்பா "சரிங்க மேடம்" என்று உற்சாகமாக பெரிய சல்யூட் வைத்தான். ஒரு மிகப் பெரிய மிஷன் தனக்கு கொடுக்கப்பட்டது போல உணர்ந்தான். நாகப்பாவுக்கு 25 வயதுதான் இருக்கும். அந்த ஸ்டேஷன் ஏட்டு ஒரு விபத்து காரணமாக நீண்ட மருத்துவ விடுப்பில் இருந்ததால் அவர் பார்த்துக்கொண்டிருந்த

பெரும்பாலான வேலைகள் நாகப்பாவிடம் வந்து சேர்ந்தது. ரொம்ப துடிப்பானவன், ப்ரியாவுக்கு நம்பகமான உதவியாளன்.

ப்ரியாவும், கோப்பெருந்தேவியும் கிளம்பினார்கள், வேறொரு கான்ஸ்டெபிள் ஜீப்பை ஓட்டினார். அன்று இரண்டு மணி நேரத்துக்கு முன்பே கிரகணம் முடிந்து விட்டிருந்தாலும் கண்களின் பாதுகாப்புக்காக ப்ரியாவும், கோப்பெருந்தேவியும் கூலர்ஸ் அணிந்திருந்தார்கள்.

ப்ரியா, " சாரி, நீங்க ரெண்டு பேரும் சாப்டீங்களா இல்லையா, கேட்க மறந்துட்டேன்"

டிரைவர், "நான் சாப்டேன் மேடம்" என்று தலையாட்டினார்.

கோப்பெருந்தேவி, "இன்னிக்கு கிரகணம்னால சன் செட்டுக்கு அப்புறம்தான் சாப்பிடுவேன் மேம்"

ப்ரியா, "ஓ, அப்டியா.. எனக்கு அதெல்லாம் நம்பிக்கையில்ல, சாப்ட்டேன் ஆனாலும் கமிஷனரோட மீட்டிங்னால பதட்டத்துல எனக்கு சாப்பாடே இறங்கல. உனக்கு ஒண்ணு தெரியுமா? இன்னிக்கு காலைல இதே மாதிரி சென்னைல வேற ரெண்டு இடத்துல strange deaths நடந்திருக்கு. அந்த ஸ்டேஷன் இன்ஸ்பெக்டர்ஸையும் கமிஷனர் மீட்டிங் கூப்பிட்டிருக்காரு போல…"

கோப்பெருந்தேவி ஆச்சரியமாக, "ஓ அப்படியா மேம்.."

அத்தியாயம்: 9- KFC மீட்டிங்- பாகம் 1

நாள்: 1
26/12/2019 வியாழன்
மாலை 07:15 மணி

சென்னை வடபழனி Forum Mall-இல் உள்ள KFC உணவகத்தில்…

கமிஷனர் அலுவகத்தில் மீட்டிங் முடிந்த பின்னர் கதிர், ப்ரியா, அன்பழகன், எழில் நால்வரும் மாலை 7:00 மணியளவில் சென்னை வடபழனி Forum Mall-இல் உள்ள KFC உணவகத்தில் சந்திப்பதாக இருந்தது.

கமிஷனர் அலுவலகத்தில் மீட்டிங் முடிந்தவுடன் ப்ரியா அங்கிருந்து ஒரு கேஸ் விஷயமாக இன்னொரு இடத்துக்கு செல்வதாகச் சொல்லி விடைபெற்றுச் சென்றுவிட்டாள். கதிரும், எழிலும் ரோஷிணி கேஸ் விஷயமாக சம்பவம் நடந்த மதி லேடீஸ் ஹாஸ்டலுக்குச் சென்றிருந்தார்கள். அன்பழகனும், கோப்பெருந்தேவியும், மகேஸ்வரியும், பிரதாப்பும் அவரவர் ஸ்டேஷனுக்குத் திரும்பிச் சென்றுவிட்டார்கள்.

எழிலும் கதிரும் விசாரணையை 6:00 மணிக்கெல்லாம் முடித்துவிட்டு ஹாஸ்டலிலிருந்து கிளம்பி விட்டனர். வழியில் எழில் தான் தங்கியிருந்த வீட்டின் அருகில் இறங்கிக் கொண்டாள். ஜீப் கதிரை கமிஷனர் ஆபீஸில் கொண்டுபோய் இறக்கிவிட்டது. அங்கு அவன் தான் நிறுத்தி வைத்திருந்த தனது பைக்கை எடுத்துக் கொண்டு மறுபடியும் வடபழனிக்கு வரவேண்டியிருந்தது.

மாலை 6:45 மணிக்கெல்லாம் அன்பழகன் KFC-க்கு வந்துவிட்டிருந்தார். ஒரு காலர் வைத்த அரைக்கை டி-ஷர்ட்டும், சாம்பல் நிற பேண்ட்டும், காலில் சாதாரண செருப்பும் அணிந்திருந்தார். யூனிஃபார்மைவிட டி-ஷர்ட்டில் அவரது தொப்பை இன்னும் பெரிதாகத் தெரிந்தது. அவரது முடிவெட்டும், மீசையும், தொப்பையும் அவரை ஒரு போலீஸ் என்று காட்டிக்கொடுத்தது.

அடுத்தடுத்து பத்து நிமிட இடைவெளிகளில் எழிலும், கதிரும் அங்கு வந்து சேர்ந்தார்கள். எழில் பிரவுன் கலர் சுடிதாரும் வெண்ணிற ஷாலும், பாட்டமும் அணிந்திருந்தாள். நெற்றியில் அவளது சுடிதாரின் பிரவுன் கலரிலேயே ஸ்டிக்கர் பொட்டு வைத்திருந்தாள். அவளது ponytail hairstyle அவளுக்குப் பொருத்தமாகவும் அழகாகவும் இருந்தது. கதிர் மதியம் அணிந்திருந்த அதே கருநீல டெனிம் ஷர்ட்டுடனும், நீலநிற ஜீன்சுடனும் இருந்தான்.

ப்ரியா சரியாக 7:15 மணியளவில் வந்தாள். அவள் KFC-க்குள் நுழைந்தவுடன் அங்கிருந்த அத்தனைபேரின் பார்வையும் அவள் மீது திரும்பியது. அது வடபழனி ஏரியா என்றதால் நடிகை என்று நினைத்தார்களோ என்னவோ, கறுப்பு நிற sleeveless டாப்பும், அதே கறுப்பு நிறத்தில் ஜீன்சும் அணிந்திருந்தாள். லூஸ் ஹேர் விட்டிருந்தாள், அவளுக்கு அவ்வளவு அழகான சுருட்டை முடியிருப்பது அப்போதுதான் மற்ற மூவருக்கும் தெரிந்தது, தலைமுடியில் ஆங்காங்கே தீட்டியிருந்த வெளிர் ப்ரவுன் கலர் அவளை இன்னும் மார்டனாகக் காட்டியது. அவள் அருகில் வந்தவுடன் ஒரு இதமான perfume மணம் மற்ற மூவரின் நாசிகளிலும் மென்மையாக ஊடுறுவியது.

ப்ரியா, “ So sorry, கொஞ்சம் delay ஆகிடுச்சு” என்றபடி காலியாக இருந்த நாற்காலியில் அமர்ந்தாள்.

“இட்ஸ் ஓகே” என்றான் கதிர், மற்ற இருவரும் ஒரு சின்னப் புன்முறுவலுடன் அவள் மன்னிப்பை ஏற்றுக்கொண்டனர்.

கதிர், “ஓகே முதல்ல டின்னர் ஆர்டர் பண்ணிட்டு அப்புறம் பேச ஆரம்பிக்கலாம்” என்றான்.

எழிலுக்கு இதுபோன்ற இடங்களில் வந்து சாப்பிட்டு பழக்கமில்லை. எனவே தயக்கத்தோடு “ஏதாவது லைட்டா சாப்பிடலாமே..” என்றாள்.

கதிர் புன்னகைத்தபடி, “நோ நோ இன்னிக்கு வீட்ட விட்டு வெளியெ போனா நைட்டு சாப்பாடு கிடையாதுன்னு எங்கம்மா சொல்லிட்டாங்க, நான் மத்தியானத்துல இருந்து வெளிலதான் சுத்திக்கிட்டு இருக்கேன். சோ..எனக்கு டின்னர் இங்கதான்..நாம மீட்டிங் முடிச்சுப் போக லேட்டாயிடும் அதனால சும்மா கூச்சப்படாம ஆர்டர் பண்ணுங்க” என்றான்.

ப்ரியா மெனுவைப் பார்க்காமலேயே, “ For me...Spicy Chicken Zinger Combo + Ice lemon tea” என்றாள்.

கதிர் எழில் பக்கமாய் திரும்பி, “எழில்?”

எழில் அவசர அவசரமாய் மெனு கார்டில் தேடிப் பார்த்து, “ எனக்கு Hot and Crispy Chicken” என்றாள்.

“டிரிங்க்?”

“ம்ம்ம்..எனக்கும் ஐஸ் லெமன் டீ ஓகே”

அன்பழகனை நோக்கி, “சார் உங்களுக்கு?”

அன்பழகன், “எனக்கு எந்த கருமாந்திரமும் தெரியாது, எதையாவது திங்கிற மாதிரி வாங்கிக் கொடுங்க”

கதிர், “சிக்கன் சாப்பிடுவீங்கள்ல”

அன்பழகன், “ ஒரு முழு வெள்ளாட்ட கொம்போட முழுங்குவேன், என்னப் பார்த்து சிக்கன் சாப்பிடுவீங்களான்னு கேக்குறீங்களே தம்பி”

கதிர் சிரித்துக்கொண்டே ஆர்டர் செய்யப் போனான்.

ப்ரியா வந்தவுடன் எழிலுக்குள் ஒரு இனம்புரியாத உணர்வு ஏற்பட்டது. ப்ரியாவின் நுனிநாக்கு ஆங்கிலமும், அவளது தோற்றமும், ஸ்டைலிலும் எழிலுக்குள் அவளையும் அறியாமல் அந்த உணர்வை ஏற்படுத்தியது. அது பொறாமையா அல்லது தாழ்வு மனப்பான்மையா என்று அவளுக்கு தெரியவில்லை. ஆனாலும் அந்த உணர்வோடு உள்ளூர போராடிக் கொண்டிருந்தாள். “ப்ரியா பணக்காரப் பின்னனியைச் சேர்ந்தவள், ஆனால் நாம் எப்பேற்பட்ட சூழலிலிருந்து கடினமாக உழைத்து, இன்று ப்ரியாவுக்கு சமமான இடத்தில் வந்து அமர்ந்திருக்கிறோம். மற்றபடி ஆங்கிலம் என்பது ஒரு மொழிதானே அது அறிவு இல்லையே” என்று தனக்குத் தானே அறிவுரை சொல்லிக்கொண்டிருந்தாள். உடனே அந்த உணர்வு கொஞ்ச கொஞ்சமாக மறைய ஆரம்பித்தது, ..இலகுவாக உணர்ந்தாள்.

கதிர் திரும்பி வந்ததும், அனைவரும் சாப்பிட ஆரம்பித்தவுடன் ப்ரியா பேச்சைத் தொடங்கினாள், “ பவானி கேஸ்ல ஒரு சின்ன ப்ராப்ளம் ஆகிடுச்சு.. அவ ஹஸ்பண்ட் கொல்கொத்தால வேலை செய்யுறான். இன்னிக்கு மதியம் 2:50-க்கு டிரைனை பிடிச்சு சென்னைக்கு வர்றதா சொல்லிருந்தான். 2:30-க்கு வாட்ஸ்ஆப்ல வீடியோ கால் அட்டண்ட் பண்ணி ஹவுரா ஸ்டேஷன்லதான் இருக்கேன்னு சொல்லிருக்கிறான், அங்கதான் இருந்திருக்கிறான். ஆனா 3:00 மணிக்கப்புறம் ஃபோன் அட்டண்ட் பண்ணவே இல்ல. அவன் சிம்கார்ட டிரேஸ் பண்ணிப் பார்த்தா டிரைன்லதான் இருக்கான்னு காட்டுது”

கதிர் சிரித்தான், "சிம்கார்ட கழட்டி டிரைன்ல போட்டுட்டு ஆள் வேற பக்கம் எஸ்கேப் ஆகிட்டானா?"

ப்ரியா ஆம் என்று தலையாட்டி, “எக்ஸாக்ட்லி…அப்படித்தான் பண்ணிருக்கான். ஈவினிங் 4:30-க்கு Kharagpur Junction-க்கு இன்ஃபார்ம் பண்ணி, டிரைன் ரீச் ஆனவுடனே கம்ப்ளீட்டா செக் பண்ணி பார்க்கச் சொன்னோம், பசவராஜ்ங்கிற பேர்லயோ, நாங்க அனுப்பிச்ச போட்டோ அடையாளத்துலயோ யாருமே இல்லைன்னுட்டாங்க..

அன்பழகன், “அந்த ஸ்டேட் போலீசுக்கு இன்ஃபார்ம் பண்ணியாச்சுல்ல? அந்த ரெயில்வே ஸ்டேஷன்ல இருந்த சிசிடிவி கேமரா ஃபுட்டேஜெல்லாம் செக் பண்ணாங்களா?”

ப்ரியா, "பண்ணியாச்சு, அவன் ஸ்டேஷனுக்குள்ள வந்தது, அங்கு இங்கும் சுத்தினதெல்லாம் ரெக்கார்ட் ஆயிருக்கு. அவன் உள்ள வந்துட்டு திரும்ப வெளியே போகல. ஆனால் சில cameras ஒர்க் பண்ணாததால எந்த டிரைன்ல ஏறிப் போனான்னு கண்டுபிடிக்க முடியல. அந்த ஊர் போலீஸ்க்கும் இன்ஃபார்ம் பண்ணியாச்சு, அவங்களும் search பண்ண ஆரம்பிச்சுட்டாங்க.. meanwhile பவானிக்கு செந்தில்ங்கிற ஒரு பையனோட காண்டாக்ட் இருந்தது தெரிய வந்திருக்கு... அவனும் abscond, அவனை தேடிட்டு இருக்கோம்..

அன்பழகன் சலித்துக் கொண்டபடி, "பரவால்ல, உங்களுக்காவது கேஸை proceed பண்றதுக்கு ஒண்ணு ரெண்டு க்ளூ கெடச்சிருக்கு, எனக்கெல்லாம் என் கேஸை எங்க இருந்து ஆரம்பிக்கிறதுன்னே தெரியல…"

அத்தியாயம்:10- பிஞ்சிலே பழுத்தவன்

நாள்: 2
27/12/2019 வெள்ளி
காலை 10:30 மணி

அடுத்த நாள்…

ப்ரியா ஸ்டேஷனில் தனது கம்பியூட்டரில் எதையோ தீவிரமாக ஆராய்ந்து கொண்டிருந்தாள். நாகப்பா பவானியோடு தொடர்பில் இருந்ததாக கருதப்பட்டு, தலைமறைவாக இருந்த செந்திலை கண்டுபிடித்து, கைது செய்து அழைத்து வந்து, ப்ரியா முன்பாக நிறுத்தி…

"மேடம், செந்தில் மேடம்…"

ப்ரியா தலையை நிமிர்ந்து செந்திலை முறைத்துப் பார்த்து, நாகப்பாவிடம், "உள்ள உட்கார வை, வந்திடறேன்".

செந்தில் காலியாக இருந்த ஒரு செல்லில் முழங்காலில் நிற்க வைக்கப்பட்டிருந்தான். அவனது இரு கைகளும் பின்புறம் சேர்த்து விலங்கிடப் பட்டிருந்தது. செந்தில் கருப்பாக, ஒல்லியாக, உயரமாக இருந்தான். வயது 22 இருக்கும். பவானி வயதில் பாதிகூட இருக்க மாட்டான். பிஞ்சிலேயே பழுத்த கேஸ். ஸ்டைல் என்று நினைத்து முடியை கந்திரகோலமாக வெட்டி அதற்கு பொருந்தாத கலரும் அடித்திருந்தான். கழுத்தில் எலும்புக்கூடு படம் போட்ட பெரிய சில்வர் சங்கிலி, கைகளில் கலர் கலராக ஏகப்பட்ட பேண்டுகளை அணிந்திருந்தான். சிவப்பு நிற முழுக்கை டி-ஷர்ட் அணிந்து அதை முழங்கை வரை ஏற்றி விட்டிருந்தான், ஜீன்ஸை ஆங்காங்கே கிழித்து அணிந்திருந்தான். அங்கு அவனுடன் கோப்பெருந்தேவியும், நாகப்பாவும் இருந்தார்கள்.

சில நிமிடங்கள் கழித்து, ப்ரியா உள்ளே நுழைந்தவுடன் நாகப்பா சத்தமாக, "போய், ஸ்டேஷனுக்கு வாடான்னு கூப்பிட்டவுடனே தெறிச்சு ஓட ஆரம்பிச்சுட்டான் மேடம், அரை கிலோ மீட்டர் தூரம் விரட்டிப் போய் பிடிச்சுட்டு வர்றேன். ஓடும்போது எனக்கு காலை வேற புரட்டி விட்டிருச்சு, நல்ல வேளை கால் மூட்டுல ஜவ்வு ஏதும் கிழியல." நாகப்பா செந்தில் மேல் கொலை கோபத்தில் இருக்கிறான் என்பது அவன் பேசிய தொனியிலிருந்து தெரியவந்தது.

ப்ரியா செந்தில் முன்னால் நின்று, "சொல்லு, எதுக்கு தப்பிச்சு ஓடுன?"

செந்தில் கொஞ்சம் தெனாவெட்டாக, "தப்பிச்செல்லாம் ஓடல மேடம், அக்கா பொண்ணு சடங்குக்குப் போயிருந்தேன். இவர் திடீர்னு வந்து என்னா ஏதுன்னே சொல்லாம ஸ்டேஷனுக்கு வான்னு கூப்பிட்டதும்தான் பயந்து ஓடுனேன்".

ப்ரியா, "சரி போன் அடிச்சா ஏன் எடுக்கல?"

செந்தில், "போன் தொலைஞ்சு போச்சு மேடம்"

செந்தில் சொன்ன பதிலைக் கேட்டதும் ப்ரியாவுக்கு கோபம் தலைக்கேறியது. நாகப்பா பல்லைக் கடித்துக் கொண்டிருந்தான்.

ப்ரியா கோபமாக, "போன் தொலைஞ்சு போச்சு..ம்ம்ம்? பவானிக்கும் உனக்கும் என்ன உறவு?"

செந்தில், "அக்கா மாதிரி…" சொல்லி முடிக்கும் முன்னர் அவன் கன்னத்தில் ஒரு அடி இடி மாதிரி இறங்கியது. நாகப்பா அறைந்த அறையில் செந்தில் கோப்பெருந்தேவியின் காலில் போய் விழுந்தான். அதை எதிர்பாராத அவள் சட்டென்று பின்னால் தாவினாள்.

நாகப்பா அவன் கழுத்துக்கு மேல் காலை ஓங்கி, "XXXX.. எங்களைப் பார்த்தா உனக்கு எப்படி இருக்கு?.. ஏற்கனவே உம் மேல கொல காண்டுல இருக்கேன். கழுத்துல மிதிச்சே கொன்னுருவேன், ஒழுங்கு மரியாதையா உண்மைய சொல்லு"

ப்ரியா, "நாகப்பா, இவன் ஒண்ணும் சொல்ல வேண்டாம். எனக்கு இதுக்கெல்லாம் டைம் இல்ல. இந்த செல்லுலயே இவன அடைச்சு வை..எனக்கு என்ன செய்யணும்னு தெரியும்" சொல்லிவிட்டு சட்டென்று கிளம்பினாள்.

செந்தில், "சொல்லிடுறேன் மேடம், சொல்லிடுறேன் மேடம்" கெஞ்சத் துவங்கினான்.

ப்ரியா திரும்பி வந்து, "சீக்கிரம் சொல்லு, எனக்கு டைம் ஆகுது. உன் பதில் உண்மைதான்னு எனக்கு தோணுச்சுன்னா வெளில விடுவேன். இல்ல, உள்ள தூக்கி வைச்சேன்னா ஜென்மத்துக்கும் வெளிய வரமாட்டே…

செந்தில் தழுதழுக்கும் குரலில், "இல்லங் மேடம்..சொல்லிடுறேன் மேடம்... எனக்கும் பவானிக்கும் தொடர்பு இருந்துச்சுங் மேடம்.. ஆனா ஒரு மாசத்துக்கு முன்னாலயே எங்களுக்குள்ள பிரேக்-அப் ஆகிடுச்சுங் மேடம்.."

செந்தில் சொன்னதைக் கேட்டு, அவனுக்குப் பின்னால் நின்று கொண்டிருந்த கோப்பெருந்தேவி கையால் வாயைப் பொத்திக் கொண்டு சிரிக்க, அவள் சிரிப்பதைப் பார்த்து ப்ரியாவுக்கும் சிரிப்பு வந்தது. அதை வெளிக்காட்டாமல் முகத்திலிருந்த கோபத்தை மாற்றாமல் அவன் சொல்வதைக் கேட்டுகொண்டிருந்தாள்.

நாகப்பா கிண்டலான தொனியில், "ஒங்க தெய்வீகக் கள்ளக்காதல் எதனால பிரேக்-அப் ஆச்சுன்னு தெரிஞ்சுக்கலாமா?"

செந்தில், "நான் அவளுக்கு நிறைய வட்டிக்கு பணம் வாங்கி கொடுத்திருந்தேன் சார், அவ ஒழுங்கா வட்டிய கட்டல, அசலையும் கட்டல... கடன்காரன் எல்லாம் என்னைய நெருக்க ஆரம்பிச்சுட்டான். அதுனாலதான் எனக்கும் அவளுக்கும் சண்ட வந்திருச்சு."

கோப்பெருந்தேவி அவனுக்குப் பின்னாலிருந்து, "நீ ஒரு ஆளுன்னு உன்னை நம்பி அவளுக்கு எவண்டா பணம் கொடுத்தான்"

செந்தில் சற்று திமிராக, "அதெல்லாம் எனக்கு பெரிய பேக்ரவுண்டுலாம் இருக்கு மேடம்" தன்னை அடித்த நாகப்பாவை ஜாடையாக எச்சரிக்கும் விதத்தில் இதை அழுத்திச் சொன்னான். அவன் சொன்னதை புரிந்துகொண்டு நாகப்பா ஏளனமாக சிரித்தான்.

கோப்பெருந்தேவி, "சோ…கடன் கொடுத்தவனுக உன்னை டார்ச்சர் பண்ணதால, நீ அவள டார்ச்சர் பண்ணிருக்க...உன் டார்ச்சர் தாங்க முடியாம அவ தூக்குல தொங்கிட்டா"

செவுளில் விழுந்த அறையால் கழுத்து வலித்ததால் பின்னால் திரும்ப முடியாமல் இலேசாக அவள் பக்கம் திரும்பி, "ஐய்யோ நான் அவள டார்ச்சர்லாம் பண்ணல மேடம், போன்ல சண்ட போட்டதோட சரி... அந்த நேரத்துல அவ புருஷன்காரன் வேற எங்க மேட்டர் தெரிஞ்சு, ஆளைக் கூட்டிட்டு வந்து என்னை அடிச்சிட்டுப் போயிட்டான்.. அதனால வெறுத்துப் போயி மொத்தமா ஒதுங்கிட்டேன் மேடம். அவ புருஷன்தான் அவள ரொம்ப டார்ச்சர் பண்ணிருக்கான் மேடம், நான் இல்ல…

நாகப்பா நக்கலாக, ‘‘உனக்கு பெரிய பேக்ரவுண்டு இருக்குன்னு தெரிஞ்சுமாடா உன்னை வந்து அடிச்சான்’’

ப்ரியா அவனை விட்டுவிடும்படி நாகப்பாவிடம் சைகை காட்ட..

நாகப்பா, "சரி, உன் காண்டாக்ட் நம்பரை கொடுத்துட்டு கிளம்பு, கூப்பிடும்போதெல்லாம் ஸ்டேஷனுக்கு வரணும், போன் பண்ணா உடனே எடுத்துப் பேசணும். இப்ப வாங்குன அறை ஞாபகம் இருக்குல்ல..?’’

செந்தில் நடுங்கியபடி, இருக்கிறதென்று தலையாட்ட..நாகப்பா அவன் கைகளிலிருந்த விலங்கை அவிழ்த்துவிட்டான்.

அத்தியாயம்:11- ரிலாக்ஸ் ப்ளீஸ்

நாள்: 4
29/12/2019 ஞாயிறு
இரவு 11:00 மணி

கமிஷனர் மார்த்தாண்ட பூபதியும், கதிரின் அப்பா ஜெயச்சந்திரனும் மாமன் மச்சான்கள் என்றாலும் இருவருமே நல்ல நண்பர்கள். முடிந்தவரை ஒவ்வொரு ஞாயிறன்றும் கமிஷனர் தன் குடும்பத்தோடு கதிர் வீட்டுக்கு வந்துவிடுவார். ஒரே அரட்டையும் கூத்தும் கும்மாளமுமாக இருக்கும். டின்னருக்குப் பிறகு மார்த்தாண்ட பூபதியும், கதிரின் அப்பாவும் வீட்டின் மொட்டை மாடியில் அமர்ந்து மது அருந்தியபடி நள்ளிரவு 1:00 மணிவரை சாவகாசமாக பேசிக்கொண்டிருப்பார்கள்.

அவர்கள் இருவரும் பல துறைகளிலும் அனுபவமிக்கவர்களாதலால் பல காரியங்களைக் குறித்து மனம் விட்டுப் பேசிக்கொண்டிருப்பார்கள். அவர்களோடு அமர்ந்து பேசுவது கதிருக்குப் பிடிக்கும். வெளிநாட்டு வாசம் இருந்தாலும் கதிருக்கு குடிப்பழக்கம் அறவே இல்லை, ஆனால் இருவரும் வைத்திருக்கும் சைட் டிஷ்ஷில் பாதியை இவனே காலிபண்ணி விடுவான்.

கமிஷனர் மார்த்தாண்ட பூபதியும் கதிரின் அம்மாவும் கூடப் பிறந்தவர்கள். கமிஷனரின் மனைவி அமுதினி கதிரின் அப்பா ஜெயச்சந்திரனுக்கு தூரத்து உறவு. மார்த்தாண்ட பூபதிக்கு இரு மகன்கள் இருக்கின்றனர். இருவரும் சிங்கப்பூரில் படித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஜெயச்சந்திரன் ஓய்வு பெற்ற பொருளாதாரப் பேராசிரியர், முன்னந்தலை வழுக்கை, பாதிக்கு மேல் நரைத்துவிட்ட மீசை, வெள்ளை கை வைத்த பனியனும், லுங்கியும் அணிந்திருந்தார். மார்த்தாண்ட பூபதி காலர் வைத்த டி-ஷர்ட்டும், ட்ராக் பேண்ட்டும் அணிந்திருந்தார். கதிர் ரவுண்ட்நெக் டி-ஷர்ட், ஷாட்ஸ் அணிந்து அமர்ந்திருந்தான். குளிர்காலமாகையால் மொட்டை மாடியில் சில் காற்று இதமாக வீசிக்கொண்டிருந்தது.

மார்த்தாண்ட பூபதி கையில் இருந்த மதுவை ஒரு சிப் உறிஞ்சிவிட்டு, ரிலாக்ஸாக மூச்சை இழுத்துவிட்டு, “சண்டே ஆச்சுன்னா நம்ம வீட்டுக்கு வந்து இப்படி மொட்டமாடில காத்தோட்டமா உக்காந்து ரெண்டு பெக் போட்டாத்தான் மாமா அந்த வாரம் கம்ப்ளீட் ஆனமாதிரி இருக்கு…”

ஜெயச்சந்திரன், “இன்னிக்கு எங்க கிளப்ல ஒரு மீட்டிங் இருந்துச்சு, என்னை பேச சொல்லிருந்தாங்க, நீ வருவேன்னு சொல்லிதான் நான் இன்னிக்கு போகல. அந்த மூணு கேசையும் பத்தி கதிர் சொன்னான். இன்வெஸ்டிகேஷன் எப்படிப்பா போகுது?”

மார்த்தாண்ட பூபதி கேள்வியை கதிர் பக்கம் திருப்பி விட்டார், “நீயே சொல்லு மாப்ள”

கதிர் அப்பாவிடம் ஏற்கனவே அதுபற்றி சொல்லியிருந்ததால் மறுபடியும் அவரிடம் அதையே பேசுவதைவிட விட தற்போது அவன் மனதில் ஓடிக்கொண்டிருந்த ஒரு விஷயத்தைக் கொட்டினான், "மாமா, அந்த மூணு கேஸ்லயும் ஏதோ அமானுஷ்ய கனெக்ஷன் இருக்கிறது தெரியுது.. 2004 சுனாமி, 2001 குஜராத் பூகம்பம், 2005 மும்பை வெள்ளம், 2010 ஜப்பான் பூகம்பம், 2003 ஈரான் பூகம்பம் இது எல்லாம் நடந்தது 26-ஆம் தேதிலதான். இப்படி 26-ஆம் தேதில நடந்த 32 பயங்கரமான disasters-ஸ ஒரு வெப்சைட் லிஸ்ட் பண்ணிருக்கு... பத்தாததுக்கு இந்தவாட்டி சூரிய கிரகணமும் சேர்ந்திருச்சு...

கமிஷனர் தலையாட்டியபடியே, "ஆமா மாப்ள”

ஜெயச்சந்திரன், "ஏண்டா இதத்தான் லண்டன்ல போயி படிச்சிட்டு வந்தியா, (கமிஷனரைப் பார்த்து)அதுக்கு நீ வேற ஆமாங்கிற.. இப்ப என்ன கேதுவையும், சனியையும் அரெஸ்ட் பண்ணி உள்ள வைக்கப்போறீங்களா? ஒங்ககிட்ட ஒரு கேஸைக் குடுத்தா வெளங்குனாப்லதேன்...

கமிஷனர், “ப்ச்..இல்ல மாமா, அவன் சொல்றதுல பாயிண்ட் இருக்கு. ஒரு கேசை இன்வெஸ்டிகேட் பண்ணும்போது, இது வேணும், இது வேணாம்னு எதையும் விட்டுட்டுப் போக முடியாது. கிடைக்கிற எல்லாத்தையும் பிரிச்சு மேய்ஞ்சு பாத்துரணும்... எங்கருந்து என்ன க்ளூ கிடைக்கும்னு யாராலையும் சொல்ல முடியாது."

கதிர், "அப்பா, நமக்கு அமானுஷ்யம் மேல நம்பிக்கை இருக்கு, இல்லங்கிறதெல்லாம் வேற விஷயம். ஆனா அமானுஷ்ய நம்பிக்கையினால நிறைய குற்றங்கள் சமுதாயத்துல நடத்துக்கிட்டுதான் இருக்கு. அதை அதே ரூட்ல போனாத்தான் நாம பிடிக்க முடியும்.

கமிஷனரும், கதிரும் கொடுத்த விளக்கத்தை ஆமோதித்த ஜெயச்சந்திரன், “எனக்கு இதுலயெல்லாம் நம்பிக்கையில்ல, ஆனா சொல்லுவாங்க..26 ராசியில்லாத தேதி, அன்னிக்கு எது ஆரம்பிச்சாலும் வெளங்காதுன்னு"

கதிர் முகம் சற்று கவலையாக மாறியது, "ஏம்ப்பா அப்ப 26-ஆம் தேதி எது ஆரம்பிச்சாலும் வெளங்காதா?"

அப்பா குத்தலாக, "ஏன் அன்னிக்கு நீ என்னத்த ஆரம்பிச்ச?"

அப்பா கேட்கும் உள்ளர்த்தம் கதிருக்குப் புரிந்தது, அவனுக்கு ‘திக்’கென்றிருந்தது, ”இல்லப்பா, இந்தக் கேசைத்தான் சொல்றேன்"

அப்பா, "கேஸ் தானா வந்தது..நீ அன்னிக்கு ஒண்ண புதுசா ஆரம்பிச்சிருக்கன்னு அம்மா சொல்லுச்சே அது என்ன விஷயம்?..(கமிஷனரைப் பார்த்து) யாருப்பா அன்னிக்கு உன் ஆபீஸ்க்கு வந்த போலீஸ்காரப் பொண்ணு?"

மார்த்தாண்ட பூபதி சத்தமாக சிரித்தபடி, "அடப்பாவி, இது வேறையா? என்னங்கடா நடக்குது இங்க? (சில நொடிகள் யோசித்து) ம்ம்ம்?..அன்னிக்கு ஆபீஸ்க்கு மூணு நாலு பொண்ணுங்க வந்துச்சுங்க..யார்ரா அதுல?"

நிலைமை தனக்கு சற்று பாதகமாக மாறுவதை உணர்ந்த கதிர் நெளிந்தபடியே வெட்கத்துடன் "அதெல்லாம் ஒண்ணும் இல்லங் மாமா!" என்றபடி மெல்ல இடத்தைவிட்டு நழுவினான்.

மார்த்தாண்ட பூபதி, “டேய், டேய்..எஸ்கேப் ஆகுறான் பாருங்க….”

அத்தியாயம்:12- பொறியில் சிக்கியது எலி

நாள்: 5
30/12/2019 திங்கள்
காலை 10:30 மணி

ப்ரியா, கோப்பெருந்தேவி, நாகப்பா மூவரும் எங்கோ ஒரு கேஸ் விஷயமாக சென்றுவிட்டு காலை சிற்றுண்டியை பூந்தமல்லியிலுள்ள சரவணபவனில் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். காலை பத்தரை மணிக்கு மேல் ஆகிவிட்டதால் ஹோட்டலில் சற்று கூட்டம் குறைந்திருந்தது. அப்போது கதிரிடமிருந்து ப்ரியாவுக்கு போன் வந்தது.

ப்ரியா ப்ளூடூத்தை ஆன் செய்து இடது கையால் காதில் இருந்த Earbud-ஐ அட்ஜஸ்ட் செய்தபடி, ‘‘வெரி குட் மார்னிங், சொல்லுங்க கதிர்"

கதிர்,"நான் கமிஷனர் ஆஃபீஸ்ல இருந்து பேசுறேன் ப்ரியா. பசவராஜை அரெஸ்ட் பண்ணியாச்சு, மும்பைல வச்சு பிடிச்சிருக்காங்க"

ப்ரியா ஆச்சரியமாக, "அப்படியா?"

கோப்பெருந்தேவியும் நாகப்பாவும் சாப்பிடுவதை நிறுத்திவிட்டு, நிமிர்ந்து பார்த்து "என்னவாக இருக்கும்" என்று ப்ரியா பேசுவதை ஆர்வமாகக் கேட்க ஆரம்பிக்கிறார்கள்.

கதிர் தொடர்கிறான், ‘‘ஆமா, கமிஷனரோட influence-னால நாம நெனச்சத விட சீக்கிரமே அவனை ட்ரேஸ் பண்ணி பிடிச்சாச்சு. ஆனா ஒரு சின்ன சிக்கல், தப்பிச்சு ஓடும்போது ஒரு ஆக்ஸிடெண்ட் ஆகி unconcious ஆகிட்டானாம்.

ப்ரியாவின் முகம் சட்டென சுருங்கியது, ‘‘ஓ..."

கதிர்,"ஆனா ஒண்ணும் சீரியஸ் இல்ல, அவனை பக்கா மெடிக்கல் சப்போர்ட்டோட சென்னை கொண்டு வந்துக்கிட்டு இருக்காங்க..இங்க வந்து ரீச் ஆகுறதுக்குள்ள அவனுக்கு நினைவு திரும்ப வாய்ப்பிருக்கு’’

ப்ரியா, ‘‘குட், ஆனா அவன் மும்பைக்கு எப்படி தப்பிச்சு ஓடுனான், அவனை எப்படி ட்ரேஸ் பண்ணாங்க?

கதிர் சிரித்துக்கொண்டே, ‘‘மும்பைக்கு தப்பிச்சு ஓடினவன் சும்மா இருந்திருக்கலாம்ல, நேத்து நைட் ஒரு மசாஜ் சென்டர்ல நடந்த போலீஸ் ரெய்டுல மாட்டிருக்கான். விசாரிச்சதுல முன்னுக்குப் பின் முரணா பதில் சொன்னதால, அங்கேயே வச்சு வெளுக்க ஆரம்பிச்சுருக்காங்க. உண்மைய சொல்லிட்டான். ஏற்கனவே இந்தியாவுல இருக்கிற எல்லா மேஜர் cities-லயும் அவனைப் பத்தி கமிஷனர் ஆஃபீஸ்ல இருந்து அலர்ட் போயிருந்ததால இன்னிக்கு விடியற்காலமே கமிஷனருக்கு போன் வந்திருச்சு..ஆக்சுவலா அந்த மசாஜ் சென்டர்ல இருந்து ஜீப்ல ஏத்தும்போதுதான் தப்பிச்சி ஓட டிரைப் பண்ணி ஒரு ஆட்டோல மோதிட்டானாம்.’’

ப்ரியா, “Oh..thank you Kathir" என்று சொல்லிவிட்டு இணைப்பைத் துண்டித்தாள். பசவராஜ் பிடிபட்டதில் அவளுக்கு ஒரு விதத்தில் நிம்மதி என்றாலும், அதில் தன் பங்கு இல்லாததால் சற்று வருத்தமாகவும், அவமானமாகவும் உணர்ந்தாள். அதுதான் ப்ரியா!

அத்தியாயம்:13- கொடாக்கண்டன்

நாள்: 7
01/01/2020 புதன்
காலை 08:00 மணி

2020- ஆண்டு பிறந்தது, உலகம் முழுவதும் புத்தாண்டைக் கொண்டாடிக் கொண்டிருந்தது. கதிரை அவனது நண்பர்கள் முந்தினநாள் நட்சத்திர ஹோட்டல் பார்ட்டிக்கு அழைத்திருந்தார்கள். கதிருக்கு அதிலெல்லாம் விருப்பமில்லை. நேற்றிரவு ரோஷிணி கேஸ் விஷயமாக இப்ராஹிம் என்ற ஒரு நபரை சந்தித்துவிட்டு, லேட்டாக வந்து நன்றாகத் தூங்கி விட்டிருந்தான்.

காலை 6:30 மணிக்கெல்லாம் ப்ரியா 3 முறை போன் செய்திருந்தாள். கதிர் மொபைலை சைலண்ட் மோடில் போட்டுவிட்டு தூங்கியதால் அவனுக்குக் கேட்கவில்லை. காலையில் 7:15 போல எழுந்து பார்த்துவிட்டு ப்ரியாவுக்கு கால் செய்தான்.

மறுமுனையில் ஒரு ஆண் குரல், “குட் மார்னிங் சார், நான் நாகப்பா பேசுறேன் மேடம் ஏசிபி ஐயாகூட இன்னொரு கால்ல இருக்காங்க..நீங்க கிளம்பி 8:00 மணிக்கு வடபழனி கோவிலுக்கு கொஞ்சம் வரமுடியுமா?”

கதிர், “ஏன் என்ன விஷயம்?”

நாகப்பா, “தெரியல சார், உங்க கால் வந்தவுடனே மேடம் என்கிட்ட போனை கொடுத்து சொல்லச் சொன்னாங்க”.’

கதிர் யோசித்தபடி, “ம்ம்..சரி வர்றேன்”

“நியூ இயரும் அதுவுமா எதுக்கு வடபழனி கோவிலுக்கு வர சொல்லிருப்பா?” கதிர் பலவாறு சிந்தித்தபடி கிளம்பினான்.

வடபழனி கோவிலில் கூட்டம் அன்று அதிகமாக இருந்தது. ஜீப் சற்று ஓரத்தில் நிறுத்தப்பட்டிருந்தது. ப்ரியா ஜீப்பில் ஸ்டைலாக சாய்ந்து நின்றபடி மொபைலில் மூழ்கியிருந்தாள். கண்களில் அணிந்திருந்த கூலர்ஸ் அவளது அழகையும் மிடுக்கையும் அதிகப்படுத்திக் காட்டியது. கதிர் எதிரில் வந்து நின்றதைக்கூட அவள் கவனிக்கவில்லை.

கதிர், “விஷ் யூ எ ஹேப்பி நியூ இயர் ப்ரியா”

ப்ரியா திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்து முகத்தில் புன்னகை வரவழைத்துக் கொண்டு, “ஹாங், தாங்க்யூ கதிர்.. விஷிங் யூ த சேம்”.

கதிர், “ ஏங்க, அன்னிக்கு கே.எஃப்.சிக்கு செம்ம மார்டன் டிரஸ்ல வந்தீங்க. இன்னிக்கு நியூ இயரும் அதுவுமா கோவிலுக்கு சாரி கட்டி, நெத்தி நிறைய பொட்டு வச்சு, தலைல மல்லிகப் பூ வச்சு மங்களகரமா வர்றதுக்குப் பதிலா இப்படி யூனிஃபார்ம்ல வந்திருக்கீங்களே, சாமி கோவுச்சுக்காது?”

ப்ரியா, “ஹலோ நான் ஒண்ணும் இங்க சாமி கும்பிட வரல, எனக்கு அந்த நம்பிக்கையெல்லாம் கிடையாது. I’m a free thinker, பசவராஜை பக்கத்துல சஞ்சயா ஹாஸ்பிட்டல்ல அட்மிட் பண்ணிருக்காங்க. நேத்து நைட் அவனுக்கு நினைவு திரும்பிருச்சாம். அதுனால அவனை விசாரிக்க வந்திருக்கேன். அதுக்காகத்தான் உங்களையும் வரச்சொன்னேன். பக்கதுலதானே கோவில் இருக்கு இன்னிக்கு நியூ இயர்னால நாகப்பா காலைல கோவிலுக்குப் போய் சாமி கும்பிடணும்னு ஆசைப்பட்டான். அதுதான் அவனை கோவிலுக்கு அனுப்பிச்சிட்டு நான் வெயிட் பண்ணிக்கிட்டு இருக்கேன்.

கதிர், “ஃப்பூ இவ்வளவுதானா! இன்ஸ்பெக்டர் மேடம் எதுக்கு நியூ இயரும் அதுவுமா கோவிலுக்கு நம்மள கூப்பிடுறாங்கன்னு கன்ஃபியூஸ் ஆகிட்டேன்.”

ப்ரியா, சாரி கதிர் நானே உங்களோட பேசி தெளிவா சொல்லிருக்கனும், ஏசிபி கூட முக்கியமான கால்ல இருந்தேன் அதான் நாகப்பாகிட்ட கொடுத்து பேசச் சொன்னேன்.”

கதிர், “பரவால்ல ப்ரியா, அதோ நாகப்பா வந்துட்டான் நாம ஹாஸ்பிட்டல் கிளம்பலாம்”.

....

சஞ்சயா ஹாஸ்பிட்டலில் ஒரு தனி அறையில் பசவராஜ் படுத்திருந்தான். அறையின் வாசலில் இரண்டு போலீசார் காவலுக்கு நின்றுகொண்டிருந்தார்கள். ப்ரியாவை இன்ஸ்பெக்டர் சீருடையில் பார்த்ததும் இருவரும் வணக்கம் வைத்தனர். ப்ரியா, கதிர் இருவரும் அறைக்குள் நுழைந்ததும் பசவராஜ் படுத்திருந்தபடியே இரு கைகளையும் கூப்பி அவர்களை கும்பிட்டபடி அழுதான். கண்களிலிருந்து கண்ணீர் தாரைதாரையாக ஓடியது. அவன் தலையில் முண்டாசு போல கட்டுப் போடப்பட்டிருந்தது. இடது கையிலும், வலது காலிலும் ஆங்காங்கே ஓரிரு இடங்களில் கட்டுப் போடப்பட்டிருந்தது.

பசவராஜுக்கு 51 வயதாகிறது. கறுப்பாக, சற்று குண்டாக இருந்தான். சிவந்த கண்கள், மொட்டை அடித்திருந்தான். கிளீன் ஷேவ் செய்து 5 நாட்களுக்குப் பின் வளர்ந்த நரை கலந்த மீசை தாடி, போலீசாரின் கண்களுக்கு சிக்காமல் தப்பிக்க மொட்டையடித்து, கிளீன் ஷேவ் செய்திருக்கிறான் என்பதை கதிரும் ப்ரியாவும் புரிந்து கொண்டார்கள்.

கதிர், "என்ன பசவராஜ், இப்ப உடம்பு எப்படி இருக்கு?"

இப்ப தேவலாம் என்று தலையை ஆட்டியபடி, கும்பிட்ட கையை விலக்காமல், "சத்தியமா என் பொண்டாட்டி சாவுக்கு நான் காரணம் இல்ல சார். ஊரு பூராம் வட்டிக்கு கடன வாங்கி வச்சிருந்தா. அப்படி காச வாங்கி என்னதான் செலவு பண்ணுவான்னும் தெரியல. பத்தாததுக்கு கண்டவனுகளோடயும் பழக்க வழக்கம். கொஞ்ச நாளா டெய்லி காலைல கடன்காரனுகளெல்லாம் வந்து வீட்டுக் கதவை தட்ட ஆரம்பிச்சுட்டானுக சார்.. அதனாலதான் இவ மூஞ்சியிலேயே முழிக்க வேணாம்னு கல்கத்தாவுக்கு வேலைக்குப் போயிட்டேன் சார்...

ப்ரியா சற்று கண்டிப்பான தொனியில், "அது சரி, பொண்டாட்டி சாவுக்குக் கூட ஏன் வரல?"

பசவராஜ், "கடன்காரனுக கொடுத்த குடைச்சலாலதான் அவ தற்கொல பண்ணி சாகுற அளவுக்குப் போயிட்டா, அவ சாவுக்கு நான் வந்து, அவனுக கையில சிக்குனேன்னா எனக்கும் அதே நிலமைதாங்கம்மா அதான்...

கதிர் சற்று கடினமாக, "இங்க பார், உன் பொண்டாட்டி மொத்தமே 3 பேருகிட்டத்தான் வட்டிக்கு வாங்கிருக்கா. அந்த மூணுலயும் செந்தில்தான் ஜாமீன் கையெழுத்து போட்டு வாங்கிக் கொடுத்திருக்கான். நீ எதுலயுமே சம்பந்தப்படல...

அவ வாங்கின மொத்தத் தொகை ஒரு லட்சம். வட்டியோட இதுவரைக்கும் ஒரு லட்சத்து அறுபதுனாயிரம் ஆச்சு. அவ சாகுறதுக்கு நாலு நாளைக்கு முன்னாடியே வட்டிக்காரன் செந்திலைப் புடிச்சு அவனோட டூ வீலரை புடுங்கிட்டுப் போயிட்டான். அன்னிக்கே செந்தில் அதைப் பத்தி சைதாப்பேட்டை ஸ்டேஷன்ல கம்ப்ளைண்ட் கொடுத்திருக்கான்.

பவானிக்கு கடன் கொடுத்திருந்த மூணு பேரையுமே நாங்க தனித்தனியா விசாரிச்சாச்சு. அவனுக எல்லோருமே எங்களுக்கு செந்தில்தான் பொறுப்பு, பவானி புருஷனோட மூஞ்சியக்கூட நாங்க பார்த்ததில்லங்குறானுக.

சோ...உனக்கு கடன்காரங்காளால பிரச்சனை இல்ல, நீ இங்க வராம தப்பிச்சு ஓடுனதுக்கு வேற ஏதோ ஒரு காரணம் இருக்கு..."

பசவராஜ் அழுதபடி, "ஐயய்யோ அப்படியெல்லாம் எதுவும் இல்ல சார், என்ன நம்புங்க சார் என்று சொல்லிவிட்டு, "தேவுட நன்னி காபாடு, நன்னி சம்பெஸ்துவுன்னரு" என்று ஹாஸ்பிடலே அதிரும் அளவுக்குக் அலறினான்.

இரண்டு நர்சுகளும், ஒரு வயதான சீனியர் டாக்டரும் வேகமாக ஓடி வந்தார்கள். அந்த டாக்டர், "மேடம் பேஷண்ட்டுக்கு இப்பதான் நினைவு திரும்பிருக்கு. அவருக்குக் கொஞ்சம் ரெஸ்ட் தேவைப்படுது..ரொம்ப ஸ்ட்ரெஸ் ஆகிடாம பார்த்துக்கங்க.."

டாக்டர் சொன்னதைக் கேட்டதும் பசவராஜ் இன்னும் சத்தமாக கத்தி அழ ஆரம்பிக்க, நர்சுகள் அவனை சமாதானம் செய்கிறார்கள். அவனது நாடகத்தை கதிரும் ப்ரியாவும் எரிச்சலோடு கவனித்தபடி அங்கிருந்து வெளியேறினார்கள்.

ப்ரியா நேராகப் போய் ஜீப்பில் அமர்ந்து கொண்டாள். கோபத்தில் அவள் முகம் சிவந்திருந்தது. கதிர் அந்த சீனியர் டாக்டரிடம் போய் ஏதோ பேசிக்கொண்டிருந்தான்.

அத்தியாயம்:14- மெல்லப் பரவும் வெளிச்சம்

நாள்: 9
03/01/2020 வெள்ளி
காலை 08:00 மணி

பவானியின் வீடு…

பவானியின் வீட்டில் கதிர், ப்ரியா, கோப்பெருந்தேவி மூவரும் சோதனையிட்டுக் கொண்டிருந்தனர். சமையலறையின் அலமாரியில் ஒரு மைலோ டின் கதிரின் கண்களில் பட்டது. அதை எடுத்து சுற்றும் முற்றும் பார்த்தான். மைலோ டின்னுக்குப் பின் வேறு சில பொருட்கள் பயன்படுத்தபடாமல் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அவைகளையும் எடுத்துப் பார்த்துவிட்டு ஹாலில் இருந்த ப்ரியாவையும், படுக்கை அறையில் ஆய்வு செய்து கொண்டிருந்த கோப்பெருந்தேவியையும் அழைத்தான்.

இருவரும் அங்கு வந்தவுடன் கதிர், ‘‘இங்க பாருங்க, இது எல்லாமே மலேஷியன் Products, யாரோ மலேசியால இருந்து இங்க வந்தவங்க பவானிக்கு இதைக் கொடுத்திருக்கணும்.

கோப்பெருந்தேவி, "இந்த Products எல்லாமே இப்பெல்லாம் இங்கேயே கிடைக்குதே"

கதிர், "கரெக்டுதான்..ஆனா இங்க பாருங்க இந்தப் Products-ஸோட விலையெல்லாமே மலேஷியன் ரிங்கிட்ல இருக்கு. அது மட்டுமில்லாம இந்த Durian Chocolate, Instant White Coffee, Nutmeg Oil, Instant Mee Goreng, Sardin Can இதெல்லாம் பவானி போய் பர்சேஸ் பண்ணிட்டு வந்திருப்பான்னு நெனைக்கிறீங்களா? நிறைய Products எப்படி யூஸ் பண்ணனும்னு தெரியாம சீல் கூட உடைக்காம அப்படியே வச்சிருக்கா. so, மலேஷியால இருந்து வந்தவங்க யாரோ இதை இவளுக்கு கிஃப்ட் பண்ணிருக்கணும்.

ப்ரியா யோசித்தபடி, "மேக் சென்ஸ்"...

அப்போது நாகப்பா அங்கு ஒரு இளைஞனைக் கூட்டி வந்து கதிரிடம், "சார், இவரு பேரு ரவி, ரெண்டு தெரு தள்ளி ப்ரவுசிங் சென்டர் வச்சிருக்காப்ல, பத்து நாளைக்கு முன்னாடி பவானி இன்னொரு ஆளோட இவர் சென்டருக்கு வந்து பாஸ்போர்ட் அப்ளை பண்ணதா சொல்றாப்ல.

ரவிக்கு 30 வயதுக்குள் இருக்கும். மெலிந்த தேகம், கூன் தள்ளிய முதுகு. சாதாரண அரைக் கை சட்டை , பேண்ட் அணிந்திருந்தான்.

கதிர் ஆர்வமாக ரவியிடம், "யாருக்கு பாஸ்போர்ட்?"

ரவி, "பவானி அக்காவுக்குத்தான் சார், ஆனா தேவையான டாகுமெண்ட் எதுவுமே அவங்ககிட்ட சரியா இல்ல. எதைக் கேட்டாலும் ஊருல இருக்கு, ஊருல இருக்குன்னே சொல்லிக்கிட்டு இருந்தாங்க... அதனால கூட வந்தவர் டென்ஷனாகி அவங்கள திட்டி, ஊருக்குப்போய் மொதல்ல எல்லா டாகுமெண்ட்டையும் எடுத்துட்டு வா, அப்புறம் பாஸ்போர்ட் அப்ளை பண்ணிக்கலாம்னு சொல்லி கூட்டிட்டுப் போயிட்டாரு".

ப்ரியா, "கூட வந்த அந்த ஆள் எப்படி இருந்தாரு?"

ரவி, "அவருக்கு ஒரு 50 வயசு இருக்கும் மேடம். ஆளைப் பார்த்தா நல்லா டீசன்ட்டா ஃபாரின் ரிட்டர்ன் மாதிரி இருந்தாரு. முதல்ல அவங்க சொல்ல சொல்ல ஆன்லைன் ஃபார்ம் fill up பண்ணேன் மேடம். அப்ப கணவர் பேர்ல பசவராஜ் பேருக்கு பதிலா வேற ஒரு பேரை சொன்னாங்க...

ப்ரியா, கதிர், கோப்பெருந்தேவி ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். அவர்கள் முகங்களில் அதிர்ச்சியும், ஆர்வமும் ஒருசேர தென்பட்டது.

ப்ரியா,"ஹஸ்பண்ட் பேரு என்னன்னு சொன்னாங்க?"

ரவி, "எனக்கு ஞாபகம் இல்ல மேடம். ஆனா அதுகூட வந்த அந்த ஆளோட பெயராதான் இருக்கும்னு நினைக்கிறேன். ஏன்னா அந்த பெயருக்குள்ள ஸ்பெல்லிங் எல்லாம் அவர்தான் சொன்னாரு... எனக்கே கொஞ்சம் ஷாக் ஆகிடுச்சு".

கதிர், அந்த ஃபார்ம் சேவ் பண்ணி வச்சிருக்கீங்களா?

ரவி, "இல்லங்க சார் அவங்ககிட்ட டாகுமெண்ட் எதுவுமே இல்லாததால அந்த ஃபார்ம சேவ் பண்ணாமலே கேன்சல் பண்ணிட்டேன்...

கோப்பெருந்தேவி, "உங்களுக்கு பவானியையும், பசவராஜையும் எத்தனை நாளா தெரியும்?

ரவி, "அப்பப்ப ஏதாவது டயலாக் பேப்பர் பிரிண்ட் அவுட் எடுக்க வருவாங்க.. அவ்வளவுதான் மேடம். ரொம்பவெல்லாம் பழக்கமில்ல...

கதிர், "ரொம்ப தேங்க்ஸ் ரவி, உங்க மொபைல் நம்பரை மட்டும் (நாகப்பாவைக் காட்டி) அவர்கிட்ட கொடுத்துட்டுப் போங்க. வேற ஏதாவது தகவல் வேணும்னா காண்டாக்ட் பண்றோம்."

ரவி பணிவாக தலையாட்டிவிட்டு விடைபெற்றான்.

அத்தியாயம்:15- கழுத்தை இறுக்கும் சுருக்கு…

நாள்: 10
04/01/2020 சனிக்கிழமை
மாலை 07:00 மணி

சஞ்சயா ஹாஸ்பிட்டல், வடபழனி, சென்னை…

ப்ரியாவும், கோப்பெருந்தேவியும் ஹாஸ்பிட்டலுக்கு சுடிதாரில் பசவராஜைப் பார்க்கச் சென்றனர். கோப்பெருந்தேவியின் கையில் ஹார்லிக்ஸ் பாட்டில், ப்ரட் மற்றும் பழங்கள் நிரம்பிய பை வைத்திருந்தாள். பசவராஜிடம் கொடுத்து "எப்படிண்ணே இருக்கீங்க?" என்று கோப்பெருந்தேவி கேட்டாள்.

சாதாரண உடையில் ஒரு உறவினரைப் விசாரிக்க வருவதுபோல இரண்டு போலீஸ்காரப் பெண்கள் வந்ததும், பழங்கள் கொடுத்து 'அண்ணே' என்று கரிசனையாக விசாரித்ததும் பசவராஜுக்கு ஆச்சரியமாய் இருந்தது. வழக்கம் போல கையெடுத்துக் கும்பிட்டு நல்லா இருக்கேன் என்பது போல தலையாட்டினான். கோப்பெருந்தேவியைப் பேசவிட்டு ப்ரியா அமைதியாய் இருந்தாள்.

கோப்பெருந்தேவி, "பவானி கடன் தொல்லையால மனநெருக்கடிக்கு உள்ளாகி தற்கொலை பண்ணிக்கிட்டான்னுதான் விசாரணையில் கன்ஃபார்ம் ஆயிருக்கு. இப்ப கேஸை குளோஸ் பண்ணனும். பவானி சம்பந்தப்பட்ட டாகுமெண்ட்ஸ், ரேஷன் கார்டு, ஆதார் அட்டை ஏதாவது உங்ககிட்ட இருக்காண்ணே?

கேஸ் குளோஸ் ஆகப்போவது தெரிந்ததும் பசவராஜ் முகத்தில் ஒரு உற்சாகம் பிறந்தது. "எங்கிட்ட எதுவும் இல்லங்கம்மா, எல்லாமே வீட்டுலதான் கிடக்கும்".

கோப்பெருந்தேவி, "வீட்டுல எதுவுமே இல்லண்ணே, சரி உங்க ஐடி கார்டு ஏதாவது இருந்தா குடுங்க"

பசவராஜ், "எல்லாமே கல்கத்தால நான் தங்கியிருந்த ரூம்ல கெடக்குங்மா, அந்த ரூம்ல நான் மட்டும்தான் இருந்தேன். மும்பைல ஆக்ஸிடண்ட் நடந்தப்ப அந்த ரூம் சாவியும் எங்கேயோ தொலஞ்சு போச்சுங்கம்மா"

ப்ரியாவுக்கும், கோப்பெருந்தேவிக்கும் டென்ஷன் தலைக்கேறியது. ஆனால் அதை முகத்தில் காட்டாமல் ப்ரியா பேச ஆரம்பித்தாள் "சரி உங்களுக்கு கல்யாணமாகி எத்தனை வருஷமாச்சு?"

பசவராஜ், "ஒரு 20 வருஷம் ஆச்சுங்கம்மா"

ப்ரியா, "தேதி, மாசம், வருஷம்?"

பசவராஜ், "ஆகஸ்டு 18..அது வந்து வந்து..வருஷம்..."

ப்ரியா, "வருஷம் ஞாபகம் இல்லையா? சரி பரவால்ல..பவானிக்கு மலேஷியால யாரும் சொந்தக்காரங்க இருக்காங்களா?"

ப்ரியா இந்தக் கேள்வியைக் கேட்டதும் பசவராஜின் முகத்தில் சட்டனெ ஒரு அதிர்ச்சி ரேகை படர்ந்ததை இருவரும் கவனிக்கத் தவறவில்லை.

பசவராஜின் தொண்டை கம்மியது, நா குழறியது, "யா..யாரும் இல்லைங்களேமா"

கோப்பெருந்தேவி, "சரி பவானிக்கு இல்ல, உங்களுக்கு மலேசியா, சிங்கப்பூர்ல இருந்து நண்பர்கள், சொந்தக்காரங்க யாரும் இருக்காங்களா?

பசவராஜ், "அப்படி யாருமே இல்லைங்களேமா, ஏங்கம்மா கேட்குறீங்க?"

கோப்பெருந்தேவி, "ஒண்ணும் இல்ல, சரி உடம்பைப் பார்த்துக்கங்க.."

கோப்பெருந்தேவியும், ப்ரியாவும் அந்த அறையைவிட்டு வெளியேற, அதிர்ச்சியில் உறைந்தவனாக அவர்கள் போவதையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான் பசவராஜ். ஏசி ரூமிலும் அவனுக்கு வியர்க்கத் தொடங்கியது…

அத்தியாயம்:16- அவனைப் ‘பார்த்த’ சாரதி…

நாள்: 12
06/01/2020 திங்கள்
காலை 09:30 மணி

குமரன் காலணி, பவானியின் வீடு…

பூட்டப்பட்டிருந்த பவானியின் வீட்டு வாசலில் முன்பு அரைக்கை சட்டையும், லுங்கியும் அணிந்த, சுமார் 45 வயது மதிக்கத்தக்க ஒரு ஆள் நின்று கொண்டு உரத்த குரலில், “பசவராஜண்ணே, பசவராஜண்ணே…”

“ஹலோவ்..இங்க வாங்க” சத்தத்தைக் கேட்டு திரும்பிப் பார்த்தான்.

எதிரில் இருந்த கையேந்தி பவனில் சாப்பிட்டுக் கொண்டிருந்தபடியே இருவர் கையசைத்து அவனை அழைத்தனர்.

அவன் அருகில் வந்ததும், “சீல் வச்ச வீட்டு முன்னாடி நின்னு, பசவராஜண்ணே, பசவராஜண்ணேன்னு கூப்பிட்டா யாரு வருவா?”

அந்த ஆள் குழப்பத்தோடு பவானியின் வீட்டை ஒருமுறை திரும்பிப் பார்த்துவிட்டு இவர்களைப் பார்த்தான். அவர்களது தோற்றமும், பேசிய தோரணையும் அவர்கள் இருவரும் மப்டியில் இருக்கும் போலீஸ்காரர்கள் என்பதை அவனுக்கு உணர்த்தியது. மடித்துக் கட்டியிருந்த லுங்கியை மரியாதையோடு இறக்கிவிட்டான்.

போலீஸ்காரரில் இருவரில் ஒருவர் அவனிடம் பேச ஆரம்பித்தார். இன்னொருவர் அந்த இடத்தை விட்டு நகர்ந்தார், “யாரு நீங்க என்னா விஷயம்?”

அந்த நபர், "என் பேரு சாரதி சார், டாக்ஸி ஓட்டுறேன். பசவராஜ் அண்ணன் எனக்கு டாக்ஸி வாடகை பாக்கி 7500 ரூபா கொடுக்கணும். போன் பண்ணா எடுக்கவே மாட்டிங்கிறாரு, அதான்...."

“அப்படியா, சரி கொஞ்சம் ஸ்டேஷன் வரைக்கும் வந்துட்டுப் போ"

சாரதியை பயமும் நடுக்கமும் பிடிக்கிறது, "சார், ஏன் சார்? என்ன நடந்துச்சு"

"அட ஒண்ணும் இல்லப்பா, நீ ஏன் இவ்வளோ பயப்படுற. சும்மா ஒரு விசாரணைதான். ஒனக்கு தெரிஞ்சத சொல்லிட்டு நீ பாட்டுக்கு கிளம்பிப் போயிரலாம்..அந்தா அவரு வண்டில ஏறி உட்காரு..."

அதற்குள் இன்னொரு போலீஸ்காரர் தனது புல்லட்டை ஸ்டார்ட் செய்து ஆக்ஸிலேட்டரைத் திருகியபடி அவர்கள் முன்பு வந்து நிற்கிறார்.

ஏற்கனவே இருந்த பயத்துடன், புல்லட் உறுமும் சத்தமும் சேர்ந்து சாரதிக்கு அடிவயிற்றைப் புரட்டியது, இன்னிக்குக் காலங்காத்தால யாரு முகத்துல முழிச்சேனோ என்று தன்னைத்தானே நொந்தபடியே காவலரின் பைக்கில் பின் சீட்டில் ஏறி உட்காந்தான்.

……

காலை மணி 10:15

டாக்ஸி டிரைவர் சாரதி ப்ரியா முன்னால் நின்று கொண்டிருந்தான். ப்ரியாவுக்கு அருகில் கோப்பெருந்தேவி உட்காந்திருந்தாள். சாரதிக்கு இரு பக்கத்திலும் அவனை அழைத்துவந்த இரு போலீசாரும் நின்று கொண்டிருந்தனர்.

ப்ரியா, “உனக்கு பசவராஜை எப்படித் தெரியும்? எவ்வளோ நாளா பழக்கம்?”

சாரதி, “ஒரு ரெண்டு வருஷமாத்தான் தெரியும் மேடம், ஒயின் ஷாப்புல பழக்கம். யாராவது தெரிஞ்சவுங்களுக்கு டாக்ஸி வேணும்னா என்கிட்டத்தான் வருவாரு…பார்ட்டிகிட்ட காசை வாங்கிட்டு அவருக்கு ஒரு கமிஷன் குடுத்துருவேன்..”

ப்ரியா, “ம்ம்ம்..மேல சொல்லு”

சாரதி, “போனவாட்டி ஒரு ஃபாரின் பார்ட்டிய புடிச்சிட்டு வந்தாரு. அவருக்கு ரொம்ப குளோஸ் ஃப்ரண்டாம். ஒரு பத்து நாள் சென்னைல அங்க இங்க சுத்துனாங்க, ஒரு தடவை ராம்நாடு பக்கத்துல எமனேஸ்வரம் போயிட்டு வந்தோம், அந்த டிரிப்புக்கு மட்டும் பசவராஜ் வரல…முதல்ல கரெக்டாத்தான் காசு வந்துக்கிட்டு இருந்துச்சு கடைசி நாலு நாள் காசு 7500 ரூபாய் பாக்கி வச்சுட்டாங்க. பசவராஜுக்கு போன் பண்ணி, போன் பண்ணி பார்த்தேன் எடுக்கவே இல்ல. அந்த ஃபாரின்காரர் தங்கியிருந்த வீடும் பூட்டியே கிடக்கு. இன்னும் ரெண்டு நாள்ல காருக்கு டியூ கட்டணும் மேடம், அதான் மேடம் பசவராஜை நேருலயே பார்த்து காச கேட்டுட்டுப் போலாம்னு வந்தேன்.”

ப்ரியா, “அந்த ஃபாரின்கார ஆள் வீடு எங்க இருக்கு?”

சாரதி, “அடையாறு, பத்மநாபா நகர்ங்க மேடம்”

ப்ரியா, “வீட்டக் காட்ட முடியுமா?”

சாரதி, “கண்டிப்பா காட்டுறேன் மேடம்”.

அத்தியாயம்:17- ஓநாயின் குகை - பாகம் 1

நாள்: 12
06/01/2020 திங்கள்
மதியம் 02:30 மணி

பத்மநாபா நகர், அடையாறு, சென்னை

டிரைவர் சாரதியை அழைத்துக் கொண்டு கதிர், ப்ரியா, கோப்பெருந்தேவி ஆகியோர் அடையாறுக்கு பயணிக்கின்றனர். ஜீப்பை நாகப்பா ஓட்டினான். பத்மநாபா நகருக்குள் கொஞ்சம் அமைதியான தெரு ஒன்றின் முன் ஜீப் நின்றது. சாரதி ஒரு வீட்டின் வாசலில் நின்று காலிங் பெல்லை அழுத்தினான். ஒரு 65 வயது மதிக்கத்தக்க நபர் வந்து கதவைத் திறந்தார். சாரதியுடன் போலீசார் வந்திருப்பதைப் பார்த்ததும் சற்று அதிர்ச்சியடைந்தார்.

ஒன்றும் புரியாமல் விழித்த அவரிடம் சாரதி, “சார் உங்க வீட்ல தங்கியிருந்தாருல அந்த ஃபாரின் பார்ட்டி, அவரைப் பத்தி விசாரிக்க வந்திருக்காங்க..”

கோப்பெருந்தேவி, “நாங்க வடபழனி ஸ்டேஷன்ல இருந்து வந்திருக்கோம்”

அந்த நபர் கண்களில் குழப்பத்தோடு வந்தவர்களுக்கு வணக்கம் செலுத்தி, “வாங்க மேடம், வாங்க சார்”.

வீட்டின் வராந்தாவில் உள்ள ஒரு சோபாவில் கதிரையும், ப்ரியாவையும், கோப்பெருந்தேவியையும் அமர வைத்துவிட்டு அவர் எதிரே உள்ள சோபாவில் அமர்ந்து கொண்டார். சாரதி அமர மறுத்து, கைகளைக் கட்டிக்கொண்டு நின்று கொண்டான். நாகப்பா வெளியே ஜீப்பில் அமர்ந்திருந்தான்.

கதிர், “உங்க பேரு என்ன சார், நீங்க என்ன செய்யுறீங்க?”

“சார் என்பேரு ஜெகந்நாதன், ஸ்டேட் பேங்குல மேனேஜரா ஒர்க் பண்ணிட்டு இருந்தேன். இப்ப ரிட்டயர்ட் ஆகியாச்சு. எனக்கு ஒரே ஒரு பொண்ணு, டெல்லில செட்டில்ட். இந்த வீட்டுல நானும் என் மனைவியும் மட்டும்தான் இருக்கோம். இந்தப் பக்கத்து வீட்டை நான்தான் விலைக்கு வாங்கி வாடகைக்கு விட்டிருக்கிறேன்…” அவர் சொல்லிக்கொண்டிருக்கும்போதே அவரது மனைவி அனைவருக்கும் காபி கொண்டுவந்து கொடுத்தார். எல்லோருமே பணிவாக அதை வாங்க மறுத்தபடி அவர் பேசுவதை தொடர்ந்து கேட்டுக்கொண்டிருந்தனர். ஜெகந்நாதனின் மனைவி காபி ட்ரேயை கிச்சனில் வைத்துவிட்டு திரும்ப வந்து ஹாலின் கதவோரம் நின்று நடப்பதை கவனித்துக் கொண்டிருந்தார்.

ஜெகந்நாதன் தொடர்ந்தார், “ரொம்ப நாளா வாடகைக்கு ஆள் வராம இருந்துச்சு, புரோக்கர்கிட்ட சொல்லி வச்சிருந்தோம். சும்மா ஒரு மாசம் மட்டும் வாடகைக்கு வேணும்னு புரோக்கர் கூட்டிட்டு வந்த ஆள்தான் அவரு…”

ப்ரியா, “அவர் பேரு என்ன? எங்க இருந்து வந்திருக்காரு?”

“அவரு பேரு சந்தான கிருஷ்ணன் மேடம், மலேசியாவுல இருந்து வந்தவரு..ஒரு நிமிஷம் இருங்க", சொல்லிவிட்டு வீட்டுக்குள்ளே போனவர் ஒரு பேப்பரைக் கொண்டுவந்து கதிரிடம் நீட்டினார். "இது அவரோட பாஸ்போர்ட் ஜெராக்ஸ்"

கதிர் அதை வாங்கிப் பார்த்து அதை தனது மொபைலில் ஒரு போட்டோ எடுத்துக் கொண்டு, பேப்பரை ப்ரியவிடம் கொடுத்துவிட்டு ஜெகந்நாதனிடம் கேட்டான், “அவரு இப்பவும் இருக்காரா..இல்ல வீட்டை காலி பண்ணிட்டாரா?”

ஜெகந்நாதன், “இருக்காரு சார், அவரு கொடுத்த டேட்டு இன்னும் முடியல, ஆனா நான் கடைசியா கிறிஸ்துமஸ் அன்னிக்குப் பார்த்தது, ஒரு பத்து பனிரெண்டு நாளாச்சு. அதுக்கப்புறம் அவர ஆளையே பார்க்க முடியல. அவரோட மொபைல் நம்பரும் நாட் இன் யூஸ்னு வருது. அவர் ஏற்கனவே ரெண்டு மாச வாடகைய அட்வான்ஸா கொடுத்துட்டாரு, அதுனால நானும் கண்டுக்கல…”

ப்ரியா, “அந்த வீட்டைக் கொஞ்சம் திறந்து காட்ட முடியுமா?”

“நிச்சயமா மேடம்” என்ற ஜெகந்நாதன் அவர்களை அந்த வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போனார். சாரதி வந்து போலீஸ் ஜீப் அருகில் போய் நின்று கொண்டான்.

ஜெகந்நாதன் தன்னிடமிருந்த இன்னொரு சாவி போட்டு வீட்டைத் திறந்து கொடுத்தார். உள்ளே சோதனை போடப் போன மூவருக்கும் ஏமாற்றமே காத்திருந்தது. வீட்டில் ஒரு பொருளும் இல்லை. துடைத்து வைக்கப்பட்டிருந்தது போல இருந்தது.

கதிர் அந்த படுக்கை அறையின் அலமாரியில் ஒரே ஒரு அடுக்கில் மட்டும் தூசி ஒட்டாமல் இருப்பதற்காக ஒரு நியூஸ் பேப்பர் விரித்து வைக்கப் பட்டிருந்தது. அந்த நியூஸ் பேப்பரை எடுத்தான். அதிலிருந்து சீட்டிக்கட்டிலிருக்கும் ஒரு சீட்டு அளவுக்கு அதே தடிமனில் ஒரு படம் கீழே விழுந்தது. கதிர் அதை எடுத்து முன்னும் பின்னும் திருப்பிப் பார்த்தான்…அவனுக்கு ஒன்றும் புரியவில்லை.

ப்ரியாவையும், கோப்பெருந்தேவியையும் அழைத்துக் காண்பித்தான். அதைப் பார்த்து இருவரும் முகத்தை சுழித்தபடி..”என்னது இது?” என்றார்கள். கதிர் அதை தனது பாக்கெட்டில் திணித்துக் கொண்டான்.

…….

தான் அங்கிருந்து டவுன் பஸ்ஸில் ஏறி வீட்டுக்கு சென்று கொள்வதாக கூறி சாரதி விடைபெற்றுச் சென்றான். அவனது உதவிக்கு நன்றி கூறி அவனை அனுப்பி வைத்தார்கள். சாரதியைப் பொறுத்தமட்டில் அந்த மலேசியாக்காரனை ஏன் போலீஸ் தேடுகிறது?, பசவராஜ் என்ன ஆனான்?, தன்னுடைய டாக்ஸி பாக்கி கிடைக்குமா கிடைக்காதா என்ற எந்தக் கேள்விக்கும் விடை தெரியாமல், அந்தக் கேள்விகளை போலீசாரிடம் கேட்கவும் பயந்துகொண்டு குழப்பத்தோடு கிளம்பிச் சென்றான். இவர்களது ஜீப் மறுபடியும் ஸ்டேஷனுக்குக் கிளம்பியது..

செல்லும் வழியில் கதிர் ப்ரியாவிடம், “நாம குற்றவாளியை கிட்டத்தட்ட நெருங்கிட்டோம்னு நெனைக்கிறேன்..நீங்க என்ன சொல்றீங்க ப்ரியா?”

ப்ரியா ஏதோ சொல்ல முனைவதற்குள் அவளது ஸ்மார்ட்போன் அலறியது..

ப்ரியா கதிரிடம் Excuse me... என்றபடி, போனை காதில் வைத்து, “ஹலோ…” என்றவள் அடுத்த சில வினாடிகளில்…

“வ்வ்வாட்??!!” கோபமாகவும், அதிர்ச்சியாகவும் கத்தினாள்..

“என்னய்யா இவ்வளவு irresponsible-ஆ இருக்கீங்க. இதைச் சொல்றதுக்கு வெட்கமா இல்ல, இப்ப நான் என்னோட higher officials-க்கு என்ன பதில் சொல்றது?..இடியட்ஸ்…"

அவள் பேசுவதை கதிரும், நாகப்பாவும், கோப்பெருந்தேவியும் அதிர்ச்சியாகக் கேட்டுக்கொண்டிருந்தனர்…

மறுமுனையில் பேசியவன் ஏதோ சொல்ல, ப்ரியா அதைக் கேட்க பொறுமையின்றி இணைப்பைத் துண்டித்தாள்.

அவள் கண்கள் கலங்கியிருந்தன.. கண்களை கர்ச்சிப்பால் துடைத்தபடியே, "ஹாஸ்பிட்டல்ல செக்கியூரிட்டிக்கு நிறுத்தி வச்சிருந்த கான்ஸ்டெபிள் போன் பண்ணான். பசவராஜ் ஹாஸ்பிட்டல்ல இருந்து எஸ்கேப் ஆகிட்டானாம்..."

CASE -2

< எழில்- கதிர் - ரோஷிணி >

அத்தியாயம்:18- அறை எண் 19

நாள்: 1
26/12/2019 வியாழன்
பகல் 03:30 மணி

சம்பவம் நடந்த தினத்தன்று மதியம் கமிஷனர் அலுவலகத்தில் மீட்டிங்கை முடித்துவிட்டு கதிரும், எழிலும் மதி லேடீஸ் ஹாஸ்டலுக்கு கிளம்பி சென்றார்கள். கதிர் முன் சீட்டில் உட்காந்திருந்தான், எழில் மட்டும் பின் சீட்டில் உட்காந்திருந்தாள் இருவரும் அதிகம் பேசிக்கொள்ளவில்லை. ஜீப்பை ஓட்டிவந்த டிரைவர் வீட்டிலிருந்து கொண்டு வந்த சாப்பாடு இருப்பதாகச் சொல்ல, எழிலும் கதிரும் மட்டும் வழியில் ஒரு ஹோட்டலில் இறங்கி மதிய உணவு சாப்பிட்டார்கள்.

அந்தத் தருணம் இருவருக்கும் ஒருவரையொருவர் அறிந்துகொள்ள நல்ல வாய்ப்பாக அது அமைந்தது. இருவரும் நிறைய பேசினார்கள். கடந்த காலங்களைப் பகிர்ந்து கொண்டார்கள். எழிலின் கடின உழைப்பும், போராட்ட குணமும் கதிருக்கு மிகவும் பிடித்திருந்தது. பணமும் அதிகாரமும் குவிந்திருக்கும் குடும்பப் பின்னணியைச் சேர்ந்தவனாக இருந்தாலும் எந்த பந்தாவுமின்றி இயல்பாகப் பழகும் கதிரின் குணம் எழிலுக்கு ரொம்பவே பிடித்துப் போயிற்று. இருவருக்கும் இடையே ஒரு நல்ல நட்பு மலர்ந்தது.

மதிய உணவை முடித்துவிட்டு இருவரும் ஜீப்பை நோக்கி வந்தார்கள். அதற்குள் டிரைவரும் சாப்பிட்டுவிட்டு தயாராக இருந்தார். இந்த முறை இருவருமே பின்சீட்டில் உட்காந்து கொண்டார்கள். அது டிரைவருக்கு சற்று ஆச்சரியமாக இருந்தது. ஜீப் ஹாஸ்டலை நோக்கி தன் பயணத்தைத் தொடர்ந்தது.

எழில் பேச்சைத் தொடங்கினாள், "ஒரு தமிழ் தெரியாத கன்னடப் பொண்ணு ஏன் தமிழ்ல சூசைட் நோட் எழுதி வச்சுட்டு தற்கொலை பண்ணிக்கிட்டாங்கிறது எனக்கு ரொம்பவே உறுத்துது சார்"

கதிர், "அந்த பொண்ணு எழுதுன சூசைட் நோட் இப்ப உங்க கிட்ட இருக்கா?"

எழில் தன்னிடம் இருந்த ஃபைலுக்குள் இருந்த அந்த கடிதத்தை எடுத்து கதிரிடம் கொடுத்தாள். கதிர் ரொம்ப நேரம் அந்த லெட்டரையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். சில எழுத்துக்களை விரல்களால் மறைத்து வெவ்வேறு கோணங்களில் பார்த்தான். அதைப் பார்த்துக் கொண்டிருந்த எழில்,

"என்ன சார் உங்களுக்கு கிராஃபாலஜி தெரியுமா?"

கதிர் தொடர்ந்து அந்தக் கடிதத்தை ஆராய்ந்தபடியே, "ம்ம், தெரியும் இதுக்குன்னு ஒரு ஸ்பெஷல் கோர்ஸ் படிச்சேன்"

எழில் ஆர்வமாகி, "கிராஃபாலஜில என்னனென்னவெல்லாம் கண்டுபிடிக்கலாம்?"

கதிர், ‘‘எழுதிருக்க எழுத்த வச்சு, எழுதும்போது எழுதினவங்க மனநிலை எப்படி இருந்துச்சு, எழுதினவங்க ஆணா, பெண்ணா இதல்லாம் கண்டுபிடிச்சிரலாம்.

எழில், "ஓ....interesting"

கதிர் தொடர்ந்தான், "கீழே கையெழுத்துப் போட்ட ரோஷிணி ரொம்ப பதட்டமான மனநிலையில இந்தக் கையெழுத்தைப் போட்டிருக்கா..ஆனா இந்த லெட்டரை எழுதிக்கொடுத்த ஆள், அது ஒரு ஆணா இருக்க சான்ஸஸ் நிறைய இருக்கு, அவன் ரொம்ப கூலான மனநிலையில எந்த பதட்டமும் இல்லாம ரொம்ப கேஷுவலா எழுதிருக்கான்...

எழில், "அப்டீன்னா?"

கதிர், "ஒண்ணு எழுதிக் கொடுத்தவன் ஏன் எழுதிக் கொடுக்கிறோம்னு தெரியாம எழுதிக் கொடுத்திருக்கணும். அல்லது அவன் கொலையையே ரொம்ப கேஷுவலா செய்யுற notorious professional killer-ரா இருக்கணும்"

கதிர் சொன்னதைக் கேட்டு எழிலின் முகம் சீரியஸாக மாறியது. அவர்கள் பேசுவதை காதில் கேட்டுக்கொண்டே ஜீப்பை ஓட்டிக்கொண்டிருந்த டிரைவர் சற்று அதிர்ச்சியாக ஜீப்பின் rear view mirror-இல் கதிரின் முகத்தை நிமிர்ந்து பார்த்தார்…

......

இருவரும் சம்பவம் நடந்த ஹாஸ்டலுக்கு வந்து சேர்ந்தார்கள். ரோஷிணியின் உடல் ஏற்கனவே பிரேதப் பரிசோதனைக்குச் சென்றிருந்தது. குல்பர்க்காவிலிருந்து ரோஷிணியின் பெற்றோர் கிளம்பி வந்துகொண்டிருந்தார்கள். ஹாஸ்டலில் இரு பெண் கான்ஸ்டெபிள்கள் இருத்தி வைக்கப்பட்டிருந்தார்கள். ஹாஸ்டல் காலையில் பார்த்த அதே பரபரப்புடன் இருந்தது. ஹாஸ்டலில் தங்கியிருந்த பெண்கள் ஒரு தர்மசங்கடமான நிலைக்கு ஆளாகியிருந்தார்கள். விசாரணை நடைபெற்றுக் கொண்டிருப்பதால் ஒரு சில நாட்களுக்கு யாரும் அங்கிருந்து வீட்டுக்குச் செல்ல அனுமதியில்லை. தற்கொலை நடந்த ஹாஸ்டலிலேயே தங்கவும் பயம்..இந்த இரவை எப்படிக் கழிக்கப்போகிறோம் என்பது அவர்களுக்குப் பெரிய சவாலாய் இருந்தது.

ஹாஸ்டலின் கீழ் தளத்தில் ரிஷப்ஷனில் நிறைய இருக்கைகள் போடப்பட்டிருந்தன. அதில் கதிரும், எழிலும் அமர்ந்திருந்தார்கள். ஹாஸ்டல் ஓனர் வளர்மதி அவர்களுக்கு எதிரே அமர்ந்திருந்தார். வளர்மதியின் கணவரும், மகளும் உடனிருந்தனர். ஹாஸ்டல் பெண்களில் சிலர் நின்றுகொண்டும், சிலர் அமர்ந்துகொண்டும் நடப்பதை சற்று பயத்துடன் கவனித்துக் கொண்டிருந்தனர். ரோஷிணியின் ரூம்மேட் ரூபா வளர்மதியின் அருகில் அமர்ந்திருந்தாள். கதிரும் எழிலும் மாறி மாறி எல்லோரிடமும் சரமாரியாக கேள்விக் கணைகளைத் தொடுத்துக்கொண்டிருந்தனர். கேட்கப்பட்ட பெரும்பாலான கேள்விகள் ரூபாவிடமே கேட்கப்பட்டன. அவள் அனைத்துக்கும் சளைக்காமல் நிதானமாக பதில் சொல்லிக்கொண்டிருந்தாள்.

ரூபா, "ரோஷிணி சென்னை வந்து six months-தான் சார் ஆச்சு, இதுதான் அவளுக்கு first company. ஆக்சுவலா நான் வேற ப்ராஜெக்ட், அவ வேற ப்ராஜெக்ட். அதுனால work பத்தி ரொம்ப பேசிக்க மாட்டோம். எங்க ரெண்டு பேருக்கும் common interest எதுன்னா Vodka, Justin bieber, Chess, Electronic gadgets அவ்வளவுதான்... நைட் ரொம்ப நேரம் செஸ் விளையாடுவோம்.

கதிர், "அவளுக்கு Boy friend..or boy bestie..இப்படி ஏதாவது?"

ரூபா, அப்படியெல்லாம் எதுவும் இல்ல சார். அவளுக்கு யு.எஸ்ல செட்டில் ஆகணும்னு ஆசை. அதுனால அவ concentration முழுக்க job-லதான் இருந்துச்சு. அவளுக்கு பசங்க மேலல்லாம் interest-டே இல்ல சார். அவளே ஒரு பையன் மாதிரிதான். ரொம்ப தைரியமான பொண்ணு. மார்ஷியல் ஆர்ட்ஸ்லாம் கத்து வச்சிருக்கா...

கதிர் ஆச்சரியமாக.."ஓ.."

ரூபா, "ஒரு நிமிஷம், அவளோட ஆல்பம் ஒண்ணு இருந்துச்சு...நான் போயி எடுத்துட்டு வரலாமா?"

கதிரும் எழிலும் சம்மதிக்க, ரூபா அதை எடுக்க மேலே போகிறாள். காவலுக்கு நின்ற பெண் கான்ஸ்டெபிள் அவளோடு செல்கிறார். சில நிமிடங்களில் ரூபா ஒரு சின்ன ஆல்பத்தோடு திரும்பி வருகிறாள். எழில் அதை கையில் வாங்கி அருகில் இருந்த கதிரிடம் காட்டியபடியே ஒவ்வொரு பக்கமாகப் புரட்ட, அதைப் பார்த்துக் கொண்டிருந்த கதிர் ஆச்சரியமாக, "ம்ம்ம்..சம்போ பிராக்ட்டிஸ் பண்ணிருக்கா".

எழில், "சம்போ??"

கதிர், ‘‘ம்ம்ம்..ரஷ்யன் மார்ஷியல் ஆர்ட்"

கதிர் ரூபாவைப் பார்த்து, "ரோஷிணிக்கு தமிழ் தெரிஞ்ச ஆண்கள் யாரோடவாவது பழக்கம் இருக்கா?

ரூபா, "அதான் சொன்னேனே சார், அவ ஆஃபீஸ்ல கூட ஜென்ட்ஸ் யாருகூடவும் குளோசா பழக மாட்டா. ஜஸ்ட் ஹாய் ஹலோவோட சரி"

எழில்,"சரி, தினமும் ஆஃபீஸ்க்கு எப்படிப் போவீங்க?"

ரூபா, "நான் கம்பேனி பஸ்ல போய்டுவேன், ரோஷிணி ஆட்டோல வருவா"

எழில், "ஏன் அப்படி?’’

ரூபா, "என்னோட் ப்ராஜக்ட்டுக்கு நான் கரெக்ட்டா காலைல பத்து மணிக்கெல்லாம் இருக்கணும் மேம்...அவளுக்கு அப்படியில்ல 11:30-12:00 மணிக்குக் கூட ஆஃபீஸ்க்கு வரலாம் அதுனால இந்த ஏரியால ஒரு ஆட்டோக்காரனுக்கு monthly pay பண்ணி அவன் ஆட்டோல வந்திருவா.."

எழில், "அந்த ஒரே ஆட்டோவைத்தான் ரொம்ப நாளா யூஸ் பண்றாளா?"

ரூபா, "யெஸ் மேம்"

கதிர், "அந்த ஆட்டோக்காரன் பேரு என்ன? வயசு என்ன இருக்கும்"

ரூபா, "சின்ன வயசுதான், பேரு அமுவரிது"

கதிர், "அமுவரிதா"

ரூபா, "அப்படித்தான் சார் ஏதோ ஒரு பேரு…’’

அத்தியாயம்: 19- KFC மீட்டிங்- பாகம் 2

நாள்: 1
26/12/2019 வியாழன்
மாலை 07:15 மணி

சென்னை வடபழனி Forum Mall-இல் உள்ள KFC உணவகத்தில்…

கமிஷனர் அலுவகத்தில் மீட்டிங் முடிந்த பின்னர் கதிர், ப்ரியா, அன்பழகன், எழில் நால்வரும் மாலை 7:00 மணியளவில் சென்னை வடபழனி Forum Mall-இல் உள்ள KFC உணவகத்தில் சந்தித்தனர். ப்ரியா பவானியின் கணவன் பசவராஜ் நேக்காக போலீசின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு கொல்கொத்தா ஹவுரா ரெயில் நிலையத்திலிருந்து தப்பித்ததைப் பற்றி சொல்லிக்கொண்டிருந்தாள்.

அதைக் கேட்ட அன்பழகன் சலித்துக் கொண்டபடி, "பரவால்ல, உங்களுக்காவது கேஸை proceed பண்றதுக்கு ஒண்ணு ரெண்டு க்ளூ கெடச்சிருக்கு, எனக்கெல்லாம் என் கேஸை எங்க இருந்து ஆரம்பிக்கிறதுன்னே தெரியல…"

எழில் அன்பழகன் சொன்னதை ஆமோதித்து தலையாட்டியபடி, "என்னோட கேஸூம் கிட்டத்தட்ட அப்படித்தான் சார் இருக்கு. நானும் கதிர் சாரும் இப்பத்தான் அந்த சம்பவம் நடந்த லேடீஸ் ஹாஸ்டல்ல ஒரு சின்ன என்கொயரிய முடிச்சிட்டு வந்தோம்…அந்த இறந்துபோன பொண்ணு புரிஞ்சிக்கவே கஷ்டமான ரொம்ப சிக்கலான கேரக்டரா இருக்கா…"

கதிர் சற்று நிதானமாக, "எனக்கென்னமோ அந்தப் பொண்ணு ரொம்ப தெளிவா மூவ் பண்ணிருக்கான்னு தோணுது…கேஸ் எந்த டைரக்‌ஷன்ல போகணும்னு நமக்கு முன்னாடியே அவ டிசைட் பண்ணிருக்கா.."

எழில் ஆச்சரியமாக, "எத வச்சு அப்படி சொல்றீங்க?"

கதிர், "அந்த சூசைட் நோட்ட தமிழ்ல எழுதி வச்சதை வச்சுத்தான்..எங்கருந்து ஸ்டார்ட் பண்ணனும்னு அவளே நமக்கு க்ளூ கொடுத்திருக்கா.. நாளைக்கு இந்த கேஸ்ல நமக்கு முதல் திரை விலகும்னு நினைக்கிறேன்"

எழில், "எப்படி?"

கதிர், "ஆட்டோ டிரைவர் அமுவரிது…"

அத்தியாயம்:20- யாருடா அந்தப் பொண்ணு? - பாகம் 2

நாள்: 1
26/12/2019 வியாழன்
இரவு 11:00 மணி

மாலை KFC உணவகத்தில் மீட்டிங் முடித்துவிட்டு கதிர் வீடு வந்து சேர இரவு 10:00 மணிக்குமேல் ஆகியிருந்தது.

குளித்துவிட்டு, உடை மாற்றிவிட்டு சோபாவில் அமர்ந்து ஒரு இந்திப்பாடலை முணுமுணுத்தபடியே ஐபேடை பார்த்துக்கொண்டிருந்த வேளையில் அங்கு வந்த அவனது அம்மா ஐபேடில் அவன் ஒரு பெண்ணின் போட்டோவைப் பார்த்து கொண்டிருந்ததை கவனித்துவிட்டார். அவள் யாரென கேட்டபோது இன்று கமிஷனர் அலுவலகத்தில் அவளை சந்தித்தேன் என்று கதிர் சொல்லியிருந்தான்.

….

அம்மா, “ஏண்டா, நம்ம குடும்பத்துக்கு போலீஸ்காரப் பொண்ணெல்லாம் ஒத்து வருமாடா?”

கதிர், “ஏம்மா, நம்ம குடும்பத்துல என்னமோ போலீஸ் வாசனையே இல்லாத மாதிரி பேசுற, நம்ம வகையறாவுல வீட்டுக்கு ரெண்டு போலீஸ் இருக்குது.... ம்ம்ம்?..புரிஞ்சு போச்சு..வரப்போறது ஒரே ஒரு மருமக அவளும் போலீஸ்காரியா இருந்தா அவகூட எப்படி சண்ட போடுறதுன்னு பயப்படுற சரிதானே?”

அம்மா, “ப்ச்..அது இல்லடா..நம்ம சொந்தத்துலயே நல்ல ஒரு டீச்சர் பொண்ணா, பேங்க் வேலை செய்யுற பொண்ணா பார்க்கலாமேன்னு நெனச்சுக்கிட்டு இருந்தேன்”

கதிர், “அம்மா இவ பார்க்குற வேலைதான் போலீஸ், மத்தபடி ரொம்ப அடக்கமான பொண்ணுமா, ஒரு சாதாரண, எளிமையான குடும்பத்துல இருந்து வந்தவ…நம்ம குடும்பத்துக்கு எப்படிப்பட்ட பொண்ணு வேணும்னு எனக்கு தெரியாதா. அவளை நேர்ல பாரு, கண்டிப்பா உனக்கு ரொம்பப் புடிக்கும்”

பேசிக் கொண்டிருக்கும்போதே கதிரின் மொபைலுக்கு ஒரு கால் வந்தது..’முக்கியமான கால்’ என்று அம்மாவிடம் சைகை காட்டிவிட்டு, ஐபேடையும் கையோடு எடுத்துக்கொண்டு கதிர் அந்த அறையை விட்டு வெளியேறினான்…

அத்தியாயம்:21- சொந்தக் கையால் சூனியம்

நாள்:2
27/12/2019 வெள்ளி
காலை 10:00 மணி

மறுநாள்…

ஆட்டோ டிரைவர் அறிவமுதுக்கு 23 வயதிருக்கும். கல்லூரி மாணவன் போல இருந்தான். இரண்டு சட்டைகள் அணிந்திருந்தான். உள்ளே ஒரு கட்டம் போட்ட முழுக்கை சட்டை அணிந்து, வெளியே காக்கி சட்டை அணிந்திருந்தான், இரு சட்டைகளையும் சேர்த்து முழங்கை வரை மடக்கி விட்டிருந்தான். நெற்றியில் குங்குமமும், சந்தனமும் இட்டிருந்தான். சத்தம்போட்டு ஒரு சோகப்பாடலை பாடியபடி ஆட்டோவை ஓட்டிக்கொண்டிருந்தான். அவன் கவனம் சாலையில் இல்லை என்பது அவன் ஆங்காங்கே எதிரே வந்த வாகனங்களில் மோதப்போய் பின்னர் சுதாரித்துக் கொண்டு ஓட்டியதில் தெரிந்தது. கதிர் ஒரு பயணிபோல ஆட்டோவில் ஏறி உட்காந்து மெரினா பீச்சுக்கு செல்லும்படி சொல்லியிருந்தான்.

உன்னைக் கண்டு தென்றலும் நின்று போனதுண்டு
உன்னைக் காண வெண்ணிலா வந்து போவதுண்டு
ஏன் தேவி இன்று நீ என்னைக் கொல்கிறாய்
முள் மீது ஏனடி தூங்கச் சொல்கிறாய்
உன்னைத் தேடித் தேடியே எந்தன் ஆவி போனது
கூடுதானே இங்கு பாடுது…

பின் சீட்டில் அமர்ந்திருந்த கதிர், “பின்றீங்க ப்ரோ… ஆனா சோகத்துல பாட்டுப் பாடிக்கிட்டே எங்கயாவது கொண்டுபோய் கோர்த்துராதீங்க ப்ரோ…உங்கள நம்பித்தான் பின்னால உட்காந்திருக்கேன்…”

அறிவமுது, "சாரி ப்ரோ…”

கதிர், “ரொம்ப ஃபீலிங்கா ப்ரோ?”

அறிவமுது, “ஒரு பொண்ண ரொம்ப சின்சியரா லவ் பண்ணேன் ப்ரோ, ஒன் சைடு லவ்வுதான்…அந்தப் பொண்ணு செத்துப் போச்சு ப்ரோ..”

கதிர், “ஐய்யய்யோ..எப்படி ப்ரோ?”

அறிவமுது, “சூசைட் ப்ரோ”

கதிர், "ஏன்?"

அறிவமுது, "தெரியல ப்ரோ.."

கதிர், "சாரி ப்ரோ…"

அறிவமுது, "பரவால்ல ப்ரோ…"

கதிர், "உங்க பேர்?"

அறிவமுது, "அறிவமுது"

கதிர், "அறிவமுதா..அழகான தமிழ் பேரு…", கதிர் மனதுக்குள் ரூபாவைத் திட்டிக்கொண்டான்.

அறிவமுது, "அப்பா தமிழ் வாத்தியாரு.."

கதிர், "ஓ..அப்ப தமிழ் அழகா எழுதுவீங்களா ப்ரோ…"

அறிவமுது, "சின்ன வயசுல அப்பா விரல் மூட்டுலயே பிரம்பால அடிப்பாரு ப்ரோ..கையெழுத்து சரியில்லைன்னா..அப்படி கத்துகிட்டது"

கதிர், "அப்டீன்னா ஆட்டோவக் கொஞ்சம் ஓரங்கட்டுங்க ப்ரோ…"

அறிவமுது ஆட்டோவை ஒரு நிழலுள்ள இடத்தில் ஓரங்கட்டினான்.

கதிர், "ஒரு தமிழ் கவிதை எழுதி பத்திரிக்கைக்கு அனுப்பனும் ப்ரோ.. என் கையெழுத்து ரொம்ப கேவலமா இருக்கும். உங்க பொற்கரங்களால எழுதித் தந்தீங்கன்னா நல்லாருக்கும்…" பேசிக்கொண்டே ஒரு சின்ன நோட்டையும், பேனாவையும் அறிவமுதிடம் நீட்டினான்.

அறிவமுது, "அட அவ்வளோதானா..குடுங்க ப்ரோ", அறிவமுது உற்சாகமாக கதிரின் கையிலிருந்து நோட்டையும் பேனாவையும் வாங்கி எழுதத் தயாரானான்.

கதிர்,

"சிற்றிதழ்கள் குவித்து
துப்பிவிட்ட எச்சில்
உள்ளங்கையளவு துரோகத்தைக்
கலந்து இருட்டில் தெளிக்கிறது
நெருப்பில் எரிந்தபடி பறந்த
ஒரு கருப்பு வண்ணத்துப்பூச்சி
திராவகப் பந்தாக மாறி
அடிவயிற்றில் உருளுகிறது
இலையுதிர்காலத்து இரவுகளில்
வழியும் கண்ணீர்துளிகள்
கோவணத்தை நனைக்கிறது"

அறிவமுது, "இந்தக் கண்ணீர்த் துளிகள் கோவணத்தை நனைக்கிறது மட்டும்தான் புரியுது, மற்ற எதுவுமே புரியல ப்ரோ…"

கதிர், "இதுதான் பின்நவீனத்துவம்"

அறிவமுது, "அப்டீன்னா?"

கதிர், "அதாவது …அப்பப் புரியாது, பின்னாலதான் புரியும்!"

அறிவமுது, "ஓ…"

அறிவமுது கவிதையை எழுதி கதிரிடம் கொடுக்கிறான். கதிர் அதை வாங்கிப் பார்த்து, "ஹேண்ட் ரைட்டிங் செம்மையா இருக்கு ப்ரோ…"

அறிவமுது பெருமையாக, "எங்கப்பா சொல்லுவாரு ப்ரோ..இந்த ஹேண்ட் ரைட்டிங் உன்னை எங்க கொண்டுபோய் நிறுத்தப் போகுது பாருன்னு…"

கதிர், "அதேதான் ப்ரோ நடக்கப் போகுது…"

அத்தியாயம்:22- தினை விதைத்து வினை அறுத்தவன்

நாள்:2
27/12/2019 வெள்ளி
மாலை 05:00 மணி

சாலிகிராமம் ஆர்5 போலீஸ் ஸ்டேஷன்…

போலீஸ் ஸ்டேஷனில் அறிவமுது சட்டையில்லாமல் வெறும் பேண்ட்டோடு குந்த வைக்கப்பட்டிருந்தான். அவன் முகத்தில் பீதி அப்பியிருந்தது. ஸ்டேஷன் பிசியாக இயங்கிக் கொண்டிருந்தது. இன்ஸ்பெக்டர் எழில் வேறு அலுவலில் இருந்தாள். அப்போது அங்கே கதிர் வந்து அறிவமுதுக்கு அருகே இருந்த நாற்காலிகளில் ஒன்றில் அமர்ந்தான். கதிர் அங்கு வந்ததும் எழிலும் தன் வேலையை நிறுத்திவிட்டு அங்கே வந்து அவன் அருகில் அமர்ந்தாள்.

கதிர் அறிவமுதிடம், ‘‘பின் நவீனத்துவம்னா என்ன?’’

‘‘இப்பப் புரியுது சார்’’, அறிவமுது தடாலென கதிரின் காலில் விழுந்து கதற ஆரம்பித்தான், ‘‘அந்த பொண்ணு சாவுக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்ல சார்..என்னை நம்புங்க சார்…நான் லவ் பண்ண புள்ளய நானே எப்படி சார் சாகடிப்பேன்! அவளுக்காக நான் வேணா செத்திருப்பேன் சார்!’’

எழில், "So..நீ அந்தப் பொண்ண லவ் பண்ணிருக்க…உன்னோட ஆசைக்கு அவ உடன்படல அதுனால நீ அவள தற்கொலைக்கு தூண்டுனதுமில்லாம, சூசைட் நோட்டையும் ரசிச்சு ரசிச்சு நீயே எழுதிக் கொடுத்திருக்க…எவ்ளோ பெரிய சாடிஸ்ட் நீ’’

அறிவமுது, "ஐய்யோ.. நான் அவள லவ் பண்ண விஷயம் அவளுக்கே தெரியாது மேடம்…’’

கதிர், ‘‘அடப்பாவீ.. நீ லவ் பண்ண மேட்டரே அவளுக்கு தெரியாதா? 90s Kid-டா நீயி?

அறிவமுது அப்பாவியாக, "ஆமா சார்’’

எழில் பொறுமையிழந்தவளாக, ‘‘சரி நான் டைரக்ட்டா கேக்குறேன். இந்த லெட்டர ரோஷிணிக்கு நீ ஏன் எழுதிக் குடுத்த அத முதல்ல சொல்லு…’’

அறிவமுதுக்கு அழுகை முட்டிக்கொண்டு வருகிறது, ‘‘அந்தப் பொண்ணு யாருகிட்டையும் சரியா பழகாது ஆனா என்கிட்ட கொஞ்சம் நல்லா பேசும் மேடம். நான் அதுகிட்ட அரைகுறை இங்கீஷ்ல பேசுவேன், அது எங்கிட்ட ரொம்ப அரைகுறையான தமிழ்ல பேசும்…அது படிச்ச பொண்ணு பணக்கார வீட்டுப் பொண்ணு.. அதனால என் காதல என் மனசுக்குள்ளயே பூட்டி வச்சுக்கிட்டேன் மேடம். என் ஆட்டோவ தவிர வேறு யாரு ஆட்டோலயும் நம்பி ஏறாது. அதுனால அது கூப்பிட்டுச்சுன்னா நான் வேற என்ன வேலை இருந்தாலும் அத தூக்கிப்போட்டுட்டு இது சொல்ற இடத்துக்கு கூட்டிட்டுப் போயிட்டு வந்திருவேன்…

அன்னிக்கு ஒரு நாள் வந்து யூடியூப்ல போடுறதுக்கு ஏதோ short film பண்றோம். அதுக்கு தமிழ்ல ஒரு லெட்டர் தேவைப்படுதுன்னு சொல்லுச்சு… அது இங்கிலீஷ்ல சொன்னத நான் புரிஞ்சுக்கிட்டு அத அப்படியே தமிழ்ல எழுதிக் கொடுத்தேன் மேடம்…அதுதான் மேடம் இந்த லெட்டர்... அது தான் தற்கொலை பண்ணிக்கிறதுக்குத்தான் என்னை எழுதச் சொல்லுச்சுன்னு எனக்கு சத்தியமா தெரியாது மேடம்’’

எழில், "சரி கடைசியா நீ அவளை என்னிக்கு பார்த்த?"

அறிவமுது, "24-ஆம் தேதி மதியம் 3:00 மணிக்கெல்லாம் ஆபீஸ்ல இருந்து வந்திருச்சு மேடம். அன்னிக்குத்தான் நான் கடைசியாப் பார்த்தேன்"

எழில், "அன்னிக்கு அவ எந்த மாதிரி மூட்ல இருந்தா?"

அறிவமுது, "அன்னிக்கு மட்டும் இல்ல மேடம் கடைசி ஒரு 10 நாளாவே ஆள் ரொம்ப உடைஞ்சு போயிருந்துச்சு. நான் என்னன்னு கேட்டேன் ஒண்ணும் இல்லன்னு சொல்லிருச்சு. சாகப்போறதுக்கு 4 நாளைக்கு முன்னாடி ஹாஸ்டலுக்கு பக்கத்துல ஒரு ஆளு எங்க ஆட்டோல ஏறி டைடல் பார்க் வரைக்கும் அதுகூட பேசிக்கிட்டே வந்தாரு. அவரு பேசப் பேச ரோஷிணி ரொம்ப அழுதுக்கிட்டே இருந்துச்சு, அவரும் ஆறுதல் சொல்லிக்கிட்டே வந்தாரு…"

எழில், "யாரு அவரு? ரோஷிணிக்கு தெரிஞ்சவரா?"

அறிவமுது, "வாய்ப்பில்ல மேடம், அவர் தன்னை அறிமுகப் படுத்திக்கிட்டுத்தான் ஆட்டோல ஏறுனாரு… ஏதோ மதப் பிரச்சாரம் பண்றவருபோலன்னு நெனெச்சுக்கிட்டேன்".

எழில், "அவர் தன்னை என்னன்னு அறிமுகப்படுத்திக்கிட்டாரு?"

அறிவமுது, "எனக்கு ஞாபகம் இல்ல மேடம்"

எழில், "அவங்க அப்படி என்ன பேசிக்கிட்டாங்க?"

அறிவமுது, "ஃபுல்லா இங்கிலீஷ்ல பேசிக்கிட்டாங்க மேடம் எனக்கு ஒண்ணுமே புரியல"

கதிர், "இப்பத்தான் ரோஷிணி இங்கிலீஷ்ல சொன்னத புரிஞ்சுக்கிட்டு அப்படியே தமிழ்ல translate பண்ணி லெட்டர் எழுதிக் கொடுத்தேன்னு சொன்ன?"

அறிவமுது, "இல்ல சார் அவரு பேசுன இங்கிலீஷ் ஏதோ ஃபாரின் இங்கிலீஷ் மாதிரி இருந்துச்சு, எனக்கு சுத்தமா ஒண்ணுமே புரியல. ரோஷினி எங்கிட்ட பேசும்போது எனக்கு புரியிற மாதிரி நிறுத்தி பேசும்.."

கதிர், "ம்ம்..ஓகே ஓகே…மேல சொல்லு"

அறிவமுது, "அதுக்கு அடுத்த நாள்தான் ரோஷிணி எங்கிட்ட ஒரு பார்சல கொடுத்து, இதை கேட்டு வருவாங்க அவங்ககிட்ட குடுத்துருன்னு சொல்லுச்சு. நான்..சரி நம்மாளு கிறிஸ்துமஸ் லீவுக்கு ஊருக்கு போகுது போலன்னு நெனச்சுட்டேன்".

கதிர், "என்ன பார்சல் அது?"

அறிவமுது, "தெரியலங்சார், நான் அதை பிரிச்செல்லாம் பார்க்கல. எங்கம்மாகிட்ட கொடுத்து வச்சேன். வீட்லதான் இருக்குது".

கதிர், "ஓகே..அப்ப கிளம்பு, உன் வீட்டுக்குப் போலாம்"

……..

அறிவமுதுவின் வீடு சூளைமேடு சகாரியா காலணியில் ஒரு குறுகிய சந்தில் இருந்தது. அறிவமுதுவின் அம்மா அந்தப் பகுதி பெண்களோடு வீட்டு வாசலில் உட்காந்து அரட்டை அடித்து சிரித்துக் கொண்டிருந்தார். அறிவமுது போலீசுடன் வந்ததும் அங்கிருந்த அனைவர் முகங்களிலிருந்தும் சிரிப்பு விலகி பதட்டம் தொற்றிக்கொண்டது.

அறிவமுது தன் அம்மாவின் பயத்தை புரிந்துகொண்டவனாய் அருகில் வந்ததும், ‘‘யம்மா, ஒண்ணும் பயப்படாத, அந்த ரோஷிணி பொண்ணு கொடுத்த பார்சல் இருக்குல்ல. அதக் கொண்டுவந்து குடு. அதைக் கேட்டுத்தான் வந்திருக்காங்க’’

அம்மா, ‘‘அதை இப்ப ஒரு மணி நேரத்துக்கு முன்னாடிதான ரெண்டு பேரு வந்து வாங்கிட்டுப் போறாங்க…’’

அறிவமுதுக்கு ஆயிரம் வோட்ல் மின்சாரம் தலையில் இறங்கியது போல இருந்தது. தலையில் அடித்துக் கொண்டு, ‘‘ஐய்யோ ஏம்மா குடுத்து விட்ட?’’

அம்மா, ‘‘எனக்கென்னடா தெரியும், நீதானே சொன்ன..யாராவது கேட்டு வந்தா குடுத்துருன்னு…’’

அதுவரை அமைதியாக இருந்த எழில் எரிச்சலடைந்து, ‘‘ஏய் என்ன அம்மாவும் மகனும் சேர்ந்து வௌாடுறீங்களா?’’

பிரச்சனையின் தீவிரத்தை உணர்ந்து கொண்ட அறிவமுதுவின் அம்மா, ‘‘ஐய்யோ, என் மகன் மேல சத்தியமா இல்லங்கமா, நான் உண்மையத்தான் சொல்றேன். ந்தா இப்பத்தான் வந்து ரெண்டுபேரு வாங்கிட்டுப் போனாங்கம்மா’’

கதிர், ‘‘சரி வந்தவங்க எப்படி இருந்தாங்க..’’

அறிவமுதுவின் அம்மா, ‘‘ஒரு ஆளும் ஒரு பொண்ணும் வந்தாங்கய்யா, கொஞ்ச வயசுதான். அந்த ஆளு காதுல தோடு போட்டிருந்தாரு..அந்தப் பொண்ணு கண்ணாடி போட்டிருந்தா…’’

எழில் தன்னுடன் வந்த கான்ஸ்டேபிளைப் பார்த்து, ‘‘சரி, அவன ஜீப்புல ஏத்து, (அறிவமுது அம்மாவைப் பார்த்து) நாளைக்கு காலைல வீட்டுல இரு எங்கயும் போயிறாத..

அறிவமுதுவின் அம்மா பணிவாக, ‘‘சரிங்கம்மா’’ என்று தலையாட்டினார்.

அறிவமுது அழைத்துச் செல்லப்பட்டான். அந்த தெருவே அங்கு கூடிவிட்டிருந்தது. அறிவமுதுவின் அம்மா தன் மகன் போலீசாரால் அழைத்துச் செல்லப்படுவதை கண்ணீருடன் பார்த்துக் கொண்டிருந்தார்.

அத்தியாயம்:23- இருட்டிற்குள் செங்கழுகு…

நாள்:3
28/12/2019 சனிக்கிழமை
காலை 11:00 மணி

டைடல் பார்க், தரமணி…

காலை சரியாக 11:00 மணியளவில் கதிரின் கறுப்பு நிற டொயோட்டா ஃபார்ச்சூனர் கார் டைடல் பார்க்கினுள் நுழைந்தது. கதிர் காரை ஓட்டி வந்தான். கதிருடன் எழிலரசி, இன்னொரு கான்ஸ்டெபிள், அறிவமுது, அறிவமுதின் அம்மா ஆகியோர் இருந்தனர். எழிலும் அவளுடன் வந்த கான்ஸ்டேபிளும் மப்டியில் இருந்தனர். எழில் அழகாக சிவப்பு நிற சுடிதார், மஞ்சள் நிற ஷால் மற்றும் பாட்டம் உடுத்திருந்தாள். அவளது வழக்கம் போலவே நெற்றியை சுடிதாரின் கலரிலேயே சிவப்பு நிற ஸ்டிக்கர் பொட்டு அலங்கரித்தது. கதிர் கரும் பச்சை நிறத்தில் முழுக்கை டி-ஷர்ட்டும், இளநீலத்தில் ஜீன்சும் அணிந்திருந்தான். அறிவமுது வெள்ளை நிறத்தில் முழுக்கை சட்டையும், கருப்பு பேண்ட்டும் அணிந்திருந்தான்.

டைடல் பார்க்கில் ஒரு கட்டிடத்தின் ஒரு தளம் முழுவதையும் Red Vulture Technologies நிறுவனம் ஆக்கிரமித்திருந்தது. உள்ளே நுழைந்தவுடன் ரிஷப்ஷனிஸ்ட்டிடம் எழில் தனது ஐடி கார்டைக் காட்டி ரோஷிணியின் மரணம் சம்பந்தமாக விசாரிக்க வந்ததாகவும், நிறுவனத்தின் உயர் அதிகாரிகளை சந்திக்க விரும்புவதாகவும் அவளிடம் சொல்ல, கொஞ்சம் அதிர்ச்சியடைந்த அந்த ரிஷப்ஷனிஸ்ட், அதை முகத்தில் காட்டிக்கொள்ளாமல் அவர்களை அருகிலிருந்த சோஃபாவில் அமர வைத்துவிட்டு இண்டர்காமில் நிர்வாக இயக்குனரை அழைத்தாள்.

வரவேற்பறையில் ஏசி சற்று தூக்கலாகவே இருந்தது. ஏதோ ஒரு வித்தியாசமான நறுமணம் ஏசி காற்றோடு சேர்ந்து நாசியை வருடியது. ரிஷப்ஷனிஸ்ட் டீஷர்ட்-ஜீன்ஸ் அணிந்து, அதற்கு மேல் ஏசி குளிரைத் தாங்க கம்பேனியின் செங்கழுகு லோகோ பதித்த கறுப்பு ஜெர்க்கின் அணிந்திருந்தாள். வரவேற்பறையில் நுழைந்தவுடன் கண்ணில் படும்படி ஒரு இளைஞனின் படம் பெரிதாக வைக்கப்பட்டு மாலையிடப்பட்டிருந்தது. போட்டோவுக்குக் கீழே ஒரு பெரிய நோட்டீஸ் போர்டு சுவரில் சாய்த்து வைக்கப்பட்டிருந்தது. அதன் வெல்வெட் பரப்பில் பல துண்டுக் காகிதங்கள் குத்தப்பட்டிருந்தன. கதிரும், எழிலும் அதனருகே போய் துண்டுக் காகிதங்களில் நிறுவன ஊழியர்கள் தங்கள் பெயருடன் எழுதிய இரங்கல் வாசகங்களைப் படித்துக் கொண்டிருந்தனர். போட்டோவில் இருந்த இளைஞன் பெயர் யோகேஷ் என்றும், அவன் இந்த Red Vulture Technologies நிறுவனத்தின் சி.இ.ஓ என்பதும் தெரியவந்தது.

அடுத்த ஐந்து நிமிடங்களில் நிர்வாக இயக்குனரும், கம்பேனியின் ஹெச்.ஆர் மேனேஜரும் ரிஷப்ஷனுக்கு வந்தவுடன் அனைவரும் எழுந்து நிற்க அவர்கள் எழிலையும், கதிரையும், மற்றவர்களையும் ஆங்கிலத்தில் வரவேற்றனர். அனைவரும் ஒருவரையொருவர் அறிமுகப்படுத்திக் கொண்டார்கள். நடப்பவைகளை வேடிக்கை பார்த்தபடி அறிவமுதும், அவனது அம்மாவும், எழிலுடன் வந்த கான்ஸ்டெபிளும் நின்று கொண்டிருந்தார்கள்.

கம்பேனியின் நிர்வாக இயக்குனரும், ஹெச்.ஆர் மேனேஜரும் கதிரையும் எழிலையும் மட்டும் உள்ளே அழைத்துச் சென்றனர். வரவேற்பறையில் அறிவமுதும், அவன் அம்மாவும், அந்தக் கான்ஸ்டெபிளும் குளிரைத் தாங்க முடியாமல் இறுகக் கைகளைக் கட்டி சோபாவில் உட்காந்திருந்தனர்.

பத்து நிமிடங்கள் கழித்து எழில் மட்டும் வெளியே வந்து அறிவமுதுவின் அம்மாவை உள்ளே அழைத்து சென்றாள். அறிவமுதும், கான்ஸ்டெபிளும் தொடர்ந்து வரவேற்பறையிலேயே அமர்ந்திருந்தனர்.

ஹெச்.ஆர் மேனேஜர் தன்னைப் பாண்டுரங்கன் என்று அறிமுகப்படுத்திக் கொண்டார். பொறுமையாக கதிர், எழில் மற்றும் அறிவமுதின் அம்மாவைக் கூட்டிக்கொண்டு ஒவ்வொரு அறைகளாகச் சுற்றிக் காட்டினார். ஒவ்வொரு அறையிலும் வரிசை வரிசையாக கம்பியூட்டர்களில் உட்கார்ந்து ஆண்களும், பெண்களும் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தனர். யாரும் இவர்களைக் கண்டுகொள்ளவே இல்லை. எந்தப் பக்கம் திரும்பினாலும் ஆங்கிலம் மட்டுமே காதுகளில் தொனித்தது.

எல்லா இடங்களிலும் சுற்றிக் காட்டிய பின்னர் பாண்டுரங்கன் மூவரையும் கம்பேனியின் Pantry-க்கு அழைத்து வந்து காஃபி மெஷினிலிருந்து சூடாக காஃபி எடுத்துக் கொடுத்தார். ஏசி குளிருக்கு காஃபி குடிப்பது இதமாக இருந்தது.

பாண்டுரங்கன் தனது கையிலிருந்த காஃபியை உறிஞ்சியபடி கதிரிடம், “எங்க ஆஃபீஸ்ல இருக்க எல்லா இடத்தையும் காட்டிட்டேன் சார்.”

எழில், “நைட் ஷிஃப்டுக்கு தனியா ஆட்கள் வருவாங்களா?”

ஹெச்.ஆர் மேனேஜர் பாண்டுரங்கன், “இல்லங்க மேடம், இது BPO இல்ல, இது ஒரு software development கம்பேனி அதுனால இங்க காலை 9:00 மணில இருந்த அதிகபட்சம் நைட்டு 10:00 மணி வரைக்கும் ஆட்கள் இருப்பாங்க. அவ்வளோதான்.”

கதிரும் எழிலும் அறிவமுதின் அம்மா முகத்தைப் பார்க்கின்றனர். அவர் முகத்தில் ஏமாற்றமும், பயமும் படர்ந்திருக்கிறது.

எழில், “உங்ககிட்ட இருந்து பார்சல வாங்கிட்டுப் போனவங்க இங்க இருக்கிற யாருமே இல்லையா?”

அறிவமுதின் அம்மா, “இல்லங்கம்மா”

கதிர், “சாரி சார், நாங்க உங்களை ரொம்ப சிரமப் படுத்துறோம். கடைசியா ஒரே ஒரு உதவி. இன்னிக்கு லீவுல இருக்கிற staff எல்லாரோட Photos-ஐ மட்டும் உங்க டேட்டா பேஸ்ல இருந்து கொஞ்சம் காட்ட முடியுமா?”

பாண்டுரங்கன், “நிச்சயமா சார்”, என்றபடி அனைவரும் காஃபி குடித்து முடித்ததும், அவர்களை தனது அறைக்கு அழைத்துச் சென்றார்.

அவரது அறைக்குள் சென்று மூவரையும் தனது இருக்கைக்கு எதிரே இருந்த நாற்காலிகளில் அமர வைத்து தனது கம்பியூட்டர் மானிட்டரை அவர்கள் பக்கம் திருப்பியபடி, “இப்ப ரெண்டு, மூணு முக்கியமான ப்ராஜக்ட்ஸ் லாஞ்ச் ஆகப்போறதால கிட்டத்தட்ட எல்லா டீம்லயும், எல்லோரும் ஆஃபீஸ்க்கு வந்திருக்காங்க, இந்தியாவுல எங்களுக்கு இந்த ஒரே ஆஃபீஸ்தான் இருக்கு, இதுல மொத்தம் 639 பேர் வேலை செய்யுறாங்க. அதுல இன்னிக்கு 18 பேரு மட்டும்தான் வரலைன்னு டேட்டா பேஸ் காட்டுது. ஒரு சிலர் official-லா வெளில போயிருக்காங்க. அவங்க ஒவ்வொருத்தர் profile-லா நான் ஓப்பன் பண்றேன், நீங்க பார்த்துக்கங்க…”

கதிர், ஓகே சார், முதல்ல ரோஷிணியொட டீம்ல இருந்தே ஸ்டார்ட் பண்ணலாமா..”

“ஷ்யூர், இது நல்ல ஐடியா” என்றபடி ரோஷிணியின் டீம் டேட்டாவை பரிசோதித்த பாண்டுரங்கன். ரோஷிணி டீம்ல சிந்துஜா மட்டும்தான் இன்னிக்கு லீவு, ப்ராஜட்க்ட் மேனேஜர் முகேஷ் official-லா வெளிய போயிருக்கார்,” என்றபடி சிந்துஜாவின் profile-ஐ திறக்க, அதிலிருந்த பெண்ணின் ஃபோட்டோவைப் பார்த்து அறிவமுதின் அம்மா பதட்டமடைகிறார்…

“யம்மா, யம்மா..இந்தப் பொண்ணுதாம்மா..இதே பொண்ணுதான்”

அதுவரை சற்று சோர்ந்திருந்த கதிரும், எழிலும் பரபரப்படைந்தனர்…

கதிர், “யாரு சார் இவங்க?”

பாண்டுரங்கன், “இவங்க சிந்துஜா, ரோஷிணியோட team-mate, இவங்களும் programmer-தான், ஆனா இவங்க ரோஷிணிய விட சீனியர், இவங்க இப்ப மெடிக்கல் லீவுல இருக்காங்க”

எழில், “சார் நாங்க மிஸ்டர் முகேஷ் ஃபோட்டோவையும் பார்க்கலாமா?”

“ஷ்யூர்”

முகேஷின் profile திறக்கப்பட்டதும் அறிவமுதின் அம்மா உற்சாகத்தில் துள்ளிக் குதித்தார். “யம்மா இவரேதாம்மா! இவரும் இந்தப் பொண்ணும்தான் நேத்து ராத்திரி என் வீட்டுக்கு வந்து பார்சல வாங்கிட்டுப் போனாங்க”

கதிர், “தேங்க் யூ சார்! இவங்க ரெண்டு பேரையும் இப்ப ஆஃபீஸ்க்கு வர வைக்க முடியுமா?”

“ஒரு நிமிஷம் இருங்க சார், நான் செக் பண்ணிட்டு சொல்றேன்” என்று அறையை விட்டு வெளியேறிய பாண்டுரங்கன் அடுத்த பத்து நிமிடங்களில் திரும்பி வந்து, “சார், முகேஷ் ஒரு US Client-டோட மீட்டிங்காக எங்க கம்பேனி CTO கூட ராயல் மெரிடியன் ஹோட்டல் போயிருக்காரு. மீட்டிங் முடிஞ்சிருச்சாம், He is on the way. இன்னும் ஒரு பதினஞ்சு நிமிஷத்துல இங்க வந்திருவார். சிந்துஜா ஒரு சர்ஜரிக்காக ஹாஸ்பிட்டல்ல அட்மிட் ஆகிருக்காங்களாம். அதனால அவங்கள இப்ப இங்க வரவைக்க முடியாது. முகேஷ் வர்ற வரைக்கும் நீங்க, பக்கத்தில இருக்க கான்ஃபரன்ஸ் ரூம்ல wait பண்ணலாம். அவர் வந்தவுடனே நானே கூட்டிட்டு வர்றேன்”

கதிரும் எழிலும் அவருக்கு நன்றிகூறி, அறிவமுதின் அம்மாவையும் அழைத்துக் கொண்டு பக்கத்து அறைக்குப் போய் உட்காந்திருக்கின்றனர். சரியாக இருபது நிமிடங்களில் அறையின் கதவு திறக்கப்பட்டு முகேஷும், பாண்டுரங்கனும் உள்ளே வந்தனர். முகேஷ் கதிருக்கும், எழிலுக்கும் கை கொடுத்தான், “Hi, I am Mukesh, How can I help you?”

கதிர், “நீங்களும், மிஸ் சிந்துஜாவும் நேத்து ஈவினிங் 6:00 மணிக்கு சூளைமேடு, சகாரியா காலணில இருக்குற இந்தம்மா வீட்டுக்குப் போய், இறந்துபோன ரோஷிணி சம்பந்தப்பட்ட ஒரு பார்சல வாங்கிட்டுப் போனதா இந்தம்மா சொல்றாங்க.. அது உண்மையா?”

முகேஷின் ஆச்சரியமான முகத்தோடு, “நானா?..சான்ஸே இல்ல..நேத்து மதியத்துல இருந்து நைட் 11:00 மணி வரைக்கும் மெரிடியன் ஹோட்டல்ல மீட்டிங்லதான் இருந்தேன். எங்க CTOவும் அங்கதான் இருந்தாரு. You can check with him.

And Sindhuja is my team member only, she was admitted in hospital from day before yesterday evening நேத்து சாயந்திரம் அவளுக்கு ஒரு மைனர் சர்ஜரி வேற..இந்த சூழ்நிலைல நாங்க போய் எப்படி இவங்க வீட்டுக்கு போயிருக்க முடியும். நான் இவங்கள இதுக்கு முன்னாடி பார்த்தது கூட இல்லையே.. இவங்க யாருனே எனக்கு தெரியாது…”

அறிவமுதின் அம்மா, அதிர்ச்சியில் உறைந்து போனார். “யம்மா, இல்லம்மா இவர் பொய் சொல்றாரு. நேத்து இவரும் அந்தப் பொண்ணும்தான் வந்தாங்க. அப்ப இவர் ஒரு காதில மட்டும் கறுப்பு கலர் தோடு போட்டிருந்தார்.”

முகேஷ் சிரித்தபடி, “என்ன சார் இது… எனக்கு ஸ்டட் போடுற பழக்கமெல்லாம் இல்ல. என்ன சொல்றாங்க இந்தம்மா”.

கோபமடைந்த அறிவமுதுவின் அம்மா ஏதோ சொல்ல முற்பட அவரை எழில் அமர்த்துகிறாள்.

கதிர், “சிந்துஜா எந்த ஹாஸ்பிட்டல்ல அட்மிட் ஆகி இருக்காங்க?”

முகேஷ், “அங்குஷ் மல்டிஸ்பெஷாலிட்டி ஹாஸ்பிடல், நந்தம்பாக்கம்”

கதிர் முகேஷிடம் கை குலுக்கி, “Ok Mr.Mukesh sorry for the inconvenience..நாங்க கௌம்புறோம்…நீங்க திரும்ப மீட்டிங் கௌம்புறீங்களா?”

முகேஷ், “இல்ல எங்க பாஸ் இறந்து இன்னிக்கு அவங்க வீட்ல 21st day remembrance prayer ஆஃபீஸ்ல நிறையப் பேரு இன்னும் கொஞ்ச நேரத்துல அங்க போயிருவோம்..”

கதிர், “ஓ..வெளில அந்த ஃபோட்டோ வச்சிருந்தாங்களே..”

முகேஷ், “ஆங், அவர்தான்”

கதிரும், எழிலும் முகேஷிடமும் பாண்டுரெங்கனிடமும் விடைபெற்றுக்கொண்டு வரவேற்ப்பறைக்கு வந்தனர். கதிர் நேராக ரிஷப்ஷனிஸ்ட்டிடம் போய்,

கதிர், "எக்ஸ்கியூஸ் மீ.. (யோகேஷ் போட்டோவைக் காட்டி) இவரு..?"

ரிஷப்ஷனிஸ்ட், "எங்க CEO மிஸ்டர் யோகேஷ்"

கதிர், "எப்டி இறந்தாரு?"

ரிஷப்ஷனிஸ்ட், "Cardiac Arrest Sir…"

கதிர், "Oh..thank you..”

அத்தியாயம்:24- முன்னுக்குப் பின் முரண்கள்

நாள்:3
28/12/2019 சனிக்கிழமை
மதியம் 01:00 மணி

அங்குஷ் மல்டிஸ்பெஷாலிட்டி ஹாஸ்பிடல், நந்தம்பாக்கம்…

ரோஷிணி வேலை செய்த நிறுவனத்திலிருந்து, சிந்துஜா அனுமதிக்கப்பட்டிருந்த அங்குஷ் மருத்துவமனைக்கு கதிரின் கார் வந்து சேர்ந்தது. டிசம்பர் மாதமாதலால் வெயில் சற்று குறைவாக இருந்தது. Red Vulture Technologies நிறுவனத்தின் உள்ளே என்ன நடந்ததென்று அறிவமுதுவுக்கு தெரியவில்லை. காரில் அவன் கான்ஸ்டெபிளுடன் பின் சீட்டில் அமர்ந்திருந்தான். அவனும் அவன் அம்மாவும் பேசிக்கொள்ள வாய்ப்பு கிடைக்கவில்லை.

ஆனால் அவனது அம்மா முன்சீட்டில் அமர்ந்து அழுதுகொண்டே வருவதை மட்டும் பார்த்துக் கொண்டிருந்தான். அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. தான் ஏதோ ஒரு மிகப்பெரிய சிக்கலில் மாட்டிக்கொண்டோம் என்பது மட்டும் அவனுக்குப் புரிந்தது. தேவையில்லாமல் ஏன்தான் ஒரு பொருந்தாக் காதலில் விழுந்து தொலைத்தோமோ என்று தனக்குத்தானே நொந்துகொண்டான்.

அந்த ஹாஸ்பிட்டல் ஓரளவு பெரியதாகவும் நவீன வசதிகள் கொண்டதாகவும் இருந்தது. சாதாரண எளிய மக்களை அங்கு அதிகம் பார்க்க முடியவில்லை. எழில் போய் ரிஷப்ஷனிஸ்ட்டிடம் பேச, அவள் எழில், கதிர், அறிவமுதுவின் அம்மா மூவரையும் சிந்துஜா இருந்த மூன்றாம் தளத்துக்கு லிஃப்டில் அழைத்துச் சென்று, சிந்துஜாவின் அறையைக் காட்டினாள். கான்ஸ்டெபிளும் அறிவமுதும் வரவேற்பறையில் outpatients waiting பகுதியில் இருந்த சோஃபாவில் போய் அமர்ந்தனர்.

சிந்துஜா தங்கியிருந்த அறை மிகவும் நவீனமயமாகவும், வசதிகள் படைத்ததாகவும் இருந்தது. சிந்துஜாவின் கன்னங்கள் சர்ஜரி காரணமாக வீங்கியிருந்தன. அவள் தனது மொபைலில் எதையோ பார்த்துக்கொண்டு தனது படுக்கையில் சாய்ந்து அமர்ந்திருந்தாள். கதிரும் எழிலும் போய் சிந்துஜாவிடம் ஏதோ பேசி, சற்று தூரத்தில் நின்றுகொண்டிருந்த அறிவமுதுவின் அம்மாவைக் காட்ட, சிந்துஜா குழப்பத்துடன் இல்லை என மறுத்தாள். அதைப் புரிந்துகொண்டு அறிவமுதுவின் அம்மா புடவை முந்தானையில் வாயைப் பொத்தியபடி மீண்டும் அழத் துவங்கினார்.

அதற்குள் அந்த ரிஷப்ஷனிஸ்ட் ஒரு சீனியர் டாக்டரை அழைத்து வர, அவர் கதிரிடமும் எழிலிடமும் தனது பெயர் மைதிலி ரவீந்திரன் என்றும், தான் இந்த மருத்துவமனையின் dental department-க்கு தலைமை மருத்துவர் என்றும் அறிமுகப்படுத்திக் கொண்டார்.

எழிலும் கதிரும் தாங்கள் வந்த விஷயத்தை டாக்டரிடம் விளக்க அவர்கள் சொன்னதைப் பொறுமையாகக் கேட்டுக்கொண்டிருந்த டாக்டர் மைதிலி ரவீந்திரன், “நேத்து ஈவினிங் 5:00 மணிக்குத்தான் சிந்துஜாவுக்கு வாயில ஒரு சின்ன சர்ஜரி நடந்துச்சு, இப்ப அவங்க கன்னம் எவ்வளவு பெருசா வீங்கிருக்கு பார்த்தீங்கல்ல, நேத்து ஆப்பரேஷன் முடிஞ்சவுடனே இதை விட மோசமா இருந்துச்சு… அப்படி இருக்கும்போது 6 மணிக்கு அவங்க எப்படி வெளியில போயிருக்க முடியும்? (சிரித்தபடி) நம்புற மாதிரியா இருக்கு…அவங்கள நாளைக்கு ஈவினிங்தான் நாங்க டிஸ்சார்ஜ் பண்ணப் போறோம்…முந்தாநேத்து சாயங்காலத்துல இருந்து அவங்க இங்கதான் இருக்காங்க…சோ நீங்க சொல்ற மாதிரி நடந்திருக்க சான்ஸே இல்ல…வாங்க நான் உங்களுக்கு clarify பண்றேன்” என்று தனது அறைக்கு அழைத்துச் சென்றவர் அங்கிருந்த நர்சிடம் சிந்துஜாவின் ஃபைலைக் கொண்டுவரச்சொல்லி அதை எழிலின் கைகளில் கொடுத்தார்.

அவர் சொன்னபடியே சிந்துஜா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டது, அவளுக்கு அறுவைச் சிகிச்சை நடந்தது, ஒவ்வொரு மணி நேரத்துக்கும் இடையெ கொடுக்கப்பட்ட மருந்துகள் போன்ற தகவல்கள் சரியாக இருந்தன. ஆக சிந்துஜா கடந்த இரு நாட்களாக மருத்துவமனையிலிருந்து வெளியே போயிருக்க வாய்ப்பே இல்லை என்பதை கதிரும், எழிலும் உறுதிப்படுத்திக் கொண்டனர். அந்த ஃபைலின் சில பக்கங்களை தங்கள் ஸ்மார்ட்போனில் போட்டோ எடுத்துக் கொண்டு கதிரும், எழிலும் டாக்டரிடம் நன்றி தெரிவித்துவிட்டுக் கிளம்பினர்.

கதிரின் கார் கோடம்பாக்கத்துக்குள் நுழைந்தது, வழியில் சேகர் எம்போரியம் அருகில் தனது அம்மாவை இறக்கிவிடுவார்கள் என்று அறிவமுது எதிர்பார்த்தான். ஏனெனில் அங்கிருந்து நடந்து அவர்கள் வீடு இருக்கும் சகாரியா காலணி பகுதிக்குச் சென்றுவிட முடியும். ஆனால் கதிரின் கார் எங்கும் நிற்காமல் சாலிகிராமம் போலீஸ் ஸ்டேஷன் நோக்கிப் பறந்தது. தன்னோடு சேர்த்து தன் அம்மாவும் சிக்கலில் மாட்டிக்கொண்டது தெரிந்து அறிவமுது கைகளால் முகத்தைப் பொத்திக்கொண்டு அழத்தொடங்கினான்.

அத்தியாயம்:25- கல்யாணப் பேச்சு

நாள்:5
30/12/2019 திங்கள்
காலை 06:00 மணி

கதிரின் வீடு…

முந்தினநாள் இரவு கதிரின் அப்பா ஜெயச்சந்திரன், கமிஷனர் மார்த்தாண்ட பூபதி கதிர் ஆகியோர் மொட்டை மாடியில் அமர்ந்து மது அருந்தியபடி பேசிக் கொண்டிருந்தனர். பேச்சு சுவாரசியமாகச் சென்று கொண்டிருந்தபோது கதிரின் காதல் பற்றி பேச்சு வந்தது. கமிஷனர் அந்தப் பெண் யார் என்று கதிரிடம் கேட்டதுமே, அவன் ஏதேதோ மழுப்பி, அங்கிருந்து நழுவிச் சென்று தன் அறையில் போய் படுத்துக்கொண்டான். அம்மா சொன்ன தகவல்களை வைத்து, அந்தப் பெண்ணைப் பற்றி அப்பா ஜெயச்சந்திரன் சொல்ல, பெண் யாரென்று மார்த்தாண்ட பூபதி யூகித்துக்கொண்டார். மனதுக்குள் கதிரின் தேர்வை மெச்சவும் செய்தார்.

மறுநாள் காலையில் 6:00 மணியளவில் மார்த்தாண்ட பூபதி ஹாலில் சோஃபாவில் அமர்ந்தபடி அப்போதுதான் வந்திருந்த ஆங்கில நாளிதழைப் புரட்டிக்கொண்டிருந்தார். அவருக்கு கதிரின் அம்மா காஃபி கொண்டு வந்து கொடுக்க, அவர் அதைக் கையில் வாங்கியபடியே, "என்னக்கா உன் பையன் இன்வெஸ்டிகேஷன்ல தூள் கெளப்பிக்கிட்டு இருக்கான்…ஒரு துப்பறியும் புலிய பெத்து வச்சிருக்கியேக்கா…சீக்கிரமே மூணு கேசையும் முடிச்சிருவான் போலயே!"

அம்மா, "அவன் கேசை முடிக்கிறது இருக்கட்டும், அவனுக்கு சீக்கிரம் நாம கல்யாணத்த முடிக்கணும்ப்பா.."

மார்த்தாண்ட பூபதி, "எனக்கு ஒரு பொண்ணு இருந்திச்சுன்னா குடுத்திருவேன் கடவுள் ரெண்டையும் பையனா குடுத்துட்டான், என்ன பண்றது?"

அம்மா, "சம்பந்தியாகுற குடுப்பினைதான் நமக்கு இல்லாமப் போச்சே, ஆமா...அந்தப் போலீஸ்காரப் பொண்ணு எப்படி?"

மார்த்தாண்ட பூபதி, "அது நல்ல பொண்ணுதான்க்கா…அத வேணா பேசி முடிச்சிரலாமா?"

அம்மா அழுத்தமாக, "அதத்தான் சொல்ல வர்றேன்.. அதச் செய்யி மொதல்ல.."

காஃபியை உறிஞ்சியபடி கமிஷனர் தனது பழைய நினைவுகளை அசைபோடத் துவங்கினார், "நான் திண்டுக்கல்ல எஸ்.பியா இருந்தப்ப அந்தப் பொண்ணோட அப்பா என்னோட ஆபீஸ்ல கிளர்க்கா வேல பார்த்தாரு. பரஞ்சோதின்னு பேரு, நல்ல, நேர்மையான மனுஷன், அருமையான குடும்பம்… அவரு ரெண்டாவது பொண்ண நான்தான் ஸ்கூல்ல சேர்த்து விட்டேன், அவ பேரு கலையரசின்னு நினைக்கிறேன்… இப்ப நல்லா வளர்ந்திருப்பா.. நான் வேணா அவருகிட்ட பேசிப் பார்க்குறேன்…நாம பொண்ணு கேட்டு இல்லைன்னா சொல்லிரப் போறாங்க?"

தம்பியின் பேச்சை அக்கா பெருமிதத்தோடு ஆமோதித்தார். அவருடைய மனம் அப்போதே மகனின் திருமணம் குறித்த கனவுகளில் மிதக்க ஆரம்பித்தது.

அத்தியாயம்:26- மர்மங்கள் சூழ்ந்த மரணம்

நாள்:6
31/12/2019 செவ்வாய்
மாலை 06:00 மணி

காஃபி டே, சாலிகிராமம்

எழிலரசியின் வருகைக்காக காஃபி டேயில் கதிர் காத்திருந்தான். சில நிமிடங்களில் எழில் அங்கு வந்தாள். பச்சை நிறப் புடவையில் அவ்வளவு அழகாக இருந்தாள். அவள் வருவதையே கதிர் வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவள் அருகில் வந்ததும், கதிர், “Wow, you look gorgeous!”

சொன்ன மறுவினாடியில் எழிலுக்கு கன்னங்கள் சிவந்தன. அதை கதிரும் கவனித்தான்.

அவளுக்கு வெட்கத்தில் நா குழறியது. “ஏன் உங்களுக்கு Saree-னா புடிக்குமா?”

கதிர், “தமிழ் பையங்க, எப்படி Saree புடிக்காம இருக்கும்? ஆமா என்ன விசேஷம் இன்னிக்கு..”

எழில், "நாளைக்கு நியூஇயர்ல அதான் சர்ச்சுக்கு போயிட்டு வந்தேன்.”

கதிர், “சர்ச்சுக்கா, நீங்க கிறிஸ்டியனா?”

எழில், “ஏன் கிறிஸ்டியன் மட்டும்தான் சர்ச்சுக்குப் போகணுமா? எனக்கு ஜீஸஸ், சர்ச்சோட அமைதியான சூழல், அங்க பாடுற பாட்டு, மியூசிக், பிரார்த்தனை எல்லாமே பிடிக்கும். என்ன டென்ஷனோட போனாலும் திரும்பி வரும்போது மனசு ரொம்ப சமாதானமா இருக்கும். அதான்”

அவள் சொன்னதை கேட்டுக்கொண்டே கதிர் தனது shoulder bag-இலிருந்து அழகாய் பேக் செய்யப்பட்ட ஒரு கிப்ட் பார்சலை அவளிடம் நீட்டினான். “This is for you”.

எழிலின் கண்கள் பரவசத்தில் விரிகின்றன. அந்த பேக்கை உடனடியாக பிரித்துப் பார்க்க. உள்ளே இருந்ததைப் பார்த்தவுடன் அவள் முகம் சற்றே தொய்ந்து போனது”.

எழில், உள்ளே இருந்த புத்தகத்தின் தலைப்பை வாசித்தபடி, “Suicide, Emile Durkheim, என்னது இது?”

கதிர், “சூசைட் பத்தி, அதை செய்துக்கிறவங்க மனநிலை பத்தி, இதைவிட நல்ல புத்தகத்தை நான் படிச்சதில்ல. அதனாலதான் இந்த கேஸ்ல உங்களுக்கு உதவியா இருக்குமேன்னு அமேசான்ல வாங்கினேன்”

எழிலுக்கு சப்பென்று போனது, கடமைக்கு ஒரு “தேங்க் யூ” சொல்லி வைத்தாள். சில வினாடிகள் மௌனமாக இருந்துவிட்டு “ஆமா..இத கொடுக்கதான் என்னை காஃபி டேக்கு வரச் சொன்னீங்களா சார்?”

கதிர் தனது shoulder bag-இலிருந்து லேப்-டாப்பை எடுத்து அதைத் திறந்தபடியே, “இல்ல வேறொரு முக்கியமான விஷயமும் இருக்கு…அதுக்கு முன்னாடி ஒரு சின்ன ரெக்குவஸ்ட்… என்னை சார் சார்னு கூப்பிடாதீங்களேன்… கதிர்னே கூப்புடுங்க..”

கதிர் சொன்னது எழிலுக்குப் பிடித்திருந்தது, உடனே அவனைப் பெயர் சொல்லி அழைக்க ஆரம்பித்து விட்டாள். “ஒகே கதிர், உங்களுக்கும் ஒரு ரெக்குவ்ஸ்ட் என்னை போங்க வாங்கன்னு கூப்பிடாதீங்க, போ, வான்னே கூப்பிடுங்க..இப்பச் சொல்லுங்க என்ன விஷயம்?”

அவள் சொன்ன விதத்தை இரசித்தபடி கதிர், “அன்னிக்கு ரோஷிணி வேலை செஞ்ச கம்பேனிக்கு போயிருந்தோம்ல, அவங்க CEO யோகேஷ் இறந்து 21-வது நாள் பிரேயருக்கு போறோம்னு சொன்னாங்க ஞாபகம் இருக்கா? யோகேஷுக்கு 35 வயசுதான் ஆகுது. எப்படி இறந்தாருன்னு நான் ஒரு சில பேருகிட்ட விசாரிச்சேன் எல்லோரும் யூனிபார்மா cardiac arrest- அப்டீன்னுதான் சொன்னாங்க... எனக்கென்னமோ சம்திங் ராங்னு தோணிக்கிட்டே இருந்துச்சி. அவரோட யூடியூப் வீடியோஸ்லாம் செக் பண்ணிப் பார்த்தேன்…"

கதிர் எழில் பக்கம் லேப்டாப்பைத் திருப்பி, ஒரு யூடியூப் வீடியோவைக் காட்டியபடி, "இங்க பாரு...இண்டர்நேஷனல் யோகா டேக்கு இவரை ஒரு ஸ்கூல்ல Chief Guest-டா கூப்பிட்டிருக்காங்க. ஸ்டூடண்ட்ஸோட சேர்ந்து யோகா பண்றாரு பாரு.. இங்க என்ன பேசுறாருன்னு கேளு…”

தான் கேட்டுக்கொண்ட படியே கதிர் தன்னை போ,வா என்று அழைக்கத் தொடங்கியதை எழில் இரசித்தாள். அந்த வீடியோவில் யோகேஷ் பேசுகிறான், "நான் என்னோட 15 வயசுல யோகா ப்ராக்டிஸ் பண்ண ஆரம்பிச்சேன் 20 வருஷமாச்சு, எவ்வளோ பிசி ஸ்கெடியூல் இருந்தாலும் இப்பவும் ரெகுலரா பண்ணிக்கிட்டு இருக்கேன். வியாதின்னு ஹாஸ்பிடல்க்கு போனதே இல்ல, மனசு எப்பவுமே தெளிவா இருக்கு…”

வீடியோவை நிறுத்திவிட்டு கதிர் எழிலின் முகத்தைப் பார்க்கிறான். எழில் முகத்தில் ஒரு அதிர்ச்சி தெரிகிறது. தீவிரமாக யோசித்தபடி…“அப்ப யோகேஷ் cardiac arrest-னால சாகலையா? இதை ஏன் மறைக்கிறாங்க கதிர்…இதுல ஏதாச்சும் மர்மம் இருக்குமோ? யோகேஷ் சாவுக்கும் ரோஷிணி சாவுக்கும் ஏதாவது லிங்க் இருக்குமா?”

கதிர் ஆழமாக யோசித்துகொண்டே தன் தாடையை வருடியபடி, “May be…இன்னொரு விஷயம், யோகேஷ் எந்த ஹாஸ்பிட்டல்ல அட்மிட் ஆகி இறந்தாரு தெரியுமா? சிந்துஜா அட்மிட் ஆகியிருந்த அதே அங்குஷ் ஹாஸ்பிட்டல்”

எழில் அவனை ஆச்சரியமாய் நிமிர்ந்து பார்த்தாள்…

அத்தியாயம்:27- ஆந்தைக் கண்கள்

நாள்:6
31/12/2019 செவ்வாய்
மாலை 08:00 மணி

அங்குஷ் மல்டிஸ்பெஷாலிட்டி ஹாஸ்பிடல், நந்தம்பாக்கம்…

காஃபி டேயில் எழிலைச் சந்தித்த கதிர் அவளுடன் கொஞ்ச நேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு அவளை அனுப்பிவிட்டு நேராக நந்தம்பாக்கம் அங்குஷ் மல்டிஸ்பெஷாலிட்டி ஹாஸ்பிட்டல் வந்து சேர்ந்தான்.

முகத்தை மறைக்கும் அளவுக்கு தலையில் தொப்பி அணிந்திருந்தான். ஹாஸ்பிட்டல் வரவேற்பறையில் சற்று கூட்டம் குறைவாக இருந்தது. பில்லிங் கவுண்ட்டரில் ஒருவன் மட்டும் உட்காந்திருந்தான். யாரும் இல்லாத சமயம் பார்த்து, அவனிடம் போய் ஒரு ஐடி கார்டைக் காட்டினான். அதைப் பார்த்ததும் அந்த நபரின் முகம் சற்று மாறியது.

கதிர், ‘‘இப்ராஹிம், நான் opposite- ல இருக்கிற restaurant-ல வெயிட் பண்றேன். உடனே வந்து பாரு, நீ மட்டும் வா, யாருக்கும் தெரிய வேணாம் ஜாக்கிரதை!”

தன் பெயர் இவருக்கு எப்படித் தெரிந்தது என்று குழப்பத்தோடு அவன் பணிவும் பதட்டமும் கலந்த தொனியில், “ஓகே சார், ஒரு பத்து நிமிஷத்தில வர்றேன்” என்றான்.
….

சொன்னபடி பத்து நிமிடங்களில் ரெஸ்டாரண்ட் வந்து சேர்ந்தான். அவன் முகம் ஆயிரம் கேள்விகளைத் தாங்கியிருந்தது. கொஞ்சம் நெர்வசாக இருந்தான். அவனை ஆசுவாசப்படுத்தும்படி கதிர் அவனோடு இயல்பாகப் பேச ஆரம்பித்தான்.

“என்ன இப்ராஹிம், இன்னும் நாலு மணி நேரத்துல நியூ இயர் பிறக்கப் போகுது, ஃபிரண்ட்ஸோட எஞ்சாய் பண்ணலயா?”

இப்ராஹிம் ஒரு சலிப்பான புன்னகையோடு, “ஹாஸ்பிட்டல்ல் வேல செய்யுற எங்களுக்கு ஏதுசார் பண்டிகை எஞ்சாய்மெண்ட்லாம்…”

கதிர், “சலிச்சுக்க வேணாம் இப்ராஹிம், நீ செய்யுறது வேலை இல்ல, ஒரு சேவை. இறைவனோட ஆசீர்வாதம் உனக்கு எப்பவும் இருக்கும்”

இப்ராஹிம் இலேசாக புன்னகைத்தான். அவன் பதற்றம் சற்று தணிந்திருந்தது முகத்தில் தெரிந்தது, கதிர் தான் வந்த காரியத்தை விவரிக்க ஆரம்பித்தான், “ சரி இப்ப நான் விஷயத்துக்கு வர்றேன். ஒரு நல்ல விஷயத்துக்காக டிப்பார்ட்மெண்ட்டுக்கு உன்னோட ஹெல்ப் எனக்கு தேவைப்படுது, அதையும் நீ ஃப்ரீயா செய்ய வேண்டாம், நான் உனக்கு பணம் குடுக்குறேன்”.

இப்ராஹிம், “சொல்லுங்க சார்!”.

கதிர், “போன எட்டாம் தேதி உங்க ஹாஸ்பிட்டல்ல இறந்துபோன யோகேஷ் அப்டீங்கிற பேஷண்ட்டோட..”

இப்ராஹிம், “ஆமா யோகேஷ் சாரு…”

கதிர், “ம்ம்..அவரோட மெடிக்கல் ஹிஸ்டரி, என்னென்ன டெஸ்ட் பண்ணாங்க, எந்த மாதிரியான treatment குடுத்தாங்க, எந்த டாக்டர் அந்த கேஸை அட்டண்ட் பண்ணாங்க இது அடங்கின ஃபைல் எனக்கு வேணும்.”

இப்ராஹிம் ஒரு நொடி யோசித்தான், பெருமூச்சு விட்டான்..”கொஞ்சம் ரிஸ்க்தான் சார், ஒரிஜினல் ஃபைலே வேணுமா?”

கதிர், “ஆமா ஒரிஜினலே வேணும்”.

இப்ராஹிம், “ஓகே சார்… நான் எடுத்துட்டு உங்களுக்கு கால் பண்றேன்.. இதுனால எனக்கு எதுவும் பிரச்சனை வந்துராதே, மேனேஜ்மெண்ட் பெரிய கை சார், உங்க வேலை முடிஞ்சவுடனே நீங்க பாட்டுக்கு போய்டுவீங்க. நான்தான் எடுத்துக் குடுத்தேன்னு தெரிஞ்சா என்னைக் கொன்னு கொலையறுத்துருவானுக”.

கதிர், “ப்ச்…போலீஸ் உனக்கு பின்னாடி இருக்குதுப்பா, அப்படியெல்லாம் யாரையும் அம்போன்னு விட்டுட்டுப் போகமாட்டோம். ஏன் பயப்படுற? நீதான் எடுத்தேன்னு தெரியாம எடுக்கிறது உன்னோட சாமர்த்தியம். அதையும் தாண்டி எந்தப் பிரச்சனை வந்தாலும் நாங்க பாத்துக்குறோம். என் மொபைல் நம்பரை நான் உனக்கு இப்ப குடுக்கிறேன். இங்க பாரு, விஷயம் ரொம்ப கான்ஃபிடென்ஷியல்.. அதுனால கேர்ஃபுல்லா பண்ணு.”

இப்ராஹிம், “ஓகே சார்”.

…..

நாள்:8
02/01/2020 வியாழன்
காலை 10:15 மணி

இரண்டு நாட்களுக்குப் பின்பு,

சென்னை டிரேட் சென்டர் அருகே ஒரு டீக்கடை, நந்தம்பாக்கம்…

டீக்கடையில் சற்று கூட்டம் அதிகமாக இருந்தது. டீக்கடையின் உள்ளே டேபிளும் சில சேர்களும் போடப்பட்டிருந்தது. ஆனால் பெரும்பாலோனோர் டீக்கடை வாசலில் நின்று கொண்டுதான் டீ குடித்துக் கொண்டிருந்தனர். உள்ளே போடப்பட்டிருந்த இருக்கையொன்றில் கதிர் முட்டை போண்டாவை காரச் சட்டினியோடு ருசித்துக் கொண்டிருந்தான்.

சற்று நேரத்தில் இப்ராஹிம் அங்கு வந்து சேர்ந்தான், ஹெல்மெட் போட்டு வெயிலில் வெகுதூரம் பயணித்ததால் தலையெல்லாம் வியர்த்திருந்தான். கர்ச்சீப்பால் தலையை துடைத்தபடியே, ‘‘சாரி சார் கொஞ்சம் லேட் ஆகிருச்சு, ரொம்ப நேரமா வெய்ட் பண்றீங்களா’’

கதிர், ‘‘இல்ல, நான் வந்து ஒரு இருபது நிமிஷம்தான் இருக்கும், போண்டா சாப்பிடு இப்ராஹிம்’’

‘‘இல்ல சார், நான் உடனே போயாகணும், இந்தாங்க நீங்க கேட்ட ஃபைல்’’

தனது shoulder bag-இலிருந்து ஒரு ஃபைலை எடுத்து கதிரிடம் நீட்டினான். கதிர் அதை வாங்கி சரிபார்த்து, ‘‘ ரொம்ப தேங்ஸ் இப்ராஹிம், ரொம்ப பெரிய ரிஸ்க் எடுத்து, எங்களுக்கு நீ பெரிய உதவி செஞ்சிருக்க…’’

கதிர் தனது பர்சிலிருந்து சில ஐநூறு ரூபாய் நோட்டுகளை எடுத்து கத்தையாக இப்ராஹிமிடம் கொடுக்க அதை மகிழ்ச்சியோடு வாங்கி அதை எண்ணாமல் அப்படியே பர்சில் சொருகிக் கொண்டான்.

கதிர், ‘‘இப்ராஹிம்’’

‘‘சொல்லுங்க சார்’’

கதிர், ‘‘இன்னும் உன் வேலை முடியல’’

இப்ராஹிம் அவனை அதிர்ச்சியோடு பார்த்தான்.

கதிர், ‘‘நான் இதே மாதிரி பக்காவா ஒரு டுப்ளிகேட் பண்ணி நாளைக்கு உன் கையில தந்திடுறேன். அதை நீ கொண்டுபோய் இது இருந்த இடத்துல வச்சிரு. அப்பத்தான் ஃபைல் காணோம் என்கிற பிரச்சனை இப்போதைக்கு வராது. ஃபைலைக் காணோம்னு தெரிஞ்சு அடிக்கடி அந்த ரூமுக்குள்ள போய்ட்டு வர்றது யாருன்னு நோண்ட ஆரம்பிச்சாங்கன்னா உனக்கு சிக்கலாயிரும். இது உன்னோட சேஃப்டிக்காகத்தான்’’

இப்ராஹிம், ‘‘ஆமாங்க சார், இதே பயம் எனக்கும் இருந்துக்கிட்டுத்தான் இருக்கு, அந்த ரூம்ல வேற சிசிடிவி கேமரா இருக்கு. நான் இந்த ஃபைல எடுத்தது அதுல ரெக்கார்ட் ஆயிருக்கும்.’’

கதிர் புன்னகைத்தபடியே, ‘‘நான்தான் சொன்னேன்ல, நாங்க யாரையும் அம்போன்னு விட்டுட்டுப் போகமாட்டோம்னு’’.

இப்ராஹிம் முகம் மலர்ந்தது, கைகூப்பி நன்றி சொல்லிவிட்டுக் கிளம்பினான்.

…..

காலை 11:20 மணி

போரூர் வானதி பல்நோக்கு மருத்துவமனை…

இப்ராஹிமிடம் யோகேஷின் ஃபைலை வாங்கிய கையோடு கதிர் நேராக போரூரிலிருந்த வானதி பல்நோக்கு மருத்துவமனைக்கு வந்து சேர்ந்தான். நேராக தலைமை மருத்துவரின் அறையில் போய் உட்காந்துகொண்டான். அந்த தலைமை மருத்துவர் கதிரின் குடும்பத்துக்கு மிகவும் வேண்டியவர், நம்பகமானவர் என்பதால் அவசரமாக அவரை சந்திக்க வேண்டும் என்று கதிர் appointment வாங்கியிருந்தான்.

கதிர் அவரது அறையில் உட்காந்து மொபைலில் ஏதோ ஒரு யூடியூப் வீடியோவில் மூழ்கியிருந்தான். ஒரு சர்ஜரியில் இருந்த டாக்டர், சர்ஜரியை முடித்துவிட்டு கதிரை வரவேற்றபடி தன் அறைக்குள் நுழைந்தார். கதிர் அவசர அவசரமாக யூடியூபை மூடிவைத்துவிட்டு, காதில் இருந்த ear buds-ஐக் கழற்றியபடியே, எழுந்து நின்று கைகூப்பி அவருக்கு ஒரு வணக்கம் வைத்தான். டாக்டர் வந்து அமர்ந்ததும் பின்னாடியே இருவருக்கும் காஃபி வந்தது. இவரும் கொஞ்ச நேரம் பொதுவாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். டாக்டருக்கு 65 வயதுக்கு மேல் இருக்கும்.

கதிர், “இவ்வளோ பிசிலயும் எனக்கு appointment குடுத்ததுக்கு ரொம்ப தேங்க்ஸ் அங்கிள்!”, யோகேஷின் ஃபைலை அவரிடம் நீட்டி, “இந்த பேஷண்ட் தொடர்பா சீக்கிரட்டா ஒரு இன்வெஸ்டிகேஷன் போயிக்கிட்டு இருக்கு. இவர் எதுனால இறந்தாரு, இவருக்கு எந்த வியாதிக்காக ட்ரீட்மெண்ட் கொடுத்தாங்கன்னு தெரிஞ்சுக்கணும்…ஏன்னா இவர் கார்டியாக் அரெஸ்ட்ல இறந்ததாத்தான் இவரோட side-ல சொல்றாங்க..”

டாக்டர் யோகேஷின் பைலை கதிரிடமிருந்து வாங்கி பிரித்து ஒவ்வொரு பக்கங்களாக நிதானமாகப் பார்த்தார்..

சில நிமிடங்கள் கழித்து, “ம்ம்ம்..நீ சந்தேகப்பட்டது சரிதாம்ப்பா.. இந்த பேஷண்ட் ஹார்ட் அட்டாக்ல சாகல…..” சொல்லிவிட்டு, ஃபைலின் ஒவ்வொரு பக்கங்களாகத் திருப்பிக் காட்டி மேலும் பல்வேறு காரியங்களை கதிரிடம் பொறுமையாக விளக்க ஆரம்பித்தார்…

அவர் சொன்னவைகளைக் கேட்க கேட்க கதிரின் மூளைக்குள் இருந்த சர்க்கியூட்டுகள் பரபரவென இயங்க ஆரம்பித்தன…அவனுக்கு வெளியே ஓடிப்போய் நடுரோட்டில் நின்று ‘யுரேகா’ என சத்தமாகக் கத்தவேண்டும் போலிருந்தது.

அத்தியாயம்:28- பரஞ்சோதி

நாள்:9
03/01/2020 வெள்ளி
காலை 09:00 மணி

மணப்பெண் வீடு, திண்டுக்கல்…

மியூசிக் சேனலில் 'அழகு ஆயிரம் உலகம் முழுவதும்…' என்று கமல்ஹாசனும், ரத்தி அக்னிஹோத்ரியும் சந்தோஷமாக பாடியபடியே ஐரோப்பிய சாலையில் ஓடிக்கொண்டிருந்தார்கள். 80களில் உயர்பள்ளிப் பருவத்தில் நண்பர்களோடு திண்டுக்கல் என்.வி.பி.ஜி தியேட்டரில் ‘உல்லாசப் பறவைகள்’ படத்தை பார்த்த பழைய மலரும் நினைவுகளில் பரஞ்சோதி லயித்திருந்தார். நடிகை தீபாவுக்காகவே அவர் அந்தப் படத்தை அதே தியேட்டரில் பத்துத் தடவைகள் பார்த்திருந்தார். ரிமோட் கன்ட்ரோலை அவர் கையிலிருந்து பறித்து சின்சான் பார்த்துவிட வேண்டுமென ஒரு யுத்தமே நடத்திவிட்டு அதில் தோற்று எரிச்சலுடன் அவரது சின்ன மகள் கலையரசி உட்காந்திருந்தாள். கலையரசி தற்பொழுது திண்டுக்கல்லில் உள்ள ஒரு பெண்கள் பள்ளியில் 8-ஆம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கிறாள்.

பரஞ்சோதி ஒரு தொளதொள அரைக்கை வெள்ளைக் கதர் சட்டையும், லுங்கியும் அணிந்திருந்தார். உச்சந்தலை மொத்தமாய் வழுக்கையாகியிருந்தது, மீதியிருந்த முடிகளில் பாதிக்கும் மேல் உஜாலாவுக்கு மாறியிருந்தன. நல்ல கருப்பு, குண்டு, தொப்பை என ரிட்டயர்டு ஆன போலீஸ்காரர் என்பதற்கான சகல அடையாளங்களையும் தனக்குள் கொண்டிருந்தார். அவர் அந்த வருடம்தான் ரிட்டயர்டு ஆகியிருந்தார். அவரது மனதைப் போலவே அவரது கைகளும் சுத்தம். ரிட்டயர்டு ஆகும்வரை நேர்மையாளர், நல்லவர், பழகுவதற்கு இனியவர் என்ற பெயரை காத்துக் கொண்டவர்.

பாட்டு முடியும் தருவாயில் அவரது மொபைலில் மணி ஒலித்தது. டிஸ்பிளேயில் வெறும் நம்பர் மட்டுமே வர, பாடல் முடியும்வரை காத்திருந்துவிட்டு, டிவியை மியூட் செய்துவிட்டு மீண்டும் அதே நம்பருக்கு கால் செய்தார்.

மறுமுனையில், “ ஹலோ பரஞ்சோதி, எப்படி இருக்கீங்க..நான் சென்னை கமிஷனர் மார்த்தாண்ட பூபதி பேசுறேன்”

பரஞ்சோதி கிண்டலாக, “ஓ நீங்க சென்னை கமிஷனர் பேசுறீங்களா, அப்டீன்னா நான் முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி பேசுறேன். சொல்லுங்க என்ன விஷயம்?”

மறுமுனையில் சில நொடிகள் அமைதி…பின்னர் கால் கட் ஆனது.

“லூசுப் பயலுக, நேரங்காலம் தெரியாம வெளாண்டுக்கிட்டு…” புலம்பியபடியே இணைப்பைத் துண்டித்து டிவியை அன்மியூட் செய்தார்.

சில நொடிகளில் வாட்ஸ்ஆப்பில் மறுபடியும் அதே நம்பரிலிருந்து வீடியோ கால் வந்தது. டிவியை மறுபடியும் மியூட்டில் போட்டுவிட்டு, வாட்ஸ்ஆப் காலை ஓப்பன் செய்தவர் திரையில் தெரிந்த மார்த்தாண்ட பூபதியின் முகத்தைப் பார்த்து பதறியடித்து எழுந்து ..கீழே நழுவும் லுங்கியை இன்னொரு கையில் பிடித்துக் கொண்டு, மீண்டும் சோபாவில் உட்காந்து போனை இடது கைக்கு மாற்றி வலது கையால் சல்யூட் வைத்தபடி”ஐயா வணக்கங்கையா” என்று சொல்ல, அப்பாவின் வேடிக்கையான செய்கைகளை பார்த்த கலையரசி தன் கைகளால் வாயைப் பொத்தியபடி சிரித்துக்கொண்டே, அப்பா ‘பல்பு’ வாங்கிய நற்செய்தியை அம்மாவிடம் அறிவிக்க அடுப்படிக்கு ஓடினாள்.

கமிஷனர், “என்ன பரஞ்சோதி, எப்ப முதலமைச்சரா பொறுப்பேத்துக்கிட்டீங்க, சொல்லவே இல்ல..”

பரஞ்சோதி, "ஐயா, எனக்கு ஒண்ணுமே ஓடலைங்கையா..மன்னிச்சிருங்க ஐயா, நீங்க எனக்கு போன் பண்ணுவீங்கன்னு நெனச்சே பார்க்கல, என் சேத்தாளிங்க யாரோ நையாண்டி பண்றாங்கன்னு நெனச்சுட்டேன்.''

கமிஷனர், ''என் குரலைக்கூடவா மறந்துட்டீங்க''

பரஞ்சோதி, ''வயசாயிருச்சுல்லங்கைய்யா''

இருவரும் பதினைந்து நிமிடங்களுக்கும் மேல் பேசிக்கொண்டார்கள், பரஸ்பரம் நலம் விசாரித்துக் கொண்டார்கள். பரஞ்சோதியின் மூத்த மகளை தனது அக்கா மகன் விரும்புவதாகவும், அவனுடைய படிப்பு மற்றும் தகுதிகளை கமிஷனர் சொல்லவும் பரஞ்சோதி மகிழ்ச்சியின் உச்சிக்கே போனார். தன் காதுகள் கேட்பதை அவராலேயே நம்ப முடியவில்லை.

''ஐயா, எனக்கு பேச்சே வரலங்கய்யா…உங்க அக்கா பையனுக்கு பொண்ணு குடுக்கணும்னா எங்களுக்கு என்ன கசக்குமாங்கையா…என் பொண்ணு ரொம்ப குடுத்து வச்சவங்கையா..''

கமிஷனர், ''உங்க குடும்பத்துல பெண் எடுக்க நாங்களும் கொடுத்து வச்சிருக்கணும் பரஞ்சோதி. எனக்கு உங்களைப் பத்தி நல்லா தெரியும். உங்க பொண்ணு டிப்பார்ட்மெண்ட்ல எனக்குக் கீழதான் வேலை பார்க்குறா அவளைப் பத்தியும் எனக்கு நல்லா தெரியும். அதனாலதான் இந்த கல்யாணத்தை நானே முன்னால நின்னு நடத்த ஆசைப்படுறேன். எங்க பையன்தான் கொடுத்து வச்சவன்.

சரி, அப்ப நாளைக் கழிச்சு, ஞாயிற்றுக்கிழமை பையனக் கூட்டிட்டு, எங்க அக்காவும் மாமாவும் உங்க வீட்டுக்கு பொண்ணுப் பார்க்க வருவாங்க. ஒருவேளை பொண்ணுக்கு டூட்டி இருந்தா லீவு போட்டுட்டு ஊருக்கு வரச் சொல்லுங்க.''

பரஞ்சோதி, ''சரிங்கையா…ஐயா நீங்களும் வருவீங்களா?''

கமிஷனர், ''இல்லங்க, அன்னிக்கு சென்னை YMCA-ல ஒரு மராத்தான் நடக்குது, மினிஸ்டர் தொடங்கி வைக்கிறாரு, அவருகூட நானும் அதுல கலந்துக்கிறேன். அதுனால என்னால வரமுடியாது… நீங்க பார்த்து நல்லபடியா பேசி முடிங்க…நான் அப்புறம் இன்னொருநாள் கண்டிப்பா வர்றேன்''

பரஞ்சோதி, ''ஆகட்டுங்கையா'' என்றபடி போனை கீழே வைத்தார். கைகளால் கண்களிலிருந்து வழியும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டார். பரஞ்சோதியின் மகிழ்ச்சிக்குக் காரணம் மார்த்தாண்ட பூபதி ஒரு போலீஸ் உயரதிகாரி என்பதற்காக மட்டும் அல்ல, அவர் மிகவும் சிறந்த மனிதர், அவரது குடும்பம் மிக அருமையான குடும்பம் என்பதற்காகவும்தான்.

அத்தியாயம்:29- பெண் பார்க்கும் படலம்

நாள்: 11
05/01/2020 ஞாயிறு
காலை 10:00 மணி

மணப்பெண் வீடு, திண்டுக்கல்…

பரஞ்சோதி குடும்பத்தார் வீட்டை இரு நாட்களுக்குள் அருமையாக சுத்தம் செய்திருந்தார்கள். அகர்பத்தி மணம் வாசல்வரை கமகமத்தது. வீட்டின் முன்னர் ரதம் போல கம்பீரமாக கறுப்பு நிற ஃபார்ச்சூனர் கார் வந்து நின்றதும் அனைவரையும் ஒரு உற்சாகம் தொற்றிக்கொண்டது. வாசலுக்குப் போய் மகிழ்ச்சியாக வரவேற்றார்கள். எதிர்வீட்டில் இருந்தவர்கள் ஓடி வந்து வாசலில் நின்று வேடிக்கை பார்த்தார்கள். கதிர் இளநீல ஊதாவில் டெனிம் ஷர்ட்டும், ஜீன்சும் அணிந்திருந்தான். அவனுடன் அம்மாவும், அப்பாவும், கமிஷனர் மார்த்தாண்ட பூபதியின் மனைவி அமுதினியும் மட்டும் வந்திருந்தார்கள்.

மாப்பிள்ளை மிகவும் அழகாக இருப்பதாக எதிர்வீட்டார் தங்களுக்குள் பேசிக்கொண்டார்கள். பரஞ்சோதியின் மனைவி விருந்தினர் நால்வருக்கும் முதலாவது குடிப்பதற்கு தண்ணீரைக் கொண்டுவந்து கொடுத்தார்.

பரஞ்சோதி கமிஷனரின் மனைவியிடம், ‘‘ஐயா இங்க எஸ்.பியா இருந்தபோது நான் அடிக்கடி நம்ம வீட்டுக்கு வந்திருக்கேன். என்னை ஞாபகம் இருக்குதுங்களாமா?’’

அமுதினி, ‘‘நல்லா ஞாபகம் இருக்கு, (கலையரசியைப் பார்த்து) உங்க பொண்ணை ஸ்கூல்ல சேர்த்ததற்கப்புறம் அவளை எங்க வீட்டுக்கு கூட்டிட்டு வந்தீங்க. அப்ப குட்டிப் பொண்ணா இருந்தா இப்ப எவ்வளவு வளர்ந்துட்டா’’

கலையரசி ஒரு அழகான புன்னகையை சிந்தி வைத்தாள்.

பரஞ்சோதி, ‘‘மறக்கமுடியுங்களாமா ஐயா எங்களுக்குச் செஞ்ச உதவியெல்லாம், அவர் எங்க மாவட்டத்துல இருந்த காலம் எங்களுக்கெல்லாம் பொற்காலம்’’

கதிரின் அம்மா கலையரசியைப் பார்த்து, ‘‘எந்த கிளாஸ்மா படிக்கிற?’’

கலையரசி, ‘‘ஒன்பதாம் வகுப்பு அத்தை’’ என்றாள். அழகாக பட்டுப் பாவாடை, சட்டை அணிந்து, ஓவியர் இளையராஜாவின் ஓவியம் போல இருந்தாள்.

கதிரின் அம்மா கலையரசியின் கொஞ்சும் தமிழைக் கேட்டு ஆச்சரியத்தில் புருவத்தை உயர்த்தி, ‘‘யப்பா! பிள்ளைங்களை நல்ல தமிழ் பற்றோட வளர்த்திருக்கீங்க!’’

பரஞ்சோதி பவ்யமாக, ‘‘நம்ம மொழிய நாமதானங்கமா பாதுகாத்து வளர்க்கணும்…”

கொஞ்சம் இடைவெளி விட்டு சற்று தயக்கத்துடன்…

“அம்மா நாங்க நடுத்தரக் குடும்பந்தான், இப்ப குடியிருக்கதும் வாடக வீடுதான். வேலையில சம்பளத்தை தவிர வேற எதுவும் வாங்க மாட்டேன். ஐயாவுக்கு என்னைப் பத்தி நல்லா தெரியும். திண்டுக்கல்ல வேலை பார்த்தப்பவே என்னோட நேர்மையை ரொம்ப பாராட்டிருக்காங்க. என்னால பொண்ணுக்கு பெருசா எதுவும் செய்ய முடியாதுங்கம்மா”

அவர் பேசியதை பொறுமையாகக் கேட்டுக்கொண்டிருந்த கதிரின் அப்பா ஜெயச்சந்திரன் இடமறித்து, "ப்ச்…நாங்க அதெல்லாம் ஏதாவது உங்ககிட்ட கேட்டோமா? உங்களைப் பத்தி தம்பி எல்லாம் சொன்னாரு. அப்படிப்பட்ட ஒரு நல்ல குடும்பத்துல பொண்ணு எடுக்கணும்னுதான் வந்திருக்கோம். பையனுக்கும் உங்க பொண்ண ரொம்ப பிடிச்சிருக்கு, உங்க பொண்ண மட்டும் எங்க வீட்டுக்கு அனுப்புங்க போதும்.."

பரஞ்சோதி இலேசான பதற்றத்துடன், "ஐய்யோ, அப்படி இல்லங்கய்யா எங்களால முடிஞ்சத நாங்க நிச்சயமா செய்வோம்.."

ஜெயச்சந்திரன், "சரி சரி அதெல்லாம் பார்த்துக்கலாம் நீங்க முதல்ல பொண்ண வரச்சொல்லுங்க."

பரஞ்சோதி, "கலையரசி, போய் அம்மாகிட்ட சொல்லி அக்காவ கூட்டிட்டு வரச்சொல்லு"

மணப்பெண் பட்டுப் புடவை உடுத்தி, அழகாக சிங்காரித்து அழைத்துவரப்பட்டாள். அவள் அருகில் வரும்வரை பொறுத்திருக்க முடியாமல் கதிரின் அம்மா எழுந்து நேராக அவளிடம் போக, மணப்பெண் அவரது காலைத் தொட்டு வணங்கினாள். கதிரின் அம்மா அவள் தோள்களைத் தொட்டு எழுப்பி முகத்தைப் பார்த்து…"பேருக்கேத்தமாதிரி அம்சமா ராணி மாதிரி இருக்கம்மா, உனக்கு ஒரு குறையும் வராது"

மணப்பெண் வெட்கப்பட்டு தலைகுனிந்தபடி சிரித்தாள். கதிருக்கு நடந்து கொண்டிருப்பவைகள் கனவா நனவா என்பது போல இருந்தது. "திருமணமே இப்போதைக்கு வேண்டாம் என்று வீராப்பு பேசிக்கொண்டிருந்தவன் இப்போது பெண் வீட்டில் உட்காந்து பஜ்ஜி சாப்பிட்டுக்கொண்டு இருக்கிறேனே" என்று தனக்குத் தானே ஆச்சரியப்பட்டுக் கொண்டான்.

ஜெயச்சந்திரன் கதிரைப் பார்த்து, "ஏண்டா 26-ஆம் தேதி ஆரம்பிச்சதுனால எப்படி நடக்குமோன்னு நெனச்சுக்கிட்டு இருந்த, பாரு அடுத்த 9 நாளுக்குள்ள கல்யாணமே fix ஆகிருச்சு. இப்படியெல்லாம் யாருக்காவது நடக்குமா? நாள் கிழமையெல்லாம் பார்க்காம கடவுளை நம்புனா எல்லாம் நல்லபடியா நடக்கும்" என்றார், அவர் சொன்னதை அனைவரும் ஆமோதித்தார்கள்.

அத்தியாயம்:30- கொலையாளி யார்? பாகம்-1

நாள்: 12
06/01/2020 திங்கள்
காலை 11:00 மணி

சாலிகிராமம் ஆர்5 போலீஸ் ஸ்டேஷன்…

மறுநாள் காலை…

அலுவலில் பிசியாக இருந்த எழிலின் கண்களில் அறிவமுது தென்பட, “ஏய் இங்க வா?”

அறிவமுது வந்து கைகளைக் கட்டிக்கொண்டு பணிவாக நின்றான். அறிவமுதும், அவன் அம்மாவும் அப்பாவிகள் என்று தெரிந்தபடியினாலும், அவர்கள் விசாரணைக்கு நன்கு ஒத்துழைப்பதாலும் அவர்களை சில நிபந்தனைகளோடு விடுவித்திருந்தார்கள்.

எழில், “ஒழுங்கா டெய்லி வந்து கையெழுத்துப் போடுறியா?

அறிவமுது பணிவாக ஆம் என்று தலையாட்டினான்.

எழில், “எங்க உங்கம்மா?”

அறிவமுது, கைகளை நீட்டி எழிலுக்குப் பின்னால் நின்று கொண்டிருந்த அம்மாவைக் காட்ட, எழில் அம்மாவைப் பார்த்து “நாங்க கூப்பிடும்போது வரணும், சரியா? கௌம்புங்க ரெண்டு பேரும்” என்று சொல்ல அறிவமுதும், அம்மாவும் அங்கிருந்து கிளம்பினர்.

அவர்கள் வெளியேறிய சில நிமிடங்களில் கதிர் அங்கு வந்தான். நேராக எழிலின் டேபிளுக்கு வந்து

“ஹாய் எழில், என்ன முகம்லாம் ஷைன் அடிக்குது, ஏதாவது குட் நியூஸா?”

சிரித்துக் கொண்டே எழில், “ஆங்…விளையாடாதீங்க… உங்க முகம்தான் பிரகாசமா இருக்கு… அப்ப உங்ககிட்டதான் ஏதோ குட்நியூஸ் இருக்கு, சொல்லுங்க”

கதிர் எழிலுக்கு எதிரே இருந்த நாற்காலியில் அமர்ந்தபடியே, “எங்கிட்ட இப்ப ஒரு சீரியஸான நியூஸ்தான் இருக்கு…”

எழில், "நீங்க வந்தாலே சீரியஸான நியூஸத்தான் கொண்டு வருவீங்கன்னு தெரியும்.. சொல்லுங்க என்னன்னு…”

கதிர், “நாம சந்தேகப்பட்ட மாதிரியே யோகேஷோட சாவு இயற்கையானது இல்ல, யோகேஷ் கொடூரமா கொலை செய்யப்பட்டிருக்கான்…”

எழில் நிஜமாகவே சீரியஸ் ஆனாள், “என்னங்க சொல்றீங்க?”

கதிர், “கொலைக்கான காரணத்தை இன்னும் என்னால கண்டுபிடிக்க முடியல, ஆனா கொலையாளிய கிட்டத்தட்ட கண்டுபிடிச்சுட்டேன்”

எழில் சஸ்பென்ஸை அடக்க முடியாமல் சீட்டின் நுனிக்கே வந்துவிட்டாள், “யாரு...யாரு???”

கதிர், “ரோஷிணி…”

CASE -3

< அன்பழகன்- கதிர் - மர்ம மங்கை >

அத்தியாயம்:31- யாருடா அந்தப் பொண்ணு? - பாகம் 3

நாள்: 1
26/12/2019 வியாழன்
இரவு 11:00 மணி

கதிரின் வீடு…

சம்பவம் நடந்த அன்று, கமிஷனர் அலுவலக மீட்டிங், எழிலுடன் ஹாஸ்டலுக்குச் சென்று விசாரணை, பின்னர் மாலை KFC உணவகத்தில் மீட்டிங் எல்லாம் முடித்துவிட்டு கதிர் வீடு வந்து சேர இரவு 10:00 மணிக்குமேல் ஆகியிருந்தது.

குளித்துவிட்டு, உடை மாற்றிவிட்டு சோபாவில் அமர்ந்து ஒரு இந்திப்பாடலை முணுமுணுத்தபடியே ஐபேடை பார்த்துக்கொண்டிருந்த வேளையில் அங்கு வந்த அவனது அம்மா ஐபேடில் அவன் ஒரு பெண்ணின் போட்டோவைப் பார்த்து கொண்டிருந்ததை கவனித்துவிட்டார். அவள் யாரென கேட்டபோது இன்று கமிஷனர் அலுவலகத்தில் அவளை சந்தித்தேன் என்று கதிர் சொல்லியிருந்தான். அந்தப் பெண்ணைப் பற்றி பேசிக்கொண்டிருக்கும்போதே கதிரின் மொபைலுக்கு ஒரு கால் வர…'முக்கியமான கால்' என்று அம்மாவிடம் சைகை காட்டிவிட்டு, ஐபேடையும் கையில் எடுத்துக்கொண்டு கதிர் அந்த அறையை விட்டு வெளியேறினான்…

கதிர், ‘‘ஆங் சொல்லுங்க சார்…’’

மறுமுனையில் இன்ஸ்பெக்டர் அன்பழகன், ‘‘ தம்பி ஒரு சின்ன உதவி… இன்னிக்கு KFC-ல அந்த பொண்ணுங்க முன்னாடி வச்சு உங்ககிட்ட சொல்றதுக்கு கொஞ்சம் கூச்சமா இருந்துச்சு’’

கதிர், ‘‘பரவால்ல சார் சொல்லுங்க’’

அன்பழகன், "இல்ல தம்பி, அந்த பொண்ணுங்க ரெண்டுபேரும் இன்னிக்கே இன்வெஸ்டிகேஷன் ஸ்டார்ட் பண்ணி ஐயா கிட்ட ரிப்போர்ட் பண்ண ஆரம்பிச்சுட்டாங்க..நான் வேற ஒரு இக்கட்டான கேஸ்ல மாட்டிக்கிட்டு இருக்கேன்’’

கதிர், "அதான் மத்தியானமே சொன்னீங்களே, இன்னும் ரெண்டு மூணு நாள் கழிச்சுத்தான் இன்வெஸ்டிகேஷன் ஸ்டார்ட் பண்ணப் போறேன்னு…’’

அன்பழகன், ‘‘அதான் தம்பி, அத கொஞ்சம் பக்குவமா மாமா காதுல போட்டுருங்க.. நான் ஏதோ லெதார்ஜிக்கா இருக்கனோன்னு ஐயா நெனச்சிரக்கூடாது..எனக்கு ரொம்ப பக் பக்குன்னு இருக்கு தம்பி..’’

கதிர், ‘‘அட அவ்வளோதான சார், நீங்க கவலைப்படாதீங்க, மாமாகிட்ட நான் சொல்லிக்கிறேன்..’’

அத்தியாயம்:32- முகவரியற்றவளைத் தேடி (பாகம்-1)

நாள்: 4
29/12/2019 ஞாயிறு
காலை 07:20 மணி

பெஜின் ஜோசபின் புதிய வீடு…

சம்பவ நாளிலிருந்து மூன்றாவது நாள்…

இன்ஸ்பெக்டர் அன்பழகனும், சப்-இன்ஸ்பெக்டர் பிரதாப்பும் பெஜின் ஜோசப்பை சந்திக்க அவரது புதிய வீட்டுக்கு வந்தனர். இருவருமே மப்டியில் வந்திருந்தனர். அப்போதுதான் அங்கு புதிதாகக் குடியேறியிருக்கும் பெஜின் ஜோசப் குடும்பத்தைக் குறித்து அக்கம்பக்கத்தில் தேவையற்ற குழப்பங்கள் வந்துவிடக்கூடாது என்பதால் இருவரும் போலீஸ் சீருடையில் வரவில்லை. அன்பழகனின் இதுபோன்ற சில மனிதாபிமானமான நடவடிக்கைகள் பிரதாப்புக்குப் பிடித்திருந்தது. ஒருவன் மீது குற்றவாளி என்ற சந்தேகம் வரும் வரையில் அவனிடம் எவ்வளவு கண்ணியமாகவும், மனிதாபிமானமாகவும் நடந்து கொள்ள வேண்டுமோ அப்படி நடந்து கொள்வார், அவன் மீது சந்தேகம் வலுத்துவிட்டால் அப்புறம் அவன் கதி அதோகதிதான். இப்படி பல விஷயங்களை பிரதாப் அவரிடமிருந்து அவன் நிறையவே கற்றுக்கொண்டான்.

பெஜின் ஜோசப் வாசலுக்கு வந்து வரவேற்று வீட்டு ஹாலில் அமரவைத்தார். வீட்டில் மெல்லிய சத்தத்தில் ‘ஸ்நேகம் நீ நாதா’’ என மலையாள கிறிஸ்தவப்பாடல் ஒலித்துக்கொண்டிருந்தது. அதுவரை கடவுளைக் குறித்தெல்லாம் சிந்திக்கவே நேரமில்லாமல் இருந்த அந்தக் குடும்பத்தினர், இந்த சம்பவத்துக்குப் பின்பு முழு இறைபக்திக்கு மாறி விட்டிருந்தனர்.

அன்பழகன், "என்னா சார் அதுக்குள்ள வீடு மாத்திட்டீங்க போல…"

பெஜின் ஜோசப், "அன்னிக்கே வேற வீடு பாத்து, நைட்டோட நைட்டா சர்ச்சுல இருந்து பாஸ்டரை வரவழைச்சு பிரேயர் பண்ணி இங்க குடி வந்துட்டோம் சார்.. அந்த வீட்ல இனி எப்படி சார் குடியிருக்கிறது"

அன்பழகன், "ப்ச்.. ஆமா அதுவும் சரிதான்..அப்படி ஒரு சம்பவம் நடந்தப் பிறகு அந்த வீட்டுல இருக்க முடியுமா? அதப் பார்த்துட்டு எனக்கே அன்னிக்கு நைட்டு தூக்கம் வரல’’

அவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போது பெஜின் ஜோசப்பின் மகள் டீ கொண்டு வந்து கொடுத்தாள். அதை அன்பழகன் வாங்கி ஒரு சிப் உறிஞ்சியபடியே, ‘‘என்னம்மா பயமெல்லாம் போயிருச்சா?’’

அதைக் கேட்டதும் அந்தப் பெண் அழத் துவங்க, அந்த சம்பவம் அந்த சிறு பெண்ணின் மனதில் எத்தகைய பாதிப்பை உண்டுபண்ணியிருக்கிறது என்று அன்பழகன் வேதனைப்பட்டார்.

அன்பழகன், ‘‘பயப்படாதம்மா, அதான் அந்த வீட்ட விட்டு இவ்வளவு தூரம் தள்ளி, வேற நல்ல வீட்டுக்கு வந்துட்டீங்கள்ல, தைரியமா இருக்கணும் சரியா?’’

அவள் சரியென்று தலையாட்டியபடியே கண்ணீரைத் துடைத்தபடி கிச்சனுக்குள் சென்றாள்.

பெஜின் ஜோசப், "அந்தப் பொம்பள யாருன்னு ஏதாவது தகவல் கிடச்சுங்களா சார்?…’’

அன்பழகன் சில வினாடிகள் அமைதியாக டீயின் கடைசி சிப்பை குடித்துவிட்டு டம்ளரைக் கீழே வைத்து, தொண்டையைச் செருமியபடி பேச ஆரம்பித்தார், "autopsy report வந்திருக்கு..சாகும்போது அந்தப்

பொம்பள ஃபுல்லா குடிச்சிருக்கா, அப்புறம் இந்த ஜர்தா பீடா, பான்பராக் போடுற பழக்கம் வேற இருக்கும்போல தெரியுது…இதத் தவிர வேற பெருசா எதுவும் ரிப்போர்ட்ல இல்ல, பாடியையும் சொந்தக்காரங்க யாரும் கேட்டு வரல..

அந்தப் பொம்பள கள்ளச் சாவி போட்டுத்தான் வீட்டத் தொறந்து உள்ள வந்திருக்கா, அப்டீன்னா கள்ளச் சாவி போட்டு திருடுற கும்பல சேர்ந்தவளான்னு அந்த மாதிரி கும்பல்ல இருக்க பொம்பளைங்களோட கைரேகையோட எல்லாம் ஒப்பிட்டுப் பார்த்தாச்சு, எதுவுமே பொருந்தல, அதுவும் உங்க வீட்டுல பொருள் எதுவும் திருடு போகல…கொஞ்சம் குழப்பமாத்தான் இருக்கு, இன்னும் இந்த கேஸ்ல பெருசா ஏதும் வெளிச்சம் கிடைக்கல, தொடர்ந்து விசாரிச்சுக்கிட்டு இருக்கோம்.''

பெஜின் ஜோசப் பெருமூச்சு ஒன்றை விட்டு தனது ஆற்றாமையை வெளிப்படுத்தியபடி வேறு எதுவும் பேசாமல் அமர்ந்திருக்க, அன்பழகன் தொடர்கிறார், "சரி, உங்களுக்கு முன்னாடி யாரு அந்த வீட்ட வச்சிருந்தாங்க, அந்த details-லாம் கொஞ்சம் கொடுங்களேன்''

பெஜின் ஜோசப், ''ஆங் இதோ தர்றேன் சார்..'' என்றபடி பக்கத்திலிருந்த அறைக்குள் போய் ஒரு டாகுமெண்ட்டுடன் திரும்பினார்.

அன்பழகன் அதை வாங்கி, தன்னிடம் உள்ள சில நகல்களுடன் ஒப்பிட்டு திருப்தியுடன் தலையாட்டியபடியே அந்த ஒரிஜினல் டாக்குமெண்ட்டை பெஜின் ஜோசப்பிடம் திருப்பிக் கொடுத்தார்..'' ம்ம்ம்..இதுக்கு முந்தின ஓனர் பேரு முகுந்தன் கல்யாணராமன்'' என்றபடி தன்னிடம் இருந்த நகல்களை பைக்குள் திணித்துக் கொண்டார். இன்ஸ்பெக்டர் தனது வீடு சம்பந்தப்பட்ட டாக்குமெண்ட்டின் நகல்களை ஏற்கனவே ரெஜிஸ்டர் அலுவலகத்திலிருந்து வாங்கி வைத்திருக்கிறார் என்பதை பெஜின் ஜோசப் புரிந்து கொண்டார்.

அத்தியாயம்:33- முகவரியற்றவளைத் தேடி (பாகம்-2)

நாள்: 5
30/12/2019 திங்கள்
காலை 10:35 மணி

சென்னை வளசரவாக்கம் ஆர்-9 காவல் நிலையம்…

மறுநாள் காலை, சப்-இன்ஸ்பெக்டர் பிரதாப் கம்பியூட்டரின் முன் அமர்ந்து Skype அப்ளிகேஷன் மூலம் அமெரிக்காவில் இருக்கும் முகுந்தை தொடர்புகொள்ள முயற்சித்துக் கொண்டிருந்தான். அவன் அருகில் இன்ஸ்பெக்டர் அன்பழகன் அமர்ந்து அவன் செய்வதைப் பார்த்துக் கொண்டிருந்தார். சிறிது நேரத்தில் Skype-இல் அழைப்பு மணி ஒலிக்க, மறுமுனையில் ஸ்கிரீன் திறந்தது. கலிஃபோர்னியாவில் முகுந்த் கல்யாணராமன் தனது வீட்டில் ஸ்வட்டர் அணிந்து உட்காந்திருந்தான். அவனுக்கு ஒரு 35 வயதிருக்கும். பார்பி பொம்மை போலிருந்த அவனது 3 வயது மதிக்கத்தக்க மகள் அவன் கழுத்தைக் கட்டிப்பிடித்தபடி கேமராவை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

பிரதாப் அந்த குட்டி தேவதையின் அழகை இரசித்தபடியே, “வி ஆர் வெரி சாரி மிஸ்டர் முகுந்த், உங்களுக்கு இது நைட் டைம்னு தெரியும். ஒரு பத்தே நிமிஷத்துல நாங்க கேட்கவேண்டிய கேள்விய கேட்டு முடிச்சிடுறோம்.”

முகுந்த், “பரவாயில்ல சார் இங்க நைட் பத்து மணிதான் ஆகுறது. நான் தூங்க இன்னும் டைம் ஆகும் சும்மா சொல்லுங்கோ”

பிரதாப், “நீங்க இதுக்கு முன்னாடி சென்னை ஆழ்வார் திருநகர்ல ஒரு வீடு வச்சிருந்தீங்கள்ல, அதை எதுக்கு சேல் பண்ணீங்கன்னு தெரிஞ்சுக்கலாமா?

முகுந்த், “ஒரு வீடு சீப்பா விலைக்கு வருதுன்னு எங்கப்பா சொன்னாருன்னு வாங்கிப் போட்டேன், வாடகைக்குத்தான் விட்டிருந்தோம், வாடகைக்கு வந்தவா எல்லாம் ரெண்டு மாசம், மூணு மாசத்துலேயே காலி பண்ணி போய்ண்டு இருந்தா. அதுக்கப்புறம் எங்கப்பா என்னென்னமோ பரிகாரமெல்லாம் பண்ணிப் பார்த்தார் ஒண்ணும் செட் ஆகல. சரி அந்த வீட்டுல ஏதோ பிரச்சனை இருக்குன்னு அப்படியே பூட்டிப் போட்டிருந்தோம். யாராவது விலைக்குக் கேட்டா கொடுத்திரலாம்ணு புரோக்கர்ஸ் கிட்ட சொல்லி வச்சிருந்தோம். ஒரு Keralite family வந்தாங்க அவங்ககிட்ட கொஞ்சம் சீப்பான ரேட்டுக்கே வீட்டை வித்துட்டோம்.”

அன்பழகன் பக்கத்திலிருந்து கேமராவை எட்டிப் பார்த்து, “சார் நீங்க அந்த வீட்டை வச்சிருந்தபோது அந்த வீட்டுல மொத்தம் எத்தனை குடும்பங்கள் வாடகைக்கு இருந்தாங்க சார்? அவங்க where abouts-லாம் கொஞ்சம் தர முடியுமா?”

முகுந்த், “சாரி சார் அதெல்லாம் எனக்கு எதுவுமே தெரியாது, நான் இங்க ஃபேமிலியோட யு.எஸ்க்கு வந்து செட்டிலாகி ரொம்ப வருஷம் ஆய்டுத்து. சென்னை மாம்பலத்துல அப்பா மட்டும் இருந்தார் அவர்தான் அதெல்லாம் பார்த்துக்கிட்டார், போன வருஷம் அவரும் தவறிட்டார், அப்ப நான் இந்தியாவுக்கு வந்தபோதுதான் நான் வீட்டை அந்த Keralite family-க்கு வித்து டாக்குமெண்டேஷன் ஒர்க்கெல்லாம் முடிச்சுண்டு வந்தேன்.”

…..

முகுந்துடன் பேசியதில் அது ராசியில்லாத வீடு என்பதைத் தவிர வேறு எந்த ஒரு பயனுள்ள தகவலும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. அது ராசியில்லாத வீடாகத்தான் இருக்க முடியும் என்பதை ஏற்கனவே அன்பழகன் யூகித்திருந்தார் ஏனெனில் அந்த வீடு கடந்த ஆறு வருடங்களில் பல்வேறு நபர்களின்

கைக்கு மாறியிருந்தது. முகுந்த்துக்கு முன் அந்த வீட்டை வைத்திருந்தவர்கள் அனைவரும் சென்னையிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் வசித்து வந்தனர். அவர்கள் ஒவ்வொருவர் வீடாக அலைந்து கண்டுபிடித்து அவர்களிடம் விசாரித்தபோது அவர்கள் அனைவரும் கோரஸாக சொன்ன ஒரே விஷயம் வீடு ராசியில்லை என்பதுதான். அத்தனை பேரிடமும் தூக்கில் தொங்கிய அந்த மர்ம மங்கையின் போட்டோவைக் காட்டியதில் யாருக்குமே அவளை அடையாளம் தெரியவில்லை. அன்பழகனுக்கு பைத்தியம் பிடித்துவிடும்போல இருந்தது.

இன்னும் இரண்டு பார்ட்டிகளை மட்டும் விசாரிக்க வேண்டியதாய் இருந்தது, வீட்டின் செகண்ட் ஓனர் முத்துசாமி செட்டியார் காரைக்குடியில் இருந்தார். முதல் ஓனரைப் பற்றி எந்த க்ளூவும் கிடைக்கவில்லை. அன்பழகனுக்கு ஏற்கனவே மதுரைக்கு செல்ல வேண்டிய ஒரு வேலை இருந்ததால் நேரடியாகவே போய் முத்துசாமி செட்டியாரிடம் விசாரித்துவிடலாம் என்று பிரதாப்புடன் காரைக்குடிக்கு கிளம்பினார்.

நாள்: 7
01/01/2020 புதன்
காலை 11:00 மணி

காரைக்குடி…

‘ஹேப்பி நியூ இயர் வந்ததே…' என்ற 'உன்னை நினைத்து’ படப்பாடல் எல்லா மியூசிக் சேனல்களிலும், எஃபெம்களிலும் ஒலித்துக் கொண்டிருந்தது. ஆங்காங்கே சில சிறுவர்கள் பட்டாசு வெடித்து புத்தாண்டைக் கொண்டாடிக் கொண்டிருந்தார்கள். அன்பழகனும் பிரதாப்பும் ஒருவழியாக முத்துசாமி செட்டியாரின் வீட்டைக் கண்டுபிடித்தனர்…

….

முத்துசாமி செட்டியாருக்கு வயது 50க்கு மேல் இருக்கும். சட்டையில்லாமல் வெறும் வேஷ்டியுடன் ஊஞ்சலில் உட்காந்திருந்தார். அவரிடம் அன்பழகனும் பிரதாப்பும் தங்களை அறிமுகப் படுத்திக்கொண்டனர். அன்பழகன் அந்த வீடு பற்றி பேச்சை எடுத்ததும் செட்டியாரின் முகம் சற்று சுருங்கியது.

அன்பழகன், “அங்க சுத்தி இங்க சுத்தி கடைசில காரைக்குடிக்கு வந்துட்டேன். நீங்கதான் அந்த வீட்டோட செகண்ட் ஓனர்…ஃபர்ஸ்ட் ஓனரைப் பத்தின சரியான தகவல்கள் கிடைக்கல, நிலப்பத்திரத்தில சாட்சி கையெழுத்து போட்ட ஆட்களையும் புடிக்க முடியல…நீங்க யாருகிட்ட இருந்து அந்த வீட்ட வாங்குனீங்க?”

செட்டியார், “சார், அப்ப நான் சென்னைல வேல பாத்துக்கிட்டு இருந்தேன். அந்த வீடு பேங்க் ஜப்தி பண்ணி ஏலம் விட்ட வீடு சார். அதை ஒரு ரியல் எஸ்டேட்காரன் ஏலத்துக்கு எடுத்து எங்கிட்ட வித்தான். சரி வீடு கம்மியான ரேட்டா இருக்கேன்னு வாங்கிப் போட்டேன்..அந்த வீட்டுக்குக் குடிபோனதுல இருந்து ஒண்ணுமே உருப்படல சார்.. ரெண்டே மாசத்துல எனக்கு வேல போயிடுச்சு…அன்னிக்கு ஆரம்பிச்ச கஷ்டந்தான்...அப்புறம் அந்த வீட்ட முறிமுக்காலா வித்துட்டு பழையபடி சொந்த ஊருக்கே வந்து சேர்ந்தோம். இங்க வந்து ஒரு வியாபாரத்தை ஆரம்பிச்சு இப்பத்தான் நல்லா போய்க்கிட்டு இருக்கு. ஐஞ்சு வருஷத்துக்கு மேல ஆச்சு, இது வாடகை வீடுதான். ஆனா அப்ப இருந்த கஷ்டம் இப்ப இல்ல, ஓரளவுக்கு நல்லாவே மீண்டு வந்துட்டோம்”

அன்பழகன், “வீடு ராசி இல்லாத காரணத்துனாலதான் வித்தோம்னு உங்களுக்கப்புறம் வீட்ட வாங்கி வித்தவங்களும் சொல்றாங்க..”

முத்துசாமி செட்டியார், "ஐய்யோ படு பயங்கரமான வீடுசார் அது, இப்ப நெனச்சாலும் மனசுக்கு என்னமோ பண்ணுது.. நாங்க அந்த வீட்ட வாங்கும்போது சுத்தி வேற எந்த வீடுமே இல்ல..தனியா இருக்கும்… நைட் தூங்கக்கூட பயமா இருக்கும் சார்..''

அன்பழகன், ''அந்த வீட்டுக்குள்ள பேய், பிசாசு நடமாட்டம் ஏதாச்சும் இருந்துச்சா?''

செட்டியார், ''அப்படியெல்லாம் எதுவும் இல்ல சார், காரணமே இல்லாம மனசுக்கு ஒரு மாதிரி டல்லாவே இருக்கும், அடிச்சுப்போட்ட மாதிரி தூக்கம் வரும், வேலை செய்ய மனசே வராது, கடுமையான பொருளாதார முடக்கம், தொட்டதெல்லாம் தோல்வி, ஒருமாதிரி எதிர்மறை சக்தி நிறைஞ்ச வீடுசார் அது''

அன்பழகன், ''ஓ..சரி சரி, இதுக்கு மேல நான் உங்களுக்கு பழசை நியாபகப் படுத்த விரும்பல, இந்த போட்டோல இருக்க பொம்பளைய உங்களுக்கு அடையாளம் தெரியுதா பாருங்க..'' தூக்கில் தொங்கியபடி இருக்கும் அந்த மர்மப் பெண்ணின் போட்டோவை செட்டியாரிடம் காட்டினார், அரை நிர்வாணமாக தொங்கிய அந்த மர்ம மங்கையின் மார்பகங்கள் ஃபோட்டோஷாப் உதவியுடன் கறுப்பு நிறப் பட்டையால் முற்றிலும் மறைக்கப்பட்டிருந்தது…

போட்டோவைப் பார்த்த செட்டியார் அதிர்ச்சியடைந்தவராக கிச்சனில் இருந்த தன் மனைவி பார்வதியை சத்தம்போட்டு அழைத்தார், ''ஏய் பாரு, சீக்கிரம் இங்க வந்து பாரு!''

போட்டோவைப் பார்த்ததும் செட்டியாரின் முகம் மாறியதைக் கண்ட அன்பழகனும், பிரதாப்பும் பரபரப்பானார்கள்.

''என்னங்க, இந்தா வர்றேன்'' ஓடிவந்தார் பார்வதி…

செட்டியார் தன் மனைவியிடம் போட்டோவைக் காட்ட, செட்டியாரம்மா போட்டோவைப் பார்த்து அதிர்ந்துபோய், பார்க்க முடியாமல் உடனடியாக செட்டியாரிடம் அதைத் திருப்பிக் கொடுத்துவிட்டார்.

அன்பழகன் ஆர்வமாக, ''ஏங்க, அடையாளம் தெரியுதா? யாருங்க இது…''

பார்வதி, "சார் நாங்க அப்ப அந்த வீட்டுல குடியிருக்கும்போதும் இந்தம்மா அங்க வீட்டு வேலை செய்ய வரும் சார்…''

அன்பழகன், ''பேரு?''

பார்வதி சில வினாடிகள் யோசித்து, ''ஆங்…இது பேரு ருத்ரா''

அன்பழகன், ''ருத்ரா… இது எங்கருந்து வேலைக்கு வரும்..குடும்பமெல்லாம் எங்க இருந்துச்சு?''

பார்வதி, ''இது எங்கேயோ பிளாட்பார்ம்ல தங்கியிருந்துச்சு சார், குடும்பத்தைப் பத்தியெல்லாம் ஒண்ணுமே தெரியல, வேலை நல்லா செய்யும் ஆனா வாயவே திறக்காது, நாம பேசுனாலும் பதில் பேசாது…எப்பவுமே முகம் ஒரு மாதிரி இருளடிச்ச மாதிரிதான் இருக்கும்…இவருகூட சொல்லுவாரு..இந்தப் பொம்பளையப் பார்த்தாலே சூனியக்காரி மாதிரி இருக்கு, வேலைக்கு வைக்காதன்னு..நாந்தான் பாவப்பட்டு வேலைக்கு வச்சுக்கிட்டேன், காரணம் வேலை அவ்வளோ அருமையா செய்யும்..''

அன்பழகன், ''இதப்பத்தி வேற ஏதாவது தகவல் உங்களுக்குத் தெரியுமா?''

பார்வதி, ''வேற எதுவும் தெரியாது சார்''

அன்பழகன், ‘‘சரிங்க… நான் அப்ப கிளம்புறோம்..தகவலுக்கு ரொம்ப நன்றி’’

செட்டியாரும் அவர் மனைவியும் இருவரையும் வாசல்வரை வந்து வழியனுப்பி வைத்தனர்.

அத்தியாயம்:34- முகவரியற்றவளைத் தேடி (பாகம்-3)

நாள்: 8
02/01/2020 வியாழன்
காலை 07:20 மணி

சென்னை தி நகர்…

இன்ஸ்பெக்டர் அன்பழகனும் பிரதாப்பும் அன்றிரவே மதுரையிலிருந்து கிளம்பி அதிகாலையில் சென்னை வந்து விட்டிருந்தனர், பஸ் பயணத்தில் இருவருமே சரியாக தூங்கவில்லை. காலையில் வீட்டுக்குப் போய் சேர்ந்ததும் குளித்துவிட்டு, காலை சிற்றுண்டி முடித்து கிளம்பி மீண்டும் ஸ்டேஷனுக்கு வரவேண்டியதாய் இருந்தது.

திட்டமிட்டபடி காலையிலேயே கதிரும் ஸ்டேஷனுக்கு வந்துவிட்டிருந்தான். அன்பழகன் கதிர் மற்றும் பிரதாப் ஆகியோர் ஜீப்பில் வெளியே கிளம்பினர். சென்னை முழுவதும் சுற்றி, ருத்ரா தங்கியிருந்த பிளாட்ஃபார்ம் எது என்று கண்டறியும் முயற்சியில் அவர்கள் இறங்கியிருந்தனர்.

அன்பழகன் கொஞ்சம் சலித்துக் கொண்டவராக, ‘‘மெட்ராஸ்ல, டி நகரு, எக்மோரு, சேப்பாக்கு, கோயம்பேடு, சூளை, வால்டாக்ஸ் ரோடு, மவுண்ட் ரோடு இப்படி ஏகப்பட்ட இடங்கள்ல நூத்துக்கணக்கான பேரு பிளாட்ஃபார்ம்ல குடி இருக்காங்க, இதுல ருத்ரா குடும்பத்த நாம எங்க போயி தேடுறது?’’

கதிர், ‘‘பரவால்ல சார், இந்த lead-டாவது கெடச்சிருக்கே நமக்கு’’

அன்பழகன் ஆமோதித்தபடி, ‘‘அதச் சொல்லுங்க, ஆனா இதக் கண்டுபிடிக்கிறதுக்குள்ளயே நாக்கு தள்ளிருச்சு எனக்கு… எக்மோரு, சேப்பாக்கு, கோயம்பேடு முடிச்சாச்சு..தி நகர்லயாச்சும் அந்தக் குடும்பம் இருக்கா பார்ப்போம்…

தி நகர், நார்த் உஸ்மான் ரோட்டில் பிளாட்ஃபாரவாசிகள் தங்கியிருந்த ஒரு இடம் வந்ததும் அந்த இடத்தில் ஜீப்பை நிறுத்தச்சொல்லி டிரைவரிடன் அன்பழகன் சொல்ல, ஜீப் அவர்கள் வசிக்கும் இடத்துக்கு அருகில் சென்று ஓரங்கட்டப்பட்டது. போலீஸ் ஜீப் வந்து அருகில் நிற்பதைப் பார்த்தவுடன் அந்தப் பிளாட்பாரவாசிகளின் மனங்களுக்குள் ஒருவித இனம்புரியாத பயம் பரவியது.

‘‘ஏ இங்க வாம்மா’’ அங்கிருந்த ஒரு 70 வயது மூதாட்டியை அன்பழகன் அழைத்தார். அந்தப் பெண் உடனே எழுந்து வந்தார்.

அந்தப் பெண் அவர் அருகில் வந்தவுடன், அன்பழகன் அந்த மூதாட்டியிடம் ருத்ராவின் போட்டோவைக் காட்டி, ‘‘இந்தப் பொம்பளைய ஒனக்கு தெரியுமா’’

தூக்கில் தொங்கிய கோலத்தில் ருத்ராவின் போட்டோவைப் பார்த்ததும் அந்த மூதாட்டி தலையில் அடித்துக் கொண்டு ‘‘ஐயய்யோ..அடியேய், வந்து பாருங்கடி இந்த சிறுக்கி கிடக்க கோலத்த..’’ அவர் போட்ட சத்தத்தில் அடுத்த நொடியில் அனைவரும் ஓடிவந்து அந்த மூதாட்டியைச் சூழ்ந்தனர். ருத்ராவின் போட்டோவைப் பார்த்த பெண்களெல்லோரும் சத்தமிட்டு அழத் தொடங்கினர்.

கதிர், ‘‘சரி சரி இருங்க இருங்க… அவங்க குடும்பத்து ஆளுக இதுல யாரு இருக்கீங்க?’’

அந்த மூதாட்டி, "அவுங்க குடும்பத்து ஆளுகள்லாம் யாரும் இங்க இல்ல சார், புருஷன் ரெண்டு புள்ளைக எல்லாம் பாட்னால இருக்காங்களாம்.. அதையும் இவ சொல்லித்தான் எங்களுக்கு தெரியும், இங்க யாருமே வந்ததுல்ல…ஒரு மூணு வருஷமா இங்கதான் இருக்கா…’’

கதிர், “சரி அந்தம்மா தங்கிருந்த இடத்தைக் காட்டுங்க…”

பிளாட்பாரவாசிகள் ஒரு இடத்தைக் காட்டினார்கள். சுருட்டி வைக்கப்பட்ட தார்ப்பாய், கிழிந்த பேக்குகள், அதனுள் பழைய உடைகள் என பரிதாபமாக அவள் வசித்த இடம் காட்சியளித்தது. சில மது பாட்டிகளும் அவள் பைக்குள் இருந்தது. ஒரு மொபைல் சார்ஜர் பைக்குள் இருந்தது. உள்ளேயிருந்து கதிர் ஒரு பழைய போட்டோவை எடுத்தான். அது ருத்ராவின் குடும்பப் போட்டோபோல தெரிந்தது. அந்த போட்டோ மழைநீரில் நனைந்து சிதிலமடைந்து இருந்ததால் முகங்கள் எதுவும் தெளிவாகத் தெரியவில்லை.

கதிர், “இந்தம்மா மொபைல் போன் வச்சிருந்துந்தாங்களா?”

பிளாட்பாரவாசிகளில் ஒருவர், "ஆமா சார்”

கதிர், "மொபைல் போன் அந்த பைக்குள்ள இல்லையே?”

பிளாட்பாரவாசிகளில் இன்னொரு இளைஞன், “அது எடுத்துட்டுப் போயிருக்கும் சார், அங்க வேலை செய்யுற வீட்டுலதான் சார்ஜ் போட்டுட்டு வரும்”

அதுவரை சாதாரணமாகப் பேசிக்கொண்டிருந்த அன்பழகனின் தொனியில் திடீரென கடுமை தொனித்தது, “டேய் அந்தம்மா செத்த இடத்துல மொபைல் இல்ல”

கதிர், “டேய் யாராச்சும் எடுத்துட்டுப்போய் வித்துட்டீங்களா?”

மிரட்டும் தொனியில் அன்பழகன் மிக சத்தமாக, "ஏய்.. எல்லோரும் நல்லா கேட்டுக்க, 24 மணிநேரம் டைம் தர்றேன்.. மொபைல எடுத்தவன் ஒழுங்கு மரியாதையா வளசரவாக்கம் ஸ்டேஷன்ல கொண்டு வந்து ஒப்படச்சிரு… அப்டிப் பண்ணா மன்னிச்சு விட்ருவேன், இல்ல வேனை கொண்டு வந்து, அத்தன பேரையும் அள்ளி போட்டுட்டுப் போயி, கட்டிவச்சு தோலை உரிச்சிருவேன்… ஆம்பள பொம்பளை யாரையும் பார்க்க மாட்டேன்…எவனும் எங்கேயும் தப்பிச்சு ஓடமுடியாது.”

சொல்லிவிட்டு அங்கிருந்து கிளம்புகிறார்கள்…அவர்கள் போவதை அன்பழகனிடம் பேசிய முதலில் அந்த வயதான மூதாட்டி பயத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்.

அத்தியாயம்:35- இணையத் தொடங்கும் புள்ளிகள்

நாள்: 10
04/01/2020 சனிக்கிழமை
மாலை 06:00 மணி

சென்னை வளசரவாக்கம் ஆர்-9 காவல் நிலையம்…

மறுநாள் மாலை நேரம்…அன்பழகனும் மற்ற காவலர்களும் ஒரு நபரை லத்தியால் அடித்து துவைத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்பொழுது அந்த பிளாட்பார மூதாட்டி அங்கு வந்து பயந்து பம்மியபடி நிற்கிறார். அவரைப் பார்த்த அன்பழகன் அவனை அடிப்பதை நிறுத்திவிட்டு தனது இருக்கையில் அமர்ந்துவிட்டு பின்னர் அந்த மூதாட்டியை சைகையில் அழைக்கிறார்,

மூதாட்டி அருகில் வந்தவுடன் அன்பழகன், ‘‘சொல்லு என்ன விஷயம்?’’

‘‘சாமி மன்னிச்சிரு சாமி, என் பேரன்தான் அந்த போனை எடுத்துட்டுப் போயி வித்துட்டான்…ருத்துரா இல்லாத நேரத்துல அவ பைக்குள்ள இருந்து போன் மணி அடிச்சிக்கிட்டே இருந்துச்சு.. அந்தப் பய போய், அவ பையத் தொறந்து, அத எடுத்துட்டு வந்துட்டான்.. நான் சொல்லச் சொல்லக் கேக்காம போனைத் திறந்து (சிம்கார்டைக் காட்டி) இத எடுத்து கீழ போட்டுட்டு, அந்த போனைக் கொண்டு போயி வித்துடாங்கய்யா. நான் இதை எடுத்து பத்திரமா வச்சிருந்தேன். அதுதான் இதை உங்ககிட்ட கொடுக்கலாம்னு கொண்டாந்தேன்’’

‘‘ம்ம்ம்..கொடு’’, அன்பழகன் அந்த சிம்கார்டை மூதாட்டி கையிலிருந்து வாங்கினார்.

‘‘சாமி…சின்னப்புள்ள தெரியாம பண்ணிட்டான், அவன ஒண்ணும் பண்ணிறாதீங்கையா..’’ மூதாட்டி கையெடுத்து கும்பிட்டு அழுதார்…

அன்பழகன், ‘‘ஒண்ணும் பண்ணமாட்டேன், நீ போ…’’ மூதாட்டி அங்கிருந்து கிளம்ப…
அன்பழகன் அவரை மீண்டும் அழைத்தார், ‘‘ஏ ஆயா, இங்க வா’’

மூதாட்டி திரும்பி அவரிடம் வர, அன்பழகன் தனது பர்ஸிலிருந்து 200 ரூபாய் நோட்டை எடுத்து அவரிடம் கொடுக்க, அதை சற்றும் எதிர்பாராத அந்த மூதாட்டி அதை வாங்கி தன் கையில் சுருட்டி வைத்தபடியே அங்கிருந்து கிளம்பினார்.

……

ஒரு மணி நேரம் கழித்து…

எஸ்.ஐ பிரதாப் அன்பழகனிடம் வந்து, ‘‘சார், இந்த சிம்கார்டை செக் பண்ண சொன்னீங்கள்ல, தரோவா அனலைஸ் பண்ணிட்டேன் சார்…’’

அன்பழகன், ‘‘சொல்லு’’

பிரதாப், "சார், இந்த சிம்கார்டு ருத்ரா பேருல ரிஜிஸ்டர் ஆகல, மதுரை பக்கத்துல சோழவந்தான்ல இருக்கிற மாரிமுத்துங்கிறவர் பேருல ரிஜிஸ்டர் ஆயிருக்கு.. அவர் வீட்டு லேண்ட்லைனுக்கு போன் பண்ணி கேட்டப்ப அவரு ஒய்ஃப்தான் கால் அட்டண்ட் பண்ணாங்க. மாரிமுத்து ஒரு வேலையா இப்ப சென்னைக்குதான் வந்திருக்காராம், அவரு மொபைல் ரிப்பேரா இருக்காம், சர்வீசுக்கு கொடுத்திருக்காராம். அவங்க ருத்ராவுக்கு ரிலேட்டிவ்தானாம் சார்…அவரு இன்னிக்கு நைட் வீட்டுக்கு போன்பண்ணா நீங்க பேசுனதை சொல்லி, அவரை ஸ்டேஷனுக்கு வந்து பார்க்க சொல்றேன்னு அவங்க

ஒய்ஃப் சொன்னாங்க சார். என்ன விஷயம்னு கேட்டாங்க, நான் ருத்ரா மரணம் பற்றி அவங்ககிட்ட எதுவும் சொல்லல. அவரை உடனே ஸ்டேஷனுக்கு வந்து பார்க்க சொல்லுங்கன்னு மட்டும் சொல்லிட்டேன்.

அதுக்கப்புறம் இந்த சிம்கார்டுல, வெறும் எட்டு போன் நம்பர்தான் ஸ்டோர் ஆகிருக்கு, அந்த நம்பர்ஸ்ல இருந்து மட்டுந்தான் இன்கம்மிங் அவுட்கோயிங் போயிருக்கு சார். அந்த எல்லா நம்பர்களையும் try பண்ணிப் பார்த்தேன். அதுல ஒரு நம்பர் மாரிமுத்தோடது. அவர் போன் ரிப்பேராயிருக்கிறதால கால் போகல

மத்தது எல்லாமே ருத்ரா வேலை பார்த்த இடங்களோட போன் நம்பருங்கதான்…மோஸ்ட்லி இந்த வடபழனி, சாலிகிராமம் அந்த சரவ்ண்டிங்தான்…

ஹோட்டல் ரெஹமத்
அனுபமா தையல் பயிற்சிப் பள்ளி
பழமுதிர்ச்சோலை
மதி லேடீஸ் ஹாஸ்டல்…"

அன்பழகனுக்கு தூக்கி வாரிப் போட்டது, "என்னது, மதி லேடீஸ் ஹாஸ்டலா?"

பிரதாப், "யெஸ், சார், சாலிகிராமத்துல உள்ளது"

அன்பழகன் சில நிமிடங்கள் மௌனமானார்.. பின்னர் டெலிபோனை சுழற்றி.."

"ஹலோ எழிலரசி"

எழில், "ஹலோ சார், சொல்லுங்க, எப்படி இருக்கீங்க"

அன்பழகன், "ம்ம்..நான் நல்லா இருக்கேம்மா, நம்ம கேஸ்ல ஒரு எதிர்பாராத திருப்பம்…என்னோட கேஸ் victim ருத்ரா, உங்க கேஸ் ரோஷினி தங்கியிருந்த அந்த ஹாஸ்டல்லதான் வேலை பார்த்திருக்கா…அத இப்பத்தான் கண்டுபிடிச்சோம்.."

எழில் அதிர்ச்சியாக, "அப்படியா?"

மறுமுனையில் எழில் இன்னும் ஏதோ சொல்ல, அதை அமைதியாகக் கேட்ட அன்பழகன் "ஓகே ப்ரசீட் பண்ணுங்க" என்று மட்டும் சொல்லிவிட்டு போனை கட் செய்தார்"

அத்தியாயம்:36- அமிலத்தில் குளித்தவள்

நாள்: 11
05/01/2020 ஞாயிறு
இரவு 10:00 மணி

சென்னை வளசரவாக்கம் ஆர்-9 காவல் நிலையம்…

அடுத்த நாள் இரவு 10:00 மணி…

கதிர் திண்டுக்கல்லுக்குச் சென்று பெண் பார்த்து முடித்த கையோடு இரவு சென்னைக்கு வந்ததும் நேராக அன்பழகனின் ஸ்டேஷனுக்கு வந்து அவருக்காக காத்துக் கொண்டிருந்தான். ஏதோ வேலையை முடித்துவிட்டு வந்த அன்பழகன் கதிரை வரவேற்றபடி வந்து தனது இருக்கையில் அமர்ந்தார்.

“என்ன தம்பி, பொண்ணு பாக்குற படலமெல்லாம் முடிஞ்சுச்சா?”

கதிர், “ஆங்..இன்னிக்கு காலைலதான் சார் போய் பொண்ணு பார்த்து பூ வெச்சுட்டு வந்தாச்சு”

அன்பழகன், “உங்க செலக்ஷன் அருமை தம்பி, ரொம்ப நல்ல பொண்ணு..டிப்பார்ட்மெண்ட்லயே அதுக்கு ஒரு நல்ல பேர் இருக்கு, யாரை கேட்டாலும் தங்கமான புள்ளைன்னு சொல்லுவாங்க. உங்களையும் சும்மா சொல்லக்கூடாது, ஃபாரின்ல படிச்சவரு, அந்தப் பொண்ணை கூட்டிட்டு பார்க்கு, பீச்சுன்னு சுத்தாம அம்மா அப்பாவை வச்சு அழகா கல்யாணமே பேசி முடிச்சிட்டீங்க”

பேசிக்கொண்டே கதிரின் கைகளைப் பிடித்துக் குலுக்கி, “வாழ்த்துக்கள்” என்று சொல்ல, கதிர் அவரது கைகளை விடாமல் குலுக்கியபடி “உங்களுக்கும் வாழ்த்துக்கள் சார், கேஸ்ல முக்கால் வாசிய முடிச்சிச்சீங்க போல…”

அன்பழகன் சந்தோஷமாக, “முடிஞ்சுச்சு தம்பி, ருத்ராவோட சொந்தக்காரன் மாரிமுத்துன்னு ஒரு ஆள் இப்ப வருவான். அவன் வந்து, அவனை விசாரிச்சா கேஸ் முழுசா முடிஞ்சுரும்னு நம்புறேன்… பார்ப்போம்”

கதிர், “பரவால்ல சார், ப்ரியாவுக்கும் எழிலுக்கும் பின்னால கேசை ஆரம்பிச்சு, அவங்க ரெண்டுபேருக்கும் முன்னாலயே முடிச்சுட்டீங்க..”

அன்பழகன், “அதான் தம்பி அனுபவம்கிறது, அதுவுமில்லாம உங்க உதவி வேற எனக்கு இருந்துச்சில்ல தம்பி..”

கதிர், “ அதெல்லாம் ஒண்ணும் இல்ல சார், உங்க கேஸ்ல என்னோட contribution ரொம்ப ரொம்ப கம்மி, முழுசா கண்டுபிடிச்சது நீங்கதான்…”

அன்பழகன் சிரித்தபடியே, "ஆமாமா, நீங்க பெரும்பாலும் எழில் கேஸ்லதான் ரொம்ப இன்வால்வ்டா இருந்தீங்க…”

கதிர், “இல்ல சார் அந்த கேஸ்ல என்னோட assistance எழிலுக்கு ரொம்ப தேவை பட்டது…”

அவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போது ஒரு கான்ஸ்டெபிள் மாரிமுத்துவைக் கூட்டி வந்து அன்பழகன் முன் நிறுத்துகிறார்.

“சார், மாரிமுத்து”

மாரிமுத்துவை ஏற இறங்கப் பார்க்கும் அன்பழகன் அவனை உட்காரச் சொல்லுகிறார்…

……

மாரிமுத்துவிடம் அவனைக் குறித்த தகவல்களை விசாரித்து அறிந்த பின்பு ருத்ராவின் மரணத்தைக் குறித்து அவனிடம் தெரிவித்து, அது சம்பந்தமான சில போட்டோக்களை அவனிடம் காட்டியதும் அவன் வெடித்து அழ ஆரம்பித்தான். அவனுக்கு ருத்ரா இறந்த செய்தி அப்பொழுதுதான் தெரிந்தது. அவனை ஆசுவாசப்படுத்திவிட்டு அவனிடம் ருத்ரா பற்றி விசாரித்தனர்.

மாரிமுத்து பேச ஆரம்பித்தான், மாரிமுத்து சொல்லுவதை அப்படியே கதிர் தனது ஐஃபோனில் வீடியோ பதிவு செய்தான்…

“ருத்ரா என்னோட அக்காதான் சார், பெரியம்மா பொண்ணு. நடுத்தரக் குடும்பந்தான். எங்க பெரியப்பா பலசரக்குக்கடை வச்சிருந்தாரு. அவருக்கு ருத்ரா ஒரே பொண்ணுதான். ரொம்ப கஷ்டப்பட்டு அவளுக்கு கல்யாணம் பண்ணி வச்சாங்க… மாப்பிள்ள ஏதோ பிஸினஸ் பண்ணாரு, ரொம்ப நல்ல டைப், அவருக்கு அப்பா அம்மா யாரும் இல்ல, சென்னையில ஒரு அநாதை ஆசிரமத்துல வளந்தவரு, ருத்ராவுக்கு கல்யாணம் முடிஞ்ச அடுத்த ரெண்டு வருஷத்தில பெரியப்பாவும் பெரியம்மாவும் அடுத்தடுத்து இறந்துட்டாங்க..

கல்யாணம் முடிஞ்சு ஒரு குழந்தை பிறந்தவுடனே அவன் பொறந்த ராசியோ என்னமோ மாப்பிள்ளைக்கு பிசினஸ்ல திடீர் அதிர்ஷ்டம் அடிக்க ஆரம்பிச்சது.. சரசரசரன்னு முன்னுக்க வந்தாங்க.. ரெண்டாவது குழந்தையும் பொறந்திருச்சு… மாப்பிள்ளைக்கு தான் அநாதையா வளர்ந்த மெட்ராஸ்ல குடியேறி அங்க பிசினஸ் பண்ணி ஜெயிக்கணும்னு ஆசை… நாலே வருஷத்துல மெட்ராஸ்ல சொந்த வீடு கட்டிட்டாங்க…

வீட்டோட கிரகப்பிரவேசமெல்லாம் சும்மா திருவிழா மாதிரி நடந்துச்சு சார்.. “

அழுகை அவனுக்கு தொண்டையை அடைத்துக் கொண்டு வந்தது… “எந்த வீட்டுல ருத்ரா வேலைக்காரியா பத்து பாத்திரம் தேச்சுச்சோ, எந்த வீட்டுல அநாதையா தூக்குல தொங்குச்சோ… அந்த வீடு அதோட சொந்த வீடு சார்…

மாரிமுத்து மறுபடியும் உடைந்து போய், ஸ்டேஷனே அதிரும்படி சத்தமிட்டு அழ ஆரம்பித்தான். ஸ்டேஷன் சில நிமிடங்கள் அமைதியானது. யாருக்கும் அவனுக்கு ஆறுதல் சொல்லத் தெரியவில்லை. கதிர் வீடியோ பதிவை pause செய்தான். அன்பழகன் தனது சீட்டை விட்டு எழுந்து மாரிமுத்து அருகே போய் அவன் தோள்களில் கைவைத்து ஆறுதலாகத் தட்டிக்கொடுத்தார்.

பெஜின் ஜோசப் குடியிருந்த வீட்டின் முதல் சொந்தக்காரி ருத்ராதான் என்ற செய்தி கேட்ட அனைவரது நெஞ்சையும் கசக்கிப் பிழிந்தது…

சில நிமிடங்களில் அழுது முடித்த மாரிமுத்து ஆசுவாசமடைந்தான். கதிர் தனது பாக்கெட்டில் இருந்து ஒரு கைக்குட்டையை எடுத்து மாரிமுத்துவிடம் நீட்ட அவன் அதை வாங்கி, முகத்தைத் துடைத்துக் கொண்டான். கொஞ்சம் தண்ணீர் குடித்தான்..பின்னர் தொடர்ந்தான். கதிரும் தனது வீடியோ பதிவைத் தொடர்ந்தான்…

“நீங்க காண்பிச்ச போட்டோல, அந்த ஹால்ல அது தூக்குல தொங்குச்சுல்ல, அந்த இடத்துல அப்ப ஒரு பெரிய ஊஞ்சல் கட்டிருந்தாங்க சார், அந்த ஊஞ்சல்லதான் நடுவுல இவ உட்காந்துக்கிட்டு மடியில இந்தப்பக்கம் பெரியவனையும், அந்தப்பக்கம் சின்னவனையும் படுக்கவச்சு ஊஞ்சல் ஆடிக்கிட்டே பாட்டுப்பாடி அவனுகளை தூங்க வைப்பா…மகாராணி மாதிரி இருந்தா சார் அவ…

அதுவரைக்கும் நல்லா போயிக்கிட்டு இருந்த வாழ்க்கை புதுவீடு கட்டி குடி வந்தவுடனே தலைகீழா மாற ஆரம்பிச்சிருச்சு..வியாபாரத்துல பயங்கர நஷ்டம்..அதை சரிசெய்ய மாப்பிள்ள ஒரு பெரிய தொகைய வட்டிக்கு வாங்குனாரு.. அதையும் கட்ட முடியாத சூழ்நிலை..

இப்படி இருக்கும்போது, ஒருநாள் மாப்பிள்ளையும் ரெண்டு புள்ளைகளும் வீட்டுல இருந்திருக்காங்க, ருத்ரா மார்கெட்டுக்குப் போயிட்டு வந்திருக்கு…வீட்டுக் கதவ தட்டிப் பார்த்திருக்கு.. யாரும் திறக்கல..அக்கம் பக்கத்துல வேற வீடுகளே இல்லையே.. உள்ளயிருந்து ஏதோ தீயிற வாட வந்திருக்கு… சைடுல போயி ஜன்னல திறந்து பார்த்திருக்கா…

நெனச்சாலே ஈரக்கொல நடுங்குது சார்…

சார், புருஷனும், பிள்ளைங்க ரெண்டு பேரும் கரண்ட் ஷாக் அடிச்சு, மூணுபேரும் அப்படியே கருகிக் கிடந்திருக்காங்க சார்.. கீழ இருந்த சுவிட்ச் போர்டுல போயி சின்னவன் ஏதோ கம்பிய விட்டு விளையாண்டிருந்திருக்கான், அவனை ஷாக் அடிச்சவுடனே பெரியவன் அவனைப் போயி இழுக்க முயற்சி பண்ணிருக்கான் அவனுக்கும் ஷாக் அடிச்சிருச்சு, பாத்ரூம்ல குளிச்சுக்கிட்டு இருந்த மாப்பிள்ள சத்தம் கேட்டு ஓடி வந்து பிள்ளைகளை தொட்டவுடனே அவரு உடம்புலயும் கரண்ட் தாக்கி மூணுபேருமே ஒருத்தர ஒருத்தர் பிடிச்சுக்கிட்டே கருகி செத்து கிடந்திருக்காங்க சார்…

அந்தக் காட்சியப் பார்த்த ருத்ராவுக்கு எப்படி இருந்திருக்கும்? கீழ விழுந்து புரண்டு கதறி துடிச்சிருக்கா..என்னன்னு கேட்கக்கூட அக்கம் பக்கம் யாருமே இல்ல சார். கொஞ்ச தூரத்துல ஒரு வீடு இருந்துருக்கு. அந்த வீட்டம்மா மொட்ட மாடியில துணி காயப்போட வந்தது ருத்ரா தரையில உருண்டு அழுது கதறுறதைப் பார்த்துட்டு ஏதோ அசம்பாவிதம்னு தன்னோட வீட்டுல இருந்த ஆம்பிளைங்களைக் கூட்டிட்டு ஓடி வந்திருக்காங்க…

வந்து பார்த்துட்டு மெயினை ஆஃப் பண்ணிட்டு, கதவை உடைச்சு திறந்து உள்ள போயிருக்காங்க. அதுக்கப்புறம் நாங்கள்லாம் ஊருல இருந்து வந்து அடக்கம் பண்ணோம். இது சம்பந்தமா நாங்க போலீஸ், கேஸ்னு அலைய விரும்பல. அதுனால போலீஸ்க்கு எந்த தகவலும் கொடுக்காம வீட்டை பூட்டிப் போட்டுட்டு ருத்ராவை எங்க வீட்டுக்கு நான் கூட்டிட்டுப் போயிட்டேன்.

அன்பழகன் இடமறித்தார், “இருங்க, இருங்க..ருத்ராவோட குடும்பம் பாட்னால இருக்கிறதா அந்த பிளாட்ஃபார்ம்ல இருந்தவங்க சொன்னாங்களே..”

மாரிமுத்து, “அது பொய் சார், தனக்கு புருஷன் இல்லைன்னு தெரிஞ்சா யாராச்சும் தன்கிட்ட தப்பா நடந்துக்குவாங்க அப்டீங்கிற பயத்துல அப்படி சொல்லிவச்சிருக்கிறதா ருத்ராவே எங்கிட்ட சொல்லுச்சு”

அன்பழகன், “ஓ…சரி, மேல சொல்லுங்க”…

மாரிமுத்து தொடர்ந்தான், "இதுக்கு இடையில கடனை கட்டமுடியாம கொஞ்ச நாள்ல அந்த வீடு ஜப்தியாகிருச்சு, ருத்ராக்கு எங்கள விட்டா வேற யாருமே இல்ல..எங்க வீட்டுல கொஞ்ச நாள் தங்கியிருந்துச்சு, என் பொண்டாட்டிக்கு அது புடிக்கல... அவ கொடுத்த டார்ச்சர்ல அங்க இருக்க புடிக்காம ஒருநாள் யாருகிட்டேயும் சொல்லாம எங்கேயோ கெளம்பிப் போயிருச்சு சார், நானும் எங்கெங்கேயோ தேடிப் பார்த்தேன் கெடைக்கல…

ஒரு வருஷத்துக்கப்புறம் ஒருநாள் பாட்னால இருந்து திடீர்னு போன் பண்ணுச்சு, உன் ஞாபகம் வந்துச்சு தம்பி, உன் குரலை கேட்கணும்போல இருந்துச்சுன்னு சொல்லி, வேற எதுவுமே பேசாம கொஞ்ச நேரம் அழுதுட்டு போன வச்சிருச்சு…அதுக்கப்புறம் அதுகிட்ட இருந்து எந்த போனும் வரல. அது உசிரோட இருக்கா இல்லையான்னே எனக்குத் தெரியாம இருந்துச்சு.

மூணரை வருஷத்துக்கு முன்னாடி ஒருநாள் திடீர்னு, நான் சென்னை வந்துட்டேன்னு போன் பண்ணுச்சு, உடனே ஒடிப் போயி பார்த்தேன் சார்.. ஆளே கந்தரகோலமா மாறி, குடிப்பழக்கத்துக்கு அடிமையாகி, வாயில எப்பவும் பீடாவ ஒதப்பிக்கிட்டு…பார்க்கவே கொடுமையா இருந்துச்சு சார்…ஒரு நல்ல ஓட்டலுக்கு கூட்டிட்டுப் போயி சாப்பாடு வாங்கிக் கொடுத்தேன். அன்னிக்கு என் வீட்டு விட்டுப் போனதுக்கப்புறம் என்ன நடந்துச்சுன்னு அது வாயாலயே சொல்லுச்சு…

“அன்னிக்கு உன் வீட்டுல இருந்து கௌம்பி மதுரைக்கு போனேன்.. எங்க போறது, என்ன செய்யுறதுன்னு தெரியாம சுத்திக்கிட்டு இருந்தேன். பயங்கரமான பசி, வட இந்திய கும்பல் ஒண்ணு எனக்கு சாப்பாடு குடுத்துச்சு…எங்க ஊருக்கு வர்றியா வேல வாங்கித் தற்றேன்னு சொல்லி கூட்டிட்டுப் போச்சு.. பாட்னால போயி ஒரு செங்க சூளையில வேல பார்த்தேன்.. அப்புறம் அங்க புடிக்காம சென்னைக்கு வந்தேன்,

இங்க வந்தவுடனே குடும்பத்து ஞாபகம் ரொம்ப வந்துருச்சு, அவங்க கூடத்தான் வாழமுடியல அவங்க கூட வாழ்ந்த அந்த வீட்டையாவது கண்ணாற பாத்துக்கலாம்னு சொல்லி அந்த வீட்டுல அப்ப குடியிருந்தவங்ககிட்ட கேட்டு பத்து பாத்திரம் தேய்க்கிற வேலைக்கு போனேன்…அந்த வீட்டுக்கு ஒவ்வொரு தடவை போகும்போதும் உங்க மாமா சத்தமும், உன் மருமகனுக ஓடி விளாடுற சத்தமும் என் காதுல கேட்டுக்கிட்டே இருக்கும்ப்பா…அந்த சந்தோஷமும் எனக்கு கொஞ்ச நாள்தான். திடீர்னு அவங்க அந்த வீட்டை காலி பண்ணி போயிட்டாங்க, வீடு ரொம்ப நாள் பூட்டியே கிடந்துச்சு.

சரி, இனி இங்க இருந்து என்ன செய்யன்னு பம்பாய்க்கு போனேன். அங்க சரியான வேலை எதுவும் கிடைக்காம வயித்த நெரப்பிக்கிறதுக்கு கள்ளச்சாவி போட்டு பூட்டை திறக்குற கும்பலோட சேர்ந்து திருட ஆரம்பிச்சேன்… அங்கதான் பசி தெரியாம இருக்கவும், துக்கத்தை மறக்கவும் இந்த கேடுகெட்ட பீடா, பான்பாராக்கு, குடிப்பழக்கம் எல்லாம் வந்து ஒட்டிக்கிடுச்சு. எங்கூட இருந்த சிலர் போலீஸ்ல மாட்டவும் போலீஸ் என்னையும் தேட ஆரம்பிச்சு… அங்க இருந்து தப்பிச்சு கடைசியா இப்ப இங்க வந்து நிக்கிறேன்னு சொல்லுச்சு.

பழையபடி வீட்டுக்கு வா, எங்க கூடவே இருன்னு கூப்பிட்டேன், ரோஷக்காரி வரமாட்டேன்னுட்டா… நான்தான் எங்கிட்ட இருந்த போனை குடுத்து ஒரு சிம்கார்டும் போட்டு குடுத்துட்டு வந்தேன்.

அந்த பிளாட்பார்ம்லயே மூணு வருசத்துக்கு மேல ஓட்டிருச்சு.. என்னாலயும் அடிக்கடி வந்து பார்க்க முடியல. அது இறந்துபோன விஷயமே நீங்க சொல்லித்தான் சார் தெரியும்”

அதுவரை மாரிமுத்து சொன்னதைக் கேட்டுக்கொண்டிருந்த அன்பழகன் சற்று துக்கம் தோய்ந்த குரலில், “நாங்க ஆளு யாருன்னு கண்டுபிடிக்கவே 10 நாளாகிடுச்சு, ஆளு யாருன்னு அடையாளம் தெரிஞ்சாத்தான நாங்க சொந்தக்காரங்கள கண்டுபிடிச்சு பிணத்தை ஒப்படைக்க முடியும். நாங்க முறைப்படி செய்ய வேண்டிய ஈமச்சடங்குகளை செஞ்சு முடிச்சிட்டோம்..ரொம்ப நன்றி மாரிமுத்து…உங்க அக்காவோட ஆன்மா அவங்க புருஷன், புள்ளைகளோட நிம்மதியா இளைப்பாறாட்டும்..வேற என்ன சொல்றதுன்னு எனக்கு தெரியல.. நாங்க வேற ஏதாவது தகவல் தேவைப்பட்டா உங்களைக் கூப்பிடுறோம்… நீங்க கொஞ்சம் சென்னைக்கு வந்துட்டுப் போக வேண்டியது இருக்கும்”

“சரிங்க சார்”, என்றபடி விடைபெற்றுச் சென்றான் மாரிமுத்து.

CASE -1, 2, 3
< கதிர், போலீஸ் vs அந்த ஒருவன் >

அத்தியாயம்:37- கொலையாளி யார்? பாகம்-2

நாள்: 12
06/01/2020 திங்கள்
காலை 11:00 மணி

சாலிகிராமம் ஆர்5 போலீஸ் ஸ்டேஷன்…

கதிர் எழிலிடம் Red Vulture Technologies நிறுவனத்தின் CEO யோகேஷின் மரணம் இயற்கையானதல்ல, அவன் கொடூரமாக கொலை செய்யப்பட்டிருக்கிறான். அவனை கொலை செய்தது ரோஷிணிதான் என்று சொல்லியிருந்தான்.

எழிலுக்கு அது பெரும் அதிர்ச்சியாய் இருந்தது…

கதிர் தொடர்ந்தான், "யோகேஷ் பலமா தாக்கப்பட்டு இறந்திருக்கான். கிட்டத்தட்ட அவனோட உடம்புல இருக்குற அத்தனை ஜாயிண்ட்சும் நொறுக்கப்பட்டிருக்கு…ஒருவேளை அவன் உயிர் பிழைச்சு இருந்திருந்தாக்கூட வெறும் வெஜிட்டேபிள்தான். அந்த அளவுக்கு மிருகத்தனமா தாக்கிருக்காங்க..

அந்த டாக்டர் சொல்றாரு, முறைப்படி மார்ஷியல் ஆர்ட்ஸ் கத்துக்கிட்டவங்களாலதான் இரத்தமே வராம இந்த மாதிரியான டேமேஜை ஒருத்தர் உடம்புல செய்ய முடியும்னு.

உனக்கு ஞாபகம் இருக்கா, ரோஷிணி ஒரு efficient சம்போ practitionar, சம்போவோட ஸ்பெஷாலிட்டியே எதிராளிங்களோட உடம்புல இருக்கிற ஜாயிண்ட்ஸை பிரேக் பண்ணி அவங்கள collapse பண்றதுதான்…

யோகேஷ், சிந்துஜா ரெண்டு பேருக்குமே ட்ரீட்மெண்ட் குடுத்த அந்த அங்குஷ் மல்டிஸ்பெஷாலிட்டி ஹாஸ்பிட்டல் முகேஷோட அக்காவோடது, அதுனாலதான் அவங்க யோகேஷோட கொலைய கமுக்கமா மூடி மறைச்சிருக்காங்க, சிந்துஜாவையும் தந்திரமா நம்ம விசாரணையில இருந்து காப்பாத்திருக்காங்க.. ஆனா அன்னிக்கு முகேஷும், சிந்துஜாவும் அறிவமுதோட அம்மாகிட்ட இருந்து பார்சலை வாங்கிட்டுப் போனது உண்மை"

எழில், "அது சரி, அவங்க முகேஷையும், சிந்துஜாவையும் காப்பாற்ற எடுத்த முயற்சிகளோட பின்னனியை புரிஞ்சுக்க முடியுது. ஏன்னா அந்த ஆஸ்பத்திரியோட ஓனர் முகேஷோட அக்கா. ஆனா யோகேஷ் கொலையை ஏன் மறைச்சு அதை இயற்கையான மரணமா காட்ட முயற்சி செஞ்சுருக்காங்க?"

கதிர், "prestige issue-தான், யோகேஷ் குடும்பம் சமுதாயத்துல மதிப்பு மிக்க ஒரு குடும்பம். தன்னோட குடும்பத்தோட பேரு கெட்டுடக் கூடாதுன்னு யோகேஷ் குடும்பம் முகேஷோட உதவியை நாடிருக்கலாம். அதுக்கு அவங்களும் உதவி செஞ்சிருக்கலாம்."

எழிலரசி "ஆம்" என்று தலையசைத்தாள்…ஆனாலும் இன்னொரு பக்கம் அவள் மனது இன்னும் ஆதாரங்களைத் தேடியது, "ஓகே கதிர் அப்படிப் பார்த்தாலும் யோகேஷை ரோஷிணிதான் தாக்கி கொலை பண்ணிருக்கணுங்கிறது உங்க யூகம்தானே?"

கதிர், “எனக்கு ஆரம்பத்தில இருந்தே எனக்கு முகேஷ் மேலேயும், சிந்துஜா மேலேயும் சந்தேகம் இருக்கு எழில், என்னோட யூகம் சரிதாங்கிறத நான் நாளைக்கு அவங்கள வச்சே ப்ரூவ் பண்றேன், ரோஷிணி எந்த ப்ராஜக்ட்ல ஒர்க் பண்ணாளோ அந்த ப்ராஜக்ட் சம்பந்தமான டேட்டாவை திருடிக்கிட்டதா ரோஷிணியோட கம்பேனி அதாவது Red Vulture Technologies நிறுவனம் இன்னொரு leading IT company மேல வழக்கு தொடர்ந்திருக்காங்க, குற்றம் சாட்டப்பட்ட அந்த நிறுவனம் உன்னோட சரகத்துக்குள்ளதான் வருது. அதுமட்டுமில்லாம யோகேஷ் இறக்குறதுக்கு மூணு நாள் முன்னாடிதான் பல லட்சம் செலவு பண்ணி data leak detection software அவங்க கம்பேனில புதுசா இன்ஸ்டால் பண்ணி இருக்காங்க…அதாவது அவங்களோட கம்பியூட்டர்ல இருக்கிற தகவல்களை வெளியே கசிய விடாமல் பாதுகாக்கிற சாஃப்ட்வேர் அது.

சோ..அந்தக் கம்பேனில, குறிப்பா அந்த டீம்ல ஏதோ நடந்திருக்கு… அதுல முகேஷ் சிந்துஜா ரெண்டுபேருக்கும் தொடர்பு இருக்கு...எனக்கு நாளைக்கு ஒருநாள் டைம் கொடு.. day after tomorrow i will come up with the answer..”

பேசிக்கொண்டிருக்கும்போதே கதிருக்கு ப்ரியாவிடமிருந்து போன் வருகிறது, “ம்..சொல்லுங்க ப்ரியா”

மறுமுனையில் ப்ரியா, ”…”

“ம்ம்ம்..ஓகே நான் இப்ப அங்க உடனே வர்றேன்”

எழிலிடம் சைகையில் கிளம்புவதாகச் சொல்லிவிட்டு மொபைலை காதில் வைத்தபடி ப்ரியாவிடம் பேசிக்கொண்டே கதிர் கிளம்புகிறான். எழிலுக்கு ப்ரியாவின் மேல் கோபம் வந்தது. கிளம்பி வெளியே செல்லும் கதிரையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அத்தியாயம்:38- ஓநாயின் குகை - பாகம் 2

நாள்: 12

06/01/2020 திங்கள்
மதியம் 12:30 மணி

மருத்துவமனையில் இருந்த பசவராஜின் சீல் வைக்கப்பட்ட வீட்டின் முன் நின்று, வாடகை பாக்கி வாங்க வந்த டிரைவர் சாரதி பசவராஜ் வீட்டுக்குள் இருப்பதாக நினைத்து அவனை சத்தம்போட்டு அழைத்துக் கொண்டிருந்தான். அவனை இரு காவலர்கள் காவல் நிலையத்துக்கு அழைத்து வந்தனர். ப்ரியாவும், கோப்பெருந்தேவியும் அவனை விசாரித்த போதுதான் ஒரு Foriegn return நபருடன் பசவராஜ் சேர்ந்து சென்னையின் பல்வேறு இடங்களுக்கு டாக்ஸியில் சுற்றிய விபரம் தெரியவந்தது.

அந்த Foriegn return நபர் தற்காலிகமாக தங்கியிருந்தது அடையாறு பத்மநாபா நகரில் உள்ள ஜெகந்நாதன் என்பவருக்கு சொந்தமான வீடு என்பது சாரதியை விசாரிக்கையில் தெரியவந்தது. ப்ரியாவும், கோப்பெருந்தேவியும் அடையாறுக்குச் சென்று அந்த வீட்டை சோதனையிட முடிவெடுத்தார்கள். ப்ரியா அந்த விஷயத்தை கதிரிடம் சொல்லி அவனையும் தங்களுடன் வரும்படி அழைத்தாள். யோகேஷ் கொலை பற்றி எழிலிடம் பேசிக்கொண்டிருந்த கதிர் ப்ரியாவின் போன் வந்ததும் உடனடியாக கிளம்பி வடபழனி ஆர்-8 காவல் நிலையம் வந்து சேர்ந்தான். கதிர் இப்படி பாதியில் விட்டுவிட்டு ப்ரியா போன் வந்ததும் கிளம்பிச் சென்றது எழிலுக்கு எரிச்சலை ஏற்படுத்தியிருந்தது.

கதிர், ப்ரியா, கோப்பெருந்தேவி நாகப்பா மற்றும் டாக்ஸி டிரைவர் சாரதி ஆகிய ஐவரும் ஸ்டேஷனிலேயே மதிய உணவை முடித்துவிட்டு மதியம் இரண்டு மணிக்கு மேல் அடையாறு கிளம்பினார்கள். அடையாறு பத்மநாபா நகரில் உள்ள அந்த வீட்டின் அருகிலேயே இன்னொரு வீட்டில் ஹவுஸ் ஓனர் ஜெகந்நாதன் குடியிருந்தார். அந்த Foreign return நபர் மலேசியாவில் இருந்து வந்தவன் எனவும் அவன் பெயர் சந்தான கிருஷ்ணன், வயது 53 என்ற தகவல் ஜெகந்நாதனை விசாரித்ததன் மூலம் தெரியவந்தது. அவன் ஒரு மாதத்துக்கு மட்டுமே வாடகைக்கு தங்கியிருந்ததாலும், கடந்த சில நாட்களாக அவன் வீட்டுக்கு வரவே இல்லை என்று தெரிய வந்ததாலும் அவனுக்கு வலைவீச முடிவெடுத்தனர்.

ஜெகந்நாதன் வீட்டிலிருந்து ஸ்டேஷனுக்கு திரும்பும் வழியில் வடபழனி சஞ்சயா மருத்துவமனையில் பசவராஜின் அறைக்கு காவல் நின்ற கான்ஸ்டெபிள் ப்ரியாவுக்கு போன் செய்து, பசவராஜ் மருத்துவமனையில் இருந்து தப்பிவிட்டதாக தெரிவிக்க ப்ரியா அழுதே விட்டாள்…

கதிர், “Cool down Priya, ஒண்ணும் கவலப்படாதீங்க.. அவன் இப்ப எங்க இருக்கான்னு நான் சொல்றேன்..”

தன் மொபைலை எடுத்து ஏதோ ஒரு App-ஐ ஆன் செய்தவன் அதை பிரியாவிடம் காட்டி, “அவனோட உச்சி மண்டையில ஆண்டனாவ சொருகி விட்ருக்கேன், இப்பத்தான் ஸ்ரீபெரும்புதூர் கிட்ட போய்க்கிட்டு இருக்கான்..அவன் டோல்கேட்டை தாண்டுறதுக்குள்ள புடிச்சிடலாம்…”

பரபரப்பான ப்ரியா யார் யாருக்கோ போன்செய்து அலர்ட் செய்துவிட்டு, நிம்மதிப் பெருமூச்சு விட்டாள். கதிரை ஆச்சரியமாகப் பார்த்து, “வெல் டன் கதிர், இதை எப்ப பண்ணீங்க?”

கதிர், “அன்னிக்கு நாம அவனை ஆஸ்பிட்டல்ல விசாரிக்கப் போனப்ப தெலுங்குல கத்தி கூப்பாடு போட்டு போட்டான்ல, அப்ப ஒரு வயசான டாக்டர் வந்து நம்மகிட்ட பேசுனார் நியாபகம் இருக்கா?”

ப்ரியா, “ஆமா”

கதிர், “நீங்க டென்ஷனோட வெளிய போய் ஜீப்ல உட்காந்துட்டீங்க, நான் அந்த டாக்டர்கிட்ட நைசா பேச்சு கொடுத்து, எங்கிட்ட இருந்த tracker device-ஐ அவன் தலையில இருந்த கட்டுல சேர்த்து வச்சி கட்ட சொல்லிட்டேன். மறுநாள் அவனோட கட்டை அவிழ்த்து மருந்து போட்டப்ப அந்த device-ஐயும்

உள்ள வச்சு கட்டிட்டாங்க. அது SD Card-ஐவிட ரொம்பச் சின்ன டிவைஸ்னால அது இருக்கிறதே தெரியாது. அன்னிக்கு இருந்தே அவனை நான் track பண்ணிட்டுதான் இருக்கேன். அவன் எஸ்கேப் ஆக வாய்ப்பு இருக்குன்னு சந்தேகப்பட்டதாலதான் நான் இத செஞ்சேன்."

அவர்கள் ஸ்டேஷனுக்கு சென்று சேரும் முன்னரே பசவராஜ் ஸ்ரீபெரும்புதூரில் வைத்து கைது செய்யப்பட்டிருந்தான். அவனை பூந்தமல்லி டி-12 போலீசார் வடபழனி ஆர்-8 காவல் நிலையத்தில் கொண்டு வந்து ஒப்படைத்திருந்தார்கள்.

பசவராஜை உடனடியாக விசாரிக்க வேண்டாம், லாக்கப்பில் வைத்து போலீஸ் treatment-னா என்னன்னு காண்பிக்க ஒரு மூணு நாள் வச்சு வெளுத்து வாங்கிட்டு அப்புறம் விசாரிக்கலாம். அதுக்கப்புறம் உண்மையெல்லாம் தன்னால் வெளிவரும் என்று கதிரும் ப்ரியாவும் முடிவெடுத்திருந்தார்கள்.

பசவராஜுக்கு மாமியார் வீட்டில் மூன்று நாட்கள் வாழ்க்கையிலேயே மறக்கமுடியாத அளவுக்கு மாப்பிள்ளை விருந்து ஆரம்பமானது…

அத்தியாயம்:39- கண்ணியில் சிக்கிய கழுகுகள்

நாள்: 14
08/01/2020 புதன்
மாலை 06:30 மணி

சாலிகிராமம் ஆர்5 போலீஸ் ஸ்டேஷன்…

இரு நாட்கள் கழித்து…

கதிர் 32 வயது மதிக்கத்தக்க ஒரு இளைஞனை ஸ்டேஷனுக்கு அழைத்து வந்தான். கதிருடன் அதே ஸ்டேஷனைச் சேர்ந்த இரு கான்ஸ்டெபிள்கள் உதவிக்குச் சென்றிருந்தார்கள். இன்னொரு வேலை காரணமாக வெளியே போயிருந்த எழில் அப்போதுதான் ஸ்டேஷன் வந்து சேர்ந்திருந்தாள்.

கதிர் அழைத்து வந்த இளைஞனின் கன்னங்கள் அறை வாங்கி வீங்கியிருந்தன. கதிர் அவனை எழிலுக்கு எதிரே இருந்த இருக்கையில் அமர வைத்து, பக்கத்தில் இருந்த இருக்கையில் தானும் அமர்ந்தான்.

கதிர் பேச ஆரம்பித்தான், "எழில், இது இந்திரஜீத்.. இவரு வேலை செய்யுற கம்பேனி மேலதான் யோகேஷோட கம்பெனி தொழில்நுட்பத்தைத் திருடுனதா வழக்கு போட்டிருக்காங்க… அந்த கேஸ் விசாரணைக்கு வந்தா நம்ம ஸ்டேஷனைத்தான் அதுல இன்வால்வ் பண்ணுவாங்க…ஆனா அதுக்கு முன்னாடியே நான் குற்றவாளியை பிடிச்சிட்டேன், அவரும் ரொம்ப டீசண்ட்டா குற்றத்தை ஒத்துக்கிட்டாரு… Red Vulture Technologies-ல இருந்து முகேஷும், சிந்துஜாவும்தான் இவருக்கு program source code-ஐ திருடி வித்திருக்காங்க…

கதிர் இந்திரஜீத்தைப் பார்த்து, "இங்க பாரு, இப்ப நான் சொல்றமாதிரி செஞ்சேன்னா இந்த கேஸ் எங்க ஸ்டேஷனுக்கு வரும்போது உனக்கு கொஞ்சமாவது ஃபேவர் கிடைக்கும்… என்ன சொல்ற?"

இந்திரஜீத் பரிதாபமாக முகத்தை வைத்துக்கொண்டு, "ஓகே சார், நீங்க என்ன சொன்னாலும் செய்யுறேன்.

"Good Boy" என்றபடி கதிர் அவனிடம் ஒரு பிஸினஸ் கார்டைக் கொடுத்து, " இந்தா சிந்துஜா நம்பர், இவளுக்கு போன் போட்டு நான் சொல்ற மாதிரி பேசு" என்று சொல்ல இந்திரஜீத் சிந்துஜாவுக்கு கால் செய்தான். அவர்கள் உரையாடலை கதிர், எழில் இருவரும் கேட்கும் விதத்தில் இந்திரஜீத்தின் மொபைல் ஒரு புளூடூத் ஸ்பீக்கருடன் connect செய்யப்பட்டது.

அதற்கு சற்று நேரத்துக்கு முன் சிந்துஜா மற்றும் முகேஷின் மொபைல் எண்களின் எல்லா இன்கம்மிங், அவுட்கோயிங் கால்களையும் ரெக்கார்டு செய்யும்படி கதிர் சைபர் கிரைம் போலீசாரின் உதவியை நாடியிருந்தான். எனவே அந்த நிமிடத்திலிருந்து அவர்களது அத்தனை செல்பேசி உரையாடல்களும் பதிவு செய்யப்பட்டு வந்தன.

இந்திரஜீத், "ஹலோ சிந்துஜா, நான் இந்திரஜீத் பேசுறேன்..இப்பத்தான் நான் முகேஷ் கிட்ட பேசுனேன் அவரு பிசியா இருக்கதால உங்க நம்பர குடுத்து என்ன காண்டாக்ட் பண்ண சொன்னாரு… ரொம்ப அவசரமா ஒரு சின்ன உதவி…"

சிந்துஜா, "யா..சொல்லுங்க…"

இந்திரஜீத், "எனக்கு அந்த மாடியூல்- II இருக்கிற zip ஃபைல மட்டும் கொஞ்சம் resend பண்ண முடியுமா? உங்களுக்கு ஒரு ஈமெயில் ஐடிய மெசேஜ் பண்ணி விடுறேன், அந்த ஐடிக்கு அனுப்பி விட்டுடுங்க…"

சில வினாடிகள் அமைதி காத்த சிந்துஜா, ‘‘கொஞ்சம் இருங்க நாம் முகேஷ்கிட்ட பேசிட்டு மறுபடியும் உங்களுக்கு கால் பண்றேன்..’’ சொல்லிவிட்டு செல்பேசி இணைப்பை துண்டித்தாள்.

எழில் சற்று பதட்டமாக, ‘‘கதிர் ஒருவேளை இப்ப சிந்துஜாவும், முகேஷும் ஆஃபீஸ்ல ஒரே இடத்துல இருந்தாங்கண்ணா?’’

கதிர் நிதானமாக, ‘‘இல்ல எழில், முகேஷும், சிந்துஜாவும் இப்ப ஒரே இடத்துல இல்ல, அதை confirm பண்ணாம இப்படி செயல்ல இறங்குவேனா?’’ இப்பப் பாரு அவ உடனே முகேஷுக்கு போன் பண்ணுவா, அதுக்கப்புறம் அவன் (இந்திரஜீத்தைப் பார்த்து) உனக்கு போன் பண்ண சான்ஸ் இருக்கு.. உன் போனை எங்ககிட்ட குடு…’’ கதிர் இந்திரஜீத்தின் போனை வாங்கி வைத்துக் கொண்டான். அவன் சொன்னபடியே அடுத்த சில நிமிடங்களில் முகேஷிடமிருந்து இந்திரஜீத்துக்கு அடுத்தடுத்து இரண்டு கால்கள் வந்துவிட்டிருந்தன.

சில நிமிடங்கள் கழித்து சைபர் கிரைம் பிரிவிலிருந்து கதிரிடம் ஒருவர் பேசினார், ‘‘ஹலோ மிஸ்டர் கதிர், கரெக்ட்டா நீங்க சொன்ன நம்பர்ல இருந்து (சிந்துஜாவின் நம்பர்) இப்ப ஒரு அவுட்கோயிங் கால் போயிருக்கு… அந்த ஆடியோவை உங்களுக்கு வாட்ஸ்ஆப் பண்ணிருக்கேன்

கதிர், “தேங்க்யூ சார், தொடர்ந்து எல்லா calls-ஐயும் follow பண்ணுங்க, எல்லாத்தையும் எனக்கு send பண்ணிக்கிட்டே இருங்க”

சைபர் கிரைமில் இருந்து தனக்கு அனுப்பி வைத்த ஆடியோவை கதிர் ப்ளூடூத் ஸ்பீக்கரில் ப்ளே செய்தான்.

அதில்…

சிந்துஜா, “முகேஷ், என் நம்பர ஏன் நீ அந்த இந்திரஜீத்துக்கு கொடுத்த? அவன் எனக்கு கால் பண்ணி மடியூல் 2-வை resend பண்ண சொல்றான்…”

முகேஷ், “என்னது நான் உன் நம்பர அவன்கிட்ட குடுத்தேனா? எனக்கென்ன பைத்தியமா? எப்ப போன் பண்ணான்?”

சிந்துஜா, “ஜஸ்ட் நௌ…நீதான் அவனுக்கு என்னோட நம்பர் கொடுத்தேன்னு சொன்னானே”

முகேஷ், “ சம்திங் ராங் சிந்து… போலீஸ் நம்மள டிராப் பண்ணுதுன்னு நினைக்கிறேன்… ச்சே! எல்லாம் இந்த XXXX மக ரோஷிணி சூசைட் பண்ணிக்கிட்டதால வந்த வினை, நாம அந்த ஆட்டோக்காரன் வீட்டுக்குப் போகப்போய் போலீசோட கவனம் இப்ப நம்ம மேல திரும்பிருச்சு”

சிந்துஜா, “என்னடா சொல்ற? ஒரு பிரச்சனையும் வராதுன்னு நீ சொன்னதை நம்பித்தானே இறங்குனேன்…”

முகேஷ், “ஒண்ணும் பயப்படாத, இப்படியெல்லாம் நடக்கும்னு யாரு கண்டா? நீ இப்ப உடனே உன் things-ஐயெல்லாம் பேக் பண்ணி எடுத்துட்டு கிளம்பி ஸ்பென்சர் பிளாஸா பக்கத்துல வந்து நில்லு, நான் உன்னைய அங்க வந்து பிக்கப் பண்ணிக்கிறேன்…. யாரு போன் பண்ணாலும் அட்டண்ட் பண்ணாத..”

சிந்துஜா அழத் தொடங்குகிறாள், "அடுத்து என்ன பண்றது?”

முகேஷ், “ப்ச்..அழாத, அதெல்லாம் பாத்துக்கலாம் நீ முதல்ல கிளம்பி வா”

சிந்துஜா, “ ஓகே, நான் இன்னும் ஒரு மணி நேரத்துல வீட்ட விட்டு கிளம்பிருவேன்”

……….

இரவு 07:40 மணி

சிந்துஜாவின் வீடு…

சிந்துஜா அரக்கப் பரக்க தன்னுடைய பொருட்களை பேக் செய்து இரண்டு பெரிய டிராவல் பேக்குகளில் எடுத்துக்கொண்டு வெளியே செல்ல கதவைத் திறக்க, வாசலில் நின்ற இன்ஸ்பெக்டர் எழிலரசியையும் அவளுடன் இருந்த போலீசாரையும் கண்டு அதிர்ந்து போய் நின்றாள்.

கதவைத் தள்ளிவிட்டு வீட்டின் உள்ளே நுழைந்த எழில், “ அந்தப் பார்சலை எங்க?”

சிந்துஜாவின் குரல் தழுதழுத்தது, “எந்தப் பார்சல் மேம்?”

எழில், “அன்னிக்கு நீயும் முகேஷும் ஆட்டோ டிரைவர் அறிவமுது வீட்டுல இருந்து வாங்கிட்டு வந்த ரோஷிணியோட பார்சல்”

சிந்துஜா, “அ..அது எங்கிட்ட இல்ல மேம்”

சொன்ன மாத்திரத்தில் பொறி கலங்கும்படி அவள் கன்னத்தில் ஒரு அறை விழுந்தது. சிந்துஜா இரண்டு அடி தள்ளிப்போய் விழுந்தாள். விழுந்து எழுந்தவள் அருகே இருந்த மேஜை டிராயருக்குள் இருந்து ஒரு பிளாஸ்டிக் டப்பாவை எடுத்து எழிலிடம் கொடுத்தாள்.

……

இரவு 08:10 மணி

முகேஷ் ஸ்பென்சர் பிளாசா வாசலில் இருக்கும் பஸ்டாப்பில் பஸ்ஸுக்கு நிற்பவன்போல் நின்றுகொண்டிருந்தான். ஸ்பென்சர் பிளாசாவின் கார் பார்க்கிங்கில் அவன் கார் ரெடியாக நின்று கொண்டிருந்தது. அவன் முகம் பயத்திலும் பதட்டத்திலும் வெளிறியிருந்தது. அவ்வப்போது வாட்சையும் ரோட்டையும் மாறி மாறி பார்த்துக் கொண்டிருந்தான். திடீரென்று பின்னாலிருந்து அவனுடைய தோளில் யாரோ தட்ட திரும்பிப் பார்த்தான். கதிரும் வேறு மூன்று போலீசாரும் பின்னால் நின்று கொண்டிருந்தார்கள். கதிர் அவனுக்கு கிண்டலாக ஒரு வணக்கம் வைக்க, முகேஷ் அதிர்ச்சியானான்… அப்போது சரியாக போலீஸ் ஜீப் வந்து அவனை ஏற்றிக்கொள்ளும்படி வந்து நின்றது.. அதில் ஏறும்படி முகேஷுக்கு கதிர் சைகை காட்ட, எந்த எதிர்வினையும் புரியாமல் முகேஷ் அமைதியாக ஜீப்பில் ஏறி அமர்ந்தான். பயத்தில் அவனுக்கு வியர்த்துக் கொட்ட ஆரம்பித்தது. ஜீப் சாலிகிராமத்தை நோக்கி சீறிப்பாய்ந்தது…

அத்தியாயம்:40- அவள் சவக்குழிக்குள் தள்ளப்பட்ட கதை

நாள்: 14
08/01/2020 புதன்
இரவு 09:15 மணி

சாலிகிராமம் ஆர்5 போலீஸ் ஸ்டேஷன்…

“என்னோட பேரு முகேஷ், நான் Red Vulture Technologies நிறுவனத்துல ப்ராஜக்ட் மேனேஜரா ஒர்க் பண்றேன்”.

“என்னோட பேரு சிந்துஜா, நான் Red Vulture Technologies நிறுவனத்துல சீனியர் ப்ரோக்ராமரா ஒர்க் பண்றேன்”.

முகேஷ், சிந்துஜா இருவரும் தங்கள் வாக்குமூலத்தை அளிக்கத் தொடங்கினர். ஸ்டேஷனில் உள்ள ஒரு தனி அறையில் இருவரும் அருகருகே அமரவைக்கப்பட்டனர். ஒரு tripod-இல் camcorder பொருத்தப்பட்டு அவர்களது வாக்குமூலத்தைப் பதிவு செய்து கொண்டிருந்தது. அவர்களிடம் ஏற்கனவே விசாரணை முடிந்து உண்மைகள் பெறப்பட்ட பின், அவர்களது ஒப்புதலின் பேரில் இந்த வாக்குமூல வீடியோ படமாக்கப்பட்டது. தேவையான சில கேள்விகளை மட்டும் அவ்வப்போது எழிலும், கதிரும் அவர்களை இடமறித்து கேட்டுக்கொண்டிருந்தனர்.

முகேஷ் முதலில் ஆரம்பித்தான், “ எங்க பாஸ் யோகேஷ் பெண்கள் விஷயத்துல ரொம்ப வீக்… ரோஷிணி வேலைக்கு சேர்ந்தப்ப அவகிட்ட நேராவே அப்ரோச் பண்ணாரு. ஆனா அவ, நான் ஒரு லெஸ்பியன், எனக்கு ஆம்பளைங்க மேல interest இல்லைன்னு ஓப்பனாவே சொல்லிட்டா… அவர் அதோட விட்டிருக்கலாம். ஆனா அதுக்கப்புறம்தான் அவளை அனுபவிச்சே ஆகணும்னு சைக்கோ மாதிரி அடம் பிடிக்க ஆரம்பிச்சுட்டாரு.

நான் எங்க கம்பேனி ஆரம்பிச்ச நாள்ல இருந்து அங்க ஒர்க் பண்றேன் சார், அதுனால என்னோட பாஸ் யோகேஷ் என்னை ரொம்ப நம்புனாரு. மில்லியன் டாலர்ஸ் வொர்த் ப்ராஜெக்ட்ஸ் எல்லாம் எங்கிட்டதான் வரும். இப்ப கடைசியா நாங்க பண்ணிக்கிட்டு இருந்த ப்ராஜக்ட் பல competitions-ஸ தாண்டி எங்கிட்ட வந்தது. எங்ககிட்ட competition-ல தோத்த ஒரு கம்பேனி இந்திரஜீத் மூலமா என்கிட்ட வந்தாங்க..

நாங்க பண்ற அதே ப்ராஜெக்ட பண்ணி மார்கெட்ல எங்களுக்கு முன்னாலயே லாஞ்ச் பண்ண அவங்க ப்ளான் பண்ணிருந்தாங்க... அவங்க கேட்ட மாடியூல்ல இருக்க ப்ரோகிராம்ஸ ரோஷிணிதான் எழுதிக்கிட்டு இருந்தா. நானும் சிந்துஜாவும் சேர்ந்து ரோஷிணி இல்லாத நேரத்துல அவ கம்பியூட்டரை ஆக்ஸஸ் பண்ணி அந்த ஃபைல்ஸை எல்லாம் எடுத்து இந்திரஜித்கிட்ட கொடுத்துட்டோம். அதுக்கு எங்களுக்கு நிறைய பணம் கிடைச்சது.

விஷயம் எப்படியோ எங்க கம்பேனிக்கு தெரிஞ்சு, எங்க பாஸ் யோகேஷ் பயங்கர கோபமாயிட்டாரு.. அதைச் செஞ்சது நாங்கன்னு அவருக்குத் தெரியாது. அது ரோஷிணியோட கம்பியூட்டர்ல இருந்த புரோகிராம்னால அதை அவதான் செஞ்சிருப்பான்னு அவரு நெனச்சாரு. இன்னொன்னு அந்த coding-ல ரோஷிணிதான் specialist. சிந்துவுக்கும் எனக்கும்கூட அந்த coding தெரியாது. அதனால அவரோட சந்தேகம் முழுக்க முழுக்க அவ மேல போயிருச்சு. நாங்க நெனச்சோம் என்கொயரி வச்சு அவள ஃபயர் பண்ணி வீட்டுக்கு அனுப்பிச்சிருவாங்கன்னு. ஆனா எங்க பாஸ் யோகேஷ் யாருமே எதிர்பார்க்காத ஒரு காரியத்தை பண்ணிட்டாரு

முகேஷ் கொஞ்சம் நிறுத்த சிந்துஜா பேச ஆரம்பித்தாள், “ அன்னிக்கு நைட் பத்து மணி இருக்கும். வேலை முடிச்சு கிளம்புறதுக்கு முன்னாடி கேண்ட்டீன் போய் நானும் ரோஷிணியும் சேர்ந்துதான் டின்னர் சாப்பிடுவோம். எங்க பாஸ் யோகேஷ் சொன்ன மாதிரி அன்னிக்கு கேண்டீன்ல வச்சு அவளுக்கு prepare பண்ண காஃபில மயக்க மருந்த கலந்து கொடுத்துட்டோம்”

அவளை நிறுத்தச் சொல்லி சைகை காட்டிவிட்டு முகேஷ் தொடர்ந்தான், “ ரோஷிணிய பழி வாங்குறேங்கிற பேருல யோகேஷ் அவ மேல இருந்த ஆசைய தீர்த்துக்கிறவும் திட்டம் போட்டாரு.. மயக்கம் போட்டு விழுந்த ரோஷிணிய யோகேஷோட பார்ம் ஹவுசுக்கு கொண்டு போனோம். அங்க வச்சு நாங்க 6 பேரு சேர்ந்து மாறி மாறி அவளை ரேப் பண்ணோம். எங்கள்ல ஒருத்தன் ரோஷிணியை நிர்வாணமா வீடியோ எடுத்து அப்படியே இண்டர்நெட்ல ஒரு porn site-ல அப்லோட் பண்ணிட்டான்…அது உடனே பரவ ஆரம்பிச்சிருச்சு…ரோஷிணி மேல இருந்த கோபத்தில அவ வாழ்க்கையை பாழாக்கணும்னு அதை செய்யச் சொன்னது எங்க பாஸ் யோகேஷ்தான்”

“நானும் மற்ற மூணு பேரும் ரோஷிணிக்கு மயக்கம் தெளியிறதுக்கு முன்னாடியே அங்க இருந்து கிளம்பிட்டோம். அவளுக்கு மயக்கம் தெளிஞ்சபோது யோகேஷும் இன்னொருத்தனும் மட்டும்தான் அங்க இருந்தாங்க..தனக்கு என்ன நடந்தது உணர்ந்த ரோஷிணி அங்க இருந்த ரெண்டு பேரையும் அடி பின்னியெடுக்க ஆரம்பிச்சிருக்கா.. யோகேஷ் கூட இருந்த வினோத்னு ஒருத்தன் தப்பிச்சு வந்து என்கிட்ட சொன்னதுக்கப்புறம்தான் தெரியும் அவ மார்ஷியல் ஆர்ட் கத்துக்கிட்டவன்னு…அவ அடிச்ச அடில யோகேஷ் மொத்தமா collapse ஆகிட்டாரு. அவரை எங்க அக்கா ஹாஸ்பிட்டல்ல வச்சுதான் treatment கொடுத்தோம், ஆனா 3 நாள்ல இறந்துட்டாரு. யோகேஷ் குடும்பம் கேட்டுக்கிட்டதால கார்டியாக் அரெஸ்ட்டுனு சொல்லி சாவோட காரணத்தை மூடி மறைச்சுட்டோம்…”

சிந்துஜா தொடர்ந்தாள், “ப்ரோக்ராம் திருடுபோன மேட்டர் எதுவுமே ரோஷிணிக்கு தெரியாது. சிலநாட்கள் கழிச்சு ரோஷிணி என்னையும் முகேஷையும் தனியா மீட் பண்ணா, அன்னிக்குத்தான் அவகிட்ட அந்த விஷயத்தை சொன்னோம். தான் அதை செய்யவே இல்லன்னு சொல்லி அவ எங்கிட்டையும், முகேஷ்கிட்டையும் சத்தியம் பண்ணி அழுதா…நான் எதுவும் தெரியதது மாதிரி அவகிட்ட என்ன சொன்னேன்னா..” நீ செஞ்சிருக்க மாட்டேன்னு எங்களுக்கு தெரியும் ரோஷி, ஆனா அதை யோகேஷ் நம்பணுமே. அதுனால அவர் உன் மேல பயங்கர கோபத்துல இருந்தார். அன்னிக்கு காபி சாப்பிட்டுட்டு நான் ரெஸ்ட் ரூம் போயிட்டு வந்து பார்த்தேன் உன்னை அங்க காணோம், சரி உன் கேபினுக்கு போயிருப்பன்னு அங்க போயி பார்த்தா அங்கேயும் காணோம். நீ மயக்கம் போட்டு விழுந்ததோ, உன்னைய அவங்க கிட்நாப் பண்ணிட்டு போனதோ எனக்கு எதுவுமே தெரியாது ரோஷி…நீ கிளம்பி போயிட்ட போலன்னு நெனச்சுட்டேன் அப்டீன்னு சொல்லி சமாளிச்சுட்டேன்”

முகேஷ் தொடர்ந்தான், “அவளை அன்னிக்கு ரேப் பண்ண ஆட்கள்ல நானும் ஒருத்தன்னு அவளுக்கு தெரியாது. ஏன்னா அவ மயக்கம் தெளிஞ்சு எந்திரிக்கிறதுக்குள்ள நான் அங்கிருந்து கிளம்பிப் போயிட்டேன். அதுனால நானும் எனக்கு எதுவுமே தெரியாத மாதிரி அவகிட்ட நல்லவன் மாதிரி பேசிட்டேன், “யோகேஷ் இவ்வளோ மோசமானவனா இருப்பான்னு நான் நினச்சுக்கூடப் பார்க்கல ரோஷிணி…உன் மேல சந்தேகம் இருந்தா அவன் உன்னை வேலைய விட்டு தூக்கிருக்கலாம். அதுக்காக இப்படி பண்ணிருக்கக் கூடாது. நீ அப்படி செஞ்சிருக்க மாட்டேனு நான் அவன்கிட்ட எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன். அவன் நம்பல. அவ செய்யலேன்னா பின்ன நீ செஞ்சியான்னு என் பக்கம் திருப்புறான். நான் என்ன செய்ய? இப்ப அவங்க வீட்டுல யோகேஷோட மரணத்துக்கு பின்னாடி ஏதோ மர்மம் இருக்குண்ணு சீக்கிரட்டா பிரைவேட் டிடெக்டிவ் வச்சு இன்வெஸ்டிகேட் பண்ண ஆரம்பிச்சுட்டாங்க... இந்த சூழ்நிலைல நீ திடீர்னு ஆபீஸ்க்கு வராம போனா உன் மேல சந்தேகம் வர சான்ஸ் இருக்கு. ஏற்கனவே உன்மேல program source code-திருடுன பழி இருக்கு. அதுனால நீ எப்பவும்போல ஆபீஸுக்கு வா..உனக்கு ஏதாவது பிரச்சனைன்னா நான் பார்த்துகிறேன், பயப்படாத…” அப்டீன்னு சொல்லி அவளை convince பண்ணி திரும்ப ஆஃபீஸ்க்கு வர வச்சேன்.

எழிலும், கதிரும் அமைதியாக அவர்களது வாக்கு மூலத்தை பதிவு செய்து கொண்டிருந்தனர். முகேஷ் தொடர்ந்து உண்மைகளைக் கொட்டிக் கொண்டிருந்தான், "இந்த சிச்சுவேஷன்ல, ரோஷிணியோட ஆபாச வீடியோ இண்டர்நெட்ல பரவ ஆரம்பிச்சது. அதுனால அவளுக்கு நிறைய பிரச்சனைகள் வந்துச்சு, பத்தாததுக்கு அன்னிக்கு அவகிட்ட அடிவாங்கிட்டு தப்பிச்சுப்போன யோகேஷோட பிரண்டு வினோத் அவளுக்கு அடிக்கடி போன் பண்ணி நீதான் யோகேஷைக் கொன்னன்னு நான் போலீஸ்ல போட்டு குடுத்திருவேன்னு மிரட்டி காசு கேட்க ஆரம்பிச்சிருக்கான்.

கதிர், "வெய்ட் வெய்ட்…யோகேஷோட ஃபிரண்டா இருக்கிற அளவுக்கு உள்ள ஒருத்தன் பிளாக் மெயில் பண்ணி பணம் கேட்கிற அளவுக்கா காசுக்கு செத்தவனா இருப்பான்? என்ன சொல்ற நீ?"

முகேஷ், "இல்ல சார், அந்த வினோத் யோகேஷோட ஸ்கூல் பிரண்டு, யோகேஷுக்கு அடியாள் மாதிரி. யோகேஷ் தன்னோட பாதுகாப்புக்காக அவனை கூடவே வச்சுக்கிட்டாரு. அவன் படிச்சவனோ, பணக்காரனோ இல்ல, அரசியல் செல்வாக்குள்ள ஒரு ரவுடி"

கதிர், "ஓ..ஓகே மேல சொல்லு…'

சிந்துஜா பேசினாள், "யோகேஷோட குடும்பம் hire பண்ண detectives வேற ப்ரோகிராம் திருடு போன விஷயத்துக்கும், யோகேஷோட மரணத்துக்கும் சம்பந்தம் இருக்கலாம் அப்டீங்கிற கோணத்துல ரோஷிணிய விசாரிக்க ஆரம்பிச்சுட்டாங்க.. அதனால தன்னை சுத்தி என்ன நடக்குதுன்னே புரியாம அவ ரொம்ப depression-னுக்குள்ள போயி தற்கொலை பண்ணிக்கிட்டா"

எழில் குறுக்கிட்டு, "அது சரி, ரோஷிணி ஆட்டோக்காரன் அறிவமுதுகிட்ட பார்சல் கொடுத்து வச்ச விஷயம் உங்க ரெண்டுபேருக்கும் எப்படி தெரிஞ்சது?"

சிந்துஜா, "அது ஒண்ணும் இல்ல மேம், ரோஷிணி தன்னோட ரூம்ல இருந்து தான் போலீசுக்கு சொல்ல நினச்சத தன்னோட மொபைல்லதான் ரெக்கார்ட் பண்ணிருக்கா, அதை ஒரு pen-drive-ல போட்டு அதைத்தான் அந்த ஆட்டோக்காரன்கிட்ட கொடுத்து வச்சிருக்கா. ஆனா அந்த App-ல ரெக்கார்ட் பண்ற ஆடியோ பைல்ஸ் ஆட்டோமேட்டிக்கா இண்டர்நெட் Cloud-ல save ஆகிடும். அதே App-போட desktop version-ஐ அவ தன்னோட ஆஃபீஸ் கம்பியூட்டர்லயும் போட்டு வச்சிருந்திருக்கா.. நான் அன்னிக்கு அவளோட டெக்ஸ்க்டாப்ப திறந்து பார்க்கும்போது ஒரு புது ஆடியோ ஃபைல் இருக்கிறதா காட்டுச்சு, அந்த ஆடியோ பைல திறந்து பார்த்து அதை கேட்டுட்டேன்…உண்மை போலீசுக்கு போயிடக்கூடாதுன்னு பயந்து நாங்க போய் அறிவமுது வீட்டை கண்டுபிடிச்சு, அங்க இருந்து அந்த பார்சலை வாங்கிட்டு வந்திட்டோம். அப்படி போய் வாங்கிட்டு வந்தது போலீசுக்கு தெரியக்கூடாதுன்னு முகேஷோட ஹாஸ்பிட்டல்ல அட்மிட் ஆகிட்டேன். அன்னிக்கு நைட் பல்லுல ஒரு சர்ஜரி பண்ணிட்டு, அந்த சர்ஜரியை அன்னிக்கு சாயங்காலம் 5:00 மணிக்கு பண்ணதா காட்டி போலீசை திசை திருப்பிட்டோம்"

வீடியோ பதிவு அத்துடன் நிறுத்தப்பட்டது. கதிர் கேமராவை tripod-இலிருந்து கழற்றியபடி எழிலிடம் கேட்டான், "எழில், அறிவமுதுக்கு ரோஷிணி கொடுத்த அந்த பார்சலை ஓப்பன் பண்ணி பார்த்தியா? அதுல என்ன இருந்தது?"

எழில், "அதுல ஒரு பாக்ஸுக்குள்ள ஒரே ஒரு pen-drive மட்டும்தான் இருந்துச்சு கதிர். அதுல ரோஷிணி தற்கொலை பண்றதுக்கு முன்னாடி போலீஸ்கிட்ட சொல்ல விரும்புனத தானே இங்லீஷ்ல பேசி ரெக்கார்ட் பண்ணிருக்கா.. இவங்க ரெண்டுபேரும் சொன்ன விஷயங்களைத்தான் அவளும் சொல்லிருக்கா..அதாவது தன்னை யோகேஷும் இன்னொருத்தனும் பலாத்காரம் பண்ணதையும், தன்னோட ஆபாச வீடியோவை இண்டர்நெட்ல பரப்புனதையும், தான் அடிச்சதுல யோகேஷ் இறந்து போனதையும், அதுக்கப்புறம் கம்பேனியோட டேட்டா லீக் ஆன விவகாரத்துல தன்னை குற்றவாளியாக்க சிலர் முயற்சிக்கிறதையும் சொல்லியிருந்தா, ஒருபக்கம் தான் கற்பழிக்கப்பட்டது, இன்னொருபக்கம் தான் செஞ்ச கொலை, மூணாவதா தான் செய்யாத தப்புக்கு திருட்டுப் பட்டம், அடுத்து ஆபாச

வீடியோவால வந்த அவமானம் இதெல்லாம் ஒருபக்கம், இன்னொரு பக்கம் கடந்த ரெண்டு நாட்களா திடீர்னு பின்முதுகுலயும், விலாவிலேயும் ஏற்பட்ட கடினமான வலி, பயங்கரமான கெட்ட கனவுகள், வார்த்தையால் விவரிக்க முடியாத மன அழுத்தம் இதுனால நாம் சீக்கிரம் ஒரு மனநோயாளி ஆகப்போறேன் அப்டீங்கிற பயம் எனக்கு வந்திருச்சு .

இவ்வளோ பிரச்சனைகளை வச்சுக்கிட்டு என் எதிர்காலம் நல்லா இருக்கும்னு என்னால நம்ப முடியல. அதனால தற்கொலைதான் தீர்வு அப்டீங்கிற முடிவுக்கு வந்துட்டேன்னு சொல்லியிருந்தா. அதோட இன்னொரு விஷயத்தையும் சொல்லிருந்தா, அது என்னன்னா அறிவமுது ஒரு அப்பாவி அவனுக்கும் இதுக்கும் எந்த சம்பந்தமும் இல்ல, என்னைச் சுத்தி என்ன நடக்குதுன்னே எனக்குத் தெரியல, என்னோட ரூம்மேட்டை கூட என்னால நம்ப முடியல அதுனால ஒரு நம்பகமான இடத்துல இந்த pen-drive-வை குடுத்துட்டு அந்த இடத்தை நோக்கி போலீஸை டைவர்ட் பண்ணனும்னுதான் நான் அறிவமுதை யூஸ் பண்ணிக்கிட்டேன்.. அவன்கிட்ட நான் ரொம்ப சாரி சொன்னதா சொல்லிடுங்கன்னு சொல்லிருக்கா."

கதிர் ஒரு பெருமூச்சு விட்டான். ரோஷிணியை நினைத்து மிகவும் வேதனையாக இருந்தது அவனுக்கு, எழிலும், கதிரும் அறையை விட்டு வெளியே வந்தனர். வேறு இரண்டு போலீசார்கள் அந்த அறைக்குள் நுழைந்து முகேஷையும், சிந்துஜாவையும் அழைத்துப் போய் தனித்தனி லாக்கப்பில் வைத்தனர்.

எழில் கதிரின் கைகளைப் பிடித்து, "நீங்க இல்லைன்னா இந்த கேஸ் இவ்வளோ சீக்கிரம் முடிஞ்சிருக்காது. எனக்கு எப்படி நன்றி சொல்றதுன்னே தெரியல.."

கதிர், "இரு எழில், இந்த கேஸ் இன்னும் முடியல…ருத்ராவுக்கும், ரோஷிணிக்கும் ஒரு லிங்க் இருக்கிறதா எனக்குள்ள பட்சி சொல்லுது…மிச்சம் இருக்கிற அந்த knot-ஐயும் ஓப்பன் பண்ணிடுவோம் அப்புறம் எனக்கு தேங்க்ஸ் சொல்லு"

அத்தியாயம்:41- நடந்தவை என்ன?

நாள்: 15
09/01/2020 வியாழன்
காலை 09:30 மணி

வடபழனி ஆர்-8 போலீஸ் ஸ்டேஷன்…

பசவராஜ் கடந்த மூன்று நாட்களாக திகட்ட திகட்ட மாமியார் வீட்டு விருந்து சாப்பிட்டுவிட்டு அமர்ந்திருந்தான். பவானி கொலைக்கு மட்டுமல்ல, இந்த உலகத்தில் நடக்கும் அத்தனை குற்றங்களுக்கும் நீதான் காரணம் என்று சொன்னால்கூட அதையும் ஏற்றுக்கொள்ளக்கூடிய மனநிலைக்கு வந்திருந்தான். ஆளைவிட்டால் போதும் என்றிருந்தது அவனுக்கு.

அவன் இருந்த லாக்கப் கதவு திறக்கப்பட்டது. உள்ளே இரு நாற்காலிகள் கொண்டு வந்து போடப்பட்டன. கதிரும் ப்ரியாவும் வந்து ஆளுக்கொரு நாற்காலிகளில் அமர்ந்தார்கள்.

கதிர், ‘‘சார் அப்பப்ப போலீஸ்க்கு டிமிக்கி குடுத்துட்டு ஓடீடுறீங்க, நாம என்ன ஐஸ் பாயா விளையாண்டுக்கிட்டு இருக்கோம்?’’

ப்ரியா பயங்கர எரிச்சலுடன், ‘‘உன்னையெல்லாம் சொகுசா ஆஸ்பத்திரில வச்சு ஏசி ரூமு, 3 வேளை சாப்பாடு, ஜூசுன்னு கொடுத்து விசாரிச்சதால உனக்கு ரொம்ப கொழுப்பாயிருச்சுல்ல, ராஸ்கல்… இந்த ரெண்டு நாள் லாக்-அப்ல treatment எப்படி இருந்துச்சு?’’

பசவராஜ் அழுதபடி இரு கைகளையும் கூப்பி கும்பிட்டான். “”மேடம், தயாசேசி நன்னு க்சமின்சண்டி’’

கதிர், ‘‘இந்த கும்பிடு மட்டும் நல்லா போட கத்து வச்சிருக்கைய்யா, இப்ப தெரியுதா போலீஸ் விசாரணைன்னா என்னன்னு? சரி , இப்ப சொல்லு உண்மையெல்லாம்..’’

பசவராஜ் அழுதபடி, ‘‘எதப் பத்தி சொல்லங்கையா?’’

கதிர், ‘‘ம்ம்..பவானி உன்னோட சொந்தப் பொண்டாட்டி இல்ல, அடுத்தவன் பொண்டாட்டி… அந்த அடுத்தவன் யாரு? இந்த மலேசியாக்காரன் யாரு..அதுல இருந்து ஆரம்பி…’’

பசவராஜ் அழுகையை நிறுத்திவிட்டு மூக்கை உறிஞ்சியபடி சொல்ல ஆரம்பித்தான், ‘‘பவானி நான் தாலி கட்டுன பொண்டாட்டி இல்லைங்கையா, அந்த மலேசியாக்காரர்தான் பவானியோட உண்மையான புருஷன். அவர் பேரு சந்தான கிருஷ்ணன், ஒரே ஜாதிதான் ஆனா அவர் தமிழ், பவானி தெலுங்கு. நான் பவானியோட தூரத்து உறவு, ஆரம்பத்துல சந்தான கிருஷ்ணனன்கிட்டதான் வேலை பார்த்தேன்.

பவானிக்கு சினிமால நடிக்கணும்னு ஆசை, அதுக்கு சந்தான கிருஷ்ணன் ஒத்துக்கல, குழந்தை பெத்துகிகிட்டா அழகு போயிரும்னு அவ குழந்தையும் பெத்துக்கல, அதுனால அவங்களுக்குள்ள பயங்கர சண்டை, அதுனால சந்தான கிருஷ்ணன் பவானிய தனியா விட்டுட்டு எங்கேயோ ஓடிட்டார்…அப்புறந்தான் நான் அவள சேர்த்துக்கிட்டேன். அவ இஷ்டப்படியே ஜூனியர் ஆர்ட்டிஸ்ட்டா நடிக்க நான்தான் வாய்ப்பு வாங்கி குடுத்தேன்.

நாளாக நாளாக அவளுக்கு அவளவிட சின்ன பசங்க நிறைய பேரோட பழக்கம் ஆச்சு, நான் கண்டிச்சுப் பார்த்தேன் கேட்கல, அதனால எங்க ரெண்டு பேருக்கும் அடிக்கடி சண்ட வரும். அவளை விட்டு பிரிஞ்சிரலாம்னு நெனப்பேன். ஆனா எனக்கும் ஒரு பெண் துணை தேவைப்பட்டதால கோபத்த அடக்கிக்கிட்டு அமைதியா இருந்தேன்.’’

இப்படி ரொம்ப வருஷம் ஓடிருச்சு, எனக்கு குடிப்பழக்கம் இருந்துச்சு, நான் குடிக்க பவானியே காசு குடுப்பா. அதுனால நானும் கண்டுக்காம இருந்துட்டேன். எனக்கா தோணுச்சின்னா எங்கேயாவது ஷூட்டிங் நடக்குற இடங்களுக்கு வேலைக்குப் போவேன் இல்லாட்டி பகல்லகூட குடிச்சிட்டு வீட்டுலயே இருந்துடுவேன்.

இந்த சூழ்நிலைலதான் திடீர்னு ஒருநாள் சந்தான கிருஷ்ணன் சென்னைக்கு வந்தார். நான் பவானிய வச்சிருந்ததை தெரிஞ்சும் அவர் கோபப்படல, எனக்கு நிறைய பண உதவிகள் செஞ்சாரு..கூடவே இருக்கச் சொன்னாரு..அது எனக்கு ரொம்ப ஆச்சரியமா இருந்துச்சு..

நாங்க ரெண்டுபேரும் குடிச்சிட்டு பவானி பத்தி அடிக்கடி பேசிக்குவோம். அவ பண்ணதெல்லாம் சொன்னேன் அவரு ரொம்ப டென்ஷனாவாரு...ஒருநாள் தான் பவானிய கொலை பண்ணப் போறதாவும் அதுக்கு என் உதவி அவருக்கு தேவைன்னும் சொன்னாரு, எனக்கு அதிர்ச்சி ஆயிருச்சு. நான் அதுக்கு ஒத்துக்கல.

நீங்க ஏன் அவளை கொலை பண்ண விரும்புறீங்க? அவளை விட்டுட்டுப் போயிட்டீங்க, அவளுக்கும் உங்களுக்கும் இப்ப சம்பந்தமே இல்ல. இந்த சூழ்நிலைல அவளை கொலை பண்றதால உங்களுக்கு என்ன லாபம்னு கேட்டேன். அதுக்கு அவர் சரியான பதிலை எனக்கு சொல்லல.

அப்பத்தான் அவர் எனக்கு இன்னொரு விஷயத்தை சொன்னாரு. அவர் சென்னை வந்ததும் என்னை சந்திக்கிறதுக்கு முன்னாடியே ரெண்டு மூணு தடவை பவானியை போயி சந்திச்சிருக்காரு, அவ மாறவே இல்ல.. அந்த சிறுக்கி என்னைப் பத்தி அவருகிட்ட என்ன சொல்லிருக்கான்னா, “பசவராஜ் என்னை கொடுமைபடுத்துறான், அவன் ஒரு கையாலாகதவன், நான் உங்களைத்தான் இன்னும் நேசிக்கிறேன். என்னை உங்களோட மலேசியாவுக்கு கூட்டிட்டுப் போயிருங்கன்னு கெஞ்சிருக்கா, அதை அவரு அவளுக்கே தெரியாம ரெக்கார்ட் பண்ணி எனக்கே போட்டுக் காண்பிச்சாரு,

அதைக் கேட்டா எனக்கு அவமேல கோபம் வரும், அவரு திட்டத்துக்கு ஒத்துக்கிடுவேன்னு நினைச்சாரு போல, ஆனா எனக்குத்தான் அவ புத்தி தெரியுமே. எனக்கு தெரிஞ்சே எத்தனையோ பேருகூட தொடர்பு வச்சிருந்தவ. ஒரு காலத்துக்குப் பிறகு நானே அத கண்டுக்காம விட்டுட்டேன். இதத்தானா பெருசா எடுத்துக்கப்போறேன்?

ஆனா அவர் அதுக்கப்புறம் சொன்ன விஷயம்தான் என்னை அவரோட திட்டத்துக்கு சம்மதிக்க வச்சது.

நான் இப்ப மலேசியால பெரிய தொழிலதிபர் ஆகிட்டேன், பவானிய கொலை பண்ற விஷயத்துல நான் சொன்னத மட்டும் செஞ்சேன்னா உன்னை அங்க கூட்டிட்டுப்போயி எங்கூடவே வச்சுக்கிறேன்னு சொன்னாரு.. எனக்கு பாஸ்போர்ட்டெல்லாம் கூட எடுத்துக் கொடுத்தாரு..அப்பப்ப கையில நிறைய காசு கொடுத்தாரு, நான் கொஞ்சம் யோசிச்சேன், இவளால சமீப நாட்களா எனக்கு ரொம்ப பிரச்சனைகள். ஏகப்பட்ட கடனை வட்டிக்கு வாங்கி வச்சு அந்த கடன்காரனுகளால பெரிய தொல்லை, அப்புறம் சின்ன வயசு பசங்களோட பழக்க வழக்கம். இதெல்லாம் எனக்கு அவமேல ஒரு அருவெறுப்பையே உண்டாக்கிருச்சு. அதுனால பேசாம சந்தான கிருஷ்ணன் சொன்னபடி செஞ்சுட்டு மலேசியாவுக்குப் போயி செட்டில் ஆகிட்டா என்ன அப்டீங்கிற முடிவுக்கு வந்தேன்.

அவரு என்னைய செய்யச் சொன்னது ஒண்ணே ஒண்ணுதான்... “நான் என்னுடைய வாழ்க்கை கசந்து போனதால் தற்கொலை செய்து கொள்கிறேன். எனது தற்கொலைக்கு யாரும் காரணம் இல்லை இது என்னோட சொந்த முடிவு”ன்னு ஒரு லெட்டர் மட்டும் பவானியை ஏமாத்தி, அவ கைப்பட எழுதி வாங்கி எங்கிட்ட கொண்டு வந்து குடுத்துட்டு நீ எங்கயாச்சும் தூரமா வேலைக்கு போயிரு மிச்சத்த நான் பார்த்துக்கிறேன்னு சொன்னாரு.. அவளுக்கு சந்தேகம் வராம அதை எப்படி செய்யணுங்கிற ஐடியாவையும் அவரே எனக்குக் கொடுத்தாரு.

பவானிக்கு தமிழ் பேச தெரிஞ்சாலும் எழுதத் தெரியாது, ஆனா அவ தெலுங்கு கையெழுத்து அவ்வளோ அழகா இருக்கும். சந்தான கிருஷ்ணன் கொடுத்த ஐடியாப் படியே நான் பவானிகிட்ட போயி, பக்கத்துல ஒரு தெலுங்குப் பட ஷூட்டிங் நடக்குது, அந்தப் படத்தோட அசிஸ்டண்ட் டைரக்டர் நல்ல தெலுங்கு கையெழுத்து இருக்கிறவங்ககிட்ட இத எழுதி வாங்கிட்டு வரச்சொன்னாருன்னு சொல்லி அவர் சொன்னபடியே லெட்டர் எழுதி வாங்கிட்டேன். அந்த நேரத்துல சந்தானகிருஷ்ணன் எமனேஸ்வரம் போயிருந்தாரு, எனக்கு கல்கத்தால ஒரு சொந்தக்காரன் இருக்கான். அவன் அங்க வேலை இருக்குண்ணு என்னைக் கூப்பிட்டுக்கிட்டே இருந்தான்.. சந்தான கிருஷ்ணன் சொன்னாரு நீ அந்த லெட்டரை வீட்டுல ஒரு மறைவான இடத்துல வச்சிட்டு, எங்க வச்சிருக்கேன்னு மட்டும் எனக்கு சொல்லிட்டு நீ கல்கத்தாவுக்கு கிளம்பு, மத்ததை பாத்துக்கிறேன்னு சொன்னாரு..நானும் அதே மாதிரி செஞ்சுட்டு கிளம்பிப் போயிட்டேன் சார்... அதுக்கப்புறம் என்ன நடந்துச்சுன்னு எனக்கு தெரியாது... பவானி தூக்கு போட்டு இறந்த நியூஸ்தான் எனக்கு வந்துச்சு''

தனக்கு தெரிந்த எல்லாவற்றையும் ஒன்றுகூட ஒளிக்காமல் சொல்லி முடித்தான் பசவராஜ்

அவன் சொன்னவைகளை நிதானமாகக் கேட்டுக்கொண்டிருந்த கதிர், ''அடுத்து என்ன நடந்திருக்கணும்னு நான் சொல்றேன், தன்னோட உயிருக்கு கண்டம் இருக்குன்னு ஜோசியர் சொன்னதால பவானி ஏற்கனவே தனக்கு என்ன நடக்குமோ, ஏது நடக்குமோன்னு பயத்துல இருந்திருக்கா. உன் மேலயும் அவளுக்கு சுத்தமா நம்பிக்கை இல்ல. அப்ப நீ எழுதி வாங்கி ஒளிச்சு வச்சிருந்த அந்த சூசைட் லெட்டர் தற்செயலா பவானி கண்ல பட்டிருக்கணும். இதை ஏன் அந்த அசிஸ்டண்ட் டைரக்டர்கிட்ட குடுக்காம இங்க ஒளிச்சு வச்சிருக்கான்கிற டவுட் அவளுக்கு வந்திருக்கணும்.

தன்னை சுத்தி ஏதோ சதி நடக்குதுங்கிறத அப்ப அவ முடிவு பண்ணிருப்பா..அதுனால அந்த லெட்டரை கிழிச்சுப் போட்டுட்டு, "இது தற்கொலை இல்ல, கொலை.. என்னோட சாவுக்கு நீதி கிடைக்க உதவி செய்யுங்க''-ன்னு'' எழுதி, அதே இடத்துல அந்த லெட்டரை மடிச்சு வச்சிருக்கா..சினிமாக்காரில அதான் கொஞ்சம் வித்தியாசமா யோசிச்சிருக்கா…

அதுக்கப்புறம் அங்க சந்தான கிருஷ்ணன் அங்க வந்திருக்கான், அவளோட செக்ஸ் வச்சிட்டு, அதுக்கப்புறம் அவளைக் கொலை பண்ணி தூக்குல தொங்க விட்டுட்டு பசவராஜ் சொன்ன இடத்துல இருந்த அந்த லெட்டரை எடுத்துப் பார்த்திருக்கான். அவனுக்கு தெலுங்கு படிக்க தெரியாததனால, தான் சொன்ன மாதிரிதான் இதுல எழுதிருக்கும்னு நம்பி தூக்குல தொங்கிக்கிட்டு இருந்த பவானியோட இடுப்புல அந்த லெட்டர சொருகிட்டுப் போயிட்டான்.

கதிர் சொன்னதைக் கேட்டு பசவராஜ் திருதிருவென விழிக்கிறான். ஏனென்றால் அவனுக்கு அந்த லெட்டர் மாற்றி எழுதப்பட்ட விஷயம் எதுவுமே தெரியாது. ப்ரியா நிதானமாக ஆமோதித்து தலையாட்டுகிறாள், ''Good Guess கதிர், ஆனாலும் புருஷன் ஊருல இல்ல, பின்னே யாரால தனக்கு பிரச்சனை வரும்னு அவ நினைச்சிருப்பா, சந்தான கிருஷ்ணன் மேல அவளுக்கு சந்தேகம் இருந்திருக்குமா? அப்படி இருந்திருந்தா அவனை எப்படி வீட்டுக்குள்ள அனுமதிச்சிருப்பா? அவனோட எப்படி அவ செக்ஸ் வச்சிருந்திருப்பா? அந்த சூசைட் நோட் தனக்காக விரிக்கப்பட்ட வலைன்னு புரிஞ்சு இவ்வளவு ஸ்மார்ட்டா ஒரு காரியத்தை செய்யக்கூடிய அளவுக்கு அவ அவ்வளோ intelligent-டா அப்டீங்கிற கேள்விகளெல்லாம் வருது ''.

கதிர், ''புரியுது ப்ரியா, சந்தான கிருஷ்ணன் சிக்குனா இந்தக் கேள்விகளுக்கெல்லாம் நமக்கு பதில் கிடைக்க வாய்ப்பிருக்கு."

ப்ரியா பசவராஜிடம், ''சரி அதிருக்கட்டும்..இப்ப சந்தான கிருஷ்ணன் எங்க?''

பசவராஜ் தன் உச்சந்தலையில் கைவைத்து, ''எம்மேல சத்தியமா எனக்கு தெரியாதுங்கம்மா, அவர் தங்கியிருந்த வீடு அடையாறுல இருக்கு... அந்த வீட்ட வேணா காட்டுறேன். பவானி இறந்ததுக்கப்புறம்

அவருக்கு போன் போட்டா போகவே மாட்டிங்குதுங்கம்மா..இந்த நம்பர் உபயோகத்தில் இல்லைன்னு வருது, அவர் என்னை மலேசியாவுக்கு கூட்டிட்டுப் போறேன்னு சொன்னது என்னை ஆசைகாட்டி அவரோட திட்டத்துக்கு ஒத்துக்க வைக்கத்தான்னு புரிஞ்சுக்கிட்டேங்கம்மா. ஆனா ஒண்ணு, அவருக்கு நாளைக்கோட விசா முடியுது.. எப்படிப் பார்த்தாலும் நாளைக்கு அவர் சென்னை ஏர்போர்ட் வந்தாகணும்''

அத்தியாயம்:42- ஓநாய் வேட்டை

நாள்: 16
10/01/2020 வெள்ளி
காலை 11:30 மணி

வடபழனி ஆர்-8 போலீஸ் ஸ்டேஷன்...

பதினைந்து நாட்களுக்குப் பிறகு ப்ரியா, எழில், அன்பழகன் மற்றும் கதிர் நால்வரும் மீண்டும் ஒரே இடத்தில் சந்தித்தார்கள். மூன்று கேஸ்களைக் குறித்தும் கமிஷனருக்கு ஒவ்வொரு நாளும் update சென்று கொண்டிருந்தது. அவர் சந்தேகப்பட்டபடியே இந்த மூன்று கொலைகளும் ஒரே புள்ளியில் இணையத் தொடங்கியிருப்பதாலும், இன்றோடு சந்தேகிக்கப்படும் குற்றவாளி சந்தான கிருஷ்ணனின் விசா முடிவதாலும் அவனைப் பிடிப்பதில் நால்வரும் இணைந்து பணியாற்றும்படி அவர்களுக்குச் சொல்லியிருந்தார். எனவே அனைவரும் வடபழனி ஆர்-8 ஸ்டேஷனில் கூடினர். ஸ்டேஷன் மிகுந்த பரபரப்பாயிருந்தது.

கோப்பெருந்தேவி ப்ரியாவிடம், “சிட்டி ஃபுல்லா searching போய்க்கிட்டு இருக்கு மேடம், அவனோட whereabouts-ஐ சுத்தமா trace பண்ண முடியல. அவன் இன்னும் இந்தியாவை விட்டு வெளியே போகலங்கிறது மட்டும் உறுதி”

ப்ரியா ஏதோ சொல்லவர அப்போது குறுக்கிட்ட எழில், “போலி பாஸ்போர்ட் யூஸ் பண்ணி தப்பிச்சுப் போயிருந்தா? அல்லது சென்னையை விட்டோ அல்லது தமிழ்நாட்டை விட்டோ வெளிய போயிருந்தா…”

கோப்பெருந்தேவி எழிலிடம், “சான்ஸஸ் இருக்கு மேடம், ஆனா for the safer side ஏர்போர்ட்ட அலர்ட் பண்ணியாச்சு… அவனோட ரிட்டர்ன் டிக்கெட் இன்னிக்கு கோலாலம்பூர் போற இண்டிகோ ஃப்ளைட்ல நைட் 12:20-க்கு…”

கதிர் சிரித்தபடியே, “நீங்க ஏர்ப்போர்ட்டை விடிய விடிய காவல் காத்தாலும் அவன் சத்தியமா அங்க வரப்போறதில்ல”

அன்பழகன், “முன்னெச்சரிக்கையா இந்தியால இருக்கிற எல்லா ஏர்போர்ட்டுக்கும் அவன் போட்டோ, finger prints அப்புறம் பாஸ்போர்ட் காப்பிய அனுப்பி அலர்ட் பண்ணிருங்க. இன்னொரு விஷயம் சீனால இருந்து ஒரு கொடிய தொற்றுநோய் உலகம் முழுக்க பரவிக்கிட்டு இருக்காம். அதனால சீக்கிரமே எல்லா சர்வதேச விமானநிலையங்களையும் மூட வாய்ப்பிருக்கு அப்டீன்னு சொல்றாங்க. அது அவனுக்கும் தெரிஞ்சிருக்கும். அதனால அவன் எப்படியும் இந்தியாவை விட்டு வெளியே போக முயற்சி பண்ணுவான்.”

ப்ரியா, “அதெல்லாம் ஏற்கனவே அலர்ட் பண்ணியாச்சு சார்”

கதிர், "அவன் இப்ப தன்னோட சிம்கார்டை யூஸ் பண்றதில்ல, ஆனா கம்யூனிகேஷனுக்கு அவன் ஏதோ ஒரு போன் நம்பரை யூஸ் பண்ணிதான் ஆகணும்... அவன் ஏன் தன்னுடைய மலேசியன் நம்பரை யூஸ் பண்ணிக்கிட்டு இருக்கக் கூடாது? வெறும் வாட்ஸப் மட்டும்.. வைஃபை இருந்தா யூஸ் பண்ணலாமே! அந்த மொபைல் நம்பர் தெரிஞ்சா அது எந்த வைஃபை நெட்வொர்க்ல இருந்து connect ஆகியிருக்குன்னு trace பண்ணலாமே?”

கோப்பெருந்தேவி, “அந்த மலேசியா நம்பரும் பசவராஜ்கிட்ட இருக்கு, ஆனா அந்த நம்பரை சந்தானகிருஷ்ணன யூஸ் பண்றதில்ல, அதையும் செக் பண்ணி பார்த்துட்டோம்.”

கதிர் ஆழமாக யோசித்தபடி, “ம்ம்ம்?.. இப்பல்லாம் எல்லாரு கிட்டேயும் ஒண்ணுக்கு மேற்பட்ட மொபைல் நம்பர்கள் இருக்கு…மலேசியால வாங்குன வேற ஒரு நம்பரை அவன் ஏன் யூஸ் பண்ணிக்கிட்டு இருக்கக் கூடாது?”

எழில், “அந்த நம்பரை நாம எப்படி கண்டுபிடிக்கிறது?”

கதிர், “மலேசியன் போலீசோட ஹெல்ப் கேட்டுத்தான் ஆகணும், அவன் ஐடில எத்தனை சிம்கார்டு ரெஜிஸ்டர் ஆகி இருக்குங்கிற details-ஐ அவங்க எடுக்க முடியும்தானே… நமக்கு டைம் ரொம்ப ஷார்ட்டா இருக்கு சீக்கிரம் பண்ணியாகணும்..”

ப்ரியா, "இம்மீடியெட்டா அத பண்ணு கோப்பெருந்தேவி…”

கோப்பெருந்தேவி, “எஸ் மேம்…”

கதிர், “கோப்பெருந்தேவி, அப்படியே இன்னொரு முக்கியமான விஷயம், அவன் பாஸ்போர்ட்டோட மொத்த details நமக்கு உடனே வேணும்.. இப்ப நம்மகிட்ட அவனோட பாஸ்போர்ட்டோட முதல் பக்கம், கடைசி பக்கத்தோட ஜெராக்ஸ் காப்பி மட்டும்தான் இருக்கு. நமக்கு அவனோட மொத்த பாஸ்போர்ட்டோட போட்டோ காப்பியும் வேணும். அவன் இது வரைக்கும் வேற எந்தெந்த நாடுகளுக்கு டிராவல் பண்ணிருக்கான்னு தெரியணும்.. ஏன்னா அவன் மலேசியாவுக்கு திரும்பாம வேற ஒரு விமானத்தில அந்த நாடுகள்ல ஒண்ணுக்கு தப்பிப் போகவும் வாய்ப்பு இருக்குல்ல. நாம ஏன் அவன் டிக்கெட் புக் பண்ண மலேசியா விமானத்தை மட்டும் focus பண்ணிக்கிட்டு இருக்கணும். மலேசியன் விசா இருந்தா உலகத்துல சில நாடுகளுக்கு விசா இல்லாமலேயே பயணம் செய்யுற வசதி இருக்கு. அப்படிப் போறதா இருந்தா அவன் தான் ஏற்கனவே அடிக்கடி போய் பழக்கப்பட்ட ஒரு நாட்டுக்குத்தான் போக அதிக வாய்ப்பிருக்கு. அது எந்தெந்த நாடுன்னு நாம கண்டுபிடிக்கணும். அதனால அவனோட முழு பாஸ்போர்ட் details-ஸும் வேணும்னு மலேசியன் போலீஸ் கிட்ட கேளு, அவங்க அதை எங்கயிருந்து வாங்கிக் கொடுக்கணுமோ வாங்கிக் கொடுத்திருவாங்க…”

உடனே கோப்பெருந்தேவி தனது டேபிளுக்கு ஓடினாள். யார் யாருடனோ போனில் பேசினாள். நேரம் ஓடிக்கொண்டிருந்தது. மாலை 4:00 மணி ஆகிவிட்டிருந்தது. யாரும் மதிய உணவுகூட சாப்பிடவிலை. கோபெருந்தேவி கிட்டதட்ட நாற்பது போன்கால்கள் பண்ணியிருப்பாள், அவள் முகத்தில் சோர்வு படர்ந்தது. அனைவருடைய கவனமும் அவளது டேபிளின் மீதே இருந்தது. ஒவ்வொருவரும் மாற்றி மாற்றி அவளிடம் கேள்வி கேட்டுக்கொண்டிருந்தது அவளுக்கு ஒருபுறம் எரிச்சலாக வேறு இருந்தது.

கடைசியாக மலேசியாவில் ஏதோ ஒரு பெண் அதிகாரி அவளுக்கு உதவி செய்ய முன்வந்தார். அடுத்த அரை மணி நேரத்தில் அவளது ஈமெயிலுக்கு தகவல்கள் வந்து சேர்ந்தன. அத்தனையையும் பிரிண்ட் அவுட் எடுத்துக்கொண்டு ஓடிவந்து ப்ரியாவின் கைகளில் கொடுத்தாள்.

அவை ஒவ்வொன்றாக வாங்கிப் பார்த்த ப்ரியா, “கதிர், சந்தான கிருஷ்ணன் யூஸ் பண்ண வேற ரெண்டு நம்பர்ஸை மலேசியன் போலீஸ் அனுப்பி விட்டிருக்காங்க..அந்த நம்பர் சமீபத்துல இந்தியாவுல எங்கேயாவது யூஸ் பண்ணப்பட்டிருக்கான்னு செக் பண்றேன்”

ப்ரியா அவள் கைகளில் இருந்த சந்தான கிருஷ்ணனின் பாஸ்போர்ட் காப்பியை கதிரின் கைகளில் தந்தாள். அவற்றை கதிர் ஆராய ஆரம்பித்தான்.

ப்ரியா போலீசின் சைபர் கிரைம் பிரிவின் உதவியை நாடினாள். அந்த இரு மலேசிய சிம்கார்டு நம்பர்களுமே தமிழ்நாட்டில் எங்குமே பயன்படுத்தப்படவில்லை என்ற பதில் அவர்களிடமிருந்து வந்தது.

கதிர் தனது மொபைலில் இருந்து சைபர் கிரைம் பிரிவை தொடர்பு கொண்டான் “சார் நான் கதிர் பேசுறேன், சஸ்பெக்ட் சமீபத்துல மெக்ஸிகோவுக்கும் தாய்லாந்துக்கும் அடிக்கடி போயிட்டு

வந்திருக்கான்…அவனோட பாஸ்போர்ட்ல அந்த details-ஐப் பார்த்தேன் அவன் அங்க போனப்ப வாங்குன சிம்கார்டுகளைக் கூட யூஸ் பண்ணலாமே..அவன் இந்தியா வர்றதுக்கு 15 நாட்களுக்கு முன்னாலதான் மெக்ஸிகோவுல இருந்து மலேசியாவுக்கு திரும்பிருக்கான். அப்ப மெக்ஸிகோவுல அவன் யூஸ் பண்ண நம்பர் இன்னும் ஆக்டிவா இருக்க சான்ஸ் இருக்கு. அதுல இருந்து அவன் வாட்ஸ்ஆப் ஆக்ஸஸ் பண்ணிருக்கலாம். அதுனால மெக்ஸிகோ சிம்கார்டுகளை பயன்படுத்தி சென்னையில சமீபத்துல யாராவது வைஃபை ஆக்ஸஸ் பண்ணிருக்காங்களா செக் பண்ணிப் பாருங்க..”

மறுமுனையில் இருந்த நபர், “இப்படி Search பண்றது கஷ்டம் சார், இருந்தாலும் ஒரு வழி இருக்கு பண்ணிப் பாக்குறேன்”

கதிர், “தேங்க்யூ சார், கொஞ்சம் சீக்கிரமா பண்ணுங்க… கமிஷனர் எங்களோட லைன்லயே இருக்கார், ரொம்ப அர்ஜண்ட்..ப்ளீஸ்”

மறுமுனையில் இருந்த நபர், “நிச்சயமா சார்”

சில நிமிடங்களில் சைபர் கிரைமிலிருந்து கதிருக்கு போன் வந்தது, “சார்..சார்…சார்.. ஒரு மெக்ஸிகன் நம்பர் சென்னை வேளச்சேரி சன்ஷைன் சிட்டி மால்ல இருந்து கடந்த ஒரு வாரமா சரியா ஈவினிங் ஏழு மணிக்கு டெய்லி கனெக்ட் ஆயிருக்கு சார்…”

கதிர் பரபரப்பானான்..” இப்ப கனெக்ட் ஆகிருக்கா?”

மறுமுனை, "இல்ல சார்..”

கதிர், “ஆனா டெய்லி ஈவினிங் ஏழு மணிக்கு சன்ஷைன் சிட்டி மால்ல இருந்து அந்த நம்பர் கனெக்ட் ஆகுதுல்ல”

“ஆமா சார்”

“நீங்க என்ன பண்ணுங்க, அந்த நம்பர் கனெக்ட் ஆகுதான்னு செக் பண்ணிக்கிட்டே இருங்க, நாங்க இப்ப ஒரு டீம் சன்ஷைன் சிட்டி மால் போறோம். எங்களோட தொடர்புலேயே இருங்க, அந்த நம்பர் எப்ப கனெக்ட் ஆகுதோ உடனே எங்களை அலர்ட் பண்ணிருங்க”

“நிச்சயமா சார்”

அத்தியாயம்:43- பௌர்ணமி இரவில்…பாகம்-2

நாள்: 16
10/01/2020 வெள்ளி
மாலை 7:00 மணி

சன்ஷைன் மார்கெட் சிட்டி, வேளச்சேரி, சென்னை….

மாலை வெயில் விலகி இருள் சென்னையை தழுவத் துவங்கியிருந்தது, வேளச்சேரி மக்கள் பன்னீர் தூவல் போல இதமான தூரலில் நனைந்து கொண்டிருந்தார்கள். வண்ண வண்ண மின்னொளியில் சன்ஷைன் சிட்டி மால் கம்பீர அழகோடு காட்சியளித்தது.

கதிரும் அன்பழகனும் பிரதாப், நாகப்பா உள்ளிட்ட 8 பேரைக் கொண்ட போலீஸ் குழுவுடன் ஏற்கனவே வேளச்சேரியில் சன்ஷைன் சிட்டி மால் இருக்கும் இடத்துக்கு அருகாமையில் வந்து விட்டிருந்தார்கள். சந்தான கிருஷ்ணன் மாலுக்குள் வந்துவிட்டானா இல்லையா என்ற சிக்னலுக்காகக் சைபர் கிரைமின் போன் காலை எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.

சந்தான கிருஷ்ணன் சரியாக 7:15-க்கு மாலுக்குள் நுழைந்தான். கருப்பு சட்டை, கருப்பு பேண்ட், கருப்பு தொப்பி அணிந்திருந்தான். மாலின் இரண்டாவது தளத்துக்குப் போய் ஒரு மூலையில் தான் வழக்கமாக அமரும் இருக்கையில் அமர்ந்து தனது வாட்ஸ்ஆப் எண்ணிலிருந்து ஒருவனுக்கு போன் செய்தான். “ஏய் செல்வம், நான் சன்ஷைன் சிட்டி மால் வந்துட்டேன். நான் கேட்ட கார் ரெடியாகிடுச்சா இல்லையா?”

மறுமுனை, “ரெடியாகிருச்சு சார், ஆன் தி வே.. டிராஃபிக் ரொம்ப மோசமா இருக்காம். இன்னும் அங்க வந்து சேர ஒரு மணி நேரம் ஆயிடும்”

சந்தான கிருஷ்ணன், “என்னது இன்னும் ஒரு மணி நேரம் ஆகுமா? ஷ்ஷிட்…”

“சார் அந்த ஆள், அங்க வந்துட்டான். மால்ல இருக்கிர வைஃபை நெட்வொர்க்ல இருந்து அந்த நம்பர் இப்பத்தான் கனெக்ட் ஆகிருக்கு”. கதிருக்கு சைபர் கிரைம் பிரிவில் இருந்து போன் வரவே பரபரப்பானான் கதிர். “ஓகே சார், ரொம்ப நன்றி”..

அடுத்த சில நிமிடங்களில் ஒட்டுமொத்த டீமும் மாலுக்குள் நுழைந்தது, ஏற்கனவே மால் நிர்வாகத்திடம் கமிஷனர் பேசியிருந்தார், அவர்கள் காவல்துறைக்கு முழு ஒத்துழைப்பு தருவதாக உறுதியளித்து இருந்தனர். போலீஸ் டீம் உள்ளே நுழைந்த அடுத்த நொடியில் மாலில் அத்தனை வாசல்களும் பூட்டப்பட்டன.

போலீஸ் டீமில் இருந்த அத்தனை பேருக்கும் ஏற்கனவே சந்தான கிருஷ்ணனின் போட்டோ அனுப்பப்பட்டு இருந்தது. டீமில் இருந்த அனைவரும் கலைந்து சென்று மாலில் வெவ்வேறு இடங்களில் அவனைத் தேட ஆரம்பித்தனர்.

இரண்டாம் தளத்தில் தேடிக்கொண்டிருந்த எஸ்.ஐ பிரதாப்பின் கண்களில் சந்தான கிருஷ்ணன் சிக்கினான். அவனைப் பார்த்தவுடன் பிரதாப் சற்று தள்ளிவந்து டீமில் இருந்த அனைவருக்கும் வாக்கி டாக்கியில் தகவல் அனுப்பவே அத்தனை பேரும் இரண்டாம் தளத்தை நோக்கி ஓடிவந்தனர்.

ஒட்டுமொத்த மாலும் பரபரப்பானது. மாலுக்குள் இருந்த மக்கள் பீதியுடன் என்ன நடக்கிறது என்பதைப் பார்க்க அந்தந்த தளங்களின் பால்கனியில் கூட ஆரம்பித்தனர். ஒரு மூலையில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்த சந்தான கிருஷ்ணன் இந்தப் பரபரப்புகளை கவனித்திருக்க வாய்ப்பு இல்லை. அவன் வேறு ஒரு பதட்டத்தில் செல்வத்திடம் பேசிக்கொண்டிருந்தான்.

“சந்தான கிருஷ்ணன், “செல்வம், நான் கேட்ட மாதிரி கறுப்புக் கலர் கார்தானே? எல்லாக் கண்ணாடியிலயும் கறுப்பு ஸ்டிக்கர் ஒட்டிருக்குதானே?” அவன் பேசிக் கொண்டிருந்தபோதே...

“மிஸ்டர் சந்தான கிருஷ்ணன், உங்க மனைவி பவானியை கொலை பண்ண குற்றத்துக்காக நாங்க உங்களை அரெஸ்ட் பண்றோம்” கம்பீரமான குரலில் அன்பழகன் அவனது கவனத்தைக் கலைத்தார்.

சந்தான கிருஷ்ணன் சுதாரிப்பதற்குள் பிரதாப் சட்டென்று அவன் வலது கைகளைப் பிடித்து அதில் விலங்கிட்டு அதன் இன்னொரு முனையை அன்பழகனின் இடது கையுடன் இணைத்தான். கதிர் சந்தான கிருஷ்ணனின் கைகளில் இருந்த மொபைலை வெடுக்கென பிடுங்கி வைத்துக் கொண்டான்.

இதை சற்றும் எதிர்பாராத சந்தான கிருஷ்ணன் கோபமாய் இன்ஸ்பெக்டர் அன்பழகனின் கண்களைக் கூர்ந்து பார்த்து, ஆழம் தெரியாம காலை விடுறீங்க இன்ஸ்பெக்டர்…இது பப்ளிக் பிளேஸ்…விளைவுகள் ரொம்ப விபரீதமா இருக்கும்”

அவன் சொன்னதைக் கேட்டு டென்ஷனான அன்பழகன், “மூடிட்டு பேசாம வாலே..இது பப்ளிக் பிளேசுதான், உன் வீட்டு அடுப்பாங்கைரைனா சொன்னேன். இதுக்கு மேல ஏதாவது பேசுனேன்னா அடிச்சு வாயெல்லாம் உடைச்சிருவேன்..உனக்கு தமிழ்நாட்டு போலீஸ் பத்தி தெரியாதுல்ல…”

அவனை இழுத்துக் கொண்டு எஸ்கலேட்டரில் முதல் தளத்துக்கு இறங்கத் தொடங்கினர். சந்தான கிருஷ்ணன் அன்பழகனையும் போலீசாரையும் எச்சரித்துக் கொண்டும், நாராசமாகத் திட்டிக்கொண்டும் வந்தான். அவன் முகத்தில் எள்ளவுகூட பயம் இல்லை. பொதுமக்கள் அனைவரும் சம்பவத்தைப் பார்த்துக் கொண்டிருந்தபடியாலும், அதில் பலரும் மொபைல் கேமராவில் நடந்தவைகளை படமாகிக் கொண்டிருந்தபடியாலும் அன்பழகன் முகத்தில் கோபத்தைக் காட்டாமல் அமைதியாக வந்து கொண்டிருந்தார்.

முதல் தளத்திலிருந்து தரைத் தளத்துக்கு இறங்கும்போது சந்தான கிருஷ்ணனின் பேச்சில் ஆபாச நெடி அதிகமாகியது, “டேய் XXXXX, XXXX உனக்கு இந்த சந்தான கிருஷ்ணனப் பத்தி தெரியாதுல்ல? மரியாதையா என்னை விட்டுரு, இப்பவே சொல்றேன், சமாதானமாப் போயிரலாம். XXXX மவனே.. இல்ல நான் யாருன்னு இங்கயே இப்பவே காட்டட்டுமா..

அவன் பேசிய XXXX-க்களால் அன்பழகனுக்கு கோபம் தலைக்கேறியது. கேமராக்கள் மொய்த்துக்கொண்டிருந்த படியால் சந்தான கிருஷ்ணனின் முகத்தைப் பார்க்காமல் அவன் காதுகளுக்குக் கேட்கும்படி தலையைக் கவிழ்ந்தபடி “வயசுக்கு தகுந்த பேச்சால பேசுற? XXXX பயலே… கம்முனு வாரியா இல்ல ஸ்டேஷன்ல வச்சு லத்தில மொளகாப்பொடிய தடவி பின்னால சொருகி அப்படியே…”

சரியாக தரைத்தளத்தில் இறங்கின நேரத்தில், அன்பழகன் பேசிக்கொண்டிருந்தபோதே அன்பழகனின் கைகளில் மாட்டப்பட்டிருந்த விலங்கின் மறுமுனை சட்டென அவரது முழங்காலில் மோத, மாலில் கூடியிருந்த ஒட்டுமொத்தக் கூட்டமும் ஒருசேர அலறியது…

ஏதோ அசம்பாவிதமென்று உணர்ந்து அன்பழகன் தலையைத் தூக்கிப் பார்க்க அருகில் சந்தான கிருஷ்ணன் இல்லை. தன் கண்களில் ஏதும் காட்சிப்பிழை இல்லையென்பது அவருக்குத் தெரியும் ஏனெனில் ஒட்டுமொத்த மக்கள் கூட்டமும் எதையோ கண்டு அலறிக் கொண்டிருந்தது. பலர் அங்குமிங்கும் சிதறி ஓடத் துவங்கினர்.

பூட்டப்பட்ட விலங்கு பூட்டப்பட்டவாறே இருக்கிறது, அதன் சாவி பிரதாப்பின் பாக்கெட்டில் பத்திரமாக இருக்கிறது. ஆனால் அந்த விலங்கில் பூட்டப்பட்டிருந்த மனிதனைக் காணவில்லை. மாயமாய் மறைந்து போனான்!

அந்த இடத்தையே ஏதோ ஒரு இருள் சூழ்ந்தது போல இருந்தது. அந்த வினாடி அங்கிருந்த அனைவரும் தங்கள் மனங்களை ஏதோ ஒரு கசப்பான பாரம் அழுத்துவதாக உணர்ந்தனர். முதுகும் இடுப்பும் சேரும் மூலாதாரப் பகுதியில் கைவைத்து வலி தாங்க முடியாமல் பலரும் கீழே அமர்ந்துகொண்டனர். வேறு சிலர் வாந்தி எடுத்தனர். அழகும், வெளிச்சமும் நிறைந்த அந்த இடம் முழுவதும் சில நொடிகள் ஒரு காரிருள் கவ்விக்கொண்டதைப் போல மாறியது.

கேமராவில் படமெடுத்துக் கொண்டிருந்த பலரும் நடுங்கிய கைகளில் கேமராவை இறுகப் பிடித்துக் கொண்டு பதட்டத்துடன் தாங்கள் படமெடுத்த காட்சியை ரீவைண்ட் செய்து பார்க்கிறார்கள். ஆம், முந்தைய ஃப்ரேம் வரை அவன் இருக்கிறான், அடுத்த ஃபிரேமில் இல்லை…

இன்ஸ்பெக்டர் அன்பழகன் பைத்தியம் பிடித்தது போல கத்துகிறார், “கதிர், என்ன நடக்குது இங்க.. எங்க அவன்?”

கதிர் இன்னும் அதிர்ச்சியிலிருந்து மீளாதவனாய், “தெரியல சார்..தெரியல…ஒண்ணுமே புரியல”

மாலுக்குள் அதிர்ச்சியும், அலறல்களும் இன்னும் அடங்கவில்லை. பொது மக்களுள் பலர் மாலை விட்டு வெளியே ஓடும் நோக்கத்துடன் தரைத்தளத்தை நோக்கி ஓடிவரத் துவங்கினார்கள். என்ன நடந்தது என்பது பலருக்குப் புரியவில்லை, அவர்களுக்கு விளக்கிச் சொல்லும் நிலையிலும் யாரும் இல்லை.

இன்ஸ்பெக்டர் தன்னிலை இழந்தவராக கைகளை அங்குமிங்கும் வீசியபடி கத்துகிறார், அவரது குரல் தனது கம்பீரத்தை இழந்திருந்தது, தழுதழுத்த குரலில் “டேய் XXX,. XXXX பயலே! எங்கடா போன?” அவர் கைகளை வீசியதில் விலங்கின் மறுமுனை அருகேருந்தவர்கள் மீது தாக்கியது…

எங்கும் அலறல், பதட்டம், குழப்பம்…

திடீரென்று…

முந்தய அதிர்ச்சியிலிருந்து மீள்வதற்குள்…

அங்கிருந்த அத்தனை பேரின் இரத்தத்தையும் உறைய வைக்கும் அந்த சம்பவம் அரங்கேறியது…அது அத்தனை கேமராக்களிலும் பதிவாகியது…

அன்பழகன் எங்கோ திரும்ப முயல அவரது கையிலிருந்த விலங்கின் மறுமுனை மீண்டும் ஏதோ ஒன்றுடன் பிணைக்கப்பட்டதுபோல ஒரு உணர்வு…

…ஆம், மீண்டும் அவன்!!!!

சில நிமிடங்கள் விலங்கிலிருந்து விடுதலையாகி மறைந்துபோனவன், இப்போது மீண்டும் அதே விலங்கில் பூட்டப்பட்டவனாய்…ஆனால் அவன் முகம், உடலெல்லாம் ரணக் காயங்களுடன் இரத்தக் களரியாய்..பேய்த்தனமாக அலறிக் கொண்டிருந்தான். அது நரக நெருப்பில் எரியும் ஒரு ஆன்மாவின் அலறலைப் போலிருந்தது…

எங்கே மறைந்து போனான்? இரத்தக் களறியாய் மீண்டும் எங்கிருந்து திரும்பி வந்தான்???

அன்பழகன் அதிர்ச்சியில் மூர்ச்சையாகி மல்லாக்க சாய்ந்தார், அவரோடு விலங்கில் பிணைக்கப்பட்டிருந்த அவனும் அவர்மீது அலறியபடியே சரிந்தான். அன்பழகன் மீது படுத்தபடியே அவன் துடிதுடித்து ஒரு மிருகம்போல அலறியதும், அவன் உடலில் இருந்து இரத்தம் வடிந்தது கொண்டே இருந்ததும் பார்க்கும் அத்தனைபேரின் இதயத்துடிப்பையும் நிறுத்திவிடும் போல இருந்தது. அவனுக்குக் கீழ் கிடந்த அன்பழகன் முற்றிலும் சுயநினைவை இழந்திருந்தார். அவர் அதிர்ச்சியில் செத்துவிட்டார் என்றே பலரும்

நினைத்திருக்கக் கூடும். அவனது உடலிலிருந்து வடிந்த இரத்தமெல்லாம் அவருடைய காக்கி சீருடையை முழுவதுமாக நனைத்திருந்தது.

நடப்பவைகளைக் கண்களால் கண்ட பலரும் மூர்ச்சையாகி விழுந்தார்கள். பால்கனிகளின் விளிம்பில் நின்று மொபைலில் ஒளிப்பதிவு செய்து கொண்டிருந்த பலருடைய கரங்களிலிருந்து மொபைல்கள் நழுவி தரையில் விழுந்து நொறுங்கியிருந்தன. நின்ற இடத்திலேயே அவர்கள் உணர்விழந்து சரிந்திருந்தார்கள்.

திடீரென்று...

அந்த நேரத்தில் அந்த இடத்தில் சூழ்ந்திருந்த இருளும் பாரமும் விலகியிருந்தது. ஏதோ ஒரு அமானுஷ்ய வெளிச்சமும், அமைதியும் அந்த இடத்தை நிரப்புவதுபோல பலரும் உணர்ந்தனர். பலரது பின் முதுகு வலிகள் சட்டென நீங்கின. கதிர் சற்று சுதாரித்துக் கொண்டு அன்பழகன், சந்தான கிருஷ்ணன் இருவரையும் தூக்கிக்கொண்டு ஜீப்புக்குச் செல்ல கட்டளையிட்டான். ஐந்து போலீசார் சேர்ந்து இருவரையும் தூக்கிக்கொண்டு வாசலில் நின்றிருந்த ஜீப்புக்கு ஓடினார்கள். வாசல் கதவு திறக்கப்பட்டது.

அத்தியாயம்:44- படைப்புகள் என் பக்கம்

நாள்: 16
10/01/2020 வெள்ளி
மாலை 8:15 மணி

வேளச்சேரி to சாலிகிராமம் சாலை…

அன்பழகனையும் சந்தான கிருஷ்ணனையும் ஏற்றிக்கொண்டு வடபழனி ஆர்-8 ஸ்டேஷனுக்கு சொந்தமான இன்னோவா வடபழனி நோக்கி சைரன் ஒலியோடு புயலென பறக்க ஆரம்பித்தது. காரை நாகப்பா ஓட்டினான் அவனருகில் முன் இருக்கையில் கதிர் உட்காந்திருந்தான். நடு சீட்டில் அன்பழகனும் சந்தான கிருஷ்ணனும் அமர வைக்கப்பட்டிருந்தனர். சந்தான கிருஷ்ணனின் உடலில் இருந்து வழிந்த இரத்தம் உறைந்து, இரத்தம் வழிவது நின்றிருந்தது. அவன் உடலில் ஆழமான காயங்கள் இல்லை, அவன் நிதானத்தில்தான் இருந்தான். ஆனால் அவனருகில் அமரவைக்கப்பட்டிருந்த அன்பழகன் இன்னும் மயக்க நிலையில் இருந்தார். இருவர் கைகளையும் இன்னும் அந்த விலங்கு பிணைத்திருந்தது. அதற்குப் பின் சீட்டில் வேறு இரண்டு போலீசார் உட்கார்ந்திருந்தனர். அன்பழகனின் வளசரவாக்கம் ஆர்-9 காவல் நிலையத்துக்கு சொந்தமான இன்னொரு போலீஸ் இன்னோவாவில் பிரதாப்பும் மற்ற போலீசாரும் அதே வேகத்தில் பின்னால் தொடர்ந்து வந்து கொண்டிருந்தனர்.

மாலில் எடுக்கப்பட்ட வீடியோ அதற்குள் மின்னலென சமூகவலைதளங்களில் பரவத்தொடங்கியது. அத்தனை செய்திச் சேனல்களிலும் அந்தக் காட்சிகள் திரும்பத் திரும்ப பிரேக்கிங் நியூசாக ஓடத்தொடங்கின. டிவி சேனல்கள், வெப் சேனல்கள் மற்றும் பத்திரிக்கை நிருபர்கள் என மீடியாக்காரர்கள் மாலுக்கும், சம்பந்தப்பட்ட காவல் நிலையங்களுக்கும் படையெடுக்கத் துவங்கினர்.

கதிர் ஒரு தண்ணீர் பாட்டிலில் இருந்து தண்ணீரை கையில் எடுத்து அன்பழகனின் முகத்தில் மூன்று முறை தெளித்ததும் அவர் திடுக்கென விழித்துப் பார்த்தார். சுய நினைவு திரும்பியது. அதுவரை கட்டிடங்கள் அதிகம் இருந்த பகுதியில் சென்று கொண்டிருந்த வாகனம் திடீரென்று ஒரு வெட்டவெளிப்பகுதிக்குள் செல்லத் தொடங்கியது. காரில் அமர்ந்திருப்பவர்கள் கூட பார்க்கும் விதத்தில் பூரண பௌர்ணமிச் சந்திரன் பிரகாசமாக ஒளிர்ந்து கொண்டிருந்தது. அதுவரை அமைதியாக இருந்த சந்தான கிருஷ்ணன் சந்திரனின் ஒளி அவன் மேல் பட்டதும் சற்று விபரீதமாக நடந்துகொள்ளத் துவங்கினான்.

உடம்பில் பல்லாயிரம் ஊசிகள் ஒரே நேரத்தில் குத்தினால் எப்படி ஒருவன் நடந்து கொள்வானோ அப்படி நடந்துகொள்ளத் துவங்கினான். சந்திர ஒளி தன் மீது படுவதைத் தவிர்க்க சீட்டிலிருந்து நழுவி கீழே போய் பதுங்கிக் கொண்டான். சில நிமிடங்களில் வாகனம் அந்த இடத்தைக் கடந்து மீண்டும் விளக்கொளி நிறைந்த நகரப் பகுதிக்குள் நுழைந்ததும் மீண்டும் ஆசுவாசமடைந்தான். கதிரும் அன்பழகனும் அதை கவனித்தனர்.

கதிர் கத்தினான், ‘‘நாகப்பா வண்டிய ரிவர்ஸ்ல விடு…’’

சந்தான கிருஷ்ணன் கெஞ்சிக் கதறத் தொடங்கினான், ‘‘வேணாம், வேணாம்…ப்ளீஸ்’’

வாகனத்தை ஓட்டிக்கொண்டிருந்த நாகப்பா சட்டென வண்டியின் வேகத்தைக் குறைத்து, நிறுத்தி ரிவர்ஸ் எடுக்க ஆரம்பித்தான். ஏனென்று புரியாமல் பின்னால் தொடர்ந்து கொண்டிருந்த காவல் வாகனமும் ரிவர்ஸில் பயணிக்க ஆரம்பித்தது.

மீண்டும் வாகனம் அதே வெட்ட வெளிப்பகுதியில் நிலவொளியில் ஒரு சாலையின் ஓரத்தில் வந்து நின்றது. மீண்டும் சந்தான கிருஷ்ணன் துடிக்கத் தொடங்கினான். கதிர் முன் சீட்டிலிருந்து இறங்கி,

சட்டென கார் கதவைத் திறந்து தன் இடது கையால் சந்தான கிருஷ்ணனின் கழுத்தைப் பிடித்து, தன் வலது கையில் இருந்த பிஸ்டலை அவனது நெற்றியில் வைத்து அழுத்தினான்.

பின்னால் வந்த போலீஸ் வாகனமும் இந்த வாகனத்தை ஒட்டியபடி நின்றது. அதற்குள் இருந்து சரசரவென இறங்கிய போலீசார் இந்த வாகனத்தைச் சுற்றி மதில் போல் நின்றுகொண்டு, சாலையில் பயணம் செய்யும் பொதுமக்கள் நின்று வேடிக்கை பார்க்க நிற்காவண்ணம் பார்த்துக் கொண்டனர். சந்தான கிருஷ்ணனும், கதிரும் காரின் இடதுபக்கம் இருந்ததால் சாலையில் சென்றவர்களுக்கு காரின் மறுபக்கம் நடப்பது தெரியவில்லை.

கதிர், “என்னடா பிரச்சனை உனக்கு, யார் நீ?”

சந்தான கிருஷ்ணன், “ என்னை ஆஸ்பத்திரிக்கு கொண்டு போங்க….”

கதிர், "எதுக்கு பழையபடி மறைஞ்சு போறதுக்கா.. உன்னை இப்பவே நைட்டோட நைட்டா வச்சு முடிக்கப் போறோம்…”

சந்தான கிருஷ்ணன் துடித்தான், “இல்ல இல்ல சத்தியமா நான் அப்ரூவரா மாறிடுறேன்…”

கதிர், “இப்ப நான் கேட்குற கேள்விக்கு உண்மையா பதில் சொன்னீன்னா அடுத்த 15 நிமிஷத்துல ஹாஸ்பிட்டல்ல இருப்ப… நீ சொல்ற பதில் எனக்கு திருப்தியா இல்லைன்னா இப்பவே புல்லட் உன் தலைல இறங்கிரும்…”

சந்தான கிருஷ்ணன் உண்மையைச் சொல்வதாக ஒத்துக்கொண்டு தலையை அசைக்கிறான்.

கதிர், “உண்மையிலேயே நீ யாரு? கொஞ்ச நேரத்துக்கு முன்னால மால்ல என்ன நடந்துச்சு?”

சந்தான கிருஷ்ணன், “சொல்றேன்….நான் ஒரு Mexican brujo”

கதிர், “அப்டீன்னா???”

சந்தான கிருஷ்ணன், “sorcerer .. மந்திரவாதி … இந்த கண்ணுக்கு மறையுற சக்தி எனக்கு போன 26-ஆம் தேதி கிரகண பலி கொடுத்ததுக்கப்புறம் கிடைச்சது, எனக்கு கிடைச்ச பல சக்திகள்ல இதுவும் ஒண்ணு… அதுக்கபுறம் நான் 48 நாள் வெளிச்சத்த பார்க்கக்கூடாது, சூரிய ஒளி என்மேல படவே கூடாது..அப்படிப் பட்டுட்டா நான் பலி கொடுத்ததெல்லாம் வேஸ்ட் ஆகிடும், என் உயிருக்கும் ஆபத்து. அதுனால நைட் மட்டுந்தான் வெளிய வருவேன்”

கதிர், “அப்புறம்?”

சந்தான கிருஷ்ணன், "இன்னிக்கு அந்த சக்தி வேலை செய்யல.. எதிர் சக்திகளால கடுமையா தாக்கப்பட்டேன்.. சமாளிக்க முடியாம நான் மறுபடி திரும்பி வரவேண்டியதாயிருச்சு…

கதிர், “ஏன் அந்த சக்தி இன்னிக்கு வேலை செய்யல?”

சந்தான கிருஷ்ணன் நிலவைக் காண்பித்து, “பௌர்ணமி சந்திரன், சூரிய ஒளிய முழுசா பிரதிபலிக்கிற இந்த பௌர்ணமி சந்திரன்…”

கதிர் பின்னால் திரும்பி சந்திரனைப் பார்க்கிறான்.. அது அழகாக பிராசித்துக் கொண்டிருக்கிறது…நான் உனக்கு உதவுகிறேன் என்று அது தன்னிடம் சொல்வதைப் போல கதிர் உணர்ந்தான்.

கதிர் மீண்டும் சந்தான கிருஷ்ணனிடம் திரும்பி அவன் நெற்றியில் இருந்த பிஸ்டலை இன்னும் ஒருமுறை அழுத்தி "சரி, கிரகண பலி கொடுத்தேன்னு சொன்னியே.. என்ன பலி கொடுத்த…"

அதுவரை பயந்து பயந்து பேசிக்கொண்டிருந்த சந்தான கிருஷ்ணன் சத்தத்தை உயர்த்தி பைத்தியக்காரன் போல சிரிக்க ஆரம்பித்தான், சத்தமாக திமிராகச் சொன்னான், "மூணு பெண் ஆன்மாக்களை…பவானி, ரோஷிணி, ருத்ரா.. மூணு உயிர்களை என் தேவிக்கு பலியா தூக்குல தொங்க விட்டேன். என் தேவிக்கு… என் இக்ஷ்டாபேக்கு….."

துப்பாக்கியைப் பிடித்திருந்த கதிரின் கைகள் நடுங்கத் துவங்கியது…அன்பழகனுக்கு பயத்தில் வியர்த்துக் கொட்டியது. அவர் உடலெல்லாம் உதறலெடுக்கத் துவங்கியது. சந்தான கிருஷ்ணனின் கழுத்தில் இருந்த கைகை விடுவித்து, தன் கையில் இருந்த பிஸ்டலை தனது ஜீன்ஸ் பாக்கெட்டில் சொருகிக் கொண்டு, காரின் கதவைப் பூட்டிவிட்டு, முன்சீட்டின் கதவைத் திறந்து உள்ளே உட்காந்தான். சைரன் ஒலிக்க கார் மறுபடி சீறிப் பாய்ந்து கிளம்பியது. பின்னால் வந்த போலீஸ் வாகனம் மீண்டும் பின் இவர்களது வாகனத்தைப் பின்தொடர ஆரம்பித்தது.

அத்தியாயம்: 45 - சர்ப்பத்தை வீழ்த்திய சூரியன்

நாள்: 16
10/01/2020 வெள்ளி
மாலை 8:45 மணி

வடபழனி ஆர்-8 காவல் நிலையம்

காவல்நிலையத்தின் வாசலை ஏற்கனவே மீடியாக்காரர்கள் ஆக்கிரமித்து இருந்தனர். மாலில் நடந்த சம்பவம் அதற்குள் மீடியாக்கள் மூலம் பரவி அவ்வளவு அதிர்வுகளை ஏற்படுத்தியிருந்தது. சைரன் அலறியபடி இரண்டு போலீஸ் வாகனங்களும் காவல் நிலைய வளாகத்துக்குள் நுழைந்தன. அதில் பின்னால் சைரன் இல்லாமல் வந்த கார் ஸ்டேஷனின் பின்பகுதியில் இருந்த ஷெட்டுக்குள் போய் அடங்கிக் கொண்டது. சைரனோடு முன்னால் வந்த கார் வளாகத்தில் ஏற்கனவே தயாராக நின்று கொண்டிருந்த ஆம்புலன்சின் அருகில் போய் நின்றது. அந்த ஆம்புலென்சில் ப்ரியாவும், எழிலும் ஏற்கனவே தயாராக உட்காந்திருந்தனர். அந்த ஆம்புலென்சிலிருந்து ஒரு ஸ்டிரெக்சர் கொண்டுவரப்பட்டு காரிலிருந்து ஒரு நபரை இறக்கி ஸ்டிரெக்சரில் படுக்கை வைத்து நொடிப்பொழுதில் ஆம்புலென்சில் ஏற்றி கதவை அடைத்துக் கொண்டனர்.

ஸ்டிரெக்சரை ஆம்புலென்சில் ஏற்றிவிட்டு மீண்டும் தன் வாகனத்துக்குத் திரும்பிய பிரதாப்பை மீடியாக்காரர்கள் மொய்த்துக் கொண்டார்கள். பிரதாப் அவர்களிடம் அவசர அவசரமாகப் பேசினான். “அக்கியூஸ்ட் ரொம்ப கவலைக்கிடமா உயிருக்குப் போராடிக்கிட்டு இருக்கான், இப்ப உடனே அவனை ஹாஸ்பிட்டல்ல சேர்த்து அவன் கொஞ்சமாவது recover ஆனாதான் நாம ஏதாவது அவனை விசாரிக்க முடியும். அவனை அர்ஜண்ட்டா ஹாஸ்பிட்டலுக்கு கொண்டுபோயிக்கிட்டு இருக்கோம், கொஞ்சம் வழிவிடுங்க ப்ளீஸ்..” என்று மாத்திரம் சொல்லிவிட்டு சூழ நின்ற மீடியாக்காரர்களை வலுக்கட்டாயமாக விலக்கிவிட்டு காரில் ஏறி அமர்ந்துகொண்டான். உச்சபட்சமாய் ஒலி எழுப்பியபடி ஆம்புலன்ஸ் கிளம்பியது. பிரதாப்பின் வாகனமும் வேறு சில போலீஸ் வாகனங்கள் அந்த ஆம்புலென்சைப் பின் தொடர்ந்தன. அத்தனை மீடியாக்காரர்களும் அவரவர் வாகனங்களில் அந்த ஆம்புலென்ஸை துரத்திக் கொண்டு பறந்தனர்.

வெளியே சந்தடிகள் அடங்கியதும் கார் செட்டுக்குள் இருந்த காருக்குள் இருந்து கதிர் இறங்கினான். அவனைத் தொடர்ந்து அன்பழகன் இறங்கினார். அன்பழகன் இப்போது பூரணமாக சகஜ நிலைக்கு வந்திருந்தார். அவருடைய இடது கையிலிருந்த இருந்த விலங்கு விடுவிக்கப்பட்டு, சந்தான கிருஷ்ணனின் இரு கைகளிலும் பூட்டப்பட்டிருந்தது. சந்தான கிருஷ்ணன் வெறும் ஜட்டியோடு காரிலிருந்து இறக்கப்பட்டான். கைவிலங்கின் சாவியை வாகனங்கள் நிலவொளியில் நின்றிருந்த அந்த இடைவெளியில் பிரதாப் அன்பழகனிடம் கொடுத்திருந்தான்.

சந்தான கிருஷ்ணன் பின் வாசல் வழியாக ஸ்டேஷனின் மொட்டை மாடிக்குக் கொண்டு செல்லப்பட்டான். கதிர், அன்பழகன், நாகப்பா, மேலும் இரு காவலர்கள் ஆகிய அனைவரும் மொட்டை மாடிக்கு ஏறினர். கீழே ஸ்டேஷனில் இரு பெண் காவலரும், இரு ஆண் காவலரும் மட்டும் இருந்தனர். காவல் நிலையத்தின் வெளிப்புற கேட் பூட்டப்பட்டது. வெளி கேட்டில் ஒரு கான்ஸ்டெபிள் நின்று கொண்டு அடுத்தடுத்து வந்துகொண்டிருந்த பத்திரிக்கை மற்றும் டிவிக்காரர்களை மருத்துவனையின் பெயரைச் சொல்லி அங்கு அனுப்பிக்கொண்டிருந்தார்.

சந்தான கிருஷ்ணனின் உடையை அவன் வயது மற்றும் ஓரளவு உருவ ஒற்றுமையில் இருந்த வேறொரு காவலருக்கு உடுத்தி அவரை ஸ்டிரெக்சரில் படுக்க வைத்து மருத்துவமனைக்குக் கொண்டு சென்றிருந்தார்கள். வந்துகொண்டிருந்த வழியில் சந்தான கிருஷ்ணனின் உடை இரு வாகனங்களுக்கிடையே மாற்றிக்கொள்ளப்பட்டிருந்தது. வேறு வழியில்லாமல் மீடியாக்களை திசைதிருப்ப இந்த ஏற்பாட்டைச் செய்திருந்தார்கள்.

ஸ்டேஷனின் மொட்டைமாடி மார்கழி நிலவொளியில் குளிர்ந்து கொண்டிருந்தது. ஆனால் வெறும் உடம்பாய் இருந்த சந்தானகிருஷ்ணனுக்கு மட்டும் அது தீயாய் கொதித்தது. அவன் கொஞ்ச கொஞ்சமாக நிலைகுலையத் துவங்கினான். அவனால் மேற்கொண்டு நடக்க முடியாமல் போயிற்று. இரு காவலர்கள் அவனைத் தூக்கிக்கொண்டு சென்று மொட்டை மாடியின் மையத்தில் போட்டு வைக்கப்பட்டிருந்த ஒரு பழைய மரச்சேரில் அவனை அமர வைத்தனர். அவன் கைகள் இரண்டும் கால்கள் இரண்டும் நாற்காலியோடு சேர்த்து கயிறுகளால் கட்டப்பட்டது. நிலா வெளிச்சம் அவன் உடல்முழுவதும் முழுமையாக பட்டுக்கொண்டிருந்தது. அன்பழகனும், கதிரும் அவன் அருகே வந்து நின்றார்கள்.

அன்பழகன், ‘‘இப்ப நீ உன்னோட முழு வாக்குமூலத்தையும் கொடுத்துட்டு ஹாஸ்பிட்டல் போயிடலாம். ஆனா நீ கொடுக்கப்போற வாக்குமூலத்தோட நம்பகத்தன்மையைப் பொறுத்துதான் உன்னை ஆஸ்பிட்டலுக்கு அனுப்பலாமா, இல்ல சுடுகாட்டுக்கு அனுப்பலாமான்னு நாங்க முடிவு பண்ணுவோம். நடந்ததையெல்லாம் ஒண்ணுவிடாம ஒழுங்கா சொல்லு…’’

சந்தான கிருஷ்ணன் உடலெல்லாம் நடுங்கிக் கொண்டிருந்தது, நிலவு அவன் உச்சந்தலைக்கு மேல் ஒளிர்ந்து கொண்டிருந்தது.., ‘‘என்னை கீழ கொண்டுபோங்க ப்ளீஸ்..என்னால தாங்க முடியல..பேசக்கூட முடியல…நான் எல்லாத்தையும் சொல்றேன்’’

கதிர், ‘‘நீ இங்கேயே எல்லாத்தையும் சொல்லி முடி, உன் வாக்குமூலத்தை கீழ ரூம்ல வச்சுத்தான் ரெக்கார்ட் பண்ணுவோம்…முடிச்சவுடனே ஆஸ்பத்திரி போயிடலாம்..சீக்கிரம் சொல்லு’’

சந்தான கிருஷ்ணன் வேறு வழியில்லாமல் பேச ஆரம்பித்தான், ‘‘சில வருஷங்களுக்கு முன்னாடி நான் பவானியை விட்டுட்டு போனதுக்கப்புறம் கொஞ்ச நாள் மலேசியால இருந்தேன் அங்கதான் witchcraft அப்டீங்கிற விஷயத்தோட எனக்கு முதன் முதலா தொடர்பு வந்தது.. சீக்கிரமே நிறைய கத்துக்கிட்டேன்..

அப்புறம் இன்னும் நிறைய கத்துக்கணுங்கிற ஆசையில மெக்ஸிகோ போனேன்… அந்தக் காலத்துல மாயன்கள் வழிபட்ட பவர்ஃபுல்லான இக்ஷ்டாபே வழிபாட்டை பல லட்சம் செலவழிச்சி சில மெக்ஸிகன் மந்திரவாதிகள்கிட்ட இரகசியமா கத்துக்கிட்டேன்….

இக்ஷ்டாபே வழிபாட்டுல மிக உச்சக் கட்டம் கிரகண பலி…மூணு பெண் ஆன்மாக்களை தூக்குல தொங்க விடணும்..

அப்பதான் எனக்கு பவானி ஞாபகம் வந்துச்சு.. அவளை பலி கொடுக்க கடந்த 26-ஆம் தேதி வளைய சூரியகிரகண நாளை தேர்ந்தெடுத்தேன்…முதல்ல அவளை மலேசியாவுக்கு கூட்டிட்டுப் போய் அங்க வச்சு பலி கொடுத்திடலாம்னுதான் நினைச்சிருந்தேன், அப்படி செஞ்சிருந்தா எனக்கு ரொம்ப ஈசியா இருந்திருக்கும். ஆனா அவகிட்ட பாஸ்போர்ட் இல்ல, நான் பலிகொடுக்க ப்ளான் பண்ணியிருந்த கிரகண நாளும் கிட்டத்துல இருந்ததால, அதுக்குள்ள பாஸ்போர்ட் அப்ளை பண்ணி அது கிடைக்க வாய்ப்பில்லைன்னு சென்னையிலேயே வச்சு முடிக்க முடிவெடுத்தேன். ஆனா அதுக்கு இங்க இன்னும் ரெண்டு பெண்கள் வேணுமே… அப்பத்தான் ருத்ரா வீட்டு வேலை செய்ய ஆள் தேவையான்னு வந்து நான் தங்கியிருந்த வீட்டுக் கதவை தட்டுனா…

அவளோட ஆராவை(Aura) கவனிச்சேன்.. ரொம்ப ரொம்ப வீக்கா இருந்தது..

அன்பழகன் குறுக்கிட்டு.. ஆராவா? அப்டீன்னா?

கதிர் சட்டென்று சுருக்கமாக விளக்கம் சொன்னான்…’’"ஆராங்கிறது பயோ எனர்ஜி சார், அதாவது நம்ம உடம்பை சுற்றி இருக்கிற ஒரு மின்காந்த சக்தி."

சந்தான கிருஷ்ணன் தொடர்ந்தான், ருத்ராவோட ஆராவை கவனிச்சேன், ரொம்ப வீக்கா இருந்தது. அவ அதிகபட்ச மன அழுத்தத்துல இருக்கதை கண்டுப்பிடிச்சேன்... அவளை கூப்பிட்டு அவ மனநிலையையும், அவளுக்கு எங்கெல்லாம் உடம்புல வலி இருக்குதுன்னு நான் அவளோட ஆராவை வச்சு கண்டுபிடிச்சு சொன்னதப் பார்த்து அவ அசந்து போய், என்னை ஒரு மகானா நினைச்சு தன்னோட வாழ்க்கையில நடந்ததை எல்லாம் எங்கிட்ட சொல்லிட்டா...என் சக்திய வச்சு அவளுக்கு உடம்புல இருக்கிற வலிகளை சுகமாக்கினதுமே என்னை ஒரு கடவுள் மாதிரியே பார்க்க ஆரம்பிச்சுட்டா.. நான் அவளோட மனச முழுசா என்னோட கட்டுப்பாட்டுக்குள்ள கொண்டு வந்துட்டேன்..அவளுக்காக சில சடங்குகள் செய்யப்போறேன்னு சொல்லி அவ தலைமுடியைக் கேட்டேன் உடனே கட் பண்ணி ஒரு கத்தை முடியை என் கையில கொடுத்துட்டா.

அதுக்கப்புறம் இன்னொருநாள் நான் சாலிகிராமத்துல வழக்கமா காஃபி சாப்பிடப் போற இடத்துல, ரொம்ப நொந்து போய் நடந்து வந்துக்கிட்டு இருந்த ரோஷிணியை பார்த்தேன்..அவளோட ஆராவும் அப்படித்தான் இருந்தது. அவளும் மொத்தமா உடைஞ்சு போன மனநிலையில இருந்தா... அவ போயி ஒரு ஆட்டோல ஏறுனா, நானும் பின்னாடியே போயி அவளோட ஆட்டோல ஏறி நான் ஒரு ஸ்பிரிச்சுவல் டீச்சர்னு என்னை அறிமுகப்படுத்திக்கிட்டு சில கவுன்சிலிங் குடுத்துட்டு வந்தேன்... அதுக்கப்புறம் அவளை நான் சந்திக்கல, அந்த ஹாஸ்டல்ல வேலை செஞ்சுக்கிட்டு இருந்த ருத்ராவை வச்சு ரோஷிணியோட உள்ளாடைகளை எடுத்துட்டு வர சொன்னேன்..நான் ரோஷிணின்னு ஏதோ நல்லது செய்யப்போறேன்னு நினைச்சு அவளும் எடுத்துட்டு வந்து கொடுத்துட்டா…என்னிக்கு ரோஷிணியோட உள்ளாடைகள் எனக்கு கிடைச்சதோ அன்னிக்கு இரவிலிருந்தே ஏவல் மூலமா அவளோட மனமும் முழுசா என்னோட கட்டுப்பாட்டுக்குள்ள வந்திருச்சு.

சரியா 26-ஆம் தேதி காலையில கிரகணம் ஆரம்பிச்சப்ப... பவானி வீட்டுக்குப் போனேன்.. பவானிக்கு நானும் பசவராஜும் தொடர்புல இருந்தது தெரிய வந்திருக்கு. அதுனால அவ என்னையும் சந்தேகப்பட ஆரம்பிச்சுட்டா. முதல் தடவை பார்த்தபோது என்கிட்ட நல்லா பேசுன பவானி, அன்னிக்கு போகும்போது என்கூட சண்டை போட்டா. நீயும் பசவராஜும் சேர்ந்து என்னை கொல்ல பிளான் பண்றீங்களான்னு வேற கேட்டா… விஷயம் விபரீதமாகிடக் கூடாதுன்னு சட்டுன்னு என்னோட சைக்கிக் பவரை யூஸ் பண்ணி அவளை மயக்க நிலைக்கு கொண்டுபோய் அவளோட செக்ஸ் வச்சிக்கிட்டேன், அதுவும் பலியில ஒரு பாகம்தான்..அதுக்கப்புறம் தலையணையை வச்சு அவள் மூச்சை நிறுத்தி, உயிர் போனதுக்கப்புறம் தூக்குல தொங்கவிட்டேன். அவதான் என்னோட பிரதான பலி. இக்ஷ்டாபேக்கு பலி கொடுத்ததுக்கு அடையாளமா அவ கன்னத்துல பெரிய பொட்டு வரைஞ்சேன்.

அப்புறம் உடனே என்னோட வீட்டுக்குப் போய் அங்க இருந்தபடியே என்னோட சைக்கிக் பவரை வச்சு.. ருத்ரா, ரோஷிணி ரெண்டு பேரு மனசையும் வசப்படுத்தி அவங்களை ஏவி தற்கொலை செய்ய வச்சேன்.. என்னோட சைக்கிக் பவரும், ஏவல் சக்தியும் கிரகணத்தப்ப 100 மடங்கு அசுர பலத்தோட இருக்கும்.. யாருமே தப்ப முடியாது...நான் ஏவுனத செஞ்சே தீருவாங்க...

ருத்ராவை அரைநிர்வாணமா திறந்த மார்போட தூக்குல தொங்கும்படி அவ மனசை ஏவுனேன். அவ ஏற்கனவே குடிச்சிருந்ததால அவ மனசை வசப்படுத்துறது எனக்கு ரொம்ப ஈசியாகிடுச்சு. திறந்த மார்போட தூக்குல தொங்குறது இக்ஷ்டாபேக்கு கொடுக்கிற பலியோட இன்னொரு அம்சம். ரோஷிணிக்குத்தான் எந்த அடையாளமும் வைக்க முடியல.

கிரகணம் முடியுறதுக்குள்ள மூணு பலிகளையும் முடிச்சுட்டேன். அதுக்கப்புறம் நான் சூரிய ஒளியில எங்கேயுமே போகல. பசவராஜ் உட்பட யாருக்கும் தெரியாத வேற ஒரு இடத்துல தங்கிட்டேன். இரவு நேரங்கள்ல மட்டும் தேவைப்பட்டா கருப்பு டிரஸ், கருப்பு தொப்பி போட்டுட்டு வெளியெ போயிட்டு வருவேன். கார்லயே கல்கத்தா வரைக்கும் போய் அப்புறம் வடகிழக்கு இந்தியா வழியா மியான்மர், தாய்லாந்து, சிங்கப்பூர் வழியா மலேசியாவுக்கு தரைமார்க்கமா போலி பாஸ்போர்ட்ல போக பிளான் பண்ணிருந்தேன்.

அன்பழகன் முடித்து வைத்தார், “அதுக்குள்ள எங்ககிட்ட மாட்டிக்கிட்ட…”

கதிர், ‘‘நீ கிரகண பலி கொடுத்த மாதிரியே நாங்க உன்னை பவுர்ணமி பலி கொடுக்கலாம்னு இருக்கோம்.. பேசாம நீ போய் உன் தேவிகிட்டேயே சேர்ந்திடேன்!…’’

சந்தான கிருஷ்ணன், ‘‘வேண்டாம் என்று அலற, பக்கத்தில் இருந்த நாகப்பா சட்டென ஒரு துணியை அவன் வாய்க்குள் திணித்தான்’’

அடுத்த நொடியில் கதிரின் சைலன்சர் பொருத்தப்பட்ட துப்பாக்கியிலிருந்து சத்தமில்லாமல் வெளிப்பட்ட குண்டு சந்தான கிருஷ்ணனின் நெஞ்சில் இறங்கியது. அவன் தான் கட்டப்பட்டிருந்த நாற்காலியோடு இரண்டு அடி தள்ளிப்போய் விழுந்தான்.

இரண்டு காவலர்கள் ஓடிப்போய் சந்தான கிருஷ்ணனின் கட்டுகளை சேரிலிருந்து அவிழ்த்து அவன் உடலை அப்புறப்படுத்தும் பணியில் ஈடுபட்டனர்.

அத்தியாயம்: 46 - பத்திரிக்கையாளர் சந்திப்பு

நாள்: 17
11/01/2020 சனிக்கிழமை
காலை 09:30 மணி

கமிஷனர் அலுவலகம்..

முந்தினநாள் இரவு சென்னையின் புகழ்பெற்ற ஒரு மாலில் நடந்த இயற்கைக்கு முரணான அந்த சம்பவம் ஒரே நாளில் காணொளி வடிவில் உலகம் முழுக்கப் பரவியிருந்தது. குற்றவாளி இன்னும் அவசர சிகிச்சைப் பிரிவில்தான் இருக்கிறான். 48 மணி நேரம் கழித்துத்தான் எதையும் சொல்ல முடியும் என்று அறிவிக்கப்பட்டபடியினால் மீடியாக்காரர்கள் அந்த மருத்துவனையைச் சுற்றியே வட்டமடித்துக் கொண்டிருந்தனர். எல்லா டிவி சேனல்களிலும் அந்த மருத்துவமனை அடிக்கடி காட்டப்பட்டுக்கொண்டே இருந்தது.

என்ன நடந்தது என்பதை மக்களிடம் சொல்ல வேண்டும் என்ற அழுத்தம் காவல்துறைக்கு அதிகமானதால் அன்று காலையில் கமிஷனர் அலுவலகத்தில் ஒரு அவசர பத்திரிக்கையாளர் சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பத்திரிக்கை மற்றும் காட்சி ஊடகங்களின் பிரதிநிதிகளால் அந்த அறை முழுவதும் நிரம்பி வழிந்தது. கிட்டத்தட்ட எல்லா செய்தி தொலைக்காட்சி மற்றும் இணைய சேனல்களின் மைக்குகளும் அங்கு வைக்கப்பட்டிருந்தது.

கமிஷனர் மார்த்தாண்ட பூபதியுடன், கதிர், அன்பழகன், ப்ரியா மற்றும் எழில் ஆகியோர் நாற்காலியில் அமர்ந்திருந்தனர். அவர்களுக்குப் பின்னால் கோப்பெருந்தேவி, நாகப்பா, பிரதாப், மகேஸ்வரி ஆகியோரும் இன்னும் சில காவலர்களும் நின்றுகொண்டிருந்தார்கள்.

கமிஷனர் கடந்த 26-ஆம் தேதி நடந்த மூன்று துர்மரணங்களையும் அவைகளைத் தொடர்ந்து நடைபெற்ற விசாரணை விபரங்களையும் விலாவாரியாக செய்தியாளர்களிடம் விவரித்துக் கொண்டிருந்தார்.

கமிஷனர், “so, அந்த கிரகண பலி மூலமா கிடைச்ச சக்தியாலதான் தான் எல்லாரோட கண்ணுக்கும் மறைஞ்சதா குற்றவாளி சொல்லிருக்கான். அது சாத்தியமா? இதுக்கு என்ன விஞ்ஞான விளக்கம் கொடுக்க முடியும் அப்டீங்கிறதுக்குள்ள நான் இப்ப போக விரும்பல. குற்றவாளி recover ஆனதுக்கப்புறம் நாம அதை தீர விசாரிச்சுக்கலாம்”.

கமிஷனர் தொடர்ந்தார், “குற்றவாளி சந்தான கிருஷ்ணன் தங்கியிருந்த அந்த வீட்டுல எங்க டீம் சோதனை போட்டபோது ஒரு படம் கிடைச்சிருக்கு”, கதிரும் மற்றவர்களும் அன்று சந்தான கிருஷ்ணன் தங்கியிருந்த வீட்டில் சோதனை போட்டபோது அலமாரியில் விரித்து வைக்கப்பட்டிருந்த செய்தித்தாளுக்குள் இருந்து கீழே விழுந்த படத்தை எடுத்து கமிஷனர் செய்தியாளர்களிடம் காட்டியபடி, “இதுதான் சந்தான கிருஷ்ணன் நரபலி கொடுத்ததா சொன்ன இக்ஸ்டாப் அப்டீங்கிற பெண் தேவதையோட படம்.. இது தென் அமெரிக்காவுல வாழ்ந்த மாயன்கள் வழிபட்ட தற்கொலைக் கடவுள்..அதிலும் குறிப்பா தூக்குல தொங்கி சூசைட் பண்ணிக்கிறது..

இந்த படத்துல இக்ஸ்டாப்போட கன்னத்துல பெரிய பொட்டு இருக்கு பாருங்க.. இதேதான் பவானியோட கன்னத்துல வரையப்பட்டிருந்தது, திறந்த மார்போட தூக்கில் தொங்குற இந்த உருவத்தை கவனியுங்க, இப்படித்தான் ருத்ரா தூக்கில தொங்கினாங்க.



மெக்ஸிகோல யுகாட்டன் பகுதிலதான் இந்த இக்ஸ்டாப் வணக்கம் ரொம்ப பாப்புலர், இப்பவும் மெக்ஸிகோல மற்ற பகுதிகளைவிட தூக்கு போட்டு தற்கொலை பண்ணிக்கிறவுங்களோட எண்ணிக்கை யுகாட்டன் பகுதியில ரெண்டு மடங்கு அதிகம்னு புள்ளி விபரங்கள் சொல்லுது… அங்க இருக்க மக்கள் இதை சாதாரணமா ஒரு பெண் தெய்வமாத்தான் வழிபடறாங்க. ஆனா சில மந்திரவாதிகள் மட்டும்தான் நரபலி அப்டீங்கிற extreme-க்கு போறாங்க.

இப்போதைக்கு இதுதான் நடந்தது. இந்த கேஸ்ல குறுகிய காலத்துல அற்புதமா பணியாற்றி குற்றவாளியைக் கண்டுபிடிச்ச அன்பழகன், ப்ரியா, எழில் மற்றும் அவங்க டீம் மெம்பர்ஸ் அனைவருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல் அவர்களோடு இணைந்து செயல்பட்டு, இந்த மூன்று வழக்குகளிலும் அருமையாக துப்புத் துலக்கி, காவல்துறைக்கு பேருதவியாக இருந்த டிடெக்டிவ் கதிர் என்ற கதிரவன் அவர்களுக்கு காவல்துறை சார்பாக எனது பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். குற்றவாளி மருத்துவமனையிலிருந்து சுகமாகி திரும்ப வரட்டும் விசாரணையை தொடரலாம், உங்களுக்கு எங்க தரப்புல இருந்து அப்பப்ப அப்டேட் வந்துக்கிட்டே இருக்கும். ஏதாவது கேள்விகள் இருந்தா கேட்கலாம்…"

ஒரு நிருபர் கேட்டார், "சார், குற்றவாளிக்கு பயங்கரமான சைக்கிக் பவர், மேஜிக் சக்தியெல்லாம் இருக்குன்னு சொல்றீங்க. நேற்று பவுர்ணமி சந்திரன் இருந்ததாலதான் அவனால செயல்பட முடியாம உங்ககிட்ட சிக்கிக்கிட்டான். இப்ப பவுர்ணமி முடிஞ்சு போச்சு, அவனுக்கு சக்தி திரும்பக் கிடைச்சிருக்கும். இப்ப சுகமாகி கண்ணு முழிச்சு, மறுபடியும் உங்க கண்ணுக்கு மறைஞ்சு போயி இன்னும் பலரை பலி கொடுக்க ஆரம்பிச்சுட்டான்னா எப்படி சார் அதை தடுத்து நிறுத்துறது? பேசாம நேத்தே அவனை என்கவுண்ட்டர்ல போட்டிருக்கலாம்ல சார்?"

கதிரும் அன்பழகனும் ஒருவரையொருவர் பார்த்து சிரித்துக் கொண்டார்கள்.

மெலிதாக புன்னகைத்த கமிஷனர், "அப்படியெல்லாம் யாரையும் கொல்ல முடியாது சார். அவன் கண் விழிக்க இன்னும் 48 மணி நேரம் ஆகும்னு டாக்டர்ஸ் சொல்லிருக்காங்க. இதுக்கிடையில அவனை எப்படி handle பண்றதுன்னு நாங்க வெவ்வேறு துறைகளைச் சேர்ந்த நிபுணர்களோடு, முக்கியமா உளவியல் நிபுணர்களோடு ஆலோசனை பண்ணிக்கிட்டு இருக்கோம். தேவைப்பட்டால் அவனை தொடர்ந்து மயக்க நிலையிலேயே சில நாட்கள் இன்னும் வச்சிருந்து, அவனை தப்பவிடாமல் பிடித்து வைத்திருக்க சரியான சூழலை உருவாக்கிட்டுக்கூட அவனை நாம இயல்பு நிலைக்குக் கொண்டு வந்து விசாரிக்க முடியும். நீங்க சொல்ற மாதிரி அசம்பாவிதங்கள் எதுவும் நடக்காதுங்கிறதுக்கு நான் கேரண்ட்டி" என்று சொல்லி கமிஷனர் பிரஸ் மீட்டை முடித்து வைத்தார்.

முந்தியநாள் இரவில் சந்தான கிருஷ்ணன் கொல்லப்பட்டவுடன் நள்ளிரவு 2:00 மணியளவில் அவனது உடல் அவன் சிகிச்சைபெறுவதாக நம்பவைக்கப்பட்ட மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டது. மறுநாள், அதாவது பிரஸ்மீட் நடந்த 11-ஆம் தேதி மாலை 6:00 மணிக்கு சந்தான கிருஷ்ணன்

மாரடைப்பில் இறந்ததாக அன்றிரவு அதிகாரபூர்வமாக அறிவிக்கட்டு, உடனடியாக அவனது உடல் தகனம் செய்யப்பட்டது.

மிகவும் பரபரப்பாக பேசப்பட்ட இவ்வழக்கு அடுத்த இரு மாதங்களில் கொரோனா, லாக்டவுன் என்ற பிரச்சனைகள் வந்த பிறகு கொஞ்சம் கொஞ்சமாக மறக்கப்பட்டது. ஆனால் 2019 டிசம்பர் 26 சூரியகிரகணம் மட்டும் கொரோனாவுக்குப் பிறகும் உலகம் முழுவதும் பேசுபொருளானது. கொரோனா என்பது சீனா உலகத்தின் மீது ஏவிய Bio War என்றும், அப்படிப் பரப்பப்பட்ட வைரஸ் சூரியகிரகணத்தின்போது அதிக வீரியம் பெற்றுப் பரவும் என்பதால் அந்த குறிப்பிட்ட காலத்தில் அதை பரப்பிவிட்டு, அதற்கு “கொரோனா” என்று பெயரிட்டார்கள் எனவும் கான்ஸ்பிரசி தியரிகள் உலா வர ஆரம்பித்தன. “கொரோனா” என்பது வளைய சூரியகிரகணத்தின்போது தோன்றும் கிரீடம் போன்ற அமைப்பு ஆகும். சூரிய கிரகணத்தின்போது செய்யப்படும் தீய செயல்கள் வலுப்படும் என்ற தங்கள் கருத்தை நிலைநாட்ட அவர்கள் “சென்னை சம்பவத்தை” உதாரணமாக கூறுவது வழக்கமாகியது.

அன்பழகன், ப்ரியா, எழில் உள்ளிட்ட அவர்கள் குழுவினர் அத்தனை பேருக்கும் தமிழ்நாடு அரசின் விருதும், பரிசுகளும், பதவி உயர்வும் கிடைத்தது. கதிர் இந்த வழக்கின் மூலம் மிகவும் பிரபலமாகிப் போனான். சென்னையிலேயே தனது பிரைவேட் டிடெக்டிவ் ஏஜன்சியை பொங்கல் திருநாளன்று கோலகலமாக தொடங்கினான்.

அத்தியாயம்: 47 - இனியெல்லாம் சுகமே…

27/01/2020 திங்கள்
காலை 08:30 மணி

C.S திருமண மாளிகை, சென்னை…

குறிக்கப்பட்ட முகூர்த்த நேரமான 6:00 - 7:30க்குள் கதிர் தாலிகட்டி முடித்திருந்தான். விருந்தினர் ஒவ்வொருவராக வந்து மணமக்களை வாழ்த்த ஆரம்பித்திருந்தனர். மண்டபம் முழுவதும் காக்கிச்சட்டை விருந்தினர்களால் நிறைந்திருந்தது. சென்னை சிட்டி கமிஷனர் வீட்டுத் திருமணமல்லவா?

மண்டபத்தை சந்தன மணமும், ரோஜாப்பூ மணமும் நிறைத்திருந்தது. அனைவர் மனங்களிலும் புத்துணர்ச்சியும், உற்சாகமும் புரண்டோடியது. அன்பழகன் தன் மனைவியுடன் பட்டு வேட்டி சட்டை சகிதம் வந்திருந்தார். அவரும் கதிரும் கடந்த ஒரு மாதப் பழக்கத்தில் அண்ணன் தம்பி போலவே ஆகிவிட்டிருந்தனர்.

ஆர்கெஸ்டிரா பாடகர்கள் ‘‘நூறு வருஷம் இந்த மாப்பிள்ளையும் பொண்ணுந்தான்’’ பாடலை உற்சாகமாகப் பாடிக்கொண்டிருந்தனர்.

அன்பழகன் மேடைக்கு வந்தார், பாட்டுச்சத்தம் பலமாக இருந்தபடியால் அவர் கதிரின் கைகளில் தனது மொய் கவரைக் கொடுத்து அவன் காதுகள் அருகே போய் சத்தமாக, ‘‘தம்பி, உங்களோட புது டிடெக்டிவ் ஏஜன்சி தொழிலுக்கும், திருமண வாழ்வுக்கும் எனது வாழ்த்துக்கள். தொழில்ல நிறைய குற்றவாளிகளை நாங்க கைது பண்ண காரணமா இருங்க, திருமண பந்தத்துல சந்தோஷமான கைதியா கடைசி வரைக்கும் பொண்டாட்டிக்கு அடங்கி இருங்க..’’

கதிர் சிரித்தான், ‘‘என்ன சார் இதுதான் போலீஸ் வாழ்த்தா?’’

அன்பழகனும் சிரித்தபடியே, ‘‘நம்ம பொழப்பே இப்படித்தானே ஓடுது, வாழ்த்தும் அப்படித்தான் வரும்’’ என்று சொன்னபடியே, மணமக்களோடு நின்று போட்டோவுக்கு போஸ் கொடுத்துவிட்டு மனைவியுடன் கடந்து போனார்.

அரைமணி நேரம் கழித்து ப்ரியா தனது குழுவினருடன் வந்திருந்தாள், மணமக்கள் இருவருக்கும் கைகுலுக்கி வாழ்த்து சொல்லிவிட்டு, நாகப்பா கையிலிருந்த அந்த பெரிய கிப்ட்டை வாங்கி மணமக்களிடம் கொடுத்து போட்டோ எடுத்துக் கொண்டாள்.

ப்ரியா, “இது நாங்க டீமா கொடுக்கிற Gift, ஆனா நான் பெர்சனலா உங்க ரெண்டு பேருக்கும் ஒரு பெரிய ட்ரீட் கொடுக்க விரும்புறேன். இன்னும் ரெண்டு நாள் கழிச்சு உங்களை இன்வைட் பண்றேன்”.

மணமக்கள் இருவரும் மகிழ்ச்சியுடன் தலையாட்டினார்கள்.

ப்ரியா போன பத்து நிமிடங்களில் எழில் தனது டீமுடன் மேடைக்கு வந்தாள். மணமக்கள் கையில் Gift-ஐக் கொடுத்து வாழ்த்து சொல்லிவிட்டு, “கதிர், எனக்கு மதுரையில டி.எஸ்.பியா போஸ்டிங் போட்டிருக்காங்க, இன்னிக்கு நைட் கிளம்புறேன்.” என்றதும் கதிர் சந்தோஷாக அவளது கரங்களைக் குலுக்கி, “Congrats, All the best..கலக்கு எழில்” என்றான்.

எழில் நேராக மணப்பெண்ணின் அருகே போய் நின்று செல்லமாக அவள் கன்னத்தில் கிள்ளி, “வாவ் பேருக்கேத்தமாதிரி அம்சமா, ராணி மாதிரி இருக்கடி” என்று சொல்ல வெட்கத்தில் கன்னம் சிவந்து சிரித்தாள் மணப்பெண் கோப்பெருந்தேவி…

இனியெல்லாம் சுகமே…

வாசித்தமைக்கு நன்றி! அமேசான் பக்கத்தில் இந்த நாவல் குறித்த தங்கள் மேலான கருத்துக்களை பதிவு செய்யும்படி மிகவும் அன்போடும் பணிவோடும் கேட்டுக்கொள்கிறேன்!

ஆசிரியர் தொடர்புக்கு:
vijaykumar.jeyaraj@gmail.com